புராணம்

18

ஸ்ரீ ப்ரஹ்ம வைவர்த்த புராணம்

ஸாஹித்ய வாங்முக பூஷண

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதே

உ

ஸ்ரீ வேதவ்யாஸாய நம:

ஸ்ரீ ப்ரஹ்ம வைவர்த்த புராணம்

ஆசிரியர்

ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹா மஹோபதேசக,

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவ சர்மா அவர்கள்

அமரகலா விலாஸிநீ ஸபை,

154, தம்பு செட்டி வீதி,

சென்னை.

1933.

[விலை அணா. 12.

அவதாரிகை.

இறைவனருளாலும் ஸ்ரீ ஜகத்குருவின் கிருபையாலும் ஸ்ரீமுக வருஷ ஆரம்பத்தில் ஸ்ரீ வேதவ்யாஸரியற்றிய பதினெட்டுப் புராணங்களில் பத்துப் புராணங்கள் உபன்யஸிக்கப் பட்டுப் பூர்த்தியாயின. ஸ்ரீ மார்க்கண்டேயம், ஸ்ரீ வாமநம், ஸ்ரீ பாத்மம், ஸ்ரீ ப்ரஹ்ம வைவர்த்த மென்ற நான்கு புராணங்கள் தமிழில் சுருக்கமாக வெளி வந்துள.

நமது புராண ப்ரசுரங்களில் நான்காவதாக வெளி வந்த இதற்கு ப்ரஹ்ம வைவர்த்தம் எனப் பெயர். புராணங்களில் பல ப்ரசாரத்திலில்லாததால் அவற்றில் கூறப்படும் விஷயங்களைப்போல் அவைகளின் பெயரும் அடிக்கடிகேட்கக் கிடைப்பதில்லை. ஆதலின் இதை ப்ரஹ்ம கைவர்த்த மென்றே பல தற்காலத்திய நூல்களும் பல பெரியாரும் கூறுகின்றனர். ப்ரஹ்மத்தை விவரித்துக் கூறுவதால் இப்பெயர் இதற்குண்டானதென இப்புராணமே கூறுகிறது. இதில் பிரும்ம கண்டம், ப்ராகிருதி கண்டம், கணேச கண்டம், ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம கண்டம் என நான்கு பிரிவுகளும், அவைகளில் 275 அத்யாயங்களுமிருக்கின்றன. ஒவ்வொரு தேவதைகளேயும் உபாஸிக்கவேண்டிய முறையில் மூல மந்த்ரம், கவசம், ஸ்துதி இவைகள் விரிவாகக் காணப்படுகின்றன. பல அபூர்வ கதைகளும் தர்மங்களுமிதில் நிறைந்திருக்கின்றன. கடைசி கண்டத்தில் பாகவதத்திலுள்ள கதை கூறப்பட்டாலும் ஆங்கில்லாத பலராது பூர்வ ஜன்ம சரிதம் ரஸமாக வர்ணிக்கப்படுகிறது. முக்யமாக ராதா விவாஹம், ராதைக்கு வந்த சாபம், ராதா ஸங்கம், ராதா சாபவிமோசநம் முதலியவைகள் மிக விஸ்தாரமாயிருக்கின்றன. பஜனை செய்வோர் நடத்தும் ஸ்ரீ ராதா விவாஹத்திற்கு இந்த புராணமே ப்ரமாணமாகும். பாரத பாகவதாதி நூல்களில் காணப்படும் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்திற்கும் இங்கிருப்பதற்கும் பல மாறுபாடுகளிருக்கின்

றன. உதாஹரணமாக:—யசோதையின் வீட்டிலிருந்து வஸுதேவன் கொண்டுவந்த பெண் குழந்தையைக் கம்ஸன் வெட்டும்போது உன்னைக் கொல்பவன் வேறிடத்தில் வளர்கிறானென்று கூறி அது ஆகாயத்தில் அஷ்ட புஜங்களுடன் சென்றதென்பது மற்ற நூல் கூறும் சரிதம். இங்கு பெண் குழந்தையைக் கொல்ல வேண்டாமென்று பெற்றோர் வேண்டியபடி கம்ஸன் அதைக் கொல்லாமல் விட, ஏகாநம்சா என்று பெயரிட்டு வளர்த்து அதைத் தூர்வாஸருக்கு வஸுதேவன் மணம் செய்து கொடுத்தான் என்று காணப்படுகிறது. இது போல் பல ருசியான சரிதங்களைக் காணலாம்.

இப்புண்ணிய திருப்பணியில் போதிய உதவி கிடைக்கவில்லை என்று வருந்துவதைவிட அது தான் கலி தர்மமென அதை மறந்து, ஓர் புராணம் வெளிவருவதற்கு முன் அதன் கிரயத்தை முன்னதாக அனுப்பிப் பலகாலமுபயோகமாகுமிதை நல்லதாளில் அச்சிடுங்களென்று நல்யோசனையையும் கூறிய ஆயிரத்திலொருவரான ஸ்ரீமான் நெல்லூர் T. N. ராமகிருஷ்ண அய்யர் போன்ற ஆஸ்திகர் ஊட்டும் உத்ஸாஹத்தை எடுத்துரைப்பது நலமாகும். தமிழ் எழுத்துப் பிழைகளைத் திருத்தத் தானே முன் வந்த நண்பர் ஸ்ரீமான் K. சோமசுந்தரம் செட்டியாரவர்களை (காலஞ்சென்ற கயப்பாக்கம் ஸதாசிவ செட்டியாரது தமயன் மகன்) மறப்பது நன்றன்று. அங்ஙனமே பல தெய்வ சோதனைக்குட்பட்டும் நம்மைவிட இந்நூல் விரைவில் வெளிவர அதிக ஊக்க மெடுத்துக் கொண்ட கார்லண்ட் சொந்தக்காரரிடமும் நன்றி மறவாமையைக் கூறக் கடமைப்பட்டுளோம்.

குற்றம் செய்வதே மனிதரியற்கை என்றுணர்ந்த பெரியார் இதில் காணும் எல்லாக் குற்றங்களையும் நாம் வேண்டாமலே மறந்து குணத்தை மாத்திரங் கொள்வரென்பது திண்ணம். மற்ற புராணங்களையும் விரைவில் வெளியாக்கும்படி எல்லா சக்தியையு மளிக்கும்படி எல்லாம்வல்ல இறைவனடி வணங்கி வாழ்த்துவோம். சுபம்.

ஸ்ரீமுக வைசாக சுக்ல பஞ்சமி.

ஆஸ்திகரடிபணியும்,

வே. ஸோமதேவ சர்மா.

விஷய ஸூசிகை.

விஷயம்.		பக்கம்.
1. ப்ரஹ்ம கண்டம்		
1. ஜகத் ஸ்ருஷ்டி	...	2
2. உபபர்ஹணன்	...	6
3. நாரதரது தாஸஜன்மம்	...	13
4. ஆந்ஹிக தர்மம்	...	16
5. ப்ரஹ்ம ஸ்வரூபம்	...	19
2. பிரகிருதி கண்டம்		
6. ப்ரகிருதி ஸ்வரூப பேதம்	...	21
7. ஸரஸ்வதி	...	22
8. கலியின் தோஷம்	...	25
9. பிருதிவீ சரிதம்	...	26
10. கங்கையின் சாபமோசனம்	...	27
11. துளஸீ சரிதம்	...	31
12. சிவ சங்கசூட யுத்தம்	...	36
13. ஸாளக்ராம துளஸீ மஹிமை	...	38
14. ஸாவித்ரீ சரிதம்	...	39
15. கர்ம விபாகம்	...	41
16. லக்ஷ்மியின் அவதாரம்	...	44
17. துர்வாஸர் உபதேசம்	...	45
18. ஸ்வாஹாஸ்வதா தக்ஷிணைகள்	...	48
19. மனஸாதேவி சரிதம்	...	51
20. ஸ்ரீ ராதையின் அவதாரம்	...	53
21. ஸுயஜ்ஞன்	...	54
22. தாராஹரணம்	...	57
23. ஸுரதன்	...	60

3. கணேச கண்டம்

24.	கணேசாவதாரம்	...	62
25.	விநாயகர் கஜமுகரானது	...	65
26.	கார்த்தவீர்யன்	...	69
27.	பரசுராம கணேச யுத்தம்	...	75

4. ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம கண்டம்

28.	ஸ்ரீ கிருஷ்ணாவதார அவதாரிகை	...	79
29.	ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்	...	84
30.	நந்தனது முற்பிறவி	...	87
31.	ஸ்ரீ ராதா விவாஹம்	...	92
32.	கலாவதி	...	97
33.	யஜ்ஞபத்நிகள் பூர்வ சரிதம்	...	100
34.	காலீய சரிதம்	...	101
35.	இந்திர கர்வபங்கம்	...	103
36.	தேனுகன் சரிதம்	...	105
37.	தூர்வாஸர் விவாஹம்	...	106
38.	அம்பரீஷன் சரிதம்	...	109
39.	ராஸக்ரீடை	...	112
40.	தேவலர் அஷ்டாவக்ரரான சரிதம்	...	113
41.	பிரம்மனுக்கு மோஹிநீ சாபம்	...	115
42.	சிவ கர்வபங்கம்	...	117
43.	சிவ மஹிமை	...	118
44.	ஸதீ கர்வபங்கம்	...	119
45.	பார்வதீ பரிணயம்	...	120
46.	இந்திர கர்வபங்கம்	...	126
47.	ஸூர்ய கர்வபங்கம்	...	130

48. அக்னி கர்வபங்கம் ... 131
49. தன்வந்தரி கர்வபங்கம் ... „
50. ஸ்ரீ கிருஷ்ண சரிதம் ... 134
51. கம்ஸனது துஸ்வப்நம் ... 137
52. அக்ரூரர் தர்சனம் ... 139
53. கம்ஸ மோக்ஷம் ... 140
54. நந்தனுக்கு தர்மோபதேசம் ... 141
55. ஸ்வப்ந பலன் ... 143
56. ஸூர்யக்ரஹண காரணம் ... 144
57. பதிவ்ரதா தர்மம் ... 147
58. பக்ஷ்யாபக்ஷ்ய விசாரம் ... 148
59. பிராயச்சித்தம் ... 149
60. கர்ம விபாகம் ... 150
61. கேதாரகன்யா சரிதம் ... 151
62. நந்தனுக்கு ஞானோதயம் ... 154
63. சதுர்யுக தர்மம் ... 155
64. ருக்மிணீ கல்யாணம் ... 157
65. ப்ரத்யும்ந சரிதம் ... 160
66. தூர்வாஸ விவாஹம் ... 161
67. உஷா பரிணயம் ... 162
68. ஸ்ருகால மோக்ஷம் ... 165
69. ராதையின் கணேச பூஜை ... 166
70. வாஸுதேவரது ராஜஸூய யாகம் ... „
71. கிருஷ்ணன் நந்தன் வீடு செல்லுதல் ... 167
72. கிருஷ்ணன் கோலோகம் செல்லுதல் ... 168
73. அக்னி உத்பத்தி ... 169
74. புராண ச்ரவண விதியும் பலனும் ... „

---o---

உ

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

ஸ்ரீ ப்ரஹ்ம வைவர்த்த புராணம்.

ப்ரஹ்ம கண்டம்

பாரத வர்ஷத்தில் மிக பவித்ரமான இடம் நைமிசாரண்யம். அது சௌநகர் முதலிய புண்ய புருஷர்களுக்கு இருப்பிடம். நித்யநைமித்திக கர்மங்களை முடித்து விட்டு சௌநகாதி முநிகள் தர்ப்பாஸநத்தில் வீற்றிருந்தனர். ஆங்கு ஸாதுக்களை ஸேவிப்பதற்காக ஸூதபௌராணிகர் வந்தார். ஆங்குள்ளோர் அனைவரும் அவரை நல்வரவேற்று ஆஸநமளித்தனர். ஸாதுக்கள் ஸாதுக்களோடு சேர்ந்தால் தர்மத்தையின்றி வேறு என்ன பேசுவர்? சௌநகாதிகள் ஸ்ரீ ராதா கிருஷ்ணனது சரிதத்தையும் அவரது ஆணையான தர்மங்களையும் கூறும்படி வேண்டினர். ஸூதர் குருவையும் பகவானையும் வணங்கி பிரும்மத்தின் விவரத்தைக்கூறும் பிரும்ம வைவர்த்த புராணத்தை ஆரம்பித்தார். இது கோலோக வாஸியான ஸ்ரீ கிருஷ்ணனால் பிரும்மாவுக்கும், அவரால் தர்மருக்கும், தர்மரால் நாராயணருக்கும், அவரால் நாரதருக்கும், நாரதரால் வியாஸருக்கும் உபதேசிக்கப்பட்டது. வியாஸாசார்யர் பதினெண்ணாயிரம் சுலோகங்களும் நான்குகண்டமுமுள்ளதாக இயற்றி ஸூதருக்கு இதை உபதேசித்தார்.

ஜகத் ஸ்ருஷ்டி

கோலோகமென்பது எல்லா உலகங்களுக்கும் மேலிருப்பது. துன்பமே இல்லாது இன்பம் நிறைந்த இடம். எக்காலத்தும் அழிவில்லாதது. மூன்று கோடி யோஜனை தூரம் விசாலமாக உள்ளது. ஸ்ரீ ராதாகிருஷ்ணனது இருப்பிடம் அதுவே. கோடி ஸூர்யனைப்போல் ப்ரகாசமுள்ளது. அதன் கீழ் ஐம்பதுகோடி யோஜனை தூரத்தில் தெற்கே வைகுண்டமும் வடக்கே கைலாஸமுமுளது. இவை கோடி யோஜனை தூரம் விசால முள்ளவை. ப்ரளயகாலத்தில் இவ்விரண்டும் கோலோகத்தில் லயமாகும். கோலோகத்திற்கு ஸ்ருஷ்டியுமில்லை; லயமுமில்லை. ஆங்குள்ள ராஸமண்டலத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் உருவில்லாது தன்னிடத்தில் ஒடுங்கிக்கிடக்கும் உலகைப் படைக்கக் கருதினர். அவர் வலதுபுறத்திலிருந்து ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களும் மூர்த்தியுடன் தோன்றின. பின்னர் மஹத் அஹங்காரம் பஞ்சதந்மாத்ரைகள் நாராயணன் முதலியவைகள் உண்டாயின. இடதுபுறத்திலிருந்து ஐந்து முகங்களுடன் சங்கரன் உதித்தார். ஸ்ரீ க்ருஷ்ணனது தொந்திக்கமலத்திலிருந்து சதுர்முகன் தோன்றினன். முறையே லக்ஷ்மீ துர்க்கை ஸரஸ்வதிகள் மும்மூர்த்திகளது இடதுபுறத்திலிருந்து தோன்றினர். பிரும்மா விஷ்ணு ருத்ரர் ஆகிய மூவரும் பகவானைப்பணிந்து துதித்து, ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் எனும் வேலைகளை முறையே செய்து வந்தனர். ஸ்ரீ கிருஷ்ணரது மார்பிலிருந்து தர்மமும் அஹிம்ஸையும், மனதிலிருந்து மன்மதனும் ரதியும் உண்டானர்கள். மன்மதனது பாணத்தால் ஸ்ரீகிருஷ்ணனுக்குக் காமவிகாரந் தோன்றி அவர் வீர்யம் ஜலத்தில் பெருகிற்று. அது ஆயிரமாண்டுகள் சென்றபின் விராட் என்ற ஸ்வரூபத்தை அடைந்தது. விராட் பகவான் கடலில் படுத்துறங்கும்போது

அவர் காதுமலத்திலிருந்து மதுகைடபர் எனும் இரு அரக்கர் தோன்றி பிரும்மாவை ஹிம்ஸித்தனர். விராட் அவர்களைக் கொன்றார். அவர்களது மேதஸ்ஸால் மேதினீ என்ற பூமி உண்டானது. இங்ஙனம் ஜகத்தைப் படைத்தபின் பகவான் ராஸ மண்டலத்தில் திவ்யாஸநத்திலமர்ந்தார். அவரது இடது பாகத்திலிருந்து ஓர் திவ்ய வடிவம்வாய்ந்த கன்யகை தோன்றி, வேகமாக ஓடி மலரெடுத்து வந்து பகவானது பாதாரவிந்தங்களில் சாற்றினாள். ராஸமண்டலத்தில் ஜனித்ததற்கறிகுறியாக, ரா, என்றும், தாவநம் செய்து ஓடி மலரெடுத் தர்சித்ததற் கடையாளமாக-தா-என்றும், ஆக ராதா என்று அம்பிகைக்குப் பெயருண்டானது. அன்னை பகவானைத் துதித்து அவரமர்ந்துள்ள ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்தாள். பின்னர் க்ருஷ்ண சரீரத்திலிருந்து கோடிக்கணக்கான கோபர்களும் ராதையின் ரோமகூபங்களிலிருந்து கோடிக்கணக்கான கோபிகைகளும் உண்டானார்கள். பகவானது ரோமகூபத்திலிருந்து ஜனித்த கோடிக்கணக்கான கோக்களில் சிவனுக்கு வாஹநமாக ஓர் காளையை அளித்தார். கால் நகங்களிலிருந்து பிறந்த ஹம்ஸங்களிலொன்றை ப்ரும்மனுக்குக் கொடுத்தார். இடது காதிலிருந்துண்டான வெண் குதிரையிலொன்றைத் தர்மனுக்கு வாஹநமாகக் கொடுத்தார். யோக சக்தியால் நவரத்நகசிதமான ஐந்து ரதங்களைப் படைத்து ஒன்றை ராதைக்கும், மற்றொன்றை நாராயணனுக்குமளித்தார். பகவானது குஹ்யஸ்தலத்திலிருந்து பிறந்தவர் குஹ்யகராவர்.

ஸ்ரீ கிருஷ்ணன் மஹேசனை அழைத்துப் பார்வதியை மணக்கும்படி கூறினார். அவர் ஸம்ஸாரத்திலமர்ந்தோர் விஷயஸுகத்திலீடுபட்டுப் பரமனை மறப்பர். ஆதலால் தங்களது பாதாரவிந்த பக்தியையின்றி வேறொன்றும் வேண்டேனென்றார். பகவான், ஸதியான பத்நியுடன் வாழ்வோர்

ஸம்ஸார வாழ்க்கைக்கஞ்ச வேண்டாம். நீ கூறியபடி என்னிடம் பக்தி உண்டாகும்படி ஓர் மந்திரத்தை அளிக்கிறேன். நீ எல்லோராலும் பூஜிக்கத்தக்க உத்தமனுவாய் என்று திவ்ய மந்த்ரத்தை உபதேசித்தார். துர்க்கையை அழைத்து நீ கோலோகத்திலேயே வஸித்திரு. தக்ஷனுக்கு நீ பெண்ணுகப் பிறந்தபின் உன்னைச் சிவன் மணப்பனென்ருர். அங்ஙனமே ஸகல தேவர்களும் பகவத் பக்தியையே வேண்ட அவரவருக்கேற்றபடி பகவான் பல மந்திரங்களை உபதேசித்தருளினுர். பகவான் அவரவர்க்கும் தகுதியான மனைவியை அளித்து ப்ரும்மாவைப் படைக்கும்படி கூறினுர். அவர் ஸாவித்ரியினிடம் தனது வீர்யத்தைச் செலுத்தி வேத சாஸ்த்ரம் முதலியவைகளைப் படைத்தார். பிரும்மனது பின்புறத்திலிருந்து அதர்மம் முதலியன தோன்றின. அவரது அவயவங்களிலிருந்து எண்ணிறந்த மஹர்ஷிகள் உதித்தனர். கண்டத்திலிருந்து நாரதர் தோன்றினுர். அவர்களை நோக்கி பிரும்மா, தவம் செய்து மணம் புரிந்துகொண்டு உலகைப் படைக்கும் தொழிலில் ஈடுபடுங்கள் என்ருர். பக்திக்குப் பரவசமாகிய நாரதர் அதை ஏற்காது மகனுக்குத் தந்தைகூறும் உபதேசம் இதுதானே என்ருர். தன் சொல்லை மதிக்காத மகனிடம் பிரும்மனுக்குக் கடுங் கோபமுண்டாயிற்று. ஸம்ஸாரத்தை வெறுத்த நாரதன் லக்ஷமாண்டுகள் கந்தர்வனுக இருந்து ஐம்பது பெண்களுடன்கூடி சிற்றின்பத்தை அனுபவித்துப் பின்னர் சூத்ரனுகப் பிறந்து அதன் பிறகு பழயநிலைக்கு வருவாரென சபித்தார். நாரதர் பன்றியாய்ப் பிறப்பினும் பகவானது பாதாரவிந்தம் மறக்காதிருந்தால் போதும் என்று கூறி காரணமின்றி தன்னைச் சபித்ததால் கோபங்கொண்டார். மூன்று கல்பம்வரை எவரும் சதுர்முகனை பூஜியார். அவருக்கு ஆலயமுமிராதென்று சபித்தார். தந்தை சொற்படி மற்ற மைந்தர்கள் உலகைப் படைத்தனர். வாமநவடிவங்

கொண்ட பகவானைக்கண்டு பூதேவி மோஹித்தாள். அவளைப் பகவான் ஆலிங்கனம் செய்து சென்றார். அந்த ஸுகத்தால் அவள் மோஹம் தெளியாதிருக்க ரம்பை அவளை எழுப்பினாள். அவள் மூர்ச்சை தெளிந்தெழுந்து தன்னிடம் விஷ்ணு வீர்யமிருக்கக் கண்டாள். அதைப் பவழங்கள் உற்பத்தியாகுமிடத்தில் அவள் வைக்க, ஆங்கிருந்து மங்களம் என்ற குழந்தை பிறந்தது. அது பின்னர் நவக்ரஹத்தில் ஒன்றாக சேர்க்கப்பட்டது. அதை செவ்வாயல்லது அங்காரகன் என்பர்.

அவாந்தர ஜாதி ஸ்ருஷ்டி. நான்கு வர்ணத்தையும் நான்முகன் படைத்து அவர்களுக்குரிய கடமைகளையுமியற்றினான். ஒருஸமயம் க்ருதாசீ என்ற அப்ஸரஸ்த்ரீ காமனிடம் காமனைகொண்டு சென்றாள். இடையில் விச்வகர்மனெனும் தேவதச்சன் அவளை விரும்ப அவளதை மறுத்தாள். அவளை அவனியில் சூத்ரப் பெண்ணாகப் பிறக்கும்படி அவர் சபித்தார். க்ருதாசியும் அவரை அந்தணனாகப் பிறக்கும்படி சபித்தாள். இருவரும் பூமியில் பிறந்து பூர்வ ஜன்ம விருத்தாந்தத்தை நினைத்தனர். பூர்வ ஸங்கல்பத்தால் இருவரும் ஒன்று கூடினர். மாலை தொடுப்பவன், கர்மகாரன், சங்கவேலை செய்பவன், கைக்கோளன், குயவன், ஸூத்ரகாரன், ஸ்வர்ணகாரன், சித்ரகாரன் முதலிய புதல்வர்களைப் பெற்றனர். மற்று மநேக ஸங்கர ஜாதிகள் நான்கு வர்ணத்தவரிடமிருந்தும் ஜநித்தன. அச்விநீ தேவர் ஓர் பிராமண ஸ்த்ரீயினிடம் காமனை கொண்டார். அவள் அதற்கு ஸம்மதித்தாளில்லை. அந்த தேவ வைத்யன் பலாத்காரம் செய்ய உடனே ஓர் குழந்தை பிறந்தது. அவள் தன் கற்பழிந்ததால் கோதாவரி நதியாக மாறினாள். அக்குழந்தை கணக்க ஜாதிக்குக்கர்த்தாவானது. அவள் பதியான ஸுதபர் லக்ஷமாண்டுகள் தவம் புரிந்தார். ஸ்ரீ கிருஷ்ணன் அவர் எதிரிற்றோன்றி ஒன்றும்

பேசாது மறைந்தார். இதைக்கண்டு வியந்து நிற்கும் பிரா மணரை நோக்கி அசரீரியான வாக்குறைத்தது. நீர் மனைவியில் லாதிருத்தலால் பகவான் உமக்குத் தர்சநமளித்தும் நீகோரிய தாஸ்யமெனும் வரமளிக்கவில்லை. பத்நியுடன் தவம் செய்து வரம்பெறு என்றது. இதைக்கேட்டு அவர் பித்ருக்களது மாநஸிக கன்யகையை மணம் புரிந்துகொண்டார். அவளிடம் கல்யாணமித்ரன் என்றோர் குழந்தை பிறந்தது. இவனை நினைப்போர் இடியினாலுண்டாகும் பயத்தை அடையார். ஸுதபஸ் தனது பத்நியின் கற்பை அழித்த அச்வினீ தேவ ரிடம் அடங்காக் கோபம் கொண்டார். அவர்கள் ரோகியா வார்களென்றும் யாகத்தில் பாகம் பெறாரென்றும் சபித்தார். அச்வினிகளது தந்தையான ஸூர்யதேவன் ஸுதபஸ்ஸிடம் வந்து அவரைத் துதித்தார். தேவ! பிராமணரிடம் வேதம் சரண் புகுந்தது. வேதியரளித்தால் தான் முப்பத்துமுக் கோடி தேவருக்கும் அன்னமுண்டு. நதியில் கங்கையும் வைஷ்ணவரில் சங்கரனும் ஸதியில் பார்வதியும் தர்மத்தில் ஸத்யமும் சிறந்ததுபோல் மனிதரில் பிராமணரே உயர்ந்தவர் என்று ஆதித்யன் கூறிய மொழிகளைக்கேட்டு அந்தணர் ஆநந்தமடைந்தார். அச்விநிகளது நோய் அகலும்படி ஆசீர் வதித்தார். சிலகாலம் சென்றபின் அவர்களுக்கு யக்ஞபாகம் கிடைக்குமென்றார்.

உபபர்ஹணன்

பிறகு நாரதருடைய கதியாதென சௌநகாதிகள்வினவ, ஸூதர்உரைத்தார். கந்தர்வராஜனொருவன் புத்ரபாக்யமின்றி வருந்தினான். தனது குருவான வஸிஷ்டரைச் சரண்புகுந் தான். அவர் சிவகவசமெனும் மாமந்திரத்தை உபதேசித் தார். புஷ்கர க்ஷேத்ரஞ் சென்று அவன் பல்லாண்டு தவம் புரிந்தான். கருணைக்கடலான கைலாஸநாதன் அவன் எதிரே

தோன்றினர். ஜ்யோதிர் வடிவமான பரமனைப் பணிந்து துதித்தான். வேண்டியதைக்கேள் என்று பகவான் கூற விஷ்ணு பக்தியையும் பக்தனான புத்ரனையும் வேண்டினன். அங்ஙனமே அருள்புரிந்து அவர் மறைந்தார். கந்தர்வ ராஜனுக்கு மிக அழகான குழந்தை பிறந்தது. வஸிஷ்டரைக் கொண்டு அதற்கு உபபர்ஹணன் என்று நாமம் சூட்டினன். கோதாநம் பூதாநம் ஸ்வர்ணதாநம் தாந்யதாநம் முதலியவைகளைச் செய்தான். மிக்க அன்புடன் குழந்தையை வளர்த்து வந்தான். தந்தையின் சாபத்தால் நாரதரே அந்த சிசுவாகத் தோன்றியவர். இயற்கையிலே அழகான நாரதர் காளைப்பருவத்தை அடைந்து மன்மதனைப்போல் விளங்கினார். கண்டகி தீரத்தில் திரியும் அவரைக் கண்ட கந்தர்வ பத்நிகள் காம வலையில் சிக்கினர். கடுந்தவம் புரிந்து மறுபிறவியில் இவரையே பதியாகப் பெறவேண்டுமெனக் கோரி உடலை விட்டனர். அங்ஙனமே சித்ராதன் என்ற கந்தர்வனுக்கு ஐம்பது பெண்களாக அவர்கள் பிறந்தனர். உபபர்ஹணனை மணந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தனர். கந்தர்வ ஜாதிக்கேற்ற காநம் ஆடல் முதலிய ச்ருங்கார சேஷ்டைகளால் காலத்தை ஆநந்தமாகக் கழித்தனர். மூன்று லக்ஷமாண்டுகள் மூன்று நாள் போல் அவர்களுக்குத் தோன்றின. கந்தர்வ ராஜ்யம் அழகான சரீரம், இனிய யௌவநம் அழகிற் சிறந்த ஐம்பது மனைவிகள் ஆகிய எல்லாம் உபபர்ஹணனது உள்ளத்தைப் பரவசமாக்கின.

ஒரு ஸமயம் அவன் ப்ரும்ம லோகஞ் சென்றான். ஆங்கு அரம்பை நடநமாடினள். அவளழகு உபபர்ஹணனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மநதினால் அம்மாதரசியைக் கட்டி மகிழ்ந்தான். உடனே அவனது வீர்யம் கீழே சிந்திற்று, இதைக்கண்டு பிரும்மா சினங்கொண்டார். சூத்ர ஜாதியில் பிறப்பாய்! என்று அவனைச் சபித்தார். உடனே

அவனுக்குத் தனது முன் பிறவி நினைவுக்கு வந்தது. தன் னிருப்பிடம் வந்தான். தர்ப்பைசயநத்தில் படுத்தான். விரை. வில் வேறொரு ஜன்மமெடுக்க யோககலையால் இவ்வுடலை விட் டான். ஐம்பது மனைவிகளும் அருகிற்சென்று கதறினர். மூத்தவளான மாலாவதி மெய்மறந்து வருந்தினாள். தன் வினையை நொந்தாள். தைவங்களுக்குக் கண்ணில்லையோ! என வாய்விட்டலறினாள். தன் கணவனது வேள்வியில் விருந் துண்ட வானவர், தன் பதியை உடனே தந்தருள வேண்டும். இல்லையேல் தனது சாபத்தால் அவர் துன்புறுவர் என்றாள். ஒவ்வொருதேவராக பெயரிட்டழைத்தாள். அவளது கறபின் கனல் தேவரை நடுங்கச் செய்தது. பிரும்மாதி தேவர்கள் மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்தனர். பல்லாண்டாகப்பாது காற்றுவரும் தங்கள் பதவியும் தாங்களும் ஒரு க்ஷணத்தில் கற்பின் மஹிமையால் சாம்பலாவதைக் கூறினர். அபய மளித்தோம்! அஞ்சாது செல்லுங்கள்!! என்றோர் அசரீரி யான வாக்கைக் கேட்டுத் திரும்பினர். அக்கற்பரசியின் முன்னே நின்றனர். தன்னெதிரில் தோன்றிய வானவரடி பணிந்து தன் கணவனைத் தரும்படி மாலாவதி வேண்டினாள். இதற்கு யாது விடை கூறுவதென்றறியாது தேவர் விழித் தனர்.

இதனிடையில் மிக ஸுந்தர புருஷனொருவன் அங்கு வந்தான். அவனது தேஜஸைக் கண்டவுடன் எல்லோரும் எழுந்து நின்றனர். வந்தவர் வானவரை நோக்கி எக்காரணம் பற்றி நீங்களிங்கு வந்தீர்கள் என்று வினவினர். அவர் யாரென்றறியாது தேவர் விழிக்க, கற்பரசி அவரடி பணிந்து வருக! வருக! திருமாலே! வருக! என்றாள். புருஷோத்த மனே பூஸுரவேடம் பூண்டு வந்தானென அதன்பின் அமரர் அறிந்தனர். இறந்த பதியை எழுப்பித் தரும்படி மாலாவதி பகவானை வேண்டினாள். அவர், ஒருவனுக்குப் பிறப்பிறப்பு

தாழ்மை மேன்மை முதலியவைகள் எங்ஙனம் உண்டாகிற தென நீண்டநேரம் கூறினர்.

ஒவ்வொரு மனிதனும் புண்யபாபகர்மங்களைச் செய்த வண்ணமாகவே இருக்கிறான். அவன் செய்த வினைக்கேற்ற படி பயனை அளிப்பவர் பரமாத்மா. பாபம் செய்தோர் அற்பாயுளாக இறப்பர். புண்யம் செய்தவர் நீண்ட ஆயுளைப்பெறுவர். செல்வமும் சிறப்பும் புத்ரனும் மித்ரனும் எவனுக்கும் தானே வருவதில்லை. முன்பிறவியில் செய்த வினைக்கேற்ற படியேதான் இப்பிறவியில் பயனைப் பெறுகின்றனர். அறிவில்லாதவரே செல்வம் சேர்ந்தபோது தான் தேடியதாகவும், துன்பம் வந்தக்கால் தைவம் செய்வதாகவுங் கூறுவர். பிரும்மனைப் பூஜிப்பவன் பிரஜையைப் பெறுவன். ஸூர்யனை உபாஸிப்போர் ஆரோக்யத்தை அடைவர். விக்நேசனை அர்ச்சிப்பவருக்கு எடுத்த கார்யம் தடையின்றி பூர்த்தியாகும். விஷ்ணுவைப் பூஜிப்பவர் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைவர். அச்யுதனை அர்ச்சித்து அவரிடம் புத்ரன் செல்வம் முதலிய வரனை வேண்டுபவர் மாயையால் ஏமாந்தவராவர். க்ருஷ்ண பக்தன் தன்னை மாத்ரமின்றி தன் முன்னோரையும் நரகத்தில் விழாமல் காக்கிறான். கண்ணனைப் பூஜிப்பவர் கர்ப்பவாஸ துக்கத்தை அடையார். யான் நோயால் இறந்தவரை மருந்தால் பிழைப்பிப்பேன். யோகத்தினால் உயிர் துறந்தவரை மந்த்ர மஹிமையால் ஜீவிக்கும்படி செய்வேன். உன் கணவன் எப்படி இறந்தான் ? கூறு ! அவனை யான் பிழைப்பிக்கிறேனென்றார். தன் கணவன் பிழைப்பது திண்ணம். அவரெதிரில் தேவர் ஸபையில் தான் நிற்பதும் தகாது. பின்னர் தேவருடன் பேசுவதும் உசிதமில்லை அல்லவா ? எனக்கருதி இப்போதே தர்மங்களைக் கேட்போமென்று மாலாவதி எண்ணினாள். மாநிடர் இறப்பதற்குக் காரணமானகாலன் யமன் மிருத்யு கன்யகை முதலியவர்

களை அழைத்துத் தனக்குக் காண்பிக்கும்படி அவள் வேண்டி ஞள். அங்ஙனமே அச்யுதனும் அவர்களை அழைத்தார். கருமை நிறமும் கோர ரூபமும் ஆறு கைகளும் அறுபத்தி நான்கு பிள்ளைகளுமுள்ள மிருத்யு கன்யகை காலனது இடது புறத்தில் நின்ருள். மிக்க பயங்கர சரீரமும் ஆறு முகமும் பனிரண்டு கைகளும் இருபத்திநான்கு கண்களும் ஆறு கால்களும் சிவந்த துணியும் கையில் ஜபமாலையும் எதிரில் சரீரத்துடன் கூடிய வியாதிகளும் உள்ள காலத் திற்கு அதிஷ்டாநதேவரான காலரைக் கண்டாள். இவர் தர்மத்தின் அம்சத்தினுல் உண்டானவர். கால் பெருத்து உடல் கறுத்து பாபிக்கு பயங்கரமாயும் புண்ய சீலருக்கு அழகாயுமுள்ள யமதர்ம ராஜன் அவர்கள் அருகே நின்ருன். மாலாவதி தருமராஜனை நோக்கி அகாலத்தில் என் பதியை ஏன் கொண்டு சென்ருய் என்று வினவினுள். ஈசனுணை யின்றி எவருக்கும் அகாலத்தில் மரணம் நேராது. ஒவ் வொருவரும் ஜநிப்பதற்குக் காரணமாயுள்ள நிஷேக காலத் திலே மிருத்தியு கன்யகை உள்ளே புகுந்து விடுகிருள். அவள் எவரை அழைத்துச் செல்லும்படி கூறுகிருளோ அவரையே யான் கொண்டு செல்வேனென்று யமன் கூறி ஞன். இதைக் கேட்டு மாலாவதி மிருத்யு கன்யகையை நோக்கி பெண் மக்களது துன்பத்தை நீ அறியாயோ? கண வனை இழப்பதைவிட மாதருக்கு வேறு துன்பமுண்டோ? நீ பெண்ணுக இருந்தும் இங்ஙனம் செய்வது நீதியோ? என்று வினவினுள். மிருத்யுகன்யகை, அம்மா! நீ கூறுவது உண் மையே! யான் என்செய்வேன்? தர்மரூபியான காலன் எவ ரைக் கொல்லும்படி ஆணையிடுகிருரோ? அவரையே நானும் எனது புதல்வரான வியாதியும் கொல்கிறேம். என்னைக் கேட்டு யாது பயன்? அந்த காலரைக் கேள்! என்ருள். அங் ஙனமே அவரை அவள் வினவ, காலன், எல்லாம் வல்ல

ஈசனுணையால் நாங்கள் ஓர் ஜீவனைக் கொண்டு செல்கிறோம். அவனைச் சரணமடை என்றார்.

ஆரோக்யவழி. மாலாவதி, மஹா விஷ்ணுவை வணங்கி என் கணவன் இறந்ததற்கு நீங்கள்தான் காரணம்? ஏன் என் பதியைக் கொன்றீர் என்றாள். பகவான், ஒருவன் நீண்ட ஆயுள் ஜீவித்திருக்கவும் பிணியின்றி வாழவும் கீழ்க்கண்ட வழிகளைக் கூறினர். ஆயுள் சரீரம் நோய் சிகித்ஸை நோயைத் தடுக்கும்வழி முதலியவைகளைப் பற்றி கூறுவது ஆயுர்வேத மெனப்படும். தந்வந்தரி முதலிய பதினறு மஹர்ஷிகள் வைத்திய நூலை விருத்தி செய்தனர். வியாதிகளில் முக்கிய மானது ஜ்வரம். அது மூன்று தலைகள் மூன்று கால்களும் ஆறு கைகளும் ஒன்பது கண்களுமுள்ள ஓர் தேவதை. அதே ஸகல ரோகங்களுக்கும் காரணமாயுள்ளது. அதற்குத் தந்தை அஜீர்ணமாகும். பாண்டு காமாலை குஷ்டம் ப்லீஹா சூலம் அதிஸாரம் க்ரஹணி காசம் மூத்ரக்ருச்ரம் குல்மம் ரக்த தோஷம் மேஹம் கலகண்டகம் ஸந்நிபாதம் விஷூசீ ஜரை முதலிய அறுபத்து நான்கு வியாதிகள் உள. அடிக்கடி கண் களை அலம்புதல், சரீரப் பயிற்சி, உள்ளங்கால் காது தலை முத லிய விடங்களில் அடிக்கடி எண்ணை தேய்த்தல்,ப்ராத ஸ்நாநம், வெய்யில் காலத்தில் நல்ல காற்றை ஸேவித்தல், மழைகாலத் தில் வெந்நீர் ஸ்நாநம், உஷ்ணமான உணவை உட்கொள்ளுதல், இளம் பெண்களை ரமித்தல், க்ஷீராந்நம் உண்பது, நெய்யை அதிகமாகசேர்ப்பது, பசித்தபின் புசித்தல், தாம்பூலஸேவை முதலிய உபாயங்களைக் கைகொண்டால், ஜரையும் அதனுல் உண்டாகும் துன்பங்களும் நம்மை அணுகாது. பழைய அந்நம், வயதான ஸ்த்ரீபோகம், இளம் வெய்யில், இரவில் ஏற்கும் தயிர், பாபிகளது அந்நம் முதலியவைகள் ஜரையுடன் பலரோகங்களையும் உண்டுபண்ணும். பாபமும் பிணியும் அந்யோன்ய மன்புகொண்டவைகள். ஆதலால் பாபம் செய் பவரை நோய் ஒரு நாளும் விடுவதில்லை.

ஸ்வதர்மத்தைக் கைவிடாதவன், குரு. தேவ அதிதி பூஜை செய்பவன், விருதம் உபவாஸம் தீர்த்தயாத்ரை முதலியவைகளை அநுஷ்டிப்பவன், ஆகிய இவர்களைக் கண்டு நோய்கள் பயந்து ஓடும். பசியில்லாதபோது உண்பதும், நன்குபசித்தும் உண்ணுமலிருப்பதும், ஜ்வரத்தை உண்டு பண்ணும். உணவிற்குப் பிறகு நீண்ட நடை, ஓட்டம், வெய்யிலில் செல்லுதல், ஸ்திரீ ஸம்ஸர்க்கம், கோபம், எருமைத் தயிர், முதலியவைகள் வாயுரோகத்தை உண்டுபண்ணும் என்று பிராமணனாக வந்த பத்மநாபன் உரைத்தான். இதைக் கேட்ட மாலாவதி, ஐயனே! என் கணவன் ஒரு நோயாலும் இறக்கவில்லை. யோகத்தினல் தனது பிராணனை நீத்தார். அவரை விரைவில் எழுப்பி அருளும் என்றாள். அச்யுதன் அமரர்களே சென்று இக் கந்தர்வராஜனை எழுப்ப எவருக்கு சக்தி உளதோ? அவர் விரைவில் வருக! இல்லையேல் மாலாவதி எல்லோரையும் சபிப்பள் என்ருர். பிரும்மா, "தனது புதல்வனே அவன். தனது சாபத்தினுல் இங்ஙனம் அவன் கந்தர்வனுனன். மறுபிறப்பில் சூத்ரனுவான். அதன் பின் தன் நிலையைப் பெறுவன். இப்பிறவியிலே மற்றும் சில ஆண்டுகள் அவன் ஜீவிக்கலாம். அவனை எழுப்பும் சக்தி தேவரான எங்களிடமே உளது என்றுரைத்தார். மஹா விஷ்ணுவினது மாயையால் எதிரிலுள்ளமாலே எவர் என்றுணரவில்லை. இதைக் கேட்ட மாதவன் நீங்களே இவனை எழுப்பக் கூடுமாயின் ச்வேதத்வீபம் சென்றதேன்? பகவானை வேண்டியதேன்? அஃதிருக்கட்டும்! விரைவில் இவனைப் பிழைப்பூட்டுங்கள்!! என்ருர். பிரும்மா தனது பாத்ரத்திலுள்ள தீர்த்தத்தைச் சவத்தின்மேல் ப்ரோக்ஷித்து அதற்கு மநதை அளித்தார். சிவன் அறிவையும் தர்மத்தை யமதர்மனு மளித்தார்கள். அப்போதும் அச்சவம் எழுந்தபாடில்லை. மாதவன் ஜீவன சக்தியை அளித்தார். அப்பொழுதும் அச்சவம் புரண்டதே

யன்றி எழுந்திருக்கவில்லை. பிரும்மா மாலாவதியை நோக்கி எங்களால் இவ்வளவுதான் செய்ய இயலும்; இதற்கு மேல் எல்லாவற்றிற்கும் மேலாக உள்ள புண்டரீகாக்ஷனைப் போற்று என்றார். அங்ஙனமே அவள் பகவானைத் துதித்து ப்ராமண வேடம் பூண்ட பரமனை வணங்கினாள். கந்தர்வன் உறங்கி எழுந்தவன்போல் கண்ணை நிமிண்டி எழுந்தான். வீணையைக் கொண்டு எதிரிலுள்ள விஷ்ணுவைத் துதித்தான். தேவர்கள் விழித்துக்கொண்டனர். அருகிலுள்ள அந்தணர் அச்யுதனே எனக் கண்டனர். அவர் திருவடி பணிந்து அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டினர். பகவான் உடனே மறைந்தார். தேவர்களும் தேவலோகஞ் சென்றனர். மாலாவதி இறந்த கணவனைத் திரும்பப்பெற்று மட்டில்லா மகிழ்ச்சி கொண்டாள். அந்தணருக்கு அபரிமிதமாக தானம் செய்தாள். உபபர்ஹணன் முன்போலவே கந்தர்வ ராஜ்யத்தை ஆண்டு வந்தான். வஸிஷ்ட பகவான் உபபர்ஹணனுக்கு த்வாதசாக்ஷரி மஹாமந்த்ரத்தையும் சிவகவசத்தையும் உபதேசித்தார். பல்லாண்டு சென்றபின் இவன் தந்தை மனைவியுடன் கங்காதீரம் சென்று உடலைவிட்டு வைகுண்டம் சென்றார். சிவனருளாலும் விஷ்ணு பக்தியாலும் வைகுண்டத்தில் தாஸனாகப் பிறந்தார். உபபர்ஹணன், தனது பெற்றோர்க்கு ஈமக்கடன் களைச் செய்து முடித்தான். பல்லாண்டு கழிந்தபின் இவ்வுடலைவிட்டு ஓர் சூத்ர ஜன்மமெடுத்தான். மாலாவதியும் புஷ்கர க்ஷேத்ரத்தில் அக்நிகுண்டத்தில் உடலை விட்டாள். கற்பின் சிறப்பால் மரு வம்சத்திலுதித்த ஸ்ருஞ்ஜய ராஜனுக்கு மகளாக அவள் பிறந்தாள். அப்பிறவியிலும் உபபர்ஹணனே தனக்குப்பதியாக வேண்டுமென தவம் புரிந்தாள்.

நாரதரது தாஸ ஜன்மம்

கான்யகுப்ஜமெனும் தேசத்திலே த்ருமிலகன் என்றோர் இடைய னிருந்தான். அவன் மனைவிக்குக் கலாவதி

என்று பெயர். அவள் மிக்க பதிவிருதை. அவளுக்குப் புத்ர பாக்ய முண்டாக வில்லை. தன் கணவன் உத்திரவுபடி அவள் தபோவநம் சென்றாள். ஆங்கு தபோநிஷ்டையிலுள்ள காச்யபரைக் கண்டாள். அவரது அழகைக் கண்டு அவர் மூலம் ஓர் மகவைப்பெற ஆசைகொண்டாள். அவர் தவங் கலைந்து வருமளவும் காத்திருந்தாள். தனது காமனையை அவருக்கு ஜாடையாக அறிவித்தாள். அவர் நீ யார் என்று வினவ, தனது விருத்தாந்தத்தை அறிவித்தாள். அவர் "சூத்ர ஸ்த்ரீயைப் புணர்வோரது தவம்குறையும். அவர் செய்யும் கர்மாவை அமரர் ஏற்கார். பித்ருக்களும் அவரைச் சபிப்பர். ஆதலின் உன்னை யான் தீண்டமுடியாது" என்றார். தானாகவந்த பெண்ணைக் கைவிடுவது பாபம். தங்கள்போன்ற தபஸிகளுக்கு இதனால் குற்றம் வாராது. என் உயிரைக்காப்பது தங்கள் கடன். எனக்கு ஓர் குழந்தையைக் கொடும் என்று பன்முறை கலாவதி முநிவரை வேண்டினாள். அவர் அதற்குச் செவி சாய்க்காது வேறிடம் சென்றார். இவளும் அவரைப் பின் தொடர்ந்தாள். இதனிடையில் தற்செயலாக தபஸியின் எதிரே மேநகை தோன்றினாள். அவளது அழகைக் கண்டு கச்யபரது வீர்யம் நழுவியது. ருது ஸ்நாநம் செய்திருந்த கலாவதி அதை எடுத்து புஜித்தாள். இதைத் தன் கணவனிடம் அறிவித்தாள். அவன் மிக்க ஸந்தோஷம் கொண்டு, மனைவியை ஓர் மஹீசுரனில்லத்தே இருந்து அவருக்குத் தொண்டுபுரியும்படி கூறினான். தனது ஐச்வர்யங்களை எல்லாம் அந்தணருக்குத் தாநமாக அளித்தான். தான் பதரிகாச்ரமம் சென்று கங்கையில் பூத உடலை விட்டான். வைகுண்டத்திலிருந்து வந்த திவ்ய விமாநத்தின் மீதேறிச் சென்றான்.

கலாவதி கணவன் சொற்படி ஓர் அந்தணன் வீட்டிலே வஸித்து வந்தாள். சிலகாலம் சென்றபின் ஓர் அழகிய குழந்

தையைப் பெற்ருள். அது ஐந்தாண்டு சென்றபின் கிருஷ்ண பக்தியிலீடுபட்டது. அதன் விளையாட்டு விஷ்ணு பூஜையே. பாட்டு பக்தி நிறைந்ததாக இருந்தது. உணவை மறப்பான். உடலை மறப்பான். ஆநந்தத் தாண்டவ மாடுவான். அவனது நாவில் ஹரிநாமமே தாண்டவமாடியது. இக்குழந்தை பிறப்பதற்குமுன் மழையில்லாதிருந்து அவன் பிறந்தபொழுது மழை பொழிந்தது. ஆதலால் நாரம்-ஜலத்தை-த-கொடுத்தவன், என்று அல்லது குழந்தையாக இருக்கும்போதே மற்ற குழந்தைகளுக்கு நாரம்-ஞாநத்தை த-கொடுத்தான் என்றும் அவனுக்கும் நாரதர் என்று நாமம் சூட்டப்பட்டது. அவன் விஷ்ணு பக்தியிலும் ஸாதுக்களை ஸேவிப்பதிலுமே ஆசைகொண்டான். ஒரு ஸமயம் இவன் தங்கியிருந்த வீட்டிற்கு ஐந்து தவஸிகள் வந்தனர். அவர்களுக்கு அவ்வீட்டு அந்தணன் மதுபர்க்கமளித்துப் பூஜை செய்தான். அவர்கள் தின்று மிகுந்த எச்சில்களிலே நாரதன் பேரவா கொண்டான். தாயின் உத்திரவுபடி அவ்வைவருக்கும் நாரதர் பணிவிடை செய்து வந்தார். நாரதரது விநயத்தையும் பக்தியையும் கண்டு விருந்தினர் வியந்தனர். அச்சிறுவனுக்கு ராஸமண்டலேசனுய் விளங்கும் ஸ்ரீ ராதா கிருஷ்ணனது மஹா மந்திரத்தை ஒருவர் உபதேசித்தார். ஓரிரவு நாரதரது தாய் அரவந்தீண்டி இறந்தாள். அதை நினைத்து அவர் வருந்தும் போது பஞ்சரிஷிகள் வந்து தத்வோபதேசம் செய்தனர். நாரதரது சோகமகன்றது. தெளிந்த மநத்துடன் அச்வத்தமரத்தின் கீழ் அமர்ந்தார். ஸ்ரீ கிருஷ்ணமந்திரத்தை ஜபித்து வந்தார். ஆயிரமாண்டுகள் சென்றன. ஸ்ரீராதாதேவியுடன் ராஸமண்டலத்திலுள்ள ஸ்ரீகிருஷ்ணன் ஸர்வாவயவ ஸுந்தரனுன ஓர் சிசுவாக நாரதர் முன்னே தோன்றினுர். அவ்வாநந்தக் கடலில் அரைக்ஷணம் நாரதர் அமிழ்ந்து எழுந்தார். வாக்கிற்கும் மநதிற்கு மெட்

டாத ஜ்யோதி அது. எங்கும் ப்ரகாசமாய் எல்லாமாய் பேரானந்தமாக அவருக்குத் தோன்றிற்று. மெய்மறந்தார். ஆநந்தப்பரவசமானர். கண்ணைத் திறந்தார். கண்ணன்காண வில்லை. ஐயோ" இஃதென்ன விந்தை ? யான் செய்த பாப மென்னே ? கண்முன்னிருந்த கண்ணன் எங்குசென்ருன் ? எவர் அவனை அழைத்துச்சென்றது? என்று கண்ணீர்விட்டுக் கதறினன். உடனே ஆகாயத்தில் ஓர் குறல் தோன்றிற்று. நாரத ! அஞ்சாதே ! இவ்வுடலைவிட்டு வேருேர் சரீரத்தைப் பெறப் போகிருய். அச்சமயம் கண்ணனைக் காண்பாய் என்றது.

இதைக் கேட்ட நாரதர் விரைவில் இவ்வுடலை விட்டு பிரும்மாவான தன் தந்தையுடன் ஐக்யமானர். மறுபடியும் திவ்ய சரீரத்துடன் நாரதராகத் தோன்றி பக்தியிலீடு பட்டார். அவரைப் பார்த்து பிரும்மா முன்போலவே ஓர் மனைவியை மணந்து ஸந்ததியை விருத்திசெய் என்ருர். நாரதர், தந்தையே! முன் இவ்வுத்திரவிற்கு யான் கீழ் படியாததால் கந்தர்வனுகவும் தாஸனுகவும் பிறந்தேன். பல துன்பங்களைப் பெற்றேன். இனியும் எனக்குத்துன்பம் வேண்டாம். பெண்களோடு வஸிப்பது மோக்ஷத்தை அளிக் குமோ? துக்கத்தையும் பந்தத்தையு மல்லவா பெண்மக் கள் அளிப்பார். விவாஹம் வேண்டாம்! என்னை நிர்ப்பந்தம் செய்ய வேண்டாம். பெண்கள் எல்லோரும் துன்பத்தை அளிப்பவரல்ல என்ருலும் உத்தம ஸ்த்ரீகளுடன் கூடி வாழ்தலும் நன்றல்ல. அதமஸ்திரீகளுடன் வஸிப்பதுண் டோ? அவர்களுக்குப் புருஷனைவிட எண்மடங்கு காமம் அதிகம். ஆஹாரம் இரண்டுமடங்கும், நிஷ்டூரமா யிருத்தல் நான்குமடங்கும், கோபம் ஆறுபங்கும் அதிகம். கணவனை வசமாக்கும் விஷயத்தில் அவர்கள் மிக ஸமர்த்தர்கள். யான் மனைவியை வேண்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

கிருஷ்ணபக்தியை எனக் களியுங்கள் என்று தந்தையின் தாளில் நாரதர் விழுந்தார். இதைக் கேட்டு சதுர் முகன் மைந்தனது மந உறுதியைக் கண்டு மகிழ்ந்தார். ஆயினும் இல்லறதர்மத்தில் அவர் அதிக ஆசைகொண்டவர். ஆதலின் புதல்வனை நோக்கி, நீ கைலாஸம் சென்று பரம சிவனிடம் மந்திரோபதேசம் பெறு. அவர் கூறியபடி நட, என்றுரைத்தார். நாரதரும் அதிவிசித்தரமான கைலயங் கிரியை அடைந்தார். எண்ணிறந்த சிவகணங்களுக்கிடையே வீற்றிருக்கும் விருஷபவாஹநனைக் கண்டார். அவரைச் சுற்றி வலம்வந்து வணங்கிப்போற்றினர். இவரது பரிபாகத் தைக் கண்டு ஈசனும் இறுகத்தழுவி ஆசிர்வதித்தார். ஆஸந மளித்து வந்த வேலை யாதென வினவினர். நாரதர், தான் நல்லுபதேசம் பெறவந்ததாக உரைத்தார். ஆயின் உனது ஸந்தேஹம் யாது ? என ஈசன் வினவ, ஆந்ஹிக தர்மத்தைக் கூறும்படி நாரதர் வேண்டினர். சிவன் அதைக் கூறினர்.

ஆந்ஹிக தர்மம்

ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்து ப்ரஹ்மரந்திரத்தி லுள்ள கமலத்தில் குருவை நினைக்கவேண்டும். பின்னர் இஷ்டதேவதையை த்யாநம் செய்ய வேண்டும். குரு பூஜை இல்லாது செய்யும் கர்மங்கள் நிஷ்பலங்க ளாகும். ஊருக்கு வெகு தூரத்தில் நதி தேவாலயம் உழுதபூமி விளையாடு மிடம் தர்ப்பைக்காடு புற்று முதலிய சுத்தமான இடங் களை விலக்கி மற்ற இடங்களில் ஜலமலங்களைக் கழிக்க வேண்டும். அச்சமயம், கையைத்தட்டி பூதேவியை விலக்கி தலையைத் துணியால் மூடிக் கொண்டு பூநூலைக் காதில் சுற்றி மௌநியாயிருக்கவேண்டும். பகலில் வடக்கு முக மாகவும் இரவில் தெற்கு முகமாகவும் உட்காரவேண்டும். லிங்கத்தில் ஓர் முறையும், குதத்தில் மூன்று முறையும்,

இரண்டு கைகளுக்கும் ஏழுமுறையும், கால்களில் ஆறு முறையும் மண் இட்டு சுத்தம் செய்ய வேண்டும். இது கிருஹஸ்தர்களுக்குரிய தர்மம். இதேபோல் இரண்டு பங்கு விதவைகளுக்கும் நான்கு மடங்கு ஸன்யாஸிக்கும் பிரும்மசாரிக்கும் சௌசம் அதிகமாகும். புற்றுமண், எலிவளை மண், மணல், ஜலத்திலுள்ள மண் முதலியவைகளைச் சௌசத்திற்கு எடுக்கக்கூடாது. பதினாறுமுறை வாய்க் கொப்பளித்து பாலுள்ள மரத்திலிருந்து பற்குச்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். ஸ்நாநம் செய்து மடி வஸ்த்ரங்களை உடுத்திக் கால் அலம்பி ஆசமநம் செய்து நெற்றிக்கணிந்து ஸந்த்யையை அநுஷ்டிக்க வேண்டும். அக்நிஹோத்ரம் அல்லது ஔபாஸந ஹோமம் செய்து தந்தை தாய் குரு பிராஹ்மணர் முதலியவர்களை நமஸ்கரிக்க வேண்டும். ஜீவநத்திற்காக வேண்டிய வேலைகளைக் கவனித்துவிட்டு மாத்யாந்ஹிக ஸ்நாநத்தை ஸாவகாசமாகச் செய்ய வேண்டும். ஸங்கல்பம் செய்துகொண்டு அகமர்ஷண மந்த்ரங்களைக் கூற வேண்டும். தேவரிஷி பித்ரு யக்ஷ்மதர்ப்பணங்களைச் செய்து சிகோதகத்தை விட வேண்டும். மாத்யாந்ஹிகத்தைச் செய்து பிரும்ம யக்ஞம் செய்ய வேண்டும். பஞ்சாயதந பூஜை செய்து வைச்வதேவம் செய்ய வேண்டும். ஸாளக்ராம பூஜைக்கு ஈடாக வேறெந்த புண்யத்தையும் கூறமுடியாது. அதிதியை எதிர்நோக்கிப் பசு கறக்கும் நேரம் வாசற்படியில் நிற்க வேண்டும். அதிதி கர்ப்பிணி முதலியவர்கள் புஜித்தபின் யஜமாநன் புஜிக்க வேண்டும்.

புஜிக்கத்தக்கதும் புஜிக்கத்தகாததும்:—ஹோமம் செய்த மிகுதியே உத்தமான்னம். மஹா விஷ்ணுவுக்கு நிவேதநம் செய்யாத பொருள் புஜிக்கத்தகாததாகும். ஏகாதசியன்று புஜிப்போர் மூன்று லோகத்தவாது பாபத்தையும் உண்பவராவர். கோகுலாஷ்டமி, ஸ்ரீ ராமநவமி, சிவராத்ரி ஆகிய இப் புண்ய தினங்களிலும் உபவாஸமிருக்க வேண்டும். ஏகாதசி

முதலிய விருத திநங்களில் கிருஹஸ்தனும், விதவை ஸன்யாஸி பிரும்மசாரி இவர்கள் என்றைக்கும் தாம்பூலம் தரிக்கலாகாது. தாம்பிர பாத்ரத்தால் பாலைக் குடிக்கலாகாது. பாலுடன் உப்பைச் சேர்த்தால் அது கோமாம்ஸம் போலாகும். இளநீரை வெண்கல பாத்ரத்தால் குடிக்கலாகாது. அது ஸுராபாநத்திற்கு ஸமம். கருப்பஞ்சாற்றை தாம்பிரபாத்ரத்தினல் உட்கொள்ளக்கூடாது. ஒருவர் குடித்த மிகுதியைக் குடிக்கலாகாது. காலை ஸ்நாநம் ச்ரார்த்தம் வ்ரத திநம் ஆகிய இக்காலங்களில் கடுகு எண்ணெ மிக்க ச்லாக்யமானது. ஞாயிற்றுக்கிழமையில் எண்ணெ தேய்த்துக் கொள்ளுதல், ஸ்த்ரீஸங்கமம் முதலியவைகளைச் செய்யக்கூடாது. இரவில் தயிரும் பகலில் பாலும் உட்கொள்ளக்கூடாது. ஸந்த்யாகாலங்களில் படுக்கக்கூடாது. க்ஷெளரம் ஸ்த்ரீஸங்கம் இவைகளைச் செய்த உடன் தேவ பித்ரு தர்ப்பணம் செய்தால் அது ரக்த தர்ப்பணம் போலாகும்.

பிரும்ம ஸ்வரூபம்

நாரதர், பிரும்மம் உருவுள்ளதா? உருவற்றதா? எத்தகையது? எங்குளது? என வினவ, கைலாஸநாதன் கூறினர். பிரும்மம் என்ற சொல்லே அது எங்கும் நிறைந்த பொருள் என்ற அர்த்தத்தைச் சொல்கிறது. அது எல்லாவற்றிற்கும் காரணமான பொருள். என்றுமழியாமல் சுடராய் ஆநந்தமாய் உள்ளது. அது நாமரூபமற்றது. ஸர்வ ஜநங்களது உள்ளக் கோயிலிலும் ஸாக்ஷியாக வஸிப்பது. அது வாக்குக்கும் மநதிற்கும் எட்டாத பொருள். ஊன்கண்கொண்டு அதைக் காண்பதரிது. உலகிற்குமேலானது. உலகெல்லாம் ஊடுருவிப்பாய்ந்திருப்பதுவு மது என வேதாந்திகள் கூறுவர். விஷ்ணு பக்தர்களோ பிரும்மலோகம் கைலாஸம் வைகுண்டம் முதலிய லோகங்களுக்குமேல் கோலோகமொன்றுளது.

அது என்றுமழியாதது. கோடி ஸூர்யனைப்போல் ஒளி வீசுமிடம். உஷ்ணம் முதலியவைகளில்லாத இடமது. ஆங்கு அதிவிசாலமான ராஸமண்டபத்தில் நவரத்நமயமான ஸிம் மாஸநத்திலே ஓர் தம்பதி அமர்ந்துளது. அவர்களே உலகிற்கு ஆதிதந்தை தாய். அவர்களையே ஸ்ரீ ராதாகிருஷ்ணரென்றும் பரப்ரும்மமென்றும் பக்தர்கள் கூறுவார்கள். அவர்களைச் சுற்றி கோடிக்கணக்கான காமதேனுக்களும் கோப கோபி களும் சூழ்ந்திருக்கின்றனர். நித்ய ஸூரிகளும் பலகோடி ஹரிஹரப்ரம்மாக்களும் குழந்தை வடிவமான கண்ணனை உபாஸிக்கின்றனர். அவர் ஸர்வ அவயவங்களிலும் அத்புத மான ஆபரணங்களைத் தரித்திருக்கிறார். கோடி சந்த்ரன் போல் சாந்தமான ஒளியுள்ளவர். அவரே ச்வேதத்வீபத்தில் பங்கசாயியாகவும் இருப்பவர் என்று பரமசிவன் உரைத் தார். இதைக்கேட்ட நாரதர் அவரை வணங்கி விடைபெற்று பதரிகாச்ரமம் சென்று நாராயண ரிஷியை வணங்கினர். அவர் நாரதருக்குத்திவ்யாஸநமளித்து ஆசீர்வதித்தார் நாரதர் மாயாஸ்வரூபத்தைப்பற்றி கூறும்படி வினவினர். அவர், பர ப்ரஹ்மத்தின் இச்சையையே ப்ரகிருதி அல்லது மாயை என்பார்கள். அது கோலோகத்தில் ராதை என்றும் வை குண்டத்தில் லக்ஷ்மி என்றும் கைலாஸத்தில் துர்க்கை என் றும் ஸத்யலோகத்தில் ஸரஸ்வதி என்றுமழைக்கப்படும். அதே உலகிலுள்ள பெண்கள் வடிவமாக மாறுகிறது. ஆத லால் நற்குலத்துதித்த கன்யகையை நீ மணந்து கொள். அவளை ஆடை ஆபரணங்களால் ஸந்தோஷப்படுத்து. அவ ளுள்ளம் குளிர்ந்தால் மாயை மகிழ்ந்து உன்னை விடுவள். புருஷனைத் தர்சித்து மோக்ஷமடைவாய் என்றார்.

பிரும்மகண்டம் முற்றிற்று.

2. ப்ரகிருதி கண்டம்.

ப்ரகிருதி ஸ்வரூப பேதம்.

ப்ரகிருதியின் ஸ்வரூபத்தையும் அதன் பேதத்தையும் விவரிக்கும்படி நாரதர் கேட்க நாராயண ரிஷி கூறுகிறார். ப்ர என்றால் சிறந்ததென பொருள். க்ருதி எனில் ஸ்ருஷ்டி என்பதாம். ஆதலால் பிரகிருதி எனில் சிறந்த ஸ்ருஷ்டி என்று பொருள். உலகம் ஸ்ருஷ்டியாவதற்கு முன் இது இருந்தது. உலகைப் படைக்கக்காரணமாக இருந்ததால் இதை ப்ரகிருதி என்பர். இவள் ஸ்ரீ கிருஷ்ணனது இடது புறத் தில் தோன்றி நிற்பவள். இவளை ராதை என்று பக்தர்கள் பூஜிக்கின்றனர். இவளது அம்சமே உலகிற்றோன்றிய பெண் ஜாதியானது. பதினைந்து திதிகளாகவும், இருபத்தேழு நக்ஷத் ரங்களாகவும், மும்மூர்த்திகள், ஸப்த ரிஷிகள், அஷ்டதிக் பாலகர்கள், அஷ்ட வஸுக்கள், பதினொரு ருத்ரர், த்வாத சாதித்யர் முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களது மனைவி களாகவும், ஸ்ரீ ராதையின் அம்சம் ஜனித்தது. பிறந்தபோது மங்களையாகவும் போரில் சண்டிகையாகவும் இருந்ததால் மங்களசண்டிகை என்ற பெயருடனும் ஓர் சக்தி தோன்றி னாள். அக்நிக்கு ஸ்வாஹாதேவி, வாயுவுக்கு ஸ்வஸ்தி, பித்ருக் களுக்கு ஸ்வதா, கணபதிக்கு புஷ்டி, அநந்தருக்கு துஷ்டி, யமனுக்கு க்ஷமை, ஸத்யத்திற்கு முக்தி, புண்யனுக்கு ப்ர திஷ்டை, அதர்மனுக்கு மித்யை, ஞானத்திற்கு புத்தி மேதை ஸ்மிருதி, லோபனுக்குப் பசிதாஹம், வைராக்யத் திற்கு ச்ரத்தை பக்தி, விருஷபாநுவுக்குக் கலாவதி என்ற மனைவிகளாகத் தோன்றியவர்கள் ஸ்ரீராதையின் அம்சத் தால் பிறந்தவர்கள். அந்த ராதையை கோலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் கார்த்திகை மாத பௌர்ணமியில் பூஜித்தார்.

அண்ட ஸ்ருஸ்டியும் கவசமும்:—கிருஷ்-எனில் பக்தி என்றும் ந-எனில்தொண்டு என்றும் பொருள். ஆதலால் பக்தியையும் தொண்டையுமளிக்கும் பகவான் கிருஷ்ணனுனர். அவரது இடது புறத்திலிருந்து மிக அழகான ராதா தேவி கிளம்பினுள். பகவான் அம்பிகையுடன் ஓர் பிருஹ்மனது ஆயுட்காலம்வரை ராஸக்ரீடை செய்து வந்தார். தேவி ச்ரமத்தினுல் பெருமூச்சுவிட அது வாயுதேவனுனது. அம்பிகையின் உடலில் தோன்றிய வேர்வையே ஜலமானது. பகவானது வீர்யத்தைத் தேவி நூறு மந்வந்தர காலம்வரை தரித்துப் பின்னர் ஓர் ஸ்வர்ணமயமான அண்டத்தைப் பெற்றுள். அது குழந்தையாக இல்லாததால் தேவி கோபங்கொண்டு அதை ஜலத்திலெறிந்தாள். இதைக் கண்ட கிருஷ்ணன், ஸ்ரீ ராதைக்கும் அவள் அம்சத்தாலுண்டான தேவப் பெண்களுக்கும் பிள்ளை பிறவாதென சபித்தார். ராதைக்கு மற்ருேர் ரத்நாஸநமளித்து பகவான் அதில் அவளை அமர்த்தினுர். அவர்களிடமிருந்து பிறந்த ஸ்வர்ண அண்டம் பல்லாண்டு சென்றபின் இரண்டாக வெடித்தது. அதனிடையிலிருந்து, விராட் எனும் ஓர் குழந்தை தோன்றிற்று. அதனெதிரில் கிருஷ்ணன் தோன்றி ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தை உபதேசித்துச் சென்றுர். விராட்ரூபியின் நாபிக்கமலத்திலிருந்து பிரும்மாவும், நெற்றியிலிருந்து சிவனும் தோன்றினர். இம்மும்மூர்த்திகளும் உலகைப்படைத்துப் பரிபாலித்து லயப்படுத்தி வருகின்றனர்.

ஸரஸ்வதி

ஸ்ரீ ராதையினது நாவிலிருந்து ஓர் பெண் பிறந்தாள். அவள் வெண்மை நிறம் வாய்ந்தவள். அவள் பெயர் ஸரஸ்வதி. அவள் கிருஷ்ணனை நோக்கித் தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டினுள். பகவான் அவளை

வைகுண்டம் சென்று விஷ்ணுவை மணந்துகொண்டு லக்ஷ்மியுடன் கூடி வாழும்படி உத்திர விட்டார். அந்த ஸரஸ்வதியை மாகமாஸ சுக்ல பஞ்சமியிலும் வித்யாரம்ப காலத்திலும் பூஜிப்பர் என பகவான் ஆசீர்வதித்தார். ஸரஸ்வதீ தேவியினது மந்திரத்தையும் கவசத்தையும் நாராயணர் வால்மீகிக்கும் ஸூர்யன் யாக்ஞவல்க்யருக்கும் உபதேசித்தார்கள். யாக்ஞவல்க்யர் தனது குரு சாபத்தால் கற்ற வித்யைகளை இழந்தார். பின்னர் அவர் ஸூர்யனை அடுத்து ஸரஸ்வதீ மந்த்ர கவசங்களைப் பெற்று ஸரஸ்வதியைத் துதித்தார். வாக்தேவி அவரெதிரிற்தோன்றி கவியாகும்படி ஆசீர்வதித்து மறைந்தாள். ஸரஸ்வதீ கங்கை லக்ஷ்மி என்ற மூவரும் மஹாவிஷ்ணுவைப் பதியாக வரித்தனர். மாதவன் மூவரையும் ஸமமாக நடத்தி வந்தார். ஒரு ஸமயம் கங்காதேவி பகவானது முகவிலாஸத்தைக் கண்டு புன்னகை புரிந்தாள். அவள் பால் அச்சுதனது கடாக்ஷமும் சென்றது. இதைக்கண்டு கமலை பேசாதிருந்தாள். ஸரஸ்வதியோ மிக்க சினங்கொண்டனள். இங்கு இச்சமயம் தானிருப்பது நல்லதல்ல எனக்கண்டு நாரணன் விலகினன். வாணி கோபத்தால் தன்னை மறந்து கங்கையை நோக்கித் தகாத சொற்களைக் கூறினள். அவள் கூந்தலைப்பிடித்திழுத்தாள். கமலை இவளை விலக்கி ஸமாதானம் செய்தாள். கங்கையின் கர்வத்தைக் கண்டு என்னைப்போல் நீ கோபிக்காது மரம்போல் பேசாதிருந்ததால் மரமாவாய், நதியாகவுமாவாய் என வாணி லக்ஷ்மியைச் சபித்தாள். அப்போதும் கமலை வாய் திறவாதிருக்க, கங்கைக்குக் கோபக்கனல் கிளம்பிற்று. ஸரஸ்வதியைப் பாரினில் ஆறுக ஓடி பாபிகளது பாபத்தைச் சுமக்கும்படி சபித்தாள். வாக்தேவி கங்கையையும் நதியாகும்படி சாபமளித்தாள். இதனிடையே பகவான் எழுந்தருளினர். லக்ஷ்மியினது பொறுமையைக் கண்டு களித்தார். அவனியில் நீ தர்மத்வஜன் என்பவனுக்குப் புத்ரியாகப் பிறந்து, பின்னர் துளஸியாவாய். ஏனையவர்களைப் போல்

நீ தாய் வயிற்றில் ஜநிக்க மாட்டாய். ஓரம்சத்தால் பத்மாவதி எனும் ஆருகப் பெருகுவாய். எனது அம்சத்தினுல் பிறந்த சங்கசூடன் எனும் அஸுரனை மணந்து பின்னர் என்னிடம் வருவாய். கங்கே! நீ நதியாகி பகீரதன் பின் பாதாளம் செல்வாய். எனது அம்சமான ஸமுத்ர ராஜனையும் சந்தனு ராஜனையும் மணந்து, பின்னர் சிவனிடம் செல். ஸரஸ்வதி! நீ தான் கலஹத்திற்குக் காரணமானவள். பாரினில் நதியாகச் சென்று பின்னர் பிரும்ம பத்நியாகச் செல். ஓரே மனைவியுள்ளவனே ஸுக மெய்துவான். பல பத்நியுள்ளவன் துன்பத்தை அடைவான். சாந்தையான லக்ஷ்மி ஒருவளே என் மனைவியாயிருக்கத் தக்கவள் என்று பகவான் கூறினுர்.

மூன்று தேவிகளும் முகுந்தனைவிட்டுப் பிரியமநமில்லாது கதறினர். நதிவடிவமான தங்களிடம் பாபிகளது பாபம் வந்து சேருமே என்று வருந்தினர். இத்துன்பங்களை நீக்கிச் சாபவிமோசநம் செய்யும்படி பகவானை வேண்டினர். உங்களது ஜலத்தில் எனது பக்தன் வந்து ஸ்நாநம் செய்தவுடன் அந்த பாபங்கள் அகலும். ஸ்வதர்மத்தை விடாமல் ஓயாது என்னைப் பஜிப்பவனே உத்தம பக்தன். அவனுக்கு விருப்பு வெறுப்பிராது. எல்லோரிடத்தும் என்னைக் காண்பான். எவரிடமும் கோபங் கொள்ளான். ஜலமே தீர்த்தமல்ல விக்ரஹங்களே தேவர்களல்ல. அவர்கள் சிலகாலம் சென்றபின் நரரைப் பாவநமாக்குகின்றனர். ஹரி பக்தர்களோ தர்சநமாத்ரத்தினுலே சுத்தமாக்குகின்றனர். என் பக்தரால் உங்கள் பாபமகலும். யான் கூறிய வண்ணம் நீங்கள் சாபமகன்றவுடன் குறிப்பிட்ட இடம் செல்லுங்கள். ஓர் அம்சத்தினுல் வைகுண்டத்திற்கு வாருங்கள் என்று வைகுண்டவாஸி விளம்பினுர்.

கலியின் தோஷம்

பூமியில் பிறக்க ஏன் இவர்கள் அஞ்சினர் என்று நாரதர் கேட்க நாராயணர் கூறினர். கலியுகம் பிறந்து ஐயாயிரமாண்டு கழிந்தபின் காசி பிருந்தை என்ற இரண்டைத்தவிர மற்றெல்லாநதிகளும் பூமியைவிட்டு பகவானிடம் செல்லும். ஸாளக்ராமமும் ஜகந்நாதமும் பத்தாயிரமாண்டு சென்றபின் வைகுண்டம் செல்கின்றன. விஷ்னு பக்தர்கள், புராணம், சங்கம், ச்ராத்தகர்மம், வேதோக்தகர்ம, ஹரி பூஜை, நாமஸங்கீர்த்தநம், வேதாங்கம், சாஸ்த்ரம், ஸத்யம், தர்மம், ஸத்வகுணம், விருதம், உபவாஸம், முதலியவைகளும் அவைகளைப்பின் தொடரும். வாமாசாரம், கபடம், துளஸி இல்லாத பூஜை, ஏகாதசியை விடுதல், விஷ்ணுபூஜையில் உதாஸிநம், திருட்டுத்தண்மை, க்ரூரம், ஹிம்ஸை, கலஹம் முதலிய துர்க்குணங்கள் கலியில் மலிந்திருக்கும். எல்லோரும் பெண்மக்களுக்கு அடிமையாவர். பெண்களிடம் கற்புகுறைந்துவிடும். வீட்டிற்கு யஜமானிபெண்களும் தாஸர் புருஷருமாவர். மூன்று வர்ணமும் நாலாவது வர்ணத்திற்குத் தொண்டு செய்யும். பூமியின் விளைவு குறையும். மரங்கள் பழங்களைத்தரா. பசுவின் பால் குன்றிவிடும். நதியில் ஜலமிராது. மனிதர்களிடம் தர்மமிராது. கோடியில் ஒருவனே தர்மிஷ்டனாக இருப்பன். கிராமங்களெல்லாம் அழிந்து அரண்யமாகும். அரசர் விதிக்கும் வரி மிக்க அதிகமாயிருக்கும். அதைக்கண்டு பயந்து ஜநங்கள் வநம்செல்வர். மேற்குலம் தாழ்ந்ததாகவும் தாழ்ந்தது மேல்குலமாகவும் மாறும். ஸன்யாஸி வேஷம் பலமாகத் தோன்றும். அல்ப தேவர்களைப் பூஜித்து உலகை ஏமாற்றுபவர் அதிகமாவர். மனிதர்கள் குள்ளமாகவும் அல்பாயுளாகவுமாவர்; பதினறுவது வயதில் தொண்டு கிழவராவர். எட்டாவது வயதில் பெண்

களுக்குக் குழந்தை பிறக்கும். கன்யகையைக் கலியில் பெற்றோர் விலைக்கு விற்பர். எந்த புருஷர் எந்த பெண்ணைப் புணர்வதென்ற விதிமுறையிராது. எப்பெண்ணும் எப்புருஷனையும் புணர்வள். முழம் உயரம் மரமும், விரலளவு மனிதருமாவர்.

இப்படி உலகம் கெட்டபின் பகவான் விஷ்ணு யசஸ் என்ற அந்தணரிடம் கல்கியாக அவதரிப்பார். துராசாரமுள்ள துஷ்டர்களைக் கொன்று அவர் அந்தர்தானமாவார். ஆறிரவு ஓயாது கனத்த மழை பொழிந்து உலகமழியும். பின்னர் பனிரண்டு ஆதித்யரும் உதயமாவர். ஜலமுலர்ந்து பூமி முன்போலாகும். அச்சமயம் கிருதயுகமாரம்பமாகும். நாலு பாதங்களுடன் தர்மம் தழைத்து ஓங்கும்.

ப்ரிதிவீ சரிதம்

மதுகைடபருடைய மதத்தால் பூமி விருத்தி ஆனாள். ஆதலால் மேதினீ என அவளுக்குப் பெயர் என்றும் கூறுவர். விராட்புருஷன் ஜலத்தில் படுத்திருந்தபோது அவர் உடலிலுள்ள ரோமகூபங்களில் ஓர் வகை அழுக்குண்டானது. அதே ஸ்ருஷ்டி காலத்தில் பூமியாகத் தோன்றிற்று. அது எழு கடலையும் எழு த்வீபத்தையும் உடையது. அதில் பல புண்ய நதிகளும் மலைகளுமுள. அதனடியில் பாதாளம் முதலிய எழு லோகங்களும் மேலே ஆறு லோகங்களுமிருக்கின்றன. அதன் அதிஷ்டான தேவதையை ஹிரண்யன் அபஹரித்துச் சென்றான். பகவான் வராஹ ரூபமெடுத்து அவனைக் கொன்று பூமியைத் தூக்கி வந்தார். அச்சமயம் மிக்க அழகான அவளது உருவையும் அவள் தன்பால்கொண்ட ஆசையையுங் கண்டு பகவான் அழகிய ரூபமெடுத்து அவளுடன் ரமித்தார். இருவரும் ஓராண்டு ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து தன்னை மறந்தனர். பிறகு வராஹ ரூபமெடுத்து பகவான் பூதேவியைப் பூஜித்தார். இங்ஙனமே உலகத்தவர் உன்னைப் பூஜிப்பர். எல்லோரையும் நீ சுமந்து ஸுக

மாக வலி என்ருர். இதைக்கேட்ட தேவி, தேவ! எதையும் யான் சுமப்பேன். முத்து, சிவலிங்கம், ஸாளக்ராமம், சங்கம், தீபம், ரத்நம், மாணிக்கம், மணி, பூநூல், புஷ்பம், துளஸீ தளம், ஜபமாலே, புஷ்ப மாலே, கற்பூரம்,ஸுவர்ணம், சந்தநம், கோரோசநம், ஸாளக்ராம ஜலம் முதலியவைகளைப் பூமியின்மேல் வைத்தால் என்ணுல் வஹிக்க முடியாது என்ருள். பகவான் இவைகளைக் கீழே வைப்போர் நரகம் செல்வர் என்றுரைத்து மறைந்தார். உடனே அவநிக்கு மங்களக்ரஹம் பகவானது அம்சத்தால் ஜநித்தது. கண்வர் கூறிய வண்ணம் பூதேவியின் மூலமந்த்ரம், ஸ்தோத்ரம் முதலியவைகளைக்கொண்டு பலரும் பூமியைப் பூஜித்தனர். பூதாநம் செய்வதும் பசு மேய்வதற்காகப் பூமியைவிடுவதும் மிகப் புண்யமாம். பூமியில் தீபத்தை வைப்போர் ஏழு பிறவியிற் குருடணுவர். சங்கத்தை வைப்போர் குஷ்டரோகத்துக்காளாவர். முத்து, ஸுவர்ணம், ஆபரணம் முதலியவைகளை வைப்பவர் ஏழு ஜன்மத்தில் தரித்திரணுவர். சிவலிங்கத்தைத் தரைமீது வைப்போர் க்ருமிபக்ஷம் என்னும் நரகத்தில் வீழ்வர். புத்தகம், புஷ்பம், துளஸி, ஜபமாலே, கற்பூரம், கோரோசனம், சந்தனக் கட்டை, ருத்ராக்ஷம், தர்ப்பை, யஜ்ஞோபவீதம் ஆகிய இவைகளைப் பூமியில் வைப்போர் நரகம் செல்வர். யாகம் செய்து பூமியைப்பாலால் நனைக்காதவர் தப்தஸூர்மி எனும் நரகத்தை அடைவர். பூகம்பத்திலும் கிரஹணத்திலும் பூமியைத் தோண்டுபவர் அங்கஹீனர்களாகப் பிறப்பார்.

கங்கையின் சாபமோசனம்.

ஸகர சக்ரவர்த்திக்கு இரு மனைவிகளிருந்தனர். ஈசனருளால் ஒருவளுக்கு அஸமஞ்சனும் மற்ருெருவளுக்கு ஓர் மாம்ஸபிண்டமும் பிறந்தது. அப்பிண்டத்தை என் செய்வதென அரசன் அறியாது திகைத்திருந்தபோது பரமசிவன் ஓர் பிராமண வடிவம்பூண்டு வந்து அம்மாம்ஸ பிண்டத்தைத்

துண்டித்து அறுபதினுயிரம் பாத்ரங்களில் வைத்தார். அதி லிருந்தும் அதிதீரான அறுபதினுயிரம் புதல்வர்கள் தோன் றினார்கள். அனைவரும் கபில முனியின் சாபத்தால் சாம்ப லானார்கள். அவர்களது கதியை நினைத்து நினைத்து ஸகரன் வருந்தி இறந்தான். அஸமஞ்ஜன் அம்சுமான் திலீபன் முத லியவர்கள் அவர்களுக்கு நற்கதியை அளிக்கும் கங்கா தேவியை அவனிக்கு அழைத்துவர லக்ஷம்லக்ஷமாண்டு தவம் புரிந்து இறந்தனர். பகீரதன் பரம பக்தனுதலின் லக்ஷமாண்டு தவம் செய்து ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்தார். அவரைப் பணிந்து துதித்து தனது கோரிக்கையைத் தெரிவித்தார். பகவான் நினைத்தமாத்திரத்தில் கங்காதேவி விரைவாக வந்து அவரைப் பணிந்து யாது கட்டளை என வினவினுள். கிருஷ் ணன் நீ ஸரஸ்வதியின் சாபத்தால் பாருக்குச் செல்லவேண்டு மல்லவா? நமது பக்தனுன பகீரதனுடன் சென்று ஸகர புத்ரர்களைச் சுத்தமாக்கி நமது ஸபைக்கனுப்பு. தடிபோல் விழுந்து மூழ்குவோரைவிட கங்கையில் விதிப்படி ஸாதா ரண தினத்தில் ஸங்கல்பம் செய்து ஸ்நாநம் செய்பவர் பன் மடங்கு அதிக பயனைப் பெறுவர். அஷ்டமி, ஏகாதசி, பர்வா, துலா கார்த்திகை மாதம், அர்த்தோதயம், மஹோதயம், க்ரஹ ணம் முதலிய புண்ய காலங்களில் ஸ்நாநம் செய்வோருக்கு அபரிமிதமான புண்யத்தை அளி. மாநவரது பிரும்மஹத்தி முதலிய ஸகல துரிதங்களையும் அகற்று. உன் ப்ரவாஹத்தில் உடலை விடுவோருக்கு யான் வைகுண்டமளிப்பேன். பாபி கள் உன்னிடமளிக்கும் பாபம் எனது பக்தர்கள் உன்னிடம் ஸ்நாநம் செய்யும்போது அகலும். விக்நம் விலக, விக்நேசனையும் பாபமொழிய பாஸ்கரனையும், ஆத்மசுத்தி உண்டாக அக்நியை யும், மோக்ஷமுண்டாக விஷ்ணுவையும், ஞாநமுதிக்க ஈசனையும் அர்ச்சிக்க வேண்டும். அங்ஙனம் பூஜித்தபின் கங்கையைத் துதிப்பவரும் நினைப்பவரும் புனலாடுவோரும் நற்கதி பெறு வர் என்று கூறி பகவான் மறைந்தார்.

பகீரதன் அங்ஙனம் பூஜை புரிந்து புனிதமான கங்கையைப் போற்றினான். கங்கையால் ஸகரர் வைகுண்டம் சென்றனர். க்ருதயுகத்தில் பால்போலவும் திரேதையில் சந்தரனைப்போன்றும் த்வாபரையில் சந்தநம் போலும், கங்கை ப்ரகாசிப்பாள். கங்கையின் துதியைப் பாடுவோர் பாபமகலும். புத்ரனில்லாதவர் புதல்வரைப் பெறுவர். கங்கை எங்குளங்ஙனம் ஜநித்தவள் என்று நாரதர் வினவ, நாராயண ரிஷி கூறினர். ஸ்ரீ கிருஷ்ணன் கார்த்திகை பௌர்ணமியில் ஸ்ரீராதையைப் பூஜித்தாரல்லவா? அச்சமயம் அமரரனைவரும் அங்கு வந்தனர். வாக்தேவி கிருஷ்ணனது மஹிமையைப் பாடினள். அதைக்கேட்டு எல்லோரும் மகிழ்ந்து அவளுக்குப் பாரிதோஷிகமளித்தனர். பிரும்மனது தூண்டுதலால் சிவபெருமான் கிருஷ்ண கீதத்தைப் பாடினர். ஸகல தேவர்களும் பரவசமானர்கள். ராதையும் கிருஷ்ணனும் அதைக்கேட்டு ஜலமாக உருகி விட்டனர். சிலகாலம் சென்றபின் தேவர் விழித்தெழுந்து ஆதி தம்பதிகளைக்காணது வருந்தினர். அசரீரியாக நின்று பகவான், தேவர்காள்! அஞ்சாதீர்கள்! எனது மூலமந்திரம் கவசம் ஸ்துதி முதலிய வேதஸாரத்தைக் கொண்டு கைலாஸநாதன் கங்கா ஜலத்தை எடுத்து ஓர் சாஸ்திர மியற்றுவதாக ப்ரதிக்ஞை செய்யட்டும். அதன் பின் என்னை நீங்கள் தர்சிப்பீர்கள் என்றார். மஹேசனுமங்ஙனமே சபதம் செய்ய பகவான் தேவியுடன் தர்சநமளித்தார். ஸ்ரீ ராதாகிருஷ்ணரது சரீரம்உருகியபோதுண்டான ஜலமே பரமபாவநமான கங்கையானது. அந்த ஜலத்திற்கு தேவதையான கங்கை அழகிய பெண்ணுருவம்தாங்கி நின்றாள். ராஸ மண்டலத்திலுள்ள பகவானது திவ்ய ரூபத்தைப் பார்த்துப் பார்த்து மூர்ச்சித்தாள். இதைக்கண்ட ராதாதேவி சினங்கொண்டு பகவானருகே ஓடிவந்தாள். கோபத்துடன் வரும் ராதையைக் கண்டு கங்கை அச்சமுற பகவான் அவளுக்கு அந்தரங்கமாக அபயமளித்தார்.

ராதை பகவானை நோக்கி, நாத! தங்களிடம் பேராசை கொண்ட இவள் யார்? யான் ஜீவித்திருக்கும் போதே என் செல்வத்தைக் கொள்ளைகொள்ள வந்தவள் யார்? முன் இதே போல் விரஜை என்பாள் வந்தாள். என்னைக்கண்டு பயந்து நதியாக மாறினள். என்னை ஏமாற்றித் தாங்கள் அவளுக்கு இன்பமளித்து ஏழு ஸமுத்ரங்களை உண்டு பண்ணினீர். சோபை எனும் மற்றொருவள் என்னைக் கண்டு பயந்து சந்த்ர மண்டலத்தே சென்றாள். தாங்கள் அவளுக்கும் அருள் புரிந்து, ரத்நம், பெண்களது முகம், வஸ்த்ரம், தேவாலயம், அரண்மனை முதலிய விடங்களிலுள்ள அழகை அவள் மூல முண்டு பண்ணினீர். ப்ரபையையும் பிருந்தாவநத்தில் தம் முடனிருக்கக் கண்டேன். அவளும் ஸூர்யமண்டலம் சென்று பதுங்கினள். அரசன், புருஷ ஸமூஹம், முனிவர், அழகுள்ள பெண்மக்கள் ஆகியவர்களிடமுள்ள தேஜஸை அவள் மூலமாகப் படைத்தீர். இங்ஙனம் சாந்தி க்ஷமை முத லியவர்களும் தங்களை விரும்பி என்னிடம் பயந்து மறைந் தனர் என்று கூறி, ராதை கங்கையைக் கடுஞ்சினத்துடன் நோக்கினள். இவளது கோபம் யாதுசெய்யுமென்றுணர்ந்த கங்கை, பகவானது பாதாரவிந்தத்தில் லயமாயினள். பூலோ கம் முதல் கோலோகம் வரையிலுள்ள ஸகல லோகங்களிலும் ஜலம் ஓர் சொட்டுமில்லாது போயிற்று. ஹரி ஹர ப்ரும் மாதிகள் முநிவர்களுடன் கிருஷ்ணனைச் சரணமடைந்தனர். பகவான் ஒருமுறை ராதையும் தானும் வெவ்வேறாகவும் மற் றோர் முறை இரண்டும் ஓரே உருவாயும் தர்சநமளித்தார். இதைக்கண்டு வியந்த விண்ணவரது வேண்டுகோளுக்கிணங் கித் தன் தாளிலிருந்த கங்கையை அழைத்தார். அதிலிருந்து பிரும்மா சிறிது ஜலத்தைத் தன் கமண்டலுவிலேந்தி கங் கைக்கு ஸ்ரீ ராதையின் மந்திரத்தை உபதேசித்தார். கங்கை கோலோகத்தில் ராதையின் அம்சமாகவும், கைலாஸத்தில்

சிவன் சிரஸிலும், வைகுண்டத்தில் விஷ்ணு மனைவியாகவும், ஸத்ய லோகத்தில் பிரும்ம கமண்டலத்திலுமிருக்கிறாள். பிரும்மாவினது பிரார்த்தனைக்கிணங்கி விஷ்ணு கங்கையைக் காந்தர்வ விதிப்படி மணந்தார். சாபமகன்று ஓர் கலையால் கோலோகஞ் சென்றாள்.

துளஸீ சரிதம்

மநுவினது ஸந்ததியில் விருஷத்வஜன் என்றோரரசனிருந்தான். அவன் விருஷபத்வஜனை யின்றி வேறு தேவனை வணங்குவதில்லை. அவனது பக்திக்கிணங்கி பரம சிவனும் மூன்று யுகம் அவனாச்ரமத்தில் வஸித்து வந்தார். இதனால் வேந்தன் விண்ணவரை மதியாது அலக்ஷ்யமாகப் பேசிவந்தான். பரமசிவனிடம்பயந்து தேவரில் எவருமிவனைச் சபிக்கவில்லை. ஒரு ஸமயம் ஸூர்யன் இவனது செயலைக் கண்டு கடுஞ்சினங் கொண்டான். உன்னைவிட்டு ஸ்ரீ தேவி விலகுவள் என்று சபித்தான். இதை உணர்ந்த ருத்ரன் சூலத்தைக் கையிலேந்தி சூரியனைத் துறத்தினார். அவன் உலகெலாம் சுற்றி அபயங்கிடைக்காது தன் தந்தையைச் சரணமடைந்தான். அவர் இவனை அழைத்துக் கொண்டு பிரும்மலோகஞ் சென்றார். சதுர்முகன் சிவன் பின் தொடர்வதைக் கண்டு பயந்து வைகுண்டம் சென்றார். இவர்களை வரவேற்று அபயமளித்து பகவான் எனது ஸுதர்சநமும் சங்கரனும் கோடி ஸூர்யனைப் படைக்கவும் அழிக்கவும் வல்லவர். அவருக்கு என் அபசாரம் செய்தாய் ? என்று கூறிக்கொண்டிருக்கும்போதே கனவேகமாக சூலபாணி ஓடி வந்தார். வைகுண்ட வாஸியைக்கண்டதும் அவர் கோபம் பறந்தோடியது. சாந்தமநதுடன் விஷ்ணுவை வணங்கித் துதித்தார். அவரும் ஆஸநமளித்து வந்த வேலை யாதென வினவினார். தனக்கு அபராதம் செய்பவரை

மன்னித்தாலும் தன் பக்தனுக்குத் தீங்கிழைப்பவனை க்ஷமிக்க முடியாதன்றோ? என்று சிவனுரைத்தார். சம்போ! தாங்களிங்கு வந்து இருபத்தோரு யுகம் சென்றன. உமது பக்தனான விருஷத்வஜனும் அவன் புத்ரனான ஹம்ஸத்வஜனு மிறந்தனர். அவன் புதல்வர்களான தர்மத்வஜனும் குசத் வஜனும் ஸூர்ய சாபத்தால் ராஜ்யத்தை இழந்து தவிக் கின்றனர். அவர்கள் லக்ஷ்மீதேவியை உபாஸித்து இழந்த ராஜ் யத்தைத் திரும்பப் பெறுவர். குசத்வஜனது மனைவியான மாலாவதியினிடம் கமலாதேவி தனது கலையால் ஓர் பெண்ணாகப் பிறப்பாள் என்றுரைத்தார். தனது பக்தன் இறந்தபின் ஸூர்யனைச் சிக்ஷிப்பதில் யாது பயன் என பரமசிவன் கைலாயம் சென்றார்.

சிலகாலம் சென்றபின் லக்ஷ்மியின் அம்சமாக குசத்வ ஜனுக்கு ஓர் குழந்தை பிறந்தது. அது தாய் வயிற்றினின்று வெளிவந்ததும் வேதத்தை ஓதியது. இதைக்கேட்ட புரோஹிதர் வேதவதி என அதற்கு நாமம் சூட்டினர். அது சிறுவயதிலேயே பெற்றோரைவணங்கி விடைபெற்றுத் தவம் செய்யக் கிளம்பியது. புஷ்கரம் சென்று மிக்க கடு மையாக ஓர் மந்வந்தரம் தவம் புரிந்தாள். தவத்தின் நோக்கம் நாரணனே தனக்குப் பதியாக வேண்டும் என்ப தாம். ஓர் நாள் அசரீரியானவாக்கு "வேதவதி! அடுத்த பிறவியிலேயே உனது எண்ணம் கைகூடும்" என்றது. இப் பிறவியை எப்படிக் கடப்பது? என சிந்தித்த வண்ணம் அவள் காலங்கழித்து வந்தாள். ஒருநாள் ராவணன் அவளது ஆச்ரமத்திற்கு வந்தான். விதிப்படி வேதவதி அவனுக்கு அர்க்ய பாத்யமளித்து அதிதிபூஜை செய்தாள். அவன் அவளது அழகிலீடுபட்டு காமனது கணைக்கு இலக்கானான். காலில் விழுந்து தன்னை மணக்கும்படி வேண்டினன். வேதவதி தான்வைகுண்டநாதனையின்றி வேறெ

வரையும் கண்கொண்டு காண்பவளல்ல. கற்புடையோரிடம் கண்டபடி பேசுவது நீதியல்ல. என்று விநயத்துடன் விளம்பினுள். அவன் அன்னையைப் பலாத்காரம் செய்ய ஆரம்பித்தான். தேவி அவனைத் தனது கோபத்ருஷ்டியால் ஸ்தம்பித்துப்போகும்படி செய்தாள். ராவணன் லக்ஷ்மீதேவியைத் துதிக்க கருணைகொண்ட கமலாதேவி அவனது கைகால்கள் ஸ்வாதீநமாகும்படி செய்தாள். ஆயினும் அவள் மூலமாகவே ராவணன் பரிவாரத்துடன் அழிவான் என சாபமளித்தாள். அவன் தீண்டிய உடலை இனி வைத்திருக்கலாகாதென யோகத்தினுல் சரீரத்தை அவள் விட்டாள். ராவணனும் இச் சாபத்தை நினைத்துக்கொண்டே வீடு சென்றுன்.

வேதவதி மிதிலையில் ஸீதாதேவியாகப் பிறந்து பூர்வ ஜன்ம புண்யத்தால் விஷ்ணுவின் அவதாரமான ராமனை மாலையிட்டாள். ராகவன் தாயின் சொற்படி பதினுன்காண்டு வநம்செல்ல தேவியும் அவரைப்பின் தொடர்ந்தாள். ஒரு ஸமயம் துன்பத்தால் வாடிய பிராமணர் ஒருவர் காகுத்ஸ்தனிடம் வந்தார். அவர், நீ யார்? வருந்தும் காரணம் யாதென வினவ, அவர், தேவ! யான் அக்நி. தேவியை ராவணன் தூக்கிச்செல்ல வருகிறுன். அதை எண்ணியே ஏங்கி நின்றேன். சுடரிலிருந்து தோன்றிய தேவியை என்னிடமளித்து ஸீதையின் நிழலைத் தாங்கள் வைத்திருங்கள். ராவணனைக் கொன்றபின் நிஜஸீதையைத் தங்களிடம் ஸமர்ப்பிப்பேன் என்று கூறினுர். லக்ஷ்மணனுக்குக் கூட இந்த தேவரஹஸ்யத்தைக் கூருமல் ராகவன் அங்ஙனமே செய்தார். ஸநகாதிகளது சாபத்தால் ராக்ஷஸனுன ஜயன் பொன்மான் வேடங்கொண்டு தேவியினருகே வந்தான். ஸீதையின் கருத்திற்கிசைந்து ராமன் அதைப்பிடித்து வரச் சென்று கபடமானைக் கொன்றுர். அது ஜய ரூபங்கொண்டு பகவானைவணங்கி வைகுண்டஞ் சென்று வாசற்காப்போனுக

ஆனது. சாயாஸீதையைத் தூக்கிச் சென்ற ராவணனை ராமன் போரில் கொன்ருர். பின்பு ராக்ஷஸன் வீட்டில் பத்து மாதம் தங்கிய ஸீதையைத் தான் விரும்ப வில்லை என்று ராமன் கூறினுர். ஸீதை கனலை மூட்டி அதில் விழ அக்னி பகவான் யதார்த்த ஸீதையை அளித்தார். சாயாஸீதைப் பரமசிவத்தை நாடித் தவம்புரிந்து ஐந்துமுறை தனக்குக் கண வன் வேண்டுமென வேண்டினுள். ஆதலால் அவள் த்வாபர யுகத்தில் திரௌபதியாக வந்து பாண்டவர்களை மணந் தாள்.

குசத்வஜனது மற்ருேர் மனைவியான மாதவி நூருண்டு கணவனை விட்டுப் பிரியாமல் ரமித்தாள். ரஜஸ்வலையானதைக் கண்டு கணவனை விட்டுப் பிரிந்தாள். பின்னர் நூருண்டு கர்ப் பத்தைச் சுமந்தாள். ஓர் சுப லக்னத்தில் லக்ஷ்மீ தேவியின் அம்சமான ஓர் கன்யகையைப் பெற்ருள். அது மிக அழகாக வும் குணவதியாகவும் இருந்தது. அதற்குத் துளஸீ என நாமமிட்டனர். பிறந்தவுடன் பலர் தடுத்தும் கேளாமல் அது தவஞ் செய்ய வநம் சென்றது. நாரணனையே நான் பதியாகப் பெற வேண்டுமென லக்ஷமாண்டு தவம் புரிந்தாள். சதுர் முகன் அவள் எதிரிலே தோன்றினுர். துளஸீ! உனது விருப்பை யானறிவேன். நீ ராதா தேவியின் அம்சத்தால் ஜநித்த ஓர் கோபிகை. க்ருஷ்ணனது சக்தியால் தோன்றிய ஸுதாமா எனும் கோபன் உன்னைக் கோலோகத்தில் விரும் பினுன். ராதை அவனை ராக்ஷஸனுகும்படி சபித்தாள். அவன் சங்கசூடன் எனும் அரக்கனுக அவனியில் அவதரித்திருக் கிருன். அவனை நீ மணந்து மறுபிறப்பில் மாதவனை மணுள ஞக அடைவாய். நாரணனது செயலால் பிருந்தாவநத்தில் துளஸீ விருக்ஷமாவாய். அச்யுதனுக்கு மிகப் ப்ரியமானது துளஸீ தளமே யாகும் என்று கூறி, ஸ்ரீ ராதா மந்த்ரத்தை உபதேசித்து மறைந்தார். துளஸீ அன்றுமுதல் கணவனையே

கருத்தில் வைத்து எப்போது வருவர் ? என ஏங்கி நின்ருள். சில காலம் சென்றபின் சங்கசூடன் தற்செயலாகத் துளஸீ வஸிக்குமிடத்திற்கு வந்தான். இருவருக்கும் ஒருவருக்கொருவர் ஆசை உண்டாயிற்று. ஆயினும் குலகோத்ர மறியாது ஒருவரை ஒருவர் எப்படி மணப்பதென இருவரும் யோசித்திருந்தனர். அச்சமயம் பிரும்மா விரைவாகவந்து இருவரது முற்பிறவியையுங் கூறி காந்தர்வவிவாஹம் செய்துகொள்ளும்படி கட்டளையிட்டார். அங்ஙனமே மணம்செய்து கொண்டு இருவரும் காம ஸுகத்தை அனுபவித்தினர். அத்புதமான ஆடை ஆபரணங்களை அணிந்தனர். உலகெலாம் சுற்றி சுற்றி வந்தனர். ஓர் மந்வந்தரகாலம்வரை சங்க சூடன் அஸுரசக்ரவர்த்தியாக இருந்து எவருக்கும் கிட்டாதபோகங்களை அனுபவித்தான். ஸகல தேவர்களும் தத்தம் செல்வத்தை இவனிடமளித்துத் தொண்டுபுரிந்தனர். ஒரு ஸமயம் தேவர்கள் ஒன்று கூடி பிரும்மாவிடஞ் சென்று தங்களது துன்பத்தை அகற்றும்படி வேண்டினர். அவர் அமரருடன் வைகுண்டம் சென்று சக்ரபாணியைச் சரணமடைந்தார். அவர் கோலோகத்தில் தான் விரஜையுடனிருந்தபோது ராதை கோபங் கொண்டதையும் விரஜை நதியானதையும், அச்சமயம் தன்னிடம் வந்து ராதை கோபத்தால் சில கடு மொழி கூறியதையும் அதைக்கண்டு ஸுதாமன் எனும் கோபன்சினங்கொண்டு ராதையைக் கோபித்ததையும், அதனுல் ராதை அவனை அரக்கனுகும்படி சபித்ததையும், அவனே சங்கசூடன் எனவும் விளக்கிக் கூறினுர். கோலோகத்தில் அரைக்ஷணமென்பது பூமியில் ஓர் மந்வந்தரமாகும். ஆதலால் ஸ்ரீ கிருஷ்ணன் தனது தாஸனுன ஸுதாமன் மறுபடியும் தன்னிடம் வருவதற்கு வழிகூறினுர். சிவனை அழைத்துச் சூலத்தை அளித்தார். சங்கசூடனை இதைக்கொண்டு கொல்லவேண்டும்; வேறெவராலும் இவனைக் கொல்ல முடியாது. சிவனும் அவன் கவச

மகன்று, மனைவி கற்பையிழந்த பின்னரே அவனை வெல்ல முடியும் என்றார். கிருஷ்ணனது கட்டளையின்படி சிவன் அவனுடன் போருக்குவருவர். நானும் அவன் மனைவியின் கருவில் எனது தேஜஸ்ஸை அமைப்பேன். அதுவரை அமரர் பொருத்திருக்க வேண்டும் என்றும் கூறினர்.

சிவ சங்கசூட யுத்தம்.

விண்ணவரது வேண்டுகோளுக்கிணங்கி விரூபாக்ஷன் நர்மதைக்கரையில் வடவிருக்ஷத்தின் கீழே போர் கோலத்துடன் அமர்ந்தார். புஷ்பதந்தனெனும் தூதனை அனுப்பி சங்கசூடன் அமரருக்கு ராஜ்யத்தை அளித்துத் தன்னைச் சரணமடைய வேண்டும்; இல்லையேல் போருக்கு வரவேண்டுமெனக் கூறினர். சங்கசூடன் மறுநாட் காலையில் யுத்தத்திற்கு வருவதாகச் சொன்னன். ஸ்கந்தன் வீரபத்ரன் எண்திசை பாலகர் பத்ரகாளீ முதலிய படைசூழ பகவான் சண்டைக்கு ஸித்தமானர். இச்செய்தியை யறிந்த துளஸீ நாதனது திருவடியை வணங்கி சண்டை வேண்டா மென்றாள். தான் ஓர் துஸ்வப்நம் கண்டதால் தன் கணவனுக்கு அபாயம் வருமென அவளஞ்சினள். சங்கசூடன் அவளைத்தேற்றி விடைபெற்றுக்கொண்டு நால்வகைச் சேனையுடன் நர்மதா தீரம் சென்றான். கைலாஸநாதனைக்கண்டு பரவசமானன். அவரை மும்முறை வலம்வந்து வணங்கினன். பகவானும் ஏற்றபடி ஆசிர்வாதம் செய்தார். நற்குலத்திலுதித்த அவனுடன் போர் புரிவதழகல்ல. ஆதலின் அமரரது ராஜ்யத்தை விட்டு சுகமாக வாழும்படி கூறினர். தேவர்களுக்குத் துணையாயிருந்து தாமோதரன் தானவ குலத்தை அழித்தார். வஞ்சனையாக பலியின் பொருளைப் பிடுங்கி இந்திரனுக்களித்தார். ஹிரண்யன் மதுகைடபன் முதலிய என் குலத்தோரைக் கொன்றார். ஆதலின் அமரருக்குப் பரிந்துவரும் எவரையும் வெல்வது

என் கடமை. என சங்கசூடன் உரைத்தான். பின் இரு ஸேனையும் கைகலந்து கடும்போர் புரிந்தது. குஹன் சங்க சூடனை எதிர்த்துப் பலமாக யுத்தம் செய்தார். அரக்கனது அஸ்த்ர வேகத்தால் அமரஸேனாதிபதியும் களைத்து மூர்ச்சை யாகி விழுந்தார். இதைக் கண்டபத்ரகாளி விரைவாக ஓடி வந்து அரக்கனைத் தாக்கினாள். இருவரும் அஸ்த்ரத்திற்குத் தக்க மறு அஸ்த்ரம் ப்ரயோகித்தனர். நாராயணாஸ்த்ரத்தைக் காளிகாதேவி கையிலேந்தியவுடன் தைத்யபதி கீழே விழுந்து அதை நமஸ்கரித்தான். அது அவனைக் கொல்லாது மேலே சென்றது. அவன் தாயெனக்கருதி அவளை அடிக்கவில்லை. கடுஞ்சினங்கொண்ட காளி பாசுபதாஸ்த்ரத்தை எடுத்தாள். ஓர் சிவதூதன் வந்து தேவி! அவன் உடலிலுள்ள விஷ்ணுகவசமும் அவன் மனைவி துளஸியின் கற்பும் அகலும்வரை அரக்கனை எந்த அஸ்த்ரமும் கொல்லாதெனக் கூறினாள். அதை விட்டு தேவி உக்ரவேஷத்துடன் லக்ஷக்கணக்கான ராக்ஷஸரைப் புஜிக்க ஆரம்பித்தாள். தானவனும் பெரிய உடலெடுதது சரவர்ஷத்தால் காளியை எதிர்த்தான். இதை அறிந்த பரம சிவன் தானே ரணகளம் வந்தார். சங்கசூடனுக்கும் சந்தர சூடனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இதனிடையே மாயாவி யான மாதவன் கிழப்ராம்மண வேஷம் பூண்டார். போரில் முனைந்து நிற்கும் சங்கசூடனருகே வந்து அவனை வாழ்த்தினார். அவன் பெரியோரே! உமக்கென்ன வேண்டுமென்றான். யான் கேட்பதை அளிப்பதாக ஸத்யம் செய்தால் பின்னர் கூறுவேனென்றார். அஸுரனும் அங்ஙனமே ஸத்யம் செய்தான். அச்யுதன் அவனணிந்துள்ள கவசத்தைக் கேட்டார். மறுமொழி கூறாது அவனுமதை அவருக்களித்து விட்டான். அவர் அதைத் தரித்துக்கொண்டு சங்கசூட வேடத்துடன் துளஸியிடம் சென்றார். அவள் கணவனே வெற்றியுடன் வந்தாரென நினைத்தாள். அவரைத் தழுவி முத்தமிட்டாள்.

அவர் துளஸியுடனிருக்கும் போது சூலபாணி சூலத்தை எரிந்து சங்கசூடனைக்கொன்றார். அவன் ஸுதாமன் உருவைப் பெற்று கோலோகம் சென்றான். மலைபோல் குவிந்த அவனது எலும்பைப் பகவான் சூலத்தால் கடலில் எரிந்தார். அதனால் சங்கமுண்டாயிற்று. சங்க ஜலமும் சங்கத்தின் நாதமுமுள்ள விடத்தே லக்ஷ்மீதேவி தாண்டவமாடுவாள். ஸத்ரீ சூத்ரர்கள் சங்கத்தை உபயோகித்தால் ஆங்குள்ள லக்ஷ்மி அகன்று விடுவள்.

ஸாளக்ராம துளஸீ மஹிமை

துளஸீதேவி கபட கணவனை நோக்கி எங்ஙனம் சிவனை ஜயத்தீரென்றாள். அவர் தேவாஸுரஸேனை அனைத்தும் அழிந்ததால் பிரும்மா வந்து தேவர்களுக்கு அதிகாரத்தை அளித்து ஸமாதானம் செய்தார். சிவன் கைலாஸம் சென்றார். நானிங்கு வந்தேன் என்றார். விஷ்ணுவின் வீர்யம் அவள் கருவில் சென்றபின் ஒருநாள் துளஸி அவரிடம் ஐயங் கொண்டாள். நீ யார் என வினவினாள். உடனே பகவான் நிஜரூபத்தை எடுத்து நின்றார். துளஸீ பரமாத்மாவைக்கண்டு ஸந்தோஷித்தாலும் தன் கற்புக்கு அழிவு வந்ததே என வருந்தினாள். பகவானை நோக்கி நீர் என்னை ஏமாற்றி கற்பை யழித்ததால் ஓர் பிறப்பில் உமது நிஜரூபத்தை அறியாம லிருப்பீரென சபித்தாள். புண்டரீகாக்ஷன் அவளது முற்பிற வியை நினைவூட்டி இவ்வுடல் கண்டகி எனும் நதியாகவும் உனது கேசம் துளஸீ செடியாகவும் ஆகும். துளஸியை விட, சிறந்த புஷ்பமில்லை. கண்டகீ நதிக்கரையில் யான் ஓர் மலை யாக இருப்பேன். அந்த கிரியிலிருந்து நதியில் விழும் சிறிய கற்களே ஸாளக்ராம மெனப்படும். அதில் அமைந்த துவாரத்திற்கும் சக்ரத்திற்கும் ஏற்றபடி மூர்த்திகள் பல பேதப்படும். ஸாளக்ராமத்தைப் பூஜிப்போர் வைகுண்டம்

செல்வர். ஸாளக்ராம ஜலத்தைப் பருகில் ஸகல பாபமுமகலும். ஸாளக்ராமத்தைத் துளஸியால் பூஜித்தவர் கோரிய பலனைப் பெறுவர். மிக்க பாபியாயினும் ஒருவன் இறக்கும் ஸமயத்தில் ஸாளக்ராம ஜலத்தைத் துளஸியுடன் அருந்தினல் அவன் வைகுண்டம் செல்வான். துளஸீ பத்ரத்தைக் கிள்ளி ஸாளக்ராமத்தின் மேல் போடலாகாது. அங்ஙனம் செய்வோர் ஏழு பிறப்பில் மனைவியை இழப்பர். சங்கத்தில் துளஸீ தளத்தைக் கிள்ளிப் போடுவர் குஷ்ட ரோகத்தைப் பெறுவர். ஆதலின் துளஸீ பத்ரத்தை ஒவ்வோர் இலையாக அர்ச்சிக்கவேண்டும். பூர்ணிமை அமாவாஸ்யை த்வாதசி பாநு வாரம் ஸங்க்ரமணம் முதலிய காலங்களிலும் ஸ்நானம் செய்யாமலும், எண்ணெய் தேய்த்துக்கொண்டும், மத்யாந்ஹம் ஸந்த்யை இரவு முதலிய காலங்களிலும் ஆசௌசத்திலும் துளஸியைப் பறிப்பது மிகபாபம். கார்த்திகை மாதத்தில் துளஸிக்கு ஷோடசோபசார பூஜை செய்வோரும் துளஸீ தளத்தால் பகவானை அர்ச்சிப்போரும் கோரியதைப் பெறுவர்.

ஸாவித்ரீ சரிதம்

மத்ர தேசத்தில் அச்வபதி என ஓர் அரசனிருந்தான். அவனுக்கு மாலதி எனும் மனைவியினிடம் மக்கட்பேறில்லாது பெருந்துன்பமுண்டாயிற்று. வஸிஷ்டரை அடுத்து ஸாவித்ரி மந்த்ரத்தை உபதேசம் பெற்றுன். புஷ்கரம் சென்று நூறுண்டு தவம் புரிந்தான். பின்னர் ஓர் ஆகாச வாணி, பத்து லக்ஷம் காயத்ரீ ஜபம் செய்யும்படி கூறிற்று அதைக்கேட்டு அரசன் கண்ணை விழித்தான். பராசரமுநி அவன் எதிரிலே வந்தார். மன்னன் மஹர்ஷியை வணங்கி காயத்ரீ ஜபவிதியைக் கூறும்படி வேண்டினன். அவர் பத்துமுதல் பத்து கோடிவரை ஜபம் செய்வோர்

அடையும் நன்மையை முறையே கூறி வெண்தாமரை அல்லது ஸ்படிகத்தாலாகிய மாலையால் ஜபம் செய்யும்படியும் அம்மாலையை பஞ்சகவ்யத்தால் நனைத்து நூறுமுறை காயத்ரீ ஜபம் செய்து மாலையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார். பத்து லக்ஷம் ஜபம் நியமத்துடன் செய்தால் ஸாவித்ரீ தேவி ப்ரத்யக்ஷமாவாள். ஸந்த்யாவந்தனம் விதிப்படி செய்யாதவன் எக்கருமத்திற்கும் அர்ஹனல்ல. அவன் செய்யும் ஸத் கருமங்கள் சாம்பலில் செய்த ஆஹுதிபோலாகும். பகவானுக்கு நிவேதனம் செய்யாத அன்னமும் ஏகாதசியன்று உண்ணும் உணவும், நரகத்தைத் தரும்; என்று காயத்ரீ ஜபத்தின் விதியையும் ஆசாரத்தையும் போதித்துச் சென்றார் பராசரர். அவர் கூறியவண்ணம் அச்வபதி பூஜித்து காயத்ரீ ஜபம் செய்தான். காயத்ரீதேவி ப்ரத்யக்ஷமாகி அரசே! உமது விருப்பை யானறிவேன். இப்போது ஓர் பெண் பிறப்பாள். பின்னர் பல ஆண்குழந்தைகளும் உண்டாகுமெனக் கூறி மறைந்தாள். அங்ஙனமே பிறந்த பெண்ணுக்குக் காயத்ரீயின் பெயரையே ஸாவித்ரி என்று வைத்தான். அவள் யௌவன பருவமடைந்து த்யுமத்ஸேனன் புதல்வனை ஸத்யவானை மணந்தாள். அவனுடன் ஒருநாள் விறகுவெட்ட காட்டிற்குச் சென்றாள். ஸத்யவானது உயிரைக்கொண்டு செல்ல யமனங்கு வந்தான். உத்தமியான ஸாவித்ரி யமனை நமஸ்கரித்து தீர்க்க ஸுமங்கிலி ஆவாய் என ஆசிர்வதிக்கப்பட்டாள். யமனுடன் சென்று கணவனை மீட்டுவந்து அவனுக்கு ராஜ்யத்தையும், மாமன் மாமிக்குக் கண்ணையும் தன் தந்தைக்கு நூறு புத்ரர்களையும் வரமாகப் பெற்றாள். அன்றியும் பல அரும்பெரும் தர்மங்களை யமனிடம் கேட்டறிந்தாள்.

கர்மவிபாகம்

மானிடர் நற்கருமத்தால் சுகத்தையும் தீய கர்மத்தால் துக்கத்தையுமடைவர். புண்ய பலனை ஸ்வர்க்கத்திலும் பாப பலனை நரகத்திலும் அனுபவிப்பர். கருமத்தை ஒழிக்க இரண்டேவழியுள. ஒன்று பகவத் பக்தி, மற்றொன்று ஞானம். ஓர் பலன் வேண்டுமென்று கோராமல் கடவுளிட்ட கட்டளை என்று ஸ்வதர்மத்தைச் செய்வோர் வைஷ்ணவ ராவர். இத்துடன் விஷ்ணுபக்தியையும் செய்வோர் உத்தம ராவர். நிஷ்காம கர்மம் செய்வோருக்குக் கன்யகாதானம் செய்பவர் பதினான்கு இந்த்ராயுள் வரையில் ஸ்வர்க்கத்தில் வஸிப்பர். பால், தயிர், நெய், வெள்ளி, வஸ்த்ரம், பழம், தீர்த்தம் முதலியவைகளைத் தானம் செய்தல் சிறந்ததாம். கார்த்திகை மாதத்தில் துளஸீ, நெய் தீபமிவைகளை அளித்தால் அச்யுதன் அருள்சுரக்கும். மாசியில் பிரயாகை ஸ்நானம் செய்வோர் வைகுண்டம் செல்வர். ஜன்மாஷ்டமி ஸ்ரீராம நவமி நவராத்ரி முதலியகாலங்களில் விருதமிருந்து பகவானை அர்ச்சிப்போர் நற்கதி அடைவர். பகவானது திருநாமத்தைக் கோடி முறை ஜபிப்பவர் ஜீவன் முக்தராவர். ஸ்வதர்மத்தைவிட்ட பாபிகளுக்குப் பலவகை நரகங்களுண்டு. அதில் அறுபத்துநான்கு மிகப்ரஸித்தமானவை. அங்கு செல்வோரை மிகபயங்கர ரூபமுள்ள யமகிங்கரர்கள் பல வகை ஆயுதங்களால் தண்டிப்பர். பாபிகளிடம் அவர்களுக்குக் கருணை கிடையாது. புண்யம் செய்வோரருகே இவர் செல்வதில்லை. க்ரூரமாகப் பேசுவோரை அக்நி குண்டத்தில் தள்ளுவர். பசியுடன் வருவோருக்கு அன்னமளிக்காதவரைத் தப்தகுண்டத்தில் தள்ளுவர். பானுவாரம் ஸங்க்ராந்தி அமாவாஸ்யை ச்ராத்த தினம் இக்காலங்களில் வஸ்த்ரத்தை வெள்ளாவியில் வைப்போர் க்ஷாரகுண்டம்

செல்வர். பின்னர் வண்ணுனகப் பிறப்பார். ருசியுள்ள பொருளைத் தானே உண்பவர் மூத்ரக் குழியில் விழுவர். பெற்ருேரைப் போஷிக்காதவர் விஷகுண்டத்தில் தள்ளப் படுவர். அதிதியை க்ரூரமான பார்வையால் பார்த்து அன்னமிடாதவர் ஆயிரமாண்டு தூஷிகா குண்டத்தில் கிடந்துத் தரித்ரனுகப் பூமியில் பிறப்பர். ஒருவருக்களித்த பொருளைப் பிடுங்கி மற்ருெருவருக்குக் கொடுத்தால் வாஸ குண்டத்தில் விழுந்து சண்டாளனுகவும் ஓணுனுகவும் பிறப்பர். பக்தர் பரவசமாகிக் கண்ணீர் சொரிவதைக் கண்டு பரிஹஸிப்பவர் அச்ருகுண்டத்தில் விழுந்து சண்டாளனுகப் பிறப்பர். தன் கன்யகையை விலைக்கி விற்றவர் மாம்ஸ குண்டத்தில் துன்பமடைந்து மலத்திலுள்ள புழுவாகவும் வேடனுகவும் கோழியாகவுப் பிறப்பர். காரணமின்றி க்ஷவரம் செய்து கொள்ளாதவர் நககுண்டத்தில் விழுவர். பூஜை செய்யும் லிங்கத்திலோ புஷ்பத்திலோ அன்னத்திலோ மயிர் கலந்திருந்தால் கேசகுண்டத்தில் விழுந்து துன்ப மடைந்து பின்னர் துலுக்கனுகப் பிறப்பான். கர்ப்பிணி யான மனைவியினிடம் ஸங்கம் செய்வோர் தப்ததாம்ர குண்ட நரகத்தில் விழுவர். ருது ஸ்நாநம் செய்தவள் அன்னத்தை உண்டால் ரக்தகுண்டத்தை அனுபவித்து வண்ணுனகப் பிறப்பான். சூத்ரன் அன்னத்தைப் புஜித் தாலும் அவன் சாப்பிடு என்றி கூறியபின் தன் அன்னத்தை உட்கொண்டாலும் தப்த ஸுராகுண்டத்தை அனுபவித்து புரோஹிதனுக ஜநிப்பான். காளையை வண்டியிலோ ஏரிலோ கட்டி யஜமாநனே வேலைக்காரனே அதை அடித்தால் இருவரும் அக்காளைக்கு எவ்வளவு ரோமமுளதோ அவ்வளவு வருஷம் தப்த தைலகுண்டத்தில் விழுவார்கள். குடிகளிடம் அக்ரம மாக வரிவாங்கும் அரசன் ஸர்ப்ப குண்டத்தில் விழுந்து தேளாகப் பிறப்பான். பரஸ்த்ரீகளது மார்பு ஸ்தநம் ப்ருஷ்-

டம் முதலியவைகளை வேண்டுமென்று பார்ப்பவர் காக குண்டத்தில் விழுந்து கழுகாகப் பிறப்பர். வெள்ளியைத் திருடுவோர் தப்தபாஷாண குண்டத்தை அனுபவித்து பின்னர் வெண்குஷ்ட முள்ளவராகவும கொக்காகவும் பிறப்பர். தான்யம் தாம்பூலம் முதலியவைகளைத் திருடுபவர் சூர்ணகுண்டத்தை அனுபவித்து எருமையாக ஜநிப்பர். எண்ணெ நெய் முதலியவைகளை அபஹரிப்பவர் ஜ்வாலா குண்டத்தில் விழுந்து மீனுகவும் எலியாகவும் பிறப்பர். வாஸனைப் பொருளைத் திருடினுல் துர்க்கந்த நரகத்தை அனுபவித்து எழுபிறவியில் துர்க்கந்தமுள்ளவனுவான். கத்தியினுல் ஒருவரை வெட்டுபவர் அஸிபத்ரவநத்தில் துன்புற்று அங்கஹீந சண்டாளனுகப் பிறப்பர். பசுவைத் திருடுவோர் பசு ஜன்மமெடுத்து மறுபிறப்பில் மானிடராகி ரோகத்தை அனுபவிப்பர். குருவையும் பெற்ருேரையும் மனைவி மக்களையும் காப்பாற்ருதவனும் நீரருந்தும் பசுவைத் தடுப்பவனும் தடிகொண்டு கோவைத் தாக்குபவனும் பசுவுக்கு எச்சிலைத் தந்தவனும் பசு அக்நி குரு பிராமணன் ஆலயம் இவைகளுக்கு நேராகக் காலை நீட்டுபவனும் காலலம்பாமல் வீட்டில் நுழைபவனும் அதிதி பூஜை செய்யாதவனும் கோஹத்தி செய்த பாபத்தை அனுபவிப்பான். தன் பதி வேறு கிருஷ்ணன் வேறென்றெண்ணும் பெண்ணும் கடவுளில்லை என்பவனும் தேவர்களைத் துவேஷிப்பவனும் பகவத்விக்ரஹம் குரு இவர்களைக் கண்டவுடன் எழுந்து வணங்காதவனும் கோஹத்தி தோஷத்தைப் பெறுவான். தந்தையைவிட தாயும் தாயை விட மந்த்ரோபதேசம் செய்த குருவும் சிறந்தவராவர். அவர்களை அவமதிப்பவர் நரகமடைவர். ஸந்த்யா வந்தநம் செய்யாதவன் நரகத்தை அடைவன். அவனைப் பதிதனென்றெண்ணி தார்மிகர் அருகில் சேர்க்கலாகாது. அன்ய புருஷனிடம் ஆசைகொண்ட ஸ்த்ரீயும் அன்ய ஸ்த்ரீயினிடம்

ஆவல்கொண்ட புருஷனும் பல்வகை நரகத்தை அனுபவித்து குஷ்டரோகியான ஜன்மமெடுப்பர். மித்ரத்ரோஹத்திலும் நம்பினவரைத் த்ரோஹம் செய்தல் சிறந்த பாபமாம். மித்ரத்ரோஹி கிரியாகவும் நம்பினேரை மோசம் செய்தவன் புலியாகவும் எழு ஜன்மமெடுப்பான். பாபிகளை யமதூதர் நரகங்களில் சித்ரவதை செய்வர். பாபிகளுக்கு யாதனை அனுபவிப்பதற்காகவே யாதனு சரீரமளிக்கப்படுகிறது. அந்த உடல் வெட்டப்படினும் தீயிலிடப்பட்டாலு மழிவதில்லை. ஜீவராசிகள் பசிதாஹத்தாலும் வலியாலும் துர்நாற்றத்தாலும் ஹாஹா என்று கதறி அழுவர்; என்று யமன் கூறியதைக் கேட்ட ஸாவித்ரி, இப்பாபங்களைக் கடந்து நற்கதிபெற மிகச் சுருக்கமான ஓர் வழியைக் கூறும்படி வேண்டினுள். நாலு வேதங்களிலும் பதினெண் புராணங்களிலும் மிக ரஹஸ்யமாகக் கூறப்பட்டது பகவத்பக்தி என்ற மார்க்கமேயாம். அதைத் தழுவியோர் பிறப்பிறப்பெனும் கடலைத்தாண்டி பேரானந்தத்தைப் பெறுவர். என்று உபதேசித்த அந்தகனை வணங்கி ஸாவித்ரி தன் புருஷனுடன் நகரம் சென்றுள்.

லக்ஷ்மியின் அவதாரம்

கோலோக வாஸியான ஸ்ரீ ராதாதேவியின் அம்சத்தால் கிருஷ்ணனது இடது புறத்தில் தோன்றியவள் லக்ஷ்மீதேவி. அவளது அம்சத்தால் தநலக்ஷ்மி தாந்யலக்ஷ்மி ஸ்வர்க்கலக்ஷ்மீ மோக்ஷலக்ஷ்மி என பலர் தோன்றினர். ஸ்வதர்மத்தை விடாதவரையில் ஒவ்வொருவரிடமும் தேவி வஸிப்பள். ஸ்வதர்மத்தை விட்டபொழுது வைகுண்டம் சென்று விடுவள். ஒரு ஸமயம் ஸ்வர்க்கத்தில் அஷ்ட லக்ஷ்மிகளும் தாண்டவமாட தேவேந்த்ரன் மூன்று லோக ஆக்ஷியையும் நடத்தி வந்தான். ரம்பையுடன் கூடி மதுபானம் செய்து இந்த்ரன் அரண்யத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அங்கு வை

குண்டத்திலிருந்து கைலாஸஞ் செல்லும் தூர்வாஸர் சிஷ்ய கோஷ்டியுடன் வந்தார். ஸ்வர்க்காதிபதி அவரை வணங்கித் துதித்தான். தூர்வாஸர் தனக்கு மஹாவிஷ்ணு அளித்த பாரிஜாத புஷ்பத்தை அவனுக்களித்தார். அவனதை வெள்ளை யானையின் தலையில் வைக்க அது அந்த புஷ்ப மஹிமையால் விஷ்ணுவைப்போன்ற உடல் பெற்று இந்த்ரனையும் அப் புஷ்பத்தையும் கீழே தள்ளிவிட்டு வநத்தில் நுழைந்தது. இதைக் கண்ட தூர்வாஸர் சினங்கொண்டார். இந்த்ர! பெரியாரளித்தது, புஷ்பம், பகவத் ப்ராஸதம், என்ற ஒவ்வொரு காரணத்தைக்கொண்டும், இந்த புஷ்பத்தை நீ மரியாதையுடன் பெற்று கண்ணில் ஒத்திக்கொண்டு தலையில் வைத்துக்கொள்ள வேண்டும். நீ ஒன்றையும் மதிக்காமல் யானைமீது வைத்தாய். லக்ஷ்மீ உன்னிடமுள்ள கர்வத்தால் நீ இங்ஙனம் செய்தாய். ஆதலின் லக்ஷ்மீ உன்னைவிட்டு அகலுவாள் என்று தூர்வாஸர் இந்த்ரனைச் சபித்தார். அன்றியும் இப்புஷ்பத்தைத் தலையால் வஹித்த யானையின் தலையை, விநாயகர் தலை வெட்டப்பட்டவுடன் அவருக்குத் தலையாக வைப்பார்கள். ஸகல தேவர்களாலும் அது பூஜிக்கப்படும் என்றார். இந்த்ரனது கர்வம் உடனே அகன்றது. தநத்தினால் உண்டாகும் தோஷங்களைத் தானே விரிவாகக் கூறி தனக்களித்த சிக்ஷை நியாயமே என்றான். தனக்கு ஞானோபதேசம் செய்யும்படி அவரைப் பிரார்த்தித்தான்.

தூர்வாஸர் உபதேசம்

புண்யபாபமிரண்டையும் செய்தவர் மாநிலத்தில் மாந்தராகத் தோன்றுகின்றனர். விதிவழுவாது இல்லற தர்மத்தைச் செய்துவரின் அது துறவறத்தில் கொண்டுவிடும். துறவிகள் உலகைப் பொய்யாக எண்ணி மெய்ப்பொருளை நாடுவர். அப்பொருள் கோலோகத்தே ராதா கிருஷ்ணனாக அமர்ந்துளது.

காமனையின்றி கர்மத்தைச் செய்வோரும் கிருஷ்ண பக்தியி னால் கோலோகம் செல்வர். ஆங்கு சென்றோர் மறுபடி பாரி னில் பிறவார். வ்ரத உபவாஸங்களும் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைதலும் பக்தர் சின்னமாம். காமக் ரோதங்களைக் களைந்து குடும்பத்தைவிட்டு தண்டகமண்டலு காஷாயங்களைத் தரிப்பவர் ஸந்யாஸியாவர். அவர் பிக்ஷைக் காகமட்டும் ஊரில் நுழைந்து மற்ற காலங்களில் மடத்தில் வீற்றிருந்து பகவத்யாகம் செய்யவேண்டும். மரத்தினால் செய்யப்பட்ட பெண்ணுருவத்தைக்கூட ஸன்யாஸி கண் ணால் பார்க்கலாகாது. ஸ்வதர்மத்தை விட்டவர் நரகயாதனை யைப்பெற நேரும். மரண துக்கமும் ஜன்ம துக்கமும் பொறுக்க முடியாதவைகள். தந்தையின் சுக்லம் தாயின் சோணிதத்தில் கலக்கும்போது ஜீவன் கருவில் வருகிறான். சோணிதமதிகமானல் தாயின் உருவும், சுக்லமதிகமானல் குழந்தை தந்தையின் உருவையும் பெறும். இரட்டைப் பட்ட நாட்களில் கருதரித்தால் ஆணாகவும், ஒத்தைபட்ட திகமானல் பெண்ணாகவும் பிறக்கும். ஞாயர், செவ்வாய், வியாழன்களில் கருவுண்டானல் ஆணும், மற்ற வாரங்களில் பெண்ணுமுண்டாகும். முதல் யாமத்திலுண்டாகும் சிசு அற்பாயுளாகும். இரண்டாவது மூன்றாவது யாமங்களில் ஜநிப்பது நடுத்தர வயதுள்ளதாகும். நாலாவது யாமத்தி லுண்டாவது நீண்ட ஆயுளைப் பெறும். ஏழாம்நாளில் கரு இலந்தைப்பழம் போலாகும். மூன்றும் மாதத்தில் கைகா லில்லாத மாம்ஸ பிண்டமாகும். ஐந்தாம் மாதத்தில் எல்லா அவயவங்களுமுண்டாகும். ஆறும் மாதத்தில் ஜீவன் நல்லறிவைப்பெற்று ஸஞ்சரிக்கும். பக்ஷி கூண்டிலிருப்பது போல் ஜரையில் கரு ஸஞ்சாரம் செய்ய இடமில்லாது வருந் தும். மலமூத்ரமத்தியிலிருந்து தாயருந்தும் உணவை உட் கொண்டு நாலுமாதம் கரு சொல்லொணுத் துன்பமடையும்.

சிறிய த்வாரத்தின் வழியாக வெளிவந்தவுடன் மாயையால் தாய் வயிற்றில் தான் அடைந்த துன்பங்களை மறந்து விடுகிறான். அடிக்கடி ஆபத்துண்டாகக் கூடிய இளமைப் பருவத்தைத் தாண்டி யௌவநமடைகிறான். உண்பது உடுப்பது உறங்குவது என்ற மூன்று தொழிலிலே பெரிதும் காலத்தைக் கழிக்கிறான். நோய் வாய்ப்பட்ட போது ஐயோ! யானொரு நற்கருமம் செய்திலேனே! என் செய்வேன்! யமன் வருவனோ? என்றஞ்சுகிறான். பாசபாணியாக யமகிங்கரர்கள் வந்துவிடுகின்றனர். அவர்கள் அங்குஷ்ட அளவுள்ள ஜீவனைப்பாசத்தால் கட்டி வதைக்கின்றனர். மிகக் கடினமான வழியில் இழுத்துச் செல்கின்றனர். பாபிகளது கண்ணுக்கு யமன் பயங்கரமாகத் தோற்றுவான். ஜீவனது பாபத்திற் கேற்றபடி அங்கு சிக்ஷை விதிக்கப்படும். இங்ஙனம் பிறப்பு மிறப்பும் அடிக்கடி வாட்டி வருகிறது. அதை வெல்ல ஞானமல்லது பக்தி எனும் ஓரே வழிதானுளது என்று தூர்வாஸர் கூறினர். இந்திரன் அவரைப் பணிந்து யான் இந்திர பதவி வேண்டேன்! பரம்பொருளைக் காணும் வழியை அருள் புரியுமென வேண்டினன். அங்ஙனமே தூர்வாஸர் ஞானமார்க்கத்தைக்கூற அவனுக்கு வைராக்யமுண்டாயிற்று. முனிவரைப் பணிந்து ஸ்வர்க்கம் சென்றான். அவர் கூறியதை எண்ணி எண்ணி பௌதிகப்பொருளில் வெறுப்பு கொண்டான். இதை அறிந்த அஸுரர்கள் இதுதான் தக்க ஸமயமென்றெண்ணி ஸ்வர்க்கத்தை முற்றுகை யிட்டனர். கங்கைக் கரையில் கண்மூடி தவம் புரியும் ஸுரகுருவை இந்த்ரன் சரணமடைந்தான். நடந்தவற்றை அறிந்து பிருஹஸ்பதி, சிஷ்யன் பொருட்டு விஷ்ணுவைத் துதிக்க, பகவான் அவர்கள் எதிரிற்றோன்றி சில அரிய உகதேசங்களைக் கூறித் தேற்றினர். ஸம்பத்தும் ஆபத்தும் அவனவன் செய்த பூர்வ வினையின்படியே தோன்றும். தூர்வாஸர் உன் சாபத்திற்கு நிமித்தமானர்.

ஆயினும் உனது பாபமே உன்னைவிட்டு லக்ஷ்மி அகலக் காரணம். தேவார்ச்சனையில்லாதவர், அதிதி பூஜை செய்யாதவர், அஸத்துகளின் அன்னத்தைப் புஜிப்பவர், துரும்பைக் கிள்ளுபவர், பூமியைக் காலால் கீறுபவர், ஆசாரமற்றவர், வஸ்த்ரமில்லாமலோ காலில் எண்ணை தடவிக்கொண்டோ உறங்குபவர், தன் உடலில் தாளம் போடுபவர் விருத உபவாஸமில்லாதவர், ஆகிய இவர்களைவிட்டு லக்ஷ்மி விலகுவாள். பகவத் பக்தி ஸாது பூஜை முதலிய நற்கருமஞ் செய்யுமிடத்தே தேவி தோன்றுவாள் என்றார். இதுகாலை பாற்கடலில் தங்கி நிற்கும் லக்ஷ்மியை வேண்டினுல்; மந்தரமலையைக்கொண்டு கடைந்தெடுங்கள் என்று கூறி பகவான் மறைந்தார். அவர் கூறிய வண்ணம் அமரரும் அரக்கரும் ஒன்று கூடி பாற்கடலைக் கடைந்தனர். பற்பல பொருள்கள் தோன்றின. முடிவில் லக்ஷ்மீதேவியுமங்கிருந்து தோன்றி வநமாலையைக் கொண்டு பந்நகசாயியை வரித்தாள். தேவர்கள் பிரும்மாவைப் புரோஹிதராகக்கொண்டு லக்ஷ்மியை விதிப்படி பூஜித்தனர். முன்போலவே ஸ்வர்க்கத்தை அன்னையின் அருள் அலங்கரித்தது. இழந்த பதத்தை இந்த்ரன் முதலியோர் திரும்பப் பெற்றனர்.

ஸ்வாஹாஸ்வதா தக்ஷிணைகள்

தேவர்கள் படைக்கப்பட்டவுடன் பசி பசி என்று கதறினர். பிரும்மா யக்ஞ ரூபமான ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைச் சரணமடைந்தார். அவரிடமுள்ள பிரகிருதியின் அம்சத்தால் ஒளிவடிவமான ஓர் கன்யகை தோன்றினள். அவள் பெயர் ஸ்வாஹா. அவள் பிறந்தவுடன் கிருஷ்ணனை நாடி லக்ஷமாண்டு தவம் புரிந்தாள். பகவான் எதிரிலே தோன்ற அவரழகைக்கண்டு ஸ்வாஹா தேவி பரவசமானாள். வாராஹ கல்பத்தில் நக்நஜித் என்ற அரசன் புத்ரியாகப் பிறப்பாய். நாக்நஜிதி எனும் உன்னை யான் மணப்பேன். இச்சமயம் எனதம்

சத்தால் பிறந்த பாலகனை மணந்துகொள் என்று பகவானுரைத்தார். அவர் கூறியபடியே ஸ்வாஹா தேவி அக்நிக்குப் பத்நியானாள். கார்ஹ பத்யம், தக்ஷிணாக்நி, ஆஹவநீயம் என மூன்று மக்களைப் பெற்றாள். ஸ்வாஹா என்று கூறாது ஹோமம் செய்தல் பயனற்றதாம். ஆதலின் தேவர்களை நாடிச் செய்யும் ஆஹுதி ஸ்வாஹா என்ற சொல்லுடன் சேர்த்தே செய்யப்பட வேண்டும். அவனியில் அக்நியில் செய்யும் ஆஹுதி அமரருக்கு ஆஹாரமானது. பித்ரு கணங்கள் ஏழுவகைப்படுவர். நால்வர் சரீரத்துடன் கூடினவர். மூவர் தேஜோமயமானவர். அவர்களும் ஆஹாரத்தை நாடியபோது, சதுர்முகன் மனதினால் ஓர் கன்னிகையைப் படைத்தான். அவளே ஸ்வதா தேவியாவாள். அவளைப் பித்ருக்களுக்கு அளித்து பூஸுரருக்குமதை உபதேசித்தார். அவர்கள் பித்ருக்களை நாடி ச்ராத்தம் தர்ப்பணம் முதலியவைகளைச் செய்யும்போது ஸ்வதா என்று கூறவேண்டும். ஸ்வதாதேவி முற்பிறவியில் ஓர் கோபியாவாள். கிருஷ்ணனோடு அவள் ரமிப்பதைக் கண்ட ராதை அவளைச் சபித்தாள். ஆதலின் அவள் ஸ்வதா என்ற பெயருடன் பிறந்து பித்ருக்களை அடைந்தாள். தக்ஷிணை என்பவளுமங்ஙனமே ராதையால் சபிக்கப்பட்ட கோபிகையாவாள். அவள் லக்ஷ்மீ தேவியின் உடலில் புகுந்தாள். ஆதலின் யக்ஞம் செய்யும் முநிவர் அதன் பயனைப் பெறாது வருந்தினர். விரிஞ்சியினிடம் வந்து விக்ஞாபநம் செய்து கொண்டனர். அவர் ஸ்ரீலக்ஷ்மீ நாராயணனைத் துதிக்க, அவர்கள் தக்ஷிணை எனும் கன்னிகையைப் பெற்று அவரிடமளித்தனர். சதுர்முகன் தக்ஷிணையை யக்ஞமூர்த்திக்களிக்க அவளது கருவில் பலன் என்றோர் புதல்வன் ஜனித்தான். அதனால் யாகம் புரிவோர் பயனைப் பெற்றனர். தக்ஷிணையில்லாத யாகம் பயனை யளிக்காது. யக்ஞம் முடிந்த க்ஷணத்திலேயே தக்ஷிணை அளிக்க

வேண்டும். தக்ஷிணை அளிக்காதவர் பிராமணதனத்தைத் திருடிய பாபத்தைப் பெறுவர்.

தேவஸேனை:—ப்ரகிருதியின் அவதாரங்கள் பற்பல உள. அதில் ஷஷ்டி அல்லது தேவஸேனை என்பதொன்று. அது மாத்ரு கணங்களில் மிக முக்யமானது. குழந்தைகளைக் கொடுக்கவும் காக்கவும் அதற்கு அதிகாரமுண்டு. மநுவின் மரபினில் பிரியவிருதன் என்றோரசனிருந்தான். அவன் மனைவியின் பெயர் மாலினீ. இருவரும் குறையில்லாது இல்லற தர்மத்தை அநுஷ்டித்தனர். புத்ரபாக்யமில்லாததால் புரோஹிதர் சொற்படி புத்ர காமேஷ்டி செய்தனர். கச்யப முநி இஷ்டியில் மிகுந்த சருவை மாலினிக்களித்தார். மகிழ்ச்சியுடன் மஹிஷி அதைப் புஜித்தாள். இறைவனருளால் அவர்களுக்கோர் அருமைப் புதல்வன் பிறந்தான். அளவில்லா ஆனந்தமடைந்தனர். சிறிது நேரம் சென்ற பின் அக்குழவி இறந்தது. தந்தை தாய்களின் துன்பத்திற்களவுண்டோ? கீழே விழுந்து புரண்டனர். எழுந்து கதறினர். என்ன செய்தாலென்ன? இறந்தவன் வருவனோ? சுடு காட்டிற்குச் சென்று மடிமீது மைந்தனை வைத்து மன்னன் கதறினான். அவனது மனைவியும் உறவினரும் அழுதனர். ஆங்கு சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் அழகிய விமானம் வந்தது. அதனுள்ளே மிக்க ரூபலாவண்யம் வாய்ந்த மங்கை ஒருவளிருந்தாள். அரசன் குழந்தையை விட்டு அவளருகே சென்று வணங்கி அன்னையே! நீ யார்? என வினவினான். அவள் தான் தேவஸேனை எனும் பிரும்மனது மானஸிக மகளென்றும், தன்னைத் தந்தை ஸுப்ரமண்யனுக் களித்தாரென்றும், தான் தேவர்களுக்கு ஜயமளித்ததாகவும் தன்னை ஷஷ்டி என்றுரைப்பார்களென்றும் கூறினாள். தனது சக்தியால் புத்ரனில்லாதவர் புதல்வனைப் பெறக் கூடுமென்றும் அற்பாயுளுள்ளோர் நீண்ட ஆயுளைப் பெறலாமென்றும் அவள் கூறி,

இறந்த குழந்தையை எழுப்பினுள். மன்னன் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு மகனைக் கையிலேந்தி ஷஷ்டியை வணங்கினுன். அவள் மாதந்தோறும் சுக்லபக்ஷ ஷஷ்டியில் தன்னைப் பூஜிக்கும்படி கூறி மறைந்தாள். அரசனுமங்ஙனமே செய்து வந்தான்.

மனஸா தேவி சரிதம்

கச்யபருக்கு மனதிலிருந்து ஓர் கன்னிகை உண்டானுள். ஆதலால் அவளுக்கு மனஸா தேவி எனப்பெயருண்டானது. இவள் மூன்று யுகம் முகுந்தனை நாடித் தவம் புரிந்தாள். இவளது உடல் கிழத்தனம் அடைந்ததுபோல் வாடி யிருந்தது. ஆதலின் கிருஷ்ணன் அவளெதிரிலே தோன்றி ஜாத்காரு என்று அழைத்தார். இவளுக்குக் குரு பரமசிவன். ஜாத்காரு முனிவருக்கு இவள் மனைவியானுள். இவளது மடியில் முனி படுத்துறங்கும்போது ஸந்த்யாகாலம் நேர்ந்தது. அப்போது எவரும் படுக்கலாகாது. ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டும் என்ற தர்மத்தை எண்ணி அவள் புருஷனை எழுப்பினுள். அவர் சினங்கொண்டு உறங்குபவனை எழுப்புதல் முறையோ ? என்ருர். ஸூர்யன் அஸ்தமனமானுன். ஆதலின் எழுப்பினேன். அடியாளைப் பொறுத்தருள வேண்டுமென பத்னி வேண்டினுள். மஹர்ஷியினது கோபம் சூர்யனிடம் சென்றது. அவனைச் சபிக்க ஆரம்பித்தார். ஸந்த்யையுடன் ஓடிவந்து பாஸ்கரன், முனிவரே! இறைவன் ஆணையின்படி யான் அஸ்தமனமானேன். அச்சமயம் உமது மனைவி எழுப்பினுள். சாந்தமன்ருே பெரியாருக்குப் பூஷணம் என்ருர். ரிஷியின் சினமகன்றது. பானுவுக்கு விடை கொடுத்தனுப்பினுர். நித்ரா பங்கம் செய்த மனைவியை விட்டுத் தவஞ்செய்யச் சென்ருர். அச்சமயம் மனஸாதேவி மனதினுல் தந்தைக்கு இஷ்டதேவதை யாகிய

மூவரையும் நினைத்தாள். மும்மூர்த்திகளுமங்குவர, கச்யபர் முனிவரைப் பார்த்து, ஓர் ஸந்ததியை அவளுக்குத் தந்தருளு மென்றார். ஜாத்காரு ஜாத்காருவின் நாபியைக் கரத்தால் தொட்டு குழந்தை உண்டாகும், என்று கூறி தபோவனஞ் சென்றார். மனஸா தேவி பதியின் பிரிவைத் தாளாது கதறி னாள். சிஷ்யர் நன்மையை நாடுவது குருவின் கடமையல் லவா? பரமசிவன் பல அரிய உபதேசங்களைக் கூறிக் கொண்டே அவளைக் கைலாஸத்திற் கழைத்துச் சென்றார். சிவோபதேசத்தைக் கருவிலிருந்து கேட்ட சிசு ஞானியாகப் பிறந்தது. அஸ்திகனென அதற்கு நாமஞ் சூட்டப்பட் டது. ஸகல கலைகளையும் பரமாத்மாவினிடமே பயின்றது. சிவனிடம் விடைபெற்றுத் தந்தை வீடு வந்தாள் ஜாத்காரு. ஜனமேஜயன் செய்த ஸர்ப்பயாகத்திலே தாயின் உத்திரவுபடி அஸ்திகர் வந்து ஸர்ப்பங்களைக் காத்தார். இந்திரன் மனஸா தேவியை மூலமந்த்ர ஸ்துதி கவசங்களால் பூஜித்து நன்மை பெற்றான்.

ஸுரபி:—கோலோகத்தில் ஒரு ஸமயம் ராதையுடன் பகவான் பிருந்தாவனஞ் சென்று விளையாடிக்கொண்டிருந் தார். அவருக்குக் களைப்பு ஏற்பட்டதால் பாலைப்பருகக் கரு தினார். அவரிச்சையால் கன்றுடன் கூடிய ஸுரபி தோன்றி னாள். அவளது பால் அமிருதத்தைவிட ருசியாயிருந்தது. தேவனும் தேவியும் வேண்டிய அளவு அருந்தி பின்னும் பாலைக்கறந்தனர். பகவானது ஸங்கல்பத்தால் அந்த பாத்ரம் உடைந்தது. பால்சிந்திய அவ்விடத்தே அதிவிசாலமான பால் தடாகமொன்றுண்டானது. இந்திரன் ஓர் ஸமயம் எங்கும் பால் கிடைக்காது வருந்தினான். பிரும்மாவின் உபதேசப்படி ஸுரபியைப் போற்றிப் பூஜித்தான். உலகெ லாம் முன்னைவிடப் பன்மடங்கு ருசியான பால் பெருகிற்று.

ஸ்ரீ ராதையின் அவதாரம்

ஸ்ரீ கிருஷ்ணனது இடது புறத்திலிருந்து தோன்றிய வள் ஸ்ரீ ராதை என்று முன்கூறப்பட்டது. விரஜையுடன் பகவான் விளையாடியதைக் கண்டு ராதை கோபங்கொண்டு அவரைக் கடிந்துபேசினள். பார்ஷதனுன ஸுதாமா, தேவி இங்ஙனம் கூறலாகாதென்றுரைத்தான். ராதை அவனை ராக்ஷஸனுகும்படிச் சபிக்க, அவனும் தேவியைப் பூமியில் பிறந்து சிலகாலம் பகவானை விட்டுப் பிரிந்திருப்பாய் எனச் சபித்தான். ஆதலால் வாராஹகல்பத்தில் கோகுலத்தில் விருஷபாநு எனும் கோபனுக்கும் கலாவதி எனும் கோபி கைக்கும் பெண்ணுக ராதை அவதரித்தாள். இவள் ஏனை யோரைப்போல் தாயின் கருவிலிருந்து பிறந்தவளல்ல. கலாவதி பத்துமாத கர்ப்பிணியாயிருந்து வாயுவையே பெற் ருள். அச்சமயம் அன்னை ராதை அங்கு அத்புத வடிவத் துடன் அவதரித்தாள். பன்னிரண்டாண்டு சென்றபின் தேவி தனது நிழலைப் பெண்ணுக்கித் தந்தையினிடம் விட்டுத்தான் பகவானிருப்பிடம் சென்ருள். இதற்குள் வஸுதேவனுக் குப் புதல்வனுக அவதரித்த பகவான் தனது மாமனுன கம் ஸனிடம் பயந்து கோகுலம் வந்தார். இவ்விருவரும் ஒரு வரையொருவர் எதிர் பார்த்திருந்தனர். சாயாமயமான ராதைக்கு அவள் தந்தை விவாஹம் செய்யக் கருதினர். யசோதையின் ஸஹோதரனுன ராயாணனுக்கு அவளை அளித் தார். ராயாணன் பிருந்தாவனத்திலே உண்மையான ஸ்ரீ ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் பிரும்மாவைக் கொண்டு விவாஹம் செய்வித்தார். இருவரும் கூடிப் பல்லாண்டு பேரின் பம் பெற்றனர். ஸுதாமனது சாபத்தால் தேவி, தேவனை விட்டுப் பிரிய நேர்ந்தது. இருவரும் சொல்லொணுத் துன்ப மடைந்தனர். நூருண்டு சென்றபின் தீர்த்தயாத்ரை என்ற

வியாஜமாக தேவி வெளியிற் கிளம்பி பகவானை அடைந்தாள். பல ஆண்டுகளுக்குப்பின் இருவரும் கோலோகம் சென்றனர். தேவிக்குத் தாய் தந்தையாக இருந்த கலாவதியும் விருஷபானுவும் தேவனை ஈன்றெடுத்த தேவகி வஸுதேவர்களும், பகவானை வளர்த்துவந்த யசோதை நந்தரும் கோலோகஞ் சென்றனர். பகவானது அருளை விரும்புவோர் ராதாகிருஷ்ணன் என்று ராதையை முன்னும் கிருஷ்ணனைப் பின்னேயும் வைத்தழைக்கவேண்டும். இதற்கு மாறாகக் கூறுபவர் விபரீத பயனைப் பெறுவர். ராதையை க்ருஷ்ணனும் இந்திரனும் ஸுயக்ஞன் எனும் அரசனும் அர்ச்சித்து நன்மை பெற்றனர்.

ஸுயக்ஞன்

அந்த ஸுயக்ஞன் யார்? என்பதைப் பரமசிவன் பார்வதிக்குரைத்தபடி ஸூதர் கூறினார். ஸ்வாயம்புவ மநுவின் மரபினில் உத்கலன் என்றோர் உத்தம ராஜனிருந்தான். அவன் புஷ்கர க்ஷேத்திரத்திலே ஆயிரம் ராஜஸூய யாகம் செய்தான். எண்ணிறந்த ரத்னங்களைத் தக்ஷிணையாக அளித்தான். இவனது யாகத்தின் சிறப்பைக்கண்டு தேவரும் வியந்தனர். சதுர்முகன் இவ்வரசனை ஸுயக்ஞன் என்றழைத்தார். மிக அழகாக யாகம் செய்பவன் என்பது அதன் பொருள். இவனது ஸபையைத் தேவர்களும் மஹர்ஷிகளும் அடிக்கடி வந்து அலங்கரிப்பர். ஒரு ஸமயம் எல்லோரும் வீற்றிருக்கும்போது ஓர் அந்தணன் ஸபையில் நுழைந்தார். அவர் இளைத்த உடலில் மெலிந்த உடையை அணிந்திருந்தார். ஆடையும் உருவுமன்றோ உலகில் கௌரவத்தைத் தருவன? இவரை அரசன் எழுந்துநின்று மரியாதையுடன் வரவேற்காது உட்கார்ந்த விடத்திலிருந்தே அஞ்ஜலிசெய்து வாருமென்றழைத்தான். ஸபையோரும்

எழுந்து அவரைக் கௌரவிக்கவில்லை. வந்தவருக்குக் கடுஞ் சினமுண்டாயிற்று. அரசனை நோக்கி நீ விரைவில் ராஜ்யத்தை இழப்பாய் எனச் சபித்தார். தன்னைக் கண்டு எழுந்திராத முனிவர்களைக் கோபக்கண்ணுடன் நோக்கினர். உடனே ஸகல முனிவரும் எழுந்து இவரைப் பணிந்து தங்களது குற்றத்தை மன்னிக்கவேண்டுமென ஒவ்வொருவராக பிரார்த்தித்தனர். வந்தவரது சினமகன்றது. அவரது முன்னிலையில் ஸுயக்ஞன் முனிவர்களைப் பார்த்து பாபபுண்யங்களைக் கூறும்படி வேண்டினன். மஹர்ஷிகள் நன்றிகெட்டவனைவிடக் கொடிய பாபி இல்லை. ஈசனளித்த அவயவங்களையும் பொருளையுங்கொண்டு ஈசனுக்குப் பூசை புரியாதவனும் இறைவனம்சம் நிறைந்த ஏனைய ஜீவராசிகளுக்குப் பரோபகாரம் செய்யாதவனும் கிருதக்நனுவன். அவன் பல நரக யாதனைகளை அனுபவித்துப் பின்னர் பசு பக்ஷி ஜன்மங்களைப் பெறுவன். என்று விஸ்தாரமாகக் கூறினர். சாபமளித்த அதிதியை வணங்கி, வனம் சென்று சாபத்தை அனுபவித்துப் பின்னர் முன்போல் பாரினை ஆள்வாய் என்று கூறி முனிவர் சென்றனர். ஸுயக்ஞன் தனது புரோஹிதரான வஸிஷ்டர் சொற்படி விருந்தினரை அர்ச்சித்தான். தாங்கள் யார்? தங்களது குரு யாவர்? எங்கு வந்தீர்கள் என வினவினன்.

வேந்தே! கச்யபரது வம்சத்தில் பிறந்தவன் யான். விருபனது புதல்வன். ஸுதபஸ் என்று என்னை அழைப்பார்கள். என் குரு கைலாஸவாஸியான மஹாதேவன். இந்திர பதவியையும் துச்சமாக எண்ணுபவன் யான். பகவானது பாதாரவிந்தத்தை இருதய கமலத்திலே இருத்தி விருப்பு வெறுப்பில்லாமல் ஸஞ்சரிக்கின்றேன். நீ இதுவரை முறை தவறாது செய்துவந்த தர்மம் என்னை இங்கு அழைத்தது. எக்காரியத்தையும் நாடி வந்தவனல்லன் யான். என்று

விருந்தினர் விளம்பினர். ஸுயக்ஞன், பகவன்! கங்கை முதலிய தீர்த்தங்களும் தேவர்களும் சிலகாலம் சென்ற பின் மனிதர்களைச் சுத்தமாக்குகின்றனர். தங்களைப் போன்ற ஸாதுக்களோ தர்சநத்தினாலேயே பாவநமாகச் செய்கின்றனர். யான் பிறவிக்கடலைக் கடந்து செல்லும் உபாயத்தைத் தாங்கள் உபதேசிக்க வேண்டும் என பிரார்த்தித்தான். முநிவரும் விரிவாக பல தர்ம மார்க்கங்களைக் கூறி முடிவில் கிருஷ்ண பக்தியே சிறந்த உபாயம். அதை விரும்பினால் ஓராண்டு ஸாதுக்களை அர்ச்சிக்க வேண்டும். அதனிடையே எனது சாபம் உன்னை நோயாக வந்து துன்புறுத்தும். என்று கூறி மறைந்தார். மன்னனும் நோயுடன் வருந்தினாலும் விதி தவறாது ஸாதுக்களை ஓராண்டு பூஜித்து வந்தான். ஸுதபஸ் மறுபடியும் அரசனருகே வந்தார். அவனது பக்தியைக் கண்டு மகிழ்ந்து ஸ்ரீ ராதா மந்த்ரத்தை உபதேசித்தார். மன்னனும் புஷ்கரஞ் சென்று தவம் செய்தான். பதினுபிரமாண்டு கழிந்தபின் ராதாதேவி விமானத்தின்மீது அரசனை ஏற்றிக் கோலோக மழைத்துச் சென்றாள். திவ்ய தேஹ மெய்திய ஸுயக்ஞன் கிருஷ்ணனுக்குத் தொண்டு புரிந்து பேரானந்த மடைந்தான். இங்ஙனம் ராதையைக் கார்த்திகை பௌர்ணமியில் பக்தியுடன் பூஜிப்போர் பரமபதமடைவர். துளஸீ எனும் கோபிகையுடன் பகவன் ரமித்திருப்பதை ராதை கண்டாள். மட்டில்லாக் கோபங்கொண்டு தனது சக்தியைச் சுருக்கிக் கொண்டாள். ஸகல தேவர்களும் முநிகளும் சக்தியை யிழந்து வருந்தினர். ஸ்ரீ கிருஷ்ணனைச் சரண மடைந்தனர். பகவான் ராதையைத் துதிக்க தேவி ப்ரஸந்நமானாள். எல்லோரும் இழந்த சக்தியைப் பெற்று மகிழ்ந்தனர். ஸ்ரீ ராதா தேவியின் பற்பல அவதாரங்களுக்கும் தனித்தனி மூல மந்த்ரம் ஸ்துதி கவசம் முதலியவைகளைப் பார்வதி வினவ பரமேச்வரன் விரிவாக வர்ணித்தார்.

தாராஹரணம்

நாரதர் ஸ்ரீ துர்க்கையின் சரிதத்தைக் கூறும்படி வேண்ட நாராயணன் உரைத்தார். துர்க்காதேவி ராதையின் அம்சமாக கோலோகத்தில் பிறந்த பெண். பல்லாண்டு அவள் தவம் புரிந்தபின் பரமசிவன் அவளை மணந்தார். ஆதியில் கிருஷ்ணனும் பின்னர் பரமசிவன் சதுர்முகன் இந்த்ரன் ஸுரதன் என்பவர்களும் துர்க்கையைப் பூஜித்தனர். ஸுரதனது வம்ச சரிதத்தைக் கேள்! அத்ரிமுனிவரது புதல்வன் சந்த்ரன். அவன் ராஜஸூயயாகம் செய்து த்விஜராஜனானான். அவனது புதல்வன் புதன். அவனிடம் பிறந்தவன் சைத்ரன். சைத்ரனுக்கு ஸுரதன் என ஓர் புத்ரன் உண்டானான். சந்த்ரனது குரு பத்நியான தாரை ஒரு ஸமயம் ஸ்நாநம் செய்து அலங்காரத்துடன் சென்றாள். வாயு அவளது வஸ்த்ரத்தை விலக்கிற்று. இதைக் கண்ணால் கண்ட சந்த்ரன் அவள் பால் காமங் கொண்டான். தன்னை ஆலிங்கனம் செய்து கொள்ளும்படிக் குரு பத்நியை வணங்கிக் கேட்டான். தாரை, இது மிகக் கொடிய பாபமென மறுத்தாள். அவன் பலாத்காரமாகத் தேரின்மீது தூக்கி வைத்து அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். தேவேந்த்ரனும் தன் குருவும் தன்னுடன் போருக்கு வருவதை அறிந்தான். அஸுர குருவான சுக்ரரைச் சரண மடைந்தான். அவர் சந்த்ரனது செயலைக் கண்டித்துப் பேசினார். சரணமென்று வந்தவனை ரக்ஷிப்பது உயர்ந்த தர்மமாதலின் உன்னைக் காக்க முன் வந்தேன். நீ கங்கையில் புனலாடி பிராய்ச்சித்தமாக விஷ்ணு பூஜை செய் என்றார். அங்ஙனமனுஷ்டித்த அவனைத் தன் மடிமீது வைத்துக் கூறினார். இதுவரை யான் செய்த உபவாஸ விருதங்களுக்குப் பயன் இருக்குமானால் சந்த்ரனது பாபம் ஸந்தியாவந்தனம் செய்யாதவரிடம் செல்லட்டும்.

தன் மனைவியை வஞ்சித்துப் பிறரிடம் செல்பவன், பகவானுக்கு நிவேதநம் செய்யாது உண்பவன், புருஷனை அவமதிக்கும் பெண், ஒருவர் குடித்து மிகுந்த ஜலத்தையும் உணவையும் உட்கொள்பவன், பகலில் இரண்டு முறை அன்ன முண்பவன், அச்வத்த மரத்தை வெட்டுபவன், பகவன் நாமாவை விற்பவன் முதலியவர்களிடம் சந்த்ரனது பாபம் போகட்டுமென்றார்.

இதனிடையில் மனைவியைக் காணாது பிருஹஸ்பதி வருந்தினார். பெண்களாலன்றோ இல்லற தர்மம் நடக்க வேண்டும். கற்புள்ள தாரகை எங்கு சென்றனளோ? எவர் அபஹரித்தனரோ? என வருந்தினார். தனது சிஷ்யர்கள் மூலம் சந்த்ரனிட மவளிருப்பதாக அறிந்தார். சிஷ்யனான இந்திரனையு மழைத்துக்கொண்டு பிரும்மாவினிடம் சென்றார். அவர் தனக்கும் ஈசனுக்கும் குரு புத்ரரான பிருஹஸ்பதிக்கா இக்கதி நேர்ந்ததென வருந்தினர். எங்ஙனம் பிருஹஸ்பதி ஆதியில் உண்டான தேவர்களுக்குக் குரு புத்ரனுவார் என நாரதர் வினவ, நாராயணர் உரைத்தார். ஆங்கிரஸருக்கு பிருஹஸ்பதி உதத்யர் ஸம்வர்த்தர் என மூன்று புத்ரர்கள் பிறந்தனர். பிருஹஸ்பதி ஸம்வர்த்தரது மனைவியை அவள் கர்ப்பிணியாயிருக்கும் போது புணர்ந்தார். அது மிக பாபச் செயல். அதன் பயனை அவர் அநுபவிக்கிறார். ஆங்கிரஸரது மனைவி பூர்வ ஜன்ம வினையால் இறந்த குழந்தைகளையே பெற்றாள். ஸநத்குமாரர் கூறியவண்ணம் அவள் ஓராண்டு கிருஷ்ணனை நாடி பும்ஸவநம் என்ற விரதத்தை அநுஷ்டித்தாள். பகவான் அவளது தவத்தைக் கண்டு மகிழ்ந்து எனது அம்சத்தினுல் ஓர் குழந்தை உனக்குண்டாகும். அது ஸகல தேவர்களுக்கும் குருவாகும். அது அறிவிற் சிறந்து விளங்குமென்று கூறி மறைந்தார். க்ருஷ்ணன் ஜகத்குருவன்றோ? அவரது புத்ரன் எல்லோருக்கும் குரு புத்ரனே ஆவான்.

அன்றியும் தாக்ஷாயணி சரீரத்தை விட்டபின் பரமசிவன் ஞானத்தை இழந்தார் அது சமயம் கிருஷ்ணனது ஆணையின்படி ஆங்கிரஸர் சிவனுக்கு நினைவு ஊட்டினார். ஆதலின் சிவனுக்குப் பிருஹஸ்பதி குருபுத்ரனுவன். ஆதலால் அவரிடம் சென்று இதற்கோர் வழிதேடு என்று பிரும்மா பிருஹஸ்பதியைக் கைலாஸத்திற்கனுப்பினார். பிருஹஸ்பதி அங்கு சென்று பகவானைப் பணிந்து வெட்கத்தினல் வாய் திறவாமலிருந்தார். உமாபதி உள்ளதை உணர்ந்து திடுக்கிட்டார். அவர் கையினின்று ஜபமாலை கீழே விழுந்தது. ஆஹா! கிருஷ்ணபக்தருக்கு என்ன பெருமை! அவர் பாபியானுலும் அவரைச் சபிக்க முடியவில்லையே! நான் தான் என்ன செய்வது? கிருஷ்ணனையே சரணமடைவோம். அவரே இதற்கோர் வழி கூறுவர் என்றார். அங்ஙனமே இருவரும் கிருஷ்ணனைப் போற்றி நர்மதா தீரம் சென்றனர். ஆங்கு கிருஷ்ணனது ஆணையின்படி நாரணனும் வந்தார். சுக்ராசாரியினிடம் ஸமாதாநம் செய்து கொள்வதே சிறந்த தர்மம் என அவர் போதித்து மறைந்தார். பிரும்மா தானே சுக்ரரிடம் சென்றார். சுக்ராசார்யர் மிக்க கௌரவத்துடன் சதுர்முகனை வரவேற்று அதிதி பூஜை செய்து போற்றினர். பெரியோர் ஸந்தோஷமடைந்தால் கிருஷ்ணன் ஆநந்தமடைந்து ஆசிர்வதிக்கிறுன். இன்று யான் தன்யானுனேன். என வாயாரப் போற்றினுன். பிரும்மா தான் வந்த விஷயத்தைக்கூறி ஸமாதாநமாகத் தாரையை அளிக்கவேண்டும். இல்லையேல் காலாக்நிருத்ரன் முதல் ஸகல தேவ கணங்களும் போருக்கு வருவர் என்றார். இதை அருகிலிருந்து வினவிய சுக்ர சிஷ்யனுன ப்ரஹ்லாதன் நகைத்தான். பிரும்மன்! தேவரல்ல! மூவரல்ல! பதினுன்கு உலகும் படையெடுத்து வந்தாலும் யானஞ்சேன்! எனது உயிருள்ளவரை குருவை ரக்ஷிக்க எவராயினும் எதிர்த்து நிற்பேன். சுக்ரர் மனமுவந்து தந்தால் தாரையை

அழைத்துச் செல்லும்'! அவரை அச்ச முருத்தி உமது காரியத்தை ஸாதிப்பது முடியாத காரிய மென்றார்.

சுக்ரர் பிரும்மனது பிரார்த்தனையின்படி தாரையைத் தந்தார். அவள் வெட்கத்தினால் தலை குனிந்து கற்பை இழந்த பாபி பிரும்மனுடன் போவதெப்படி என அஞ்சினாள். பிரும்மா தாரையை நோக்கி அஞ்சாதே! நீ சந்த்ரனிடம் ஆசை கொள்ள வில்லை. அவன் உன்னைப் பலாத்காரம் செய்தான். பிராயச்சித்தம் செய்தால் நீ சுத்தமாவாய் என்றார். தாரை அவரை வணங்கி என் கருவில் சந்திரனது வீர்ய மிருக்கிறது. அதை இங்கேயே விட்டு விடுகிறேனென ஓர் அழகிய புத்ரனை ஈன்றாள். புதனெனும் அச்சிசுவை ஏற்றுச் சந்த்ரன் தன்னிடஞ் சென்றான். பிரும்மா தாரையை ப்ருஹஸ்பதிக்களித்து ஸத்ய லோகஞ் சென்றார்.

ஸுரதன்

புதன் நந்தநவநத்தில் சித்ரை எனும் அழகிய பெண்ணை மணந்தான். அவள் குபேரனுக்கும் க்ருதாசி என்பவளுக்கும் பிறந்தவள். புதன் சித்ரையினிடம் சைத்ரனெனும் சக்ரவர்த்தியைப் பெற்றான். இவன் எண்ணிறந்த வேள்விகளைச் செய்தான். குன்றுபோல் அன்னராசிகளைக் குவித்து தாநம்செய்தான். கோடிக்கணக்கான கோதாநமும் ஏனைய தாநங்களையும் செய்து நற்கீர்த்திபெற்றான். சைத்ரனுக்கு ஸுரதன் என்றோர் குழந்தைபிறந்தான். எந்தவகையிலு மிவன் தந்தையைவிட குறைந்தவனாக இல்லை. இவனிடம் பூமண்டலத்தை அளித்து ஸுரதன் வநஞ்சென்றான். ஸுரதனுக்ஷியை எல்லோரும் போற்றினர். மறந்தும் அதர்மத்தைச் செய்யாதவன். த்ருவனது பேரனான நந்தி என்பான் இவன் ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்தான், நந்தி போதிய பக்கபலத்துடனிருந்தான். ஸுரதன், நம்முடன் யார்

யுத்தம் செய்வர்? என அயர்ந்திருந்தான். ஆதனால் ஸுரதன் தோல்வியுற்றான். ஒருவருமறியாது நடுநிசியில் குதிரைமீதேறி கானகஞ் சென்றான். புஷ்பபத்ரா எனும் நதிக்கரையிலே ஓர் வைச்யன் வரக்கண்டான். நடுக் காட்டில் நள்ளிருளில் இவ்விருவரும் நண்பராயினர். நட்பு ஸமாநமாயுள்ளவருக்கே உண்டாகும். ஸுரதன் ராஜ்யத்தையும் குடும்பத்தையும் இழந்து வந்தான். வைச்யனும் தனத்தையும் மனைவிமக்களையும் விட்டுவந்தான். அவன் பெயர் ஸமாதி. அவனுக்கு ஏராளமான பொருளுண்டு. அதைக்கொண்டு ஸமாதி ப்ரதிதிநம் கோடிதாநம் செய்து வந்தான். பொருள் அழிந்து விடுவதைக்கண்டு அவன் மனைவிமக்கள் வருந்தினர். அவனைக் காட்டிற்கு விரட்டி விட்டனர். அவனுடன் அதிருஷ்டஞ்சென்றது. அந்ததநம் குறைந்தது. ஆதலால் வைச்யனது மனைவிமக்கள் அவனை வநஞ்சென்றழைத்தனர். ஸமாதி வைராக்யங்கொண்டு அவர்கள் வேண்டுகையை நிராகரித்தான். இவ்விருநண்பரும் தீர்த்தயாத்ரைக்குச் சென்றனர். வழிவசமாக புஷ்கரஞ்சென்று ஸ்ரீ மேதஸ் எனும் முநிவராச்ரமத்தைக் கண்டனர். மஹர்ஷி அவர்களை வரவேற்று விருந்தளித்தார். இவர்கள் முநிவரைச் சரணமடைந்து மன்னன் ராஜ்யத்தையும் வைச்யன் மோக்ஷத்தையும் விரும்பினர். இருவரும் துர்க்காதேவியைப் பூஜிக்கவேண்டுமென்றாரவர். மூலமந்த்ரம் கவசம் ஸ்தோத்திரம் பூஜாவிதி முதலியவைகளை அவர்களுக் குபதேசித்தார். பல்லாண்டு அவர்கள் பூஜித்தபின் பகவதி அவர் முன் தோன்றி கோரிய பயனை அளித்தாள். வைச்யன் கோலோகஞ் சென்று கிருஷ்ண ஸாரூப்யமடைந்தான். அவரது தொண்டெனும் மோக்ஷ ஸாம்ராஜ்யமெய்தினன். ராஜனும் ராஜ்யத்தைப் பெற்றான். தேவியினது துதியைப் படிப்போர் நோயின்றி கோரிய வரனைப் பெறுவர். விருப்பில்லாது போற்றுவோர் மோக்ஷமெய்துவர்.

ப்ரகிருதி கண்டம் முற்றிற்று.

கணேச கண்டம்.

கணேசாவதாரம்.

தக்ஷனது யாகத்தில் அவமானம் அடைந்த தாக்ஷாயணி யோகத்தால் தன்னுடலை விட்டாள். பர்வதராஜ குமாரியாகத் தோன்றி பரமசிவனை மணந்தாள். ஆதிதம்பதிகள் பல்லாயிரமாண்டு இணைபிரியாது சிற்றின்பத்தி லீடுபட்டனர். அவர்களது அரண்மனை வாயிலில் நின்று அமரர் அவர்களைப் போற்றினர். தேவர் உள்ளே வருவதைக் கண்டு உமாதேவி எழுந்து விரைவாகச் சென்றாள். அச்சமயம் ஈசனது வீர்யம் கீழே சிந்தியது. தன் வயிற்றில் கரு தோன்றாததால் தேவி மிகச் சினங்கொண்டாள். தேவர்களுக்கும் குழந்தையே பிறவாதெனச் சாபமளித்தாள். கைலாஸநாதன் தேவியின் சோகத்தை அகற்றி ஸுபுண்யகமெனும் விருதத்தை உபதேசித்தார். அது மாசி மாதம் சுக்ல த்ரயோதசியன்று ஆரம்பித்து ஓராண்டு அனுஷ்டிக்கத் தக்கது. அதுசமயம் ஸ்ரீகிருஷ்ணனைப் பூஜிக்கவேண்டும். புருஷன் கூறியபடி அவரை முன்னிட்டுக்கொண்டு அந்த விருதத்தைத் தேவி ஆரம்பித்தாள். ஆங்கு ஸகலதேவர்களும் வந்தனர். மஹாவிஷ்ணுவின் ஆணையின்படி அமரானைவரும் ஈசனளித்த தொண்டில் ஈடுபட்டனர். இந்த விருதத்தினால் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் பரம ஸந்தோஷமடைவான். அவனருளால் அம்பிகைக்குக் கணேசன் என ஓர் குழந்தை பிறக்கும் என விஷ்ணுகூறினர். மிக்க நியமத்துடன் மலைமகள் பூஜையை ஓராண்டு செய்து முடித்தாள். அன்னதானம் அபரிமிதமாக நடந்தது. விரதம் பூர்ணமாயிற்று. புரோஹிதரை நோக்கி உமக்கு யாது தக்ஷிணைவேண்டுமென்றாள். அவர் உன் கணவனைபே எனக்குத் தக்ஷிணையாக அளி என்றார். இதைக்கேட்ட உமை தீராத் துயருற்று மூர்ச்சை

அடைந்தாள். தேவியைத் தேற்ற மற்ற தேவர்கள் தேவ தேவனை வேண்டினர். மாதேவன் உமையின் அருகே சென்று அவளது மூர்ச்சையை அகற்றி தன்னைத் தக்ஷிணை யாக அளிக்கும்படிக் கூறினர். தர்ம தேவதையும் ஏனைய முனிவர்களும் தக்ஷிணை அளிக்காத விருதம் பயனற்றது. ஆதலின் ஸநத்குமாரர் கோரியவண்ணம் சிவனையே தக்ஷிணை யாக அளிக்கவேண்டு மென்று தேவியிடம் விக்ஞாபநம் செய்துகொண்டனர். யார் என்ன கூறியும் பார்வதி பரம சிவத்தைத் தாநமாக அளிக்க மனங்கொள்ளவில்லை. இதனி டையே ஆகாயத்தினின்று ஓர் அழகிய விமானம் இறங்கி யது. அதிலிருந்து வைகுண்டநாதன் வெளிவந்தார். ஸ்ரீ கிருஷ்ணனது உடலிலிருந்தே பரமசிவனும் கோக்களும் தோன்றின. அந்த கோக்களைத் தக்ஷிணையாகத் தந்தால் சிவ னைத் தந்ததுபோலாம் என்றார். அம்பிகை ஆயிரம் பசுக் களை அளித்தாள். ஸநத்குமாரர் அதை ஏற்காது சிவனே வேண்டு மென்றார். வேறுவகை இல்லாது வானவர் விரும் பியபடி தேவி தன் பதியைத் தாநமாகத் தந்தாள். மஹர்ஷி அதைப் பெற்று மாதேவனைத் தன்னருகே அழைத்துச் சென்றார்.

சிவனை விட்டுப் பிரிந்த சிவை அவனையே நினைத்து வரு ந்தினள். கோலோக நாயகனான கோபாலன் ஆங்கு எழுந்த ருளினன். அவனது காந்தி பளீரென வீசிப் பரவியது. எழுந்து நின்று எல்லோரும் அவரை வரவேற்றுப் போற்றி னர். ஒவ்வொருவராக மநங்கொண்ட மட்டும் புகழ்ந்து துதி த்தனர். கோபால கிருஷ்ணனது தர்சநம் தனக்குக் கிடைக்கவேண்டு மென்றே ஸநத்குமாரர் சிவ தக்ஷிணையை வற்புறுத்தியதாகக் கூறி உமையினிடம் அவள் பதியை அளித்தார். அனைவர்க்கும் ஆசீர்வாத மளித்து பகவான் கோலோகம் சென்றார். அமரரும் அவரவர் இருக்கைக்குச்

சென்றனர். பார்வதி பேராநந்தங்கொண்டு பரமாத்மாவு டன் பலகாலம் ரமித்திருந்தாள். அவரது வீர்யம் அன்னை யின் கருவில் செல்லும் ஸமயத்தில் விஷ்ணு அந்தணன் வேடம் பூண்டு அவ ரெதிரிற் றோன்றினன். அன்னையே யான் அன்னமருந்தி ஐந்தாறு நாட்களாயின. பசியால் உடல் மெலிந்து வருந்தும் விருந்தினருக்கு அன்னமளிப்பாயா? என்றார். விருந்தென்றவுடன் வேகமாக வந்தாள் அன்னை. ஆதலின் சிவ வீர்யம் கீழே சிந்தியது. அதைக் கவனியாது அன்னபூர்ணி ஐயா! விருந்தளித்தலே வேள்வியினும் சிறந்த தர்மம். தாங்கள் யார்? எத்தகைய அன்னம் தமக்கு வேண்டுமென்றாள்? விருந்தினர் அம்பிகையின் உயர்குணத் தைப் போற்றி தாயே நீயன்றி வேறு சரணமெமக்குண்டோ? கிருஷ்ண பக்தியைவிடச் சிறந்த விருந்துண்டோ? அதைத் தாங்கள் எனக்குத் தந்தருளல் வேண்டும். யுகந்தோறும் தங் களுக்குத் திருக்குமாரனாகத் தோன்றும் ஸ்ரீகிருஷ்ணன் உமது படுக்கையில் விநாயகராக வீற்றிருக்கிறார் பாரும். என்றுரைத்துப் பகவான் மறைந்தார். அன்னை தனக்குப் புத்ரபாக்கியம் உண்டானதையும் பெரிதாகக் கருதவில்லை. அதைவிட அதிதி பூஜையைச் சிறப்பாக எண்ணினாள். வந்த விருந்தினர் ஏன் மறைந்தார்? எங்கு சென்றார்? அவரைத் தேடி அன்னமளித்தா லல்லது இல்ல மேகுவதில்லை என்றாள். அச்சமயத்தில் ஆகாயவாணி ஒன்று தோன்றிற்று. அம் பிகே! நீ ஏன் அதிதியை நினைந்து வருந்துகிறாய்? விருந் தாளியாக வந்தவனும், உனது அருமைக் குழந்தையாக அவதரித்தவனும், கோலோக நாதனே ஆவன். உனது படு க்கையில் ஸுந்தர வடிவனாயுள்ள அவனைக் காண்பாய் என் றது. விரைந்தோடி பார்வதி விநாயகமூர்த்தியைக் கண் டாள். அளவில்லா மகிழ்ச்சிகொண்டு கணவனை அழைத் தாள். இருவருங்கூடி குழந்தையின் நன்மையை நாடி பல

கோதானம் செய்தனர். ஜாத கர்மம் முதலிய சடங்குகளை மிக்க குதூகலத்துடன் நடத்தினர். மாதவன் முதலாக விண்ணவரும் முனிவரும் அழைக்கப்பட்டனர். அவரவருக்கும் ஏற்றபடி உபசாரம் நடந்தது. சிலர் சிவனைக் கொண்டாடிக் குழந்தையை ஆசீர்வதித்தனர். சிலர் காணிக்கைகளை அளித்துப் போற்றி வணங்கினர்.

விநாயகர் கஜமுகனானது

பரமனுக்குண்டான புத்ர பாக்யத்தைக் கேட்டுப் பதினான்கு உலகிலுள்ளோரும் ஆங்கு வந்தனர். அஷ்டாதசவாத்யங்களும் முழங்கின. ஏனையவரைப்போல் சூர்ய சுதனான சனைச்சரனும் ஆங்கு வந்தான். அவன் தலையைத் தூக்கி முகத்தைப் பாராது குனிந்த வண்ணமே அம்பிகையை நமஸ்கரித்தான். நிமிர்ந்து பாராத காரணம் யாதெனத் தேவி வினவினாள். அன்னையே! யான் ஏகாக்ரசித்தனாக கோலோக நாயகனை நினைத்துத் தவம் புரிந்திருந்தேன். ருதுஸ்நானம் செய்த என் மனைவி தன்னுடலை நன்கு அலங்கரித்துக் கொண்டு என்னை எதிர்பார்த்துக்கொண்டு பலநாள் காத்திருந்தாள். யான் கண் திறக்க வில்லை. ருது காலஞ் சென்றமையால் அவள் கோபங்கொண்டு, கண்ணால் நான் யாரை நோக்கினாலும் அவர் தலை அறுந்து விழும் எனச் சபித்தாள். ஜகன்மாதாவான தங்களுக்கும் தங்கள் அருமைப் புதல்வனுக்கும் ஆபத்து வரலாகாதென யான் நிமிர்ந்து பாராது தங்களை வணங்கினேன் என்று சனைச்சரனுரைத்தான். தேவி குதூஹலத்தால், நீ எங்களை நிமிர்ந்து பார்! என்ன ஆகிறது பார்ப்போம்? என்றாள். விதியைத் தடுக்க எவரால் இயலும்? தேவிக்கு விதி வசமாக இவ்வெண்ணந் தோன்றிற்று. சனைச்சரனும் தெய்வச் செயலாக அம்பிகையைப்

பாராமல் விநாயகர் முகத்தை மட்டும் கடைக் கண்ணால் நோக்கினன். உடனே விநாயகர் தலை அறுந்து கோலோகஞ் சென்று பகவானுடன் ஐக்யமானது. தலையில்லாத தநயனைக் கண்டு தேவி மூர்ச்சையுற்றாள். மாதேவனும் மற்ற தேவரும் இதற்கென் செய்வதென வகை அறியாமல் திகைத்து நின்றனர். புருஷோத்தமன் பக்ஷிராஜன் மீதேறி புஷ்பபத்ரா நதீ தீரஞ் சென்றார். ஆங்கு மனைவி மக்களுடன் அயர்ந்து உறங்கும் ஓர் யானையின் சிரஸைச் சக்ரத்தினாலறுத்துக் கருடன் மீதுவைத்தார். பெண் யானைகள் விழித்தெழுந்து தலையில்லாக் கணவனைக் கண்டு கதறின. புண்டரீகாக்ஷனைப் பார்த்து வணங்கிப் போற்றித் தம் பதியை அளிக்கும்படி வேண்டின. பகவான் அந்த கஜத்தை எழுப்பிவிட்டு அம்பிகையின் மடியிலுள்ள விநாயகருக்கு கஜமுகத்தை வைத்து அவரை எழுப்பினர். மாறுதலையாயினும் மைந்தன் பிழைத்ததைக் கண்டு அன்னை ஆறுதல் அடைந்தாள்.

தன் புதல்வனிறக்கக் காரணமாக இருந்த ஸூர்ய புத்ரனிடம் தேவிக்கு மட்டில்லாக் கோப முண்டாயிற்று. அங்க ஹீநனுவான் என அவனைச் சபித்தாள். இதைக்கண்டு ரவியும் அவர் தந்தை கச்யபரும் கடுங்கோபங் கொண்டனர். பார்க்க மாட்டேன் என்ற என் புதல்வனைப் பார்வதியே தங்களைப் பார்க்கும்படிப் பகன்றாள். குற்றமற்ற என் மைந்தனைத் தேவி சபித்ததால் அவள் புத்ரனும் அங்கபங்கமடைவன் என்று சூர்யன் உரைத்தான். பிரும்மா இவர்களைச் சமாதானம் செய்து அன்னையைப் பணிந்து துதித்தார். பார்வதி சனைச்சரனை ஓர் க்ரஹராஜனுகவும் சிரஜீயாகவும் செய்து தன் சாபத்தால் கால் கொஞ்சம் நொண்டியாக இருக்கும்படிக் கூறினாள். ஸூர்ய சாபத்தால் விநாயகரும் தொந்தி பெருத்திருந்தார். பின்னர் ஸகல தேவர்களும் தத்தமக்கேற்ற காணிக்கைகளை அளித்துக் கஜமுகனைப் பூஜித்தனர். சனைச்சரனது பிரார்த்தனைக்கிணங்கி

நாராயணன் விக்னேசரது மூலமந்த்ரத்தையும் கவசத்தையும் பூஜாவிதியையு முபதேசித்தார்.

கார்த்திகேயசரிதம். கஜமுகனை அருகிலமர்த்திப் போனர் தம் பெற்ற பார்வதீ மகாவிஷ்ணுவை நோக்கி, என் கருவில் தங்காமல் அவனியில் சிந்திய ஹரனின் வீர்யம் எங்கு சென்றது என வினவினள். மாதவன் விண்ணவரை நோக்கி வீர்யம் சென்ற விடத்தைக் கண்டீர்களா என்ருர். தர்மதேவர் அது தாணியில் சிந்தியதைக் கண்டதாகவும், பூமி தானதை அக்நியினிடமளித்ததாகவும், அவர் சரவணத்தில் விட்டதாகவும், வாயு அங்கு ஓர் அத்புதமான குழந்தையைக் கண்டதாகவும் கூறினர். ஸூர்யன், அஸ்தமனமாகும்வரை சிசுவைச் சரவணத்தில் கண்டதாகக் கூறினர். சந்த்ரன் இரவில் கிருத்திகாகணங்கள் அதை எடுத்துச் சென்றதாகச் சொன்னன். பரமசிவனது ஆணையின்படி நந்திகேசன், வீரபத்ரன் முதலிய வீரப்படைகளுடன் கார்த்திகேயனை அழைத்து வர கிருத்திகைகளின் கிருகத்திற்குச் சென்ருர். சேனையைக் கண்டு கிருத்திகா கணங்கள் பயங் கொண்டன. ஸேனபதியான சரவணபவன் அவர்கள் அச்சத்தை அகற்றி நந்தியின் எதிரிற் சென்று நீ யார்? எங்குவந்தனை? என வினவினர். நந்தி வந்த வேலையை விரித்துரைக்க கார்த்திகேயன் தன் பிரிவைப் பொறுக்காது வருந்தும் கிருத்திகைகளைத் தேற்றிக் கைலாசஞ் சென்ருர். ஸகல தேவர்களும் அவரை நன்கு வரவேற்றுத் தேவஸேனைக்குத் தலைவனுக்கிப் போற்றினர்.

சிவனுக்குக் கச்யப சாபம். மாலீ ஸுமாலீ என இரு ராக்ஷஸ ஸஹோதரரிருந்தனர். இவர்கள் சிவபக்தியில் சிறந்தவர்கள். ஒரு ஸமயம் ஸூர்யனை இவர்கள் அவமதித்தனர். அதனுல் கோபங்கொண்ட பாநு இவர்களுக்குக் குஷ்டநோய் வரும்படிச் சாபமளித்தார். இவர்கள் பரமசிவனிடஞ்சென்று முறையிட்டனர். பக்தனுக்குத் தீங்கிழைத்த திநகரனிடம்

நிராக் கோபங்கொண்ட சிவன் சூலத்தினால் ஸூர்யன் மார்பில் குத்தினர். அதனாலவன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். இதைக் கண்ட அவன் தந்தை கச்யபர் சினங்கொண்டார். என் புதல்வன் மார்பு பிளந்ததுபோல் உன் புத்ரனது தலை பிளக்கும் எனச் சாபமளித்தார். அதனால்தான் விநாயகர் தலை அறுந்து யானை முகம் பெற்றார். விதியின் வலியை உணர்ந்து சிவனும் கச்யபரும் கோபத்தை விட்டுச் சாந்தமாயினர். தனது அமிருத கரத்தால் தொட்டு ஸூர்யனைச் சம்பு எழுப்பினர். கச்யபரும் ஸூர்ய கவசத்தைப் பாராயணம் செய்து மாலீ ஸுமாலீகள் ஆரோக்யத்தைப் பெறுவர் என்றார். அங்ஙனமே அவர்கள் நோயகன்றது. அநேக யானைகளிருக்க இந்த யானையின் தலை ஏன் விநாயகருக்கு வைக்கப்பட்டதென்று நாரதர் வினவ, நாராயணர் கூறினர்.

பகவத் ப்ரஸாத மஹிமை. ஒரு ஸமயம் தேவேந்த்ரன் வெள்ளானை மீதேறி புஷ்பபத்ரா நதீ தீரஞ்சென்றான். ஆங்கு தற்செயலாக வந்த ரம்பையுடன்கூடி ஜலக்ரீடை செய்தான். ஆங்கு வைகுண்ட நாதனைத் தர்சித்துவிட்டுத் தூர்வாஸமுநி வழிவசமாக வந்தார். தனக்குப் பகவானளித்த பாரிஜாத புஷ்பத்தை இந்திரனுக்களித்து இதை விநயத்துடன் தலைமீது வஹிப்போர் தேவரில் சிறந்து விளங்குவர். எல்லோராலும் முதலில் பூஜிக்கப்படுவர். இதை அவமதிப்பவரை விட்டு லக்ஷ்மீ தேவி அகலுவள் என்றுரைத்துச் சென்றார். இதைக் கேட்டும் இந்த்ரன் சிற்றின்பத்தி லீடுபட்டிருந்ததால் இதை மறந்தான். யானையின் தலைமீது மாலையை விட்டெறிந்து விட்டுக் காமஸுகத்தில் கருத்து கொண்டான். மாலை தலைமீது வந்தவுடன் ஐராவதம் நல்லறிவு பெற்று வனத்தில் புகுந்தது. அந்த பகவத் ப்ரஸாதத்தைத் தலையால்வஹித்ததால் அந்த தலை விநாயகர் தலையாக வைக்கப்பட்டது. எல்லோருக்கும் முந்தி விநாயகருக்குப் பூஜைபுரிய இம்மாலையே காரணமானது.

மாலையை மதியாத இந்த்ரன் தன் பதவியை இழந்து பின்னர் பகவானது உத்தரவின்படி பாற்கடலைக் கடைந்து லக்ஷ்மியைப் பெற்றான்.

லக்ஷ்மீ தேவி விரும்பாத இடம். ஸ்ரீ தேவி இதுவரை இந்த்ரனை விட்டுப் பிரிந்திருந்த காரணத்தைக் கூறித் தான் எந்த இடத்தில் வஸிக்க விரும்புவதில்லை என விஸ்தாரமாகக் கூறினாள். குரு தந்தை தாய் தெய்வம் ஆகிய இவர்களிடம் குற்றம் செய்து அவர் கோபத்திற்குப் பாத்ரமானவன், ஸத்யம், விஷ்ணு பக்தி, நன்றி, தேவ பூஜை, அதிதி பூஜை, தானம், பொறுமை முதலியவைகளில்லாதவன், ஸ்த்ரீபுருஷர் சண்டையிடும் வீடு, ஊத்தைப்பல்லன், அழுக்கு வஸ்த்ரம் தரிப்பவன், அநாதையான ஸஹோதரியைக் காப்பாற்றுதலை விட்டவன், ஜலமலங்களைக் கண்ணால் பார்ப்பவன், எண்ணைத் தலையுடன் ஜலமலங் கழிப்பவன், மந்திரத்தையும் வித்யையுங் கொண்டு ஜீவிப்பவன், தக்ஷிணை கொடுக்காமல் கர்மா செய்பவன், சமையல் வேலை செய்பவன், பிறருக்காகச் சம்பளம் பெற்று பூஜை செய்பவன், விவாஹம் முதலிய கர்ம கார்யங்களைக் கெடுப்பவன், உரத்த சத்தத்துடன் சிரிப்பவன், எண்ணையைக் காலில் தடவிக்கொண்டு படுப்பவன், ஆகிய இவர்களிடம் நான் வஸிப்பதில்லை. இவர்களை நரகம் போல் எண்ணி விலகிச் செல்கிறேன் என்று ஸாக்ஷாத் லக்ஷ்மியே கூறினாள்.

கார்த்தவீர்யன்

விநாயகருக்கு ஏகதந்தர் என ஏன் பெயர் வழங்குகிறதென நாரதர் வினவ, அதற்கு அவதாரிகையாக இக்கதையை நாராயணருரைத்தார். தத்தாத்ரேயரை வணங்கிப் பூஜித்துப் பல வரங்களைப் பெற்ற கார்த்தவீர்யன் மிக்க நீதியுடன் பூமி

யை ஆண்டு வந்தான். ஒரு ஸமயம் அவன் வேட்டையாடிக் களைத்து ஜமதக்னியின் ஆச்ரமஞ் சென்றான். முனிவர் அரசனை வரவேற்று காமதேனுவின் உதவியால் ஓர் ஒப்பற்ற விருந்தளித்தார். விருந்தினராக வந்த வேந்தன் இப் பசுவைத் தனக்களிக்கும்படித் தவஸியை வேண்டினான். தபோ பலத்தினால் தனக்குக் கிடைத்த தேனுவைத் தான் பிறர்க் களிக்க இயலாதென்றார். சினங்கொண்ட அரசன் பசுவைப் பலாத்காரமாக இழுத்து வரச் சொன்னான். இதைக்கண்டு முனிவர் வருந்த, தேனு நூறு கோடி வீரர்களைத் தன்னுடலிலிருந்து தோற்றி வைத்தது. ராஜ ஸேனைக்கும் தேனு ஸேனைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அரசனது ஆட்கள் அடிபட்டனர். மன்னனது தேரும் முறிந்தது. அவனும் அடிபட்டு மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான். உடனே கருணா மூர்த்தியான ஜமதக்நி அவனுக்குச் சைத்யோபசாரம் செய்து தேற்றி அன்னமளித்தார். நடந்ததை மறந்து நகரம் செல்லென்றார். நரபதியோ அபஜயத்துடன் செல்ல மனங்கொள்ளாது மறுபடியும் முனிவரைப் போருக்கழைத்தான். எவ்வளவு சாந்தமாக நல்லுபதேசஞ் செய்தும் யுத்தத்திலே ஆசைகொண்ட அரசனுடன் ஜமதக்நி போருக்குச் சித்தமானார். தேனு பற்பல அஸ்த்ரசஸ்த்ரங்களை முனிவருக்களித்தது. மன்னனும் முனிவரும் மிக்க பயங்கரமாக சண்டையிட்டனர். இதைக் கண்டு தேவருமஞ்சினர். ஸத்ய லோகத்திலிருந்து சதுர்முகன் இவர்கள் எதிரே தோன்றி போரை நிறுத்தும்படிக் கூறினார். அங்ஙனமே இருவரும் சண்டையை விட்டுத் தம்மிடஞ் சென்றனர்.

சில நாட் சென்றபின் மன்னன் மறுபடியும் தனது தோல்வியை நினைந்து வருந்தி முனிவரது ஆச்ரமத்திற்கு வந்தான். முன்போலவே எண்ணிறந்த திவ்யாஸ்த்ரங்களைக் கொண்டு தவஸியைத்தாக்கினான். தேனுவினருளால்தோன்றிய

அபூர்வமான அஸ்த்ரங்களால் மஹர்ஷியும் மன்னனைத் தாக்கினர். முடிவில் அரசன் தத்தாத்ரேயர் அளித்த ஒருவரையே கொல்லும் சக்தி எனும் அஸ்த்ரத்தைக் கொண்டு முநிவரைக் கொன்றான். இதைக் கண்ட தேனு இராத் துயரமடைந்து புஷ்கரத்தில் பிருகுவுடன் தவம் செய்யும் பரசுராமரிடம் இதை அறிவித்துக் கோலோகம் சென்றது. தந்தையின் மரணத்தைக்கேட்டுப் பரசுராமன் திடுக்கிட்டுக் கதறினன். மூர்ச்சை கொண்டான். தானே எழுந்து தாயினிடம் வந்தான். தந்தையைக்கொன்ற பாதகியைக் கொல்வேன்! அந்த கர்வங்கொண்ட க்ஷத்ரிய ஜாதியையே இருபத்தொரு தலைமுறை நாசம் செய்வேன் என ப்ரதிக்ஞை செய்தான். புருஷனை இழந்த துக்கத்துடன் கடும் ப்ரதிக்ஞை செய்த மைந்தனை நினைத்து வருந்தினள். ப்ருகு மஹர்ஷி விரைவாக வந்து ரேணுகையையும் பரசுராமனையும் தேற்றினர். ஜமதக்நிக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்யும்படிக் கூறினர். அவர் அநுமதியின் மேல் ரேணுகை பர்த்தாவுடன் உடன் கட்டை ஏறினள். வைகுண்டத்திலிருந்து விமாநம் வந்தது. ஜமதக்நியையும் ரேணுகையையும் அதில் ஏற்றி சென்றது.

பரசுராமர் கடுந்தவம் செய்து பிரும்ம லோகஞ் சென்றார். தான் செய்த ப்ரதிக்ஞையைக் கூறி அது நிறைவேற ஸஹாயம் செய்யும்படிப் பிரம்மனை வேண்டினர். பாரினில் சிவ பக்தரும் விஷ்ணு பக்தருமாகப் பல பார்த்திவரிருக்கின்றனர். அவர்களை அரிஹரனருளின்றி நீ வெல்வதெங்ஙனம்? கைலாஸஞ் சென்று ஸதாசிவனிடமிருந்து ஸ்ரீ கிருஷ்ண கவசத்தைப் பெற்றால் உனது விருப்பம் நிறைவேறும் என்று சதுர்முகனுரைத்தார். ஜாமதக்நியன் பல நாட் தவம் செய்து கைலையங்கிரிக்குச் சென்றான். பஞ்சாக்ஷர பாராயணர்களாயுள்ள பல பக்தர்களைத் தர்சித்து த்வாரபாலகரை வேண்டினன். அவர்கள் உத்தரவுப்படி உள்ளேசென்று உமா ஸமேத

ருய ரத்ந ஸிம்ஹாஸனத்தில் தேஜோ ரூபியாய் விளங்கும் சிவ பெருமானைத் தர்சித்தான். ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அரிய துதிகளால் அவரைப் போற்றி நின்றான். பரமசிவனு மவனை ஆசீர்வதித்து அவனுள்ளத்தை உணர்ந்து த்ரை லோக்ய விஜயமெனும் ஸ்ரீராதா கிருஷ்ண கவசத்தையும், ஸ்தோத்ரத்தையும் உபதேசித்தார். அதைக்கொண்டு புஷ்கரத் தில் பரசுராமன் பகவானை ஆராதித்தார். பக்தபராதீநரான ஸ்ரீ கிருஷ்ணன் அவரெதிரிற்றோன்றி இருபத்தொரு தலை முறை கர்வங்கொண்ட க்ஷத்ரியர்களை நீ ஜயிப்பாய்! என ஆசீர் வதித்து மறைந்தார். ஸர்வேசனது கருணையால் ஜாமதக்நிய னுக்கு அழகிய ரதமும் அத்புதமான ஆயுதங்களும் உண்டா யின. சுபஸூசகங்களான பல நற்சகுனங்கள் தோன்ற பரசு ராமர் போர்க்கோலத்துடன் பாரினைச் சுற்றினார். நர்மதா தீரத்தில் ஆலமரத்தடியிலே நின்று தன்னுடன் போருக்கு வரும்படிக் கார்த்தவீர்யனுக்கு ஓர் தூது அனுப்பினார். அரச னும் யுத்தத்திற்கு ஸன்னாஹம் செய்து மனைவியான மனோ ரமையிடம் விடைபெறச் சென்றான். அவள் நாதா! ஒரு முறை ப்ராஹ்மண வதம் செய்து ப்ராயச்சித்தம் செய்து கொண்டீர்கள்! மறு முறையும் அந்தணருடன் போர் புரி வது அழகாமோ? அன்றியும் சென்ற இரவு தான் பற்பல துஸ்வப்நங்களைக் கண்டதாகக் கூறினீர்கள்! அங்ஙனமிருக்க ஹரிஹரரை ஆராதித்து அபரிமிதமான அஸ்த்ரசஸ்த்ரங்களைப் பெற்ற அந்தணச் சிறுவனுடன் தாங்கள் ஸமர் செய்வது நீதி அல்ல என்று கூறினாள். அரசன் மனைவியைப் பார்த்து மர ணத்திற்கு மனிதன் அஞ்சலாமோ? அதிலும் க்ஷத்ரியன் எதிரி அழைத்த பிறகு யுத்தத்திற்குப் பயப்படலாமா? ஜயித்தால் பூமி ஆள்வேன். இறந்தால் வீர ஸ்வர்க்கம் செல் வேன். அஞ்சாதே! என்று கூறி போருக்குக் கிளம்பினான். மனோரமை குழந்தைகளை அருகிலழைத்து க்ஷணம் நிற்கும்

படிக்கூறி அரசன் எதிரிலே பகவானை நினைத்துக் கொண்டு பிராணனை விட்டாள். மன்னன் அரிய மஹிஷியை நினைத்துச் சோகத்தினால் வாய்விட்டுக் கதறினான். யான் இறப்பேனோ என அஞ்சி என் உத்தமபத்நி உயிரை விட்டாள். அவள் இறந்த பின்னும் பிராணனை விடாத பாவி யான் அவளுக்கேற்ற பதியோ? என்று கதறி அவள் சோகத்தால் இங்கு உயிரை விடுவதா யுத்தத்திற்குப் போவதா எனச் சிந்தை கலங்கி நின்றான்.

ஓர் அசரீரியான வாக்கு, அரசே! தத்தாத்ரேயரது உத்தம சிஷ்யனான நீ இங்ஙனம் கலங்குவது உசிதமா? உன் பத்நீ உத்தம லோகஞ் சென்றாள். நீயும் போரில் முன் நின்று வைகுண்டஞ் செல்வாயாக! என்றது. அரசன் மனைவிக்கு ஈமக்கடன்களை முடித்து விட்டுப் பரசுராமருடன் போருக்குக் கிளம்பினான். தனக்குப்பல அபசகுநங்கள் தோன்றியும் அவற்றைப் பொருட்படுத்தாது அரசன் நர்மதா தீரஞ் சென்று பரசுராமரைப் பணிந்தான். அவர் வீரஸ்வர்க்கம் செல்வாய் என ஆசீர்வதித்து யுத்தம் செய்தார். கார்த்தவீர்யனுக்குச் சஹாயமாக மத்ஸ்யராஜன் மஹர்ஷியுடன் யுத்தம் செய்தான். அவர் சிவன் தந்த சூலத்தால் மத்ஸ்யனைக் கொல்ல ஆரம்பித்தார். அவனணிந்துள்ள சிவகவசமிருக்கும் வரை அவனை எந்த அஸ்த்ரமும் கொல்லாதென ஓர் அசரீரி கூறிற்று. அதைக் கேட்ட பரசுராமர் ஓர் ஸன்யாஸி வேடம் பூண்டு மத்ஸ்யனை அணுகிக் கவசத்தை யாசித்து வாங்கிச் சென்றார். அப்பொழுதும் அரசனைக்கொல்ல முடியவில்லை. முனிவர் கோபங்கொண்டு பாசுபதாஸ்த்ரத்தை எடுத்தார். அதன் உக்ர தேஜஸால் பதினான்கு லோகமும் பற்றி எரிவது போலிருந்தது. உடனே விஷ்ணு ஓர் கிழ ப்ராமணவடிவந்தாங்கி அவரெதிரே தோன்றினார். அந்த அஸ்த்ரத்தை நிறுத்தும்படிக் கூறினார். அன்றியும் மஹாலக்ஷ்மியின் கவசம் மன்னனிட

மிருப்பதால் அதைத்தான் வாங்கிச் செல்வதாகவும் பின்னா வனைச் சுலபமாக வெல்லலா மென்றும் கூறினர்.

லக்ஷ்மீ கவசமகன்ற பிறகும் அவனை ஜயிப்பது அரிதா னது. எழு நாள் கடும்போர் செய்து முடிவில் பிரும்மாஸ்த் ரத்தால் அவனைப் பரசுராமன் கொன்று வெற்றி பெற்றார். கார்த்தவீர்யன் இரண்டு லக்ஷம் அக்ஷௌஹிணீ ஸேனையுடன் யுத்தத்திற்கு வந்தான். பரசுராமன் பரமசிவனளித்த திவ் யாஸ்த்ரங்களைக் கொண்டு அவ்வளவு ஸேனையையும் அழித் தார். பின்னர் மன்னனுக்கும் முனிவருக்கும் மிகமிக கடும் போர் நிகழ்ந்தது. தத்தாத்ரேயரளித்த சரத்தால் முனிவரைக் கார்த்தவீர்யன் தாக்கினன். பரசுராமன் பிரக்ஞையற்றுப் பிணம்போல் பூமியில் விழுந்தார். ஸகல தேவர்களும் பயந்து அலறி ஹாஹா! என்று கதறினர். உடனே பரமசிவனங்கு வந்து தன் பக்தனை எழுப்பினர். தத்தரும் தன் சிடனைக் காக்க ரணக்களத்திற்கு வந்தார். பரமசிவன் பிராமணவேடம் பூண்டு தத்தர் தந்த கவசத்தைக் கார்த்தவீர்யனிடமிருந்து வாங்கிச் சென்றார். இடையர் வேஷத்துடன் பரசுராமனைச் சூழ்ந்து பகவானும் அவரது ஸேனைகளும் நின்றன. ஸுதர் சனம் அக்நி ஜ்வாலைபோல் சுழன்றுகொண்டே இருந்தது. கார்த்தவீர்யன் தான் தோல்வி யடைவது நிச்சயமென் றெண்ணி ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்தான். பாசுபதத்தால் பரசுராமன் பார்த்திவனைக் கொன்றார். அவன் மனைவியுடன் கோலோகஞ் சென்றான். இங்ஙனமே இருபத்தொரு தலை முறை க்ஷத்ரியர்களை நாசம் செய்தார். பிரும்மா அவரிடம் வந்து உனது சபதம் நிறைவேறிற்று. இனி வீணாக க்ஷத்ரி யர்களைக் கொல்லாதே. உனக்குப் பரமசிவனே குரு ஆவர். ஸாமான்ய குருவையே தைவமாகக் கருத வேண்டும், நீ உன் குரு சொற்படி சாந்தி முதலிய குணங்களைப் பெற்று ஞானத் தைத் தேடு என உபதேசித்துச் சென்றார்.

பாசுராம கணேச யுத்தம்

ஜாமதக்ன்யர் அங்ஙனமே போர்க் குணத்தை விட்டுக் கைலாஸத்திற்குச் சென்றார். ஆங்கு அரிய பல காக்ஷிகளைக் கண்டு பக்தி பாவசமானார். கைலாஸ நாதனது இருப்பிடஞ் சென்றார். வாசற்படியிலிருந்த விநாயகர், ராமரைச் சற்றுநில். உத்தரவு பெற்று வருகிறேன் என்றார். என் குரு அருளால் எவராலும் ஜயிக்க முடியாத கார்த்தவீர்யனை வென்றேன். இருபத்தொரு தலைமுறை துஷ்ட க்ஷத்ரியர்களைக் கொன்றேன். இவ்வத்புத செயலை என் குருநாதனுக்கறிவித்து அவரை வணங்கி வருகிறேன். வழியை மறிக்காதே என்று முனிவருரைத்தார். ராம! நீ சொல்வதுண்மை! ஆயினும் ஏகாந்தத்திலுள்ள தம்பதிகளைப் பார்ப்பதும் ரஸபங்கம் செய்வதும் பாபமன்றோ? இப்பாபத்தைச் செய்வோர் ஏழுதலை முறை மனைவியை விட்டுப் பிரிவர் என்பதை அறியாயோ? பரஸ்த்ரீகளது ஸ்தநம் முதலியவைகளைக் காமக் கண்ணால் காண்போர் குருடராகப் பிறப்பரல்லவா? ஆதலின் உள்ளே செல்லாதே! சற்று நில்! என்று கணபதி கூறினார். உலக மனைத்திற்கும் தந்தை தாயான ஸ்ரீ பார்வதீ பரமேச்வரர்கள் எங்கு இருக்கின்றனர்? எங்கு இல்லை? பாலருந்தும் குழந்தை போன்ற என்னைப் பார்த்தோ என்னன்னை வெட்கம் கொள்ளுவள்? கணபதி! நீ கூறுவது மிக விந்தை! என்று கூறிக் கொண்டே ராமர் உள்ளே செல்ல ஆரம்பித்தார். கோலோக நாதனைப் பல்லாண்டு உபாஸித்து அவரருளால் அழியா அறிவு பெற்றவனைப்போல் நீ பேசுகிறாய்; உடலெடுத்த ஒவ்வொருவருக்கும் மானம் வெட்கம் முதலியன உண்டல்லவா? என்று கூறி விநாயகர் ராமரைத் தடுத்தார். கோபங்கொண்ட முனிவர், பரசுவால் கணநாதனைத் தாக்கினார். இதுதான் குருபக்தியோ? குருவைப்போல அவன் மகனையுங்

கருத வேண்டுவது முறையன்றோ? என்று சுப்ரமண்யன் கூறுவதை அவர் காதில் ஏற்கவில்லை. பரசுவின் வேகத்தால் கீழே விழுந்த விநாயகர் மறுபடியும் எழுந்து விநயத்துடன் முனிவரை உள்ளே செல்லாது கொஞ்ச நேரம் காத்திருக்கும் படிக் கூறினர். இதை எள்ளளவும் மதியாது மறுமுறையும் முனி பரசுவை ஏவினர். யோக சக்தியால் விநாயகர் மிக உன்னதமான உருவை எடுத்துத் துதிக்கையால் ராமனைத் தூக்கிப் பதினான்குஉலகையும் சுற்றிக் கோலோகத்தில் கொண்டு தள்ளினர். அங்கு அவர் ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சித்து தனது பாபங்களை நீக்கிக் கொண்டார். அங்கிருந்தும் மற்றோர்முறை பதினான்கு உலகங்களையும் சுற்றி ராமனைக் கணபதி பாரினில் தள்ளினர். சிறிது நேரம் சென்றபின் முனிவர் மூர்ச்சை தெளிந்தெழுந்தார். தனது நிலையை நினைந்து வருந்தினர். ஆயினும் கோலோக தர்சனத்தால் மகிழ்ந்தார். தன் குருவான கௌரீநாதனைப் பணிந்து பரசுவை எடுத்து விநாயகரின் மேல் விட்டார். அவரும் தந்தைக்குக் கௌரவமளிப்பது தநயன் கடமை எனக்கருதி இடது தந்தத்தை அதற்குப் பலியாகக் கொடுத்தார். பரசு அதை அடியோடுகளைந்து விட்டு முனிவரிடம் சென்றது.

அச்சமயம் ஸகல உலகும் நடுங்கிற்று. எங்கும் ஹா! ஹா என்ற சப்தம் எழும்பியது. இதைக் கேட்ட உமை நாதனுடன் எழுந்து வெளியில் வந்தாள். ரத்தப் பெருக்குடன் ஓர் தந்த மில்லாதிருக்கும் கணபதியைக் கண்டு பயந்து குஹனை நோக்கி என்ன விபரீதம்? யார் செய்த தீங்கென வினவினள். அவர் நடந்ததைக் கூறினர். குழந்தையை மடிமீது வைத்துத் தேவி பதியைப் பார்த்துக் கூறினள். நாத! உலகெலாம் உமை, உமாபதியின் கிங்கரீ என்று கூறுகிறது. அடியாளைத் தாங்கள் தாஸையாக ஏற்றதுண்மையாயின் விநாயகனுக்கு இக்கதி வருமோ? தாங்கள் இங்ஙனம் என்னை உதா

ஸிகம் செய்வது தருமமோ? தேவ! பல்லாயிரமாண்டு கடுந் தவம் புரிந்து உங்களைப் பதியாகப் பெற்றேன். தங்கள் மந திற்கு என் மூலமாக ஆயாஸம் வாலாகாதென இதுவரை பொறுத்திருந்தேன். பெண்களுக்குக் கதிபதியாவன். சோகத் தால் பிதற்றுமென் சொல்லைக் குற்றமாகக் கொள்ளாதீர் கள்! என்று பார்வதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே பரசுராமன் அச்சமின்றிச் சம்புவின் சரணத்தில் விழுந்து பணிந்தான். அவனைக் கண்டவுடன் அன்னைக்கு அடங்காச் சின முண்டாயிற்று. பரசுராம! நற்குலத்தில் பிறந்தாய்! சிவன் தந்த பரசுவைப் பார்த்திவரிடம் பரீக்ஷித்தாய்! பின் னர் அதைக் கொண்டே குரு புத்ரனை அடித்தாய்! இஃது தான் நீ அளிக்கும் குரு தக்ஷிணையோ? என்று கூறி துர்க் கை பரசுராமனைக் கொல்ல ஆரம்பித்தாள். அச்சமயம் யாது செய்வதென்றறியாமல் சிவனும் திகைத்து நின்றான். திடீரென ஓர் அற்புத வடிவம் வாய்ந்த அந்தணச் சிறுவன் அங்கு தோன்றினான். அவனது தேஜஸைக் கண்டு அனை வரும் ஆஸநத்தை விட்டெழுந்தனர். மஹேசன் அவரை அணுகி, தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்? தங்களைப் போன்ற அதிதியை அர்ச்சிப்பவர் நன்மை பெறுவர். பெண் களைக் கொன்றவன், நன்றி கொன்றவன், பிருஹ்மஹத்தி செய் தவன், ஸந்தியாவந்தனத்தை விட்டவன், ஆத்மஹத்தி செய் தவன், கன்யகையை விற்றவன், ஏகாதசியன்று புஜிப்பவன், ஆகிய இவர்களை விட அதிதி பூஜை செய்யாதவன் மிக்க பாபியாவன் என்றார். தான் ச்வேதத்வீபத்திலிருந்து வருவ தாகவும் இங்கு நடக்கும் கோலாஹலத்தைக் கண்டு ஸ்ரீ கிரு ஷ்ண பக்தனான ராமனைக் காக்க வந்ததாகவும் அவர் கூறினார். அன்றியும் கிருஷ்ண பக்தனானாலும் குருத்ரோஹியை மாத் ரம் தன்னால் காக்கமுடியாதென்றும் உரைத்தார். பார்வதியை நோக்கி உமையே! உன் மகனைப் போன்றவன் பரசுராமன்

அவனால் விநாயகனது தந்தத்தை அகற்ற இயலாது. கணேசனுக்கு ஏகதந்தன் என வேதத்தில் அநாதியாகப் பெயர் வழங்குகிறது. ஆதலால் இங்ஙனம் நேர்ந்தது. என்று கூறினர். பரசுராமனைப் பார்த்து, நீ செய்தது பெருந்தவறு. அம்பிகை கோபம் கொண்டால் உலகைப் படைக்கவும் பாலிக்கவும் எவராலும் இயலாது! என்றுரைத்து மறைந்தார். அவர் மாயாவியான மாதவன் என்றுணர்ந்து பரசுராமன் அன்னையினடி பணிந்து போற்றினன். தனது தவறை மன்னித்தருளும்படி வேண்டினன். தேவியின் கோபமகன்றது. பரசுராமன் விநாயகரை வணங்கிச் சிவனைப் பூஜித்து பூமிக்குச் சென்றான். விக்னேச்வர பூஜைக்குத் துளஸீ பத்ரம் கூடாதென்பதைக் கேட்ட நாரதர் அதற்கென்ன காரணம் என்று வினவ நாராயணர் கூறுகிறார். ஸ்ரீ பிரும்ம கல்பத்தில் துளஸீ தேவி ஸ்ரீ கிருஷ்ணனைப் பதியாகக் கோரி ஒவ்வொரு தீர்த்தமாகச் சென்றாள். கங்கா தீரத்தில் கண்மூடி தவம் புரியும் கணேசரைக் கண்டாள். அவர் கிருஷ்ணனுடைய அம்சமாதலால் அவரது அழகைக் கண்டு துளஸீ மோஹித்தாள். தன்னை மணக்கும்படி வேண்டினாள். அவர் கண்ணைத் திறவா திருந்ததைக் கண்டு ஜலத்தை எடுத்து அவர் ப்ரதான அங்கத்தின்மேல் விட்டு விரலாலடித்தாள். அவரது தவங் கலைந்தது. விழித்தெழுந்த விநாயகர் எதிரிலுள்ள துளஸியை நோக்கி நீ யார்? என்றார். அவள் தான் தர்மாத்மனது பெண்ணான துளஸீ என்றும் தன்னை மணக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தாள். அவர் விவாஹமென்பது ஸம்ஸாரபந்தத்தை அளிக்கவல்லது. அதைவிட்டு மோக்ஷ தர்மத்திலீடுபட்டேன் ஆதலின் விவாஹம் வேண்டேன் என்றார். இதைக் கேட்டுக் கோபங்கொண்ட துளஸீ உமக்குத் துஷ்டையான ஸ்த்ரீ மனைவியாக வருவாள் என்று சபித்தாள். கணேசர் அவளைப் பார்த்து நீ நிஷ்காரணமாக என்னைச் சபித்ததால் நீ

ராக்ஷஸனுக்கு மனைவியாவாய். ஓரம்சத்தால் செடியாகவும் ஆவாய் என்றார். துளஸீ அவரைப் பணிந்து துதிக்க அவர் அந்த ராக்ஷஸனும் ஓர் கோபனுயிருப்பான். பின்னர் நீ பரமனையே பதியாக அடைவாய். செடியாயினும் பகவானுக்கு மிகப் பிரியமான பத்ரமாவாய். நான் உன்னை விரும்பாததால் துளஸியைக்கொண்டு என்னை எவரும் பூஜிக்கலாகாது என்றார். ஆதலின் மற்ற மலரால் ஸர்வ வல்லமை வாய்ந்த கணேசனைப் பூஜிப்போர் எடுத்த கார்யம் தடையின்றி முடியும். புத்ரன் முதலிய பாக்யத்தையும் மோக்ஷத்தையு மடைவர். ஏகதந்தனது சரிதத்தைப் பக்தியுடன் கேட்போரும் படிப்போரும் பயனைப் பெறுவர். இங்ஙனம் நாராயண ரிஷி கூறியதைக்கேட்டு நாரதர் ஆநந்த பாவசமானார்.

கணேச கண்டம் முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம கண்டம்.

ஸ்ரீ கிருஷ்ணுவதார அவதாரிகை.

பக்தரிற் சிறந்த நாரதர் நாராயண முனியை வணங்கி அமிருதத்திலும் இனிய ஹரி கதையைக் கூறும்படி வேண்டினார். அவர் பகவானையும் வேதவ்யாஸரையும் மநதால் பணிந்து பவித்ரமான பகவத் சரித்ரத்தைப் பகன்றார்.

ஒரு ஸமயம் கோலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் விரஜை எனும் கோபியுடன் உல்லாஸமாக விளையாடிக்கொண்டிருந்தார். அச்சமயம் அங்கு திடீரென ஸ்ரீராதா தேவி வந்தாள். அவளைக் கண்டவுடன் கிருஷ்ணன் மாயையால் மறைந்தார். விரஜையும் நதியாக மாறினாள். பகவான் விரஜை யிருப்பிடம் சென்று ஏகாந்தமாக ரமித்தார். விரஜை ஏழு புதல்வர்களைப்

பெற்றாள். ஒரு ஸமயம் விரஜையும் கிருஷ்ணனுங் கூடி பிருந்தாரண்யத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் இவர்களது புத்ரர்கள் விளையாட்டாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு விரஜையிடம் வந்தனர். அவர்களது சண்டையை விலக்கி விரஜை ஸமாதானம் செய்வதற்குள் கிருஷ்ணன் ராதை யிருப்பிடஞ் சென்றார். கிருஷ்ணனைக் காணாது வருந்தி விரஜை மூத்த புதல்வனை உப்பு ஸமுத்ர மாகும்படியும் மற்றவர்களை மாநிலத்தில் இக்ஷு, ஸுரை நெய் தயிர் பால் சுத்த ஜல ஸமுத்ரமாகும்படியும் சபித்தாள். ராதை சினங்கொண்டு தன்னைவிட்டுப் பிரிந்ததால் பகவானைச் சில கடின சொற்களால் தாக்கினாள். இதை அருகே இருந்து வினவிய ஸுதாமன் பரமனிடங்கொண்ட பக்தியால் அன்னை ராதையை அவனியில் மானிடப் பெண்ணாகப் பிறக்கும்படிச் சபித்தாள். அன்னையுமவனை அரக்கனாகும்படிச் சபித்தாள். இதனிடையில் பூதேவி தனது பாரத்தை அகற்றித் தன்னை ரக்ஷிக்கும்படிப் பிரும்மாவினிடஞ் சென்று வேண்டினாள். சதுர்முகன் ஸகல தேவர்களையும் பூமியுடன் அழைத்துக் கொண்டு கோலோகம் சென்றார். பரமசிவன் முதல் எல்லா தேவர்களும் எம்பிரானைத் துதித்தனர்.

கோலோகமென்பது பகவானது மாயையால் படைக்கப்பட்ட அழகிய பட்டணம் நிறைந்த இடம். அங்கு பிறப் பிறப்பும் சோக மோஹமுங் கிடையாது. விலையில்லாத மாணிக்ய மரகதங்களால் அங்கு வீடுகளமைக்கப்பட்டிருக்கின்றன. கேட்டதை அளிக்கும் கல்ப விருக்ஷம் நிறைந்தவிடம். கோடி யோசனை தூரம் விசாலமான இடம். ரத்ந மண்டபம் அமைந்த இடம். அழகிய கோபிகைகளும் கோபர்களும் சூழ்ந்த இடம். எக்காலத்தும் எல்லா புஷ்பமும் பூக்குமிடம். பல்லாயிரமாண்டு தவம் செய்யும் பக்தர்கள் அடையத் தக்க இடம். காமக்ரோதம் உள்ளோர் கண்ணாலும் காணமுடி

யாத இடம். ஸ்வதர்மாசாரத்தைக் கைவிடாதவர் செல்லு மிடம். கோடிக்கணக்கான கோக்கள் மேயு மிடம். பல்லா யிரம் பார்ஷதர்கள் சூழ்ந்த இடம். அதனிடையே ஓர் அழகிய ஆலமர முளது. அதன் கீழே நவரத்நகசிதமான ராஸமண்டப முளது. ஆங்கு தனித்தனியாக ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் ஸ்ரீ ராதைக்கும் ஆச்ரமங்கள் உண்டு. ஆங்கு பல்கோடி பிறவியில் செய்த புண்யத்தால் சிலர் பகவானுக்குத் தொண்டு செய்யும் பாக்யத்தைப் பெற்றிருக்கின்றனர். கங்கை முதலிய புண்ய நதிகளெல்லாம் தேவதா சரீரம்பெற்றுப் பகவானைத் தொழு கிறார்கள்.

அங்கு அமரரது துதியைக் கேட்டு மகிழ்ந்து முதல் வாசற்படியிலுள்ள காவலாளி அவர்களை உள்ளே அனுப் பினன். மற்றோர் த்வாரபாலகனைக் கண்டு வானவர் வணங் கிப் போற்றினர். இங்ஙனம் பதினறு வாயிற்படிகளைக் கடந் தனர். ஆங்காங்குள்ள அற்புதப் பொருள்களைக் கண்டு வியந் தனர். ஆங்கு பாடும் பக்தி நிறைந்த பாட்டுகளைக் கேட்டுப் பாவசமானார்கள். ரத்ந ஸிம்ஹாஸநத்திலே ராதா தேவியுடன் தேஜோராசியாக விளங்கும் ஸ்ரீகிருஷ்ணனைத் தர்சித்தார்கள். இயற்கையாகவே மிக்க அழகு வாய்ந்த அவரது உடல் பாதாதிகேசம் வரை அற்புத ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அவரது புன்னகையும் அருள்சுரக்கும் கடைக் கண்ணும் தேவர்களை ஆநந்தக் கடலில் அமிழ்த்தியது. மெய் மறந்தார்கள். உடல் புளகாங்கிதமாயிற்று. ஆநந்தக்கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. நா தழுதழுத்தது. கத்கதஸ்வரத்து டன் எல்லோரும் பரமனைப் பணிந்து துதித்தனர். சதுர்முகன் தேவர்களுக்கு ப்ரதிநிதியாக நின்று, வேதாந்தத்தின் பொரு ளாய் முக்கரணத்திற்கும் எட்டாதவனாய் ஆநந்தவடிவமாயுள்ள உம்மை யாரே துதிக்கவல்லவர்? தமது பாதாரவிந்தத்தைத் தேடித் தேடி உபநிஷதங்கள் நம்மாலாகாதெனத் திரும்பின.

உமது பெருமை அளவிலடங்காதது. ஆயிரம் நாப் படைத் தோனும் அதை எடுத்துரைக்க முடியாதெனில் அடியேனல் ஆகுமோ? பதினன்கு உலகிற்கும் படியளந்து பரிபாலநம் செய்யும் தாங்கள் பாரினது பாரத்தைக் குறைத்து அதைப் பாதுகாக்க வேண்டுமென வேண்டினர். அங்ஙனமே சங்கரரும் தர்மரும், பகவானையும் ராதையையும் போற்றினர்கள். மனதைக் கவரும் இனிய குரலால் பகவான் அமரருக்கு நல்வரவு கூறிக் குசலங் கேட்டார். அன்றியும், பக்தர்களான உங்களை ரக்ஷிப்பதே எனது கடமை. உங்களைக் கண்டே யான் களித்திருக்கிறேன். நீங்கள் அன்புடன் அளிக்கும் அற்பப் பொருளையும் பெரிதாக எண்ணி ஆநந்தமாக அதை உட்கொள்கிறேன். உங்களை ஒருவன் அர்ச்சித்தால் யான் ஸந்தோஷமடைகிறேன். உங்களை ஒருவன் வெறுத்தால் அவன் எனது விரோதியாவன். அஞ்சாது இருப்பிடம் செல்லுங்கள்! ராதை கோகுலத்தில் கோப ஸ்த்ரீயாகப் பிறக்கப் போகிறுள். இங்குள்ள கோபர்களும் கோபிகைகளும் அவனியில் அவதரிக்கப் போகின்றனர். யானுமவதரித்துப் பூமியின் குறையை அகற்றுகிறேன் என்ருர்.

இதனிடையே ஓர் அத்புதமான தேர் அங்கு வந்தது. அதிலிருந்து வைகுண்ட வாஸியான ஸ்ரீமந் நாராயண மூர்த்தி இறங்கி வந்து ஸ்ரீ கிருஷ்ணனைப் பணிந்தார். அடுத்த க்ஷணத்தில் கிருஷ்ண விக்ரஹத்தில் அவர் லயமாகி விட்டார். விண்ணவரனைவரும் வியந்து நின்றனர். உடனே நாலு கைகளுடன் சங்க சக்ர கதாபாணியாக விஷ்ணு தோன்றி ஸ்ரீ கிருஷ்ணனிடம் லயமானுர். அங்ஙனமே நரநாராயணர்களும் வந்து பகவானிடம் லயமானுர்கள். கிருஷ்ணனது அம்சத்தால் ஜனித்த ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் முதலியவர்களும் அங்ஙனமே அவரிடம் லயமானுர்கள். பின்னர் ஒவ்வொருவராக எழுந்து வந்து பகவானைப் பணிந்து நின்றனர். பக

வான் ராதையை விருஷபாநு கிருஹத்திலும், லக்ஷ்மியைப் பீஷ்மகன் மனையிலும், பார்வதியை நந்தன் இல்லத்திலும், ஸுப்ரமண்யனை ஜாம்பவதீ குக்ஷியிலும், மற்ற தேவர்களைக் கோப கிருஹத்திலும் அவதரிக்கும்படிக் கட்டளையிட்டார்.

பிரும்மா பரமனை வணங்கித் தாங்கள் எந்த தேசத்தில் எவரிடம் ஜனிக்க வேண்டும் என பிரார்த்திக்க பகவானுரைத்தார். காமன் ருக்மிணி புதல்வனாகவும், ரதி சம்பரனது கிருஹத்தில் மாயாவதியாகவும் பிறப்பர். பிரும்மா ப்ருத்யும்ந புத்ரனான அநிருத்தனாகவும், ஸரஸ்வதி பாணனது புத்ரியான உஷையாகவும் தோன்றட்டும். பூமி ஸத்யபாமையாகவும் துர்க்கையின் அம்சம் ஜாம்பவதியாகவும் பிறக்கட்டுமென்றார். பார்வதி பரமசிவன் மனைவியன்றோ? அவள் எங்ஙனம் கிருஷ்ணனுக்குப் பத்நியாவது உசிதமென்று பிரும்மா வினவ, கிருஷ்ணன் பதிலுரைத்தார். முன்னோர் ஸமயம் கணேசனைக் காண விஷ்ணு கைலாஸஞ் சென்றார். அவரது திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்டவுடன் மலைமகள் வெட்கங்கொண்டு தன் முகத்தை வஸ்த்ரத்தால் மூடிக்கொண்டாள். இதைக் கண்ட மஹேசன், தேவி! யானே மும்மூர்த்தியாக மாறுகிறேன். நீ தான் நாமகளாகவும் பூமகளாகவுமாவாய். நீ ஏன் வெட்கப்பட வேண்டும்? விஷ்ணுவும் உன் பதியே என்று கூறினர். ஆயினும் உலக நன்மையை நாடி இப் பார்வதீ சரீரத்துடன் அவரைத் தீண்டேன். வேறு உடலெடுத்து விஷ்ணுவை மணப்பேனென்றாள். ஆதலின் அவளம்சத்தால் ஜாம்பவதீ அவதரித்தல் அவச்யமென்றார். அன்றியும் ராமாவதாரத்தில் அமரர்கள் ஸஹாயம் செய்ததுபோல் தர்மன் வாயு இந்த்ரன் அச்விநீ தேவர் ஆகிய இவர்கள் ஓர் அம்சத்தால் பாண்டவர்களாக வரட்டும். ஸூர்யனம்சத்தால் கர்ணனாகவும் கலி துர்யோதநனாகவும் வருவர். சிவாம்சத்தால் அச்வத்தாமாவும் சந்த்ராம்சத்தால் அபிமன்யுவும் உண்டாகட்டும்.

கச்யபரும் அதிதியும் வஸுதேவ தேவகிகளாகவும், வஸுவும், அவர் பத்நியும் நந்த யசோதைகளாகவும் அவதரிக்கட்டும். என்று பகவான் கட்டளையிட்டார். அங்ஙனமே பரமனது ஆணையைச் சிரமேற்கொண்டு வணங்கித் தேவர்கள் தம்மிருப்பிடஞ் சென்றனர். ஸுதாமனது சாபத்தால் அவனியில் பிறப்பதுடன் நூறாண்டு பரமனை விட்டுப் பிரிய வேண்டுமென்ற துக்கத்தால் வாடி ராதை பகவானை வணங்கி வருந்தினாள். கிருஷ்ணன் அவளைத் தேற்றித் தானும் தரணியில் அவதரித்து ஏகாந்தமாக அவளுடன் இருந்து இன்பமளிப்பதாகக் கூறினார்.

ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்.

தேவமீடன் என்ற அரசனுக்கு மாரிஷை என்ற மஹிஷியிடம் கச்யபர் வஸுதேவராக ஜனித்தார். அவர் பிறந்தவுடன் ஆகாயத்தில் துந்துபி வாத்யம் முழங்கிற்று. ஆதலின் அவருக்கு ஆநக துந்துபி எனக் காரணப்பெயர் வழங்கிற்று. யாதவ வம்சத்திலே ஆஹுகன் என்ற அரசனுக்குத் தேவகன் எனும் புதல்வன் பிறந்தான். அவனுக்குத் தேவகி எனும் ஓர் கன்னிகை உண்டானாள். யதுகுலத்திற்குப் புரோஹிதரான கர்க்காசார்யர் வஸுதேவனுக்குத் தேவகியை மணம் புரிவதென நிச்சயித்தார். அங்ஙனமே விதிப்படி விவாஹம் நடந்தேறியது. வஸுதேவனுடன் தேவகி புகுந்த வீடு செல்லும்போது அவளது ஸஹோதரனான கம்ஸன் அன்புடன் அவர்களைத் தேரில் அமர்த்தித் தானே ஸாரத்யம் செய்தான். தேவகியின் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லப்போகிறதெனக் கம்ஸனை நோக்கி ஓர் ஆகாசவாணி கூறிற்று. உடனே அவன் தேவகியைக் கொல்ல முயன்றான். வஸுதேவன் பல நீதிகளைக் கூறியும் அவன் கேளாததால் முடிவில்

அவளுக்குப் பிறக்கும் புதல்வர்களை அவனிடம் அளிப்பதாகக் கூறித் தேவகியை மீட்டான். சொன்னபடியே பிறந்தவுடன் ஆறு குழந்தைகளையும் வஸுதேவன் கம்ஸனிட மளித்தான். கொஞ்சமுங் கருணையில்லாமல் சிசுக்களை அவன் கொன்றான். ஏழாங் கருவைப் பகவானது மாயை வஸுதேவனது மற்றோர் மனைவியான ரோஹிணியினிடம் கொண்டு வைத்தது. அங்கு பலராமன் ஜனித்தான்.

தேவகி எட்டாவது கர்ப்பத்தைத் தரித்தவுடன் இதே தனது சத்ரு என்றுணர்ந்த கம்ஸன் மிக ஜாக்ரதையாக அவளைக் கவனித்து வந்தான். பத்துமாதம் வரை வாயுவினால் கர்ப்பம் வளர்ந்து பூர்ணமானது. பகவானவதரிக்கப் போவதை உணர்ந்த தேவர்கள் தேவகியினருகே வந்து துதித்தனர். கிருஷ்ண பக்ஷம் அஷ்டமியில் ரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஜயந்தீ யோகத்தில் அர்த்த ராத்திரியில் பாதிசந்த்ரோதயமாகும்போது தேவகியின் வயிற்றிலிருந்து காற்று வெளிக் கிளம்பியது. அவளது ஹிருதய கமலத்திலிருந்து பகவான் இரண்டு கைகளுடன் வேணுவைக் கையிலேந்தி திவ்யமங்கள ரூபியாகத் தோன்றினர். தன்னை மறந்து தேவகியும் வஸுதேவரும் சிரஸின்மேல் கைகூப்பித் துதித்தனர். பகவான் அவர்களது முற்பிறப்பைக்கூறி அவர்கள் கோரியபடி தனக்கு ஸமமான புத்ரன் வேறெவருமில்லாததால் தானே அவதரித்ததாக உரைத்தார். உடனே சிறிய உருவமெடுத்துச் சிசுவானார். அச்சமயம் உலகில் பல சுப சகுனங்கள் தோன்றின. கம்ஸனுக்குப் பல அபசகுனங்களும் துஸ்வப்நமும் உண்டாயின. கம்ஸனது காவலாளிகள் கண்ணனது மாயையால் படுத்துறங்கினர். வஸுதேவன் ஸ்ரீ பகவானை நந்த கோகுலத்தில் யசோதையின் அருகே விட்டுவிட்டு ஆங்குள்ள உமாதேவியின் அம்ச அவதாரமான கன்னிகையைக்கொண்டு வந்தான். இப் பெண்குழந்தை உரக்க அழுதது. காவலாளிகள் விழித்

தெழுந்து அப்பெண் குழந்தையைக் கம்ஸனிடம் தந்தனர். பெண்ணாய்ப் பிறந்த இது அவனைக் கொல்லாதெனக் கூறி அதைக் கொல்லாமல் தங்களிடம் தரும்படி வஸுதேவனும் தேவகியும் அவனைக் கெஞ்சிக் கேட்டனர். பெண்ணென்று இதை யான் அலக்ஷ்யமாக விடக்கூடாது. இதைக் காரணமாகக் கொண்டு தெய்வம் எனைக்கொல்லக்கூடும். ஓர் பிராம்மணன் எழு கடலைக் குடிக்கவில்லையா? என்று கூறி கம்ஸன் அச்சிசுவைக்கொல்ல ஆரம்பித்தான். அச்சமயம், கம்ஸ! உனது சத்ரு வேறிடத்திலிருக்கிறான். பின்னர் வெளி வருவான். என்று ஓர் அசரீரி வாக்கு தோன்றிற்று. அதைக் கேட்ட அவன் அக்குழந்தையைக் கொல்லாமல் பெற்றோரிடமளித்தான். இறந்த குழந்தை எழுந்ததுபோல் எண்ணி அவர்கள் அன்புடன் அதை வீட்டிற்கெடுத்து வந்து ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்து கோதான பூதானங்களைச் செய்தனர். பின்னாதற்கு ஏகாநம்சா என்று பெயரிட்டு ருக்மிணீ கல்யாண காலத்தில் அவளைத் துர்வாஸருக்களித்தனர்.

ஜன்மாஷ்டமீ விருதம். கிருஷ்ணனவதரித்த தினம் அஷ்டமீ ஆதலின் அன்று உபவாஸமிருந்து பகவானை முக்யமாகவும், வஸுதேவன், தேவகி, ரோஹிணி, பலதேவர், அச்வத்தாமா, பலீ, ஹநுமான், விபீஷணன், கிருபர், பரசுராமர் வியாஸர், மார்க்கண்டேயர் முதலியவர்களைக் கலசத்தில் ஆவாஹநம் செய்தும் கோபிகைகள் யாதை, கணேசன், கார்த்திகேயன் முதலியவர்களையும் பூஜிக்க வேண்டும். இங்ஙனம் விருதமநுஷ்டிப்பவரது எழு ஜன்மத்தில் செய்த பாபமகலும். பிரும்மஹத்தி முதலிய ஸகல பாபங்களையும் அகற்றி வைகுண்டத்தை அளிக்கவல்லதிது. அந்த அஷ்டமியில் அன்னமுண்போர் ஸகல பாபங்களையும் செய்தவராவர். பின்னர் எழு பிறவியில் துஷ்டமிருகமாகப் பிறப்பர்.

நந்தனது முற்பிறவி.

மதுரையில் பிறந்து கோகுலஞ் சென்று தன் தாய் தந்தைகளிக்காமல் யசோதா நந்தனுக்குப்பகவான் தனது லீலாமிருதத்தைத் தந்த காரணம் யாதென நாரதர் வினவ நாராயணருரைத்தார். நந்தன் முற்பிறவியில் அஷ்ட வஸுக்களில் த்ரோணனென்ற பெயருடைய ஒருவன். அவன் மனைவிக்கு தரா என்று பெயர். ஒரு ஸமயம் த்ரோணர் மனைவியுடன் கந்தமாதன மலைச்சாரலில் கௌதமாச்ரமத்திற் கருகே தவம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சிக்க வேண்டுமென்பதே தவத்தின் நோக்கம். பதினுபிரமாண்டுகள் கடுந்தவம் புரிந்தும் கண்ணனைக் கண்ணால் காணாது வருந்தினர். அக்நியில் தங்கள் உடலைவிடக் கருதினர். அதுஸமயம் மறு பிறப்பிலே கோகுலத்திலே கண்ணன் உங்கள் குழந்தையாக வருவான் என்று ஓர் அசரீரியான வாக்கு தோன்றிற்று. அங்ஙனமே அந்த வஸு நந்தனாகப் பிறந்து எவருக்கும் கிட்டாத ஸ்ரீ கிருஷ்ண லீலையை அனுபவித்தார்.

ஒரு ஸமயம் ருதுஸ்நாநம் செய்த அதிதி எனும் தேவர் தாய், தன்னிருப்பிடம் வந்து சாந்தி செய்து தனயனை அளிக்கும்படிக் கச்யபருக்குத் தூதனை அனுப்பினுள். அச்சமயம் அவர் கத்ருவின் மனையில் அவளுடனிருந்ததால் இதைக் கவனிக்க வில்லை. இதை அறிந்த அதிதி சினங்கொண்டு, கணவனைச் சபிப்பது கற்புள்ளவருக்கு அழகல்ல எனக் கருதி கத்ருவை மானிடப் பெண்ணாகும்படிச் சபித்தாள். இதைத் தூதர் மூலமறிந்த கத்ரு அதிதியையும் மாநிலத்தில் பிறக்கும் படிச் சபித்தாள். கச்யபர் கத்ருவை ஸமாதானப்படுத்தி நானும் மனிதனாகப் பிறந்து உங்களிருவரையும் மணந்து ஸ்ரீ விஷ்ணுவைப் புதல்வனாகப் பெற்றுக் களிப்பேன் என்றார். அதிதியின் வீடு சென்று அவள் கோரியபடி இந்திரன் எனும் அரிய

புதல்வனை அருள் புரிந்தார். கச்யபர் கூறியபடி தான் வாஸு தேவனாகத் தோன்றி அதிதி தேவகியாகவும் கத்ரு ரோஹிணி யாகவும் பிறக்க அவர்களை மணந்தார். கம்ஸனிடம் பயந்து ரோஹிணியை நந்தன் வீட்டிற்கனுப்பியிருந்தார். தேவகியின் ஏழாவது கர்ப்பம் ரோஹிணியின் குக்ஷியிற் சென்று ஏற்கன வே பலராமனாகப் பிறந்திருந்தது என்று கூறி மேலே சொன்னார்.

யசோதை நள்ளிரவில் பகவானது மாயையால் தனக்குப் பெண் பிறந்ததையும் அதை எடுத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை வஸுதேவர் இங்கு கொண்டுவந்துவிட்டதையும் அறியவில்லை. அங்ஙனமே அவளது தோழிகளும் அதை உணரவில்லை. கண்ணன் ஏனைய குழந்தைகளைப் போல் அழ ஆரம்பித்ததும் இவர்களது மோஹமகன்றது. கண்ணை விழித்துப் பார்த்தனர். கண்ணைக் கவரும் கண்ணன் உருவைக் கண்டனர். எல்லோரும் பேரானந்த மடைந்தனர். இச்சுபச் செய்தி நந்தன் செவியில் கர்ணாமிருதமாக விழுந்தது. மட்டில்லா மகிழ்ச்சிபெற்று மஹரிஷிகளை அழைத்து நந்தன் அபரிமிதமாகத் தானம் செய்தான். நந்தன் வீட்டில் எண்ணிறந்த நண்பர் வந்துகூடினர். என்றும் எங்கும் கண்டிராத கண்காக்ஷியைக் கண்டனர். ரோஹிணியும் இக்குழந்தையுடன் தன் குழந்தையையுங் கொண்டு விட்டு இருவரையும் அன்புடன் பரிபாலித்து வந்தாள்.

பூதனையின் முற்பிறப்பும் மோக்ஷமும். ஒரு ஸமயம் கம்ஸன் அரண்மனையில் ஏகாந்தமாக உட்கார்ந்து தன் சத்ரு யார்? எங்கிருக்கிறான்? என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் ஓர் அசரீரி வாக்கு கிருஷ்ணனது பிறப்பை நடந்தபடி கூறி அவன் ஸந்தேஹத்தை விளக்கிற்று. உடனே அவன் தனது ஸஹோதரியான பூதனையை அழைத்

தான். நீ துர்வாஸரது மந்த்ரோபதேசத்தால் இஷ்டமான உருவை எடுக்கும் சக்திபெற்றிருக்கிறாய். அழகிய கோபிகை ரூபங்கொண்டு கோகுலத்தில் வளரும் எனது சத்ருவான கிருஷ்ணனுக்குப் பாலுடன் விஷத்தை அளித்து அவனைக் கொன்று வா என்றான். அவளும் அங்ஙனமே பாலளிக்கும்போது, அவளுள்ளத்தை உணர்ந்த பகவான் பாலுடன் அவள் உயிரையும் பருகினார். உடனே வைகுண்டத்தினின்று ஓர் அழகிய விமானம் வந்து பூதனையை அழைத்துச் சென்றது. க்ரூர குணமும் பாபச்செயலுமுள்ள பூதனை, முற்பிறவியில் பலிச்சக்ரவர்த்தியின் புதல்வியான ரத்நாவளி ஆவாள். வாமனவதாரத்துடன் வந்த பகவானைப் பார்த்து அவரிடம் தாய்க்குப் புதல்வனிடம் உண்டாவதுபோல அவளுக்கு வாத்ஸல்யமுண்டாயிற்று. இக்குழந்தையை மடிமீது வைத்துப் பாலளிக்கும் பாக்யம் எனக்குக் கிட்டுமோ ? என மெய்யன்புடன் வேண்டினாள். அந்த ஸங்கல்பத்தை இப்பிறவியில் பூர்த்திசெய்து வைத்து அவளது பக்திக்கேற்றபடி வைகுண்டத்தையும் பகவானளித்தார்.

திருணாவர்த்தன் முற்பிறவியும் மோக்ஷமும். பாண்டிய தேசத்திலே ஸஹஸ்ராக்ஷன் என்றோ ரரசனிருந்தான். அவன் மிக்க பலசாலி. தபஸ்வி. யோகசக்தியால் பல உருவம் எடுக்கும் சக்தி பெற்றவனவன். புஷ்போத்யானத்தில் ஒரு நாள் அவ்வரசன் ஆயிரம் உருவெடுத்து ஆயிரம் பெண்களுடன்கூடி சிற்றின்பத்தை அனுபவித்தான். அங்கு தற்செயலாக லக்ஷம் சிஷ்யர்களுடன் துர்வாஸமுனி வழிவசமாக வந்தார். பெரியோரைத் தக்கபடி வணங்கி வரவேற்பது முறை என்றுணர்ந்தும் அரசன் அவரைக் காணாதது போல் அலக்ஷ்யமாக இருந்துவிட்டான். அவன் இடுப்பில் வஸ்த்ரமுமில்லை. இந்த நிலையில் கோபங்கொண்ட முனி அவனை அரக்கனாகி லக்ஷமாண்டு பாரினில் சுற்றும்படிச் சபி

த்தார். அதைக்கேட்டு நடுங்கிய அரசன் தனது குற்றத்தை க்ஷமிக்கும்படி அவரை வேண்டினான். ஸ்ரீகிருஷ்ணனது சரணசேவையால் மோக்ஷமடைவாய் என்றருள் புரிந்துசென்றார். அவன் ஒருநாள் தொட்டிலில் படுத்திருந்த ஸ்ரீகிருஷ்ணனைப் புயல்காற்று உருவத்துடன் வந்து தூக்கிச் சென்றான். பகவத் பாதஸேவைபெற்று, அவரால் கொல்லப்பட்டு அவனுங் கோலோகஞ் சென்றான். ஒரு ஸமயம் பகவான் பால் குடித்துக்கொண்டிருக்கும்போது யசோதை அவரைத் தொட்டிலில் விட்டுவிட்டு வீட்டு வேலையைக் கவனித்தாள். குழந்தை அழுதுகொண்டே காலைத் தூக்கி உதைத்தது. அதனால் தொட்டிலில் தொங்கவிட்டிருந்த மாவண்டி தூள்தூளாகிப் பால்பானையின்மேல் விழுந்து பானையும் உடைந்தது. இதைக் கண்ட எல்லோரும் வியந்து இச்சிறு குழந்தை இதை உடைத்திருக்க முடியாது. ஏதோ பூதங் குழந்தை அருகே நடமாடுகிறதென அஞ்சி புரோஹிதரை அழைத்தனர். அவர் யோகமாயை கூறிய ஸ்ரீஹரி கவசத்தால் குழந்தைக்கு ரக்ஷையிட்டார். வஸுதேவர் விரும்பியபடி அவர் குலகுருவான கர்க்காசார்யர் பகவானுக்கு ஜாதகர்மம் செய்து ஸ்ரீகிருஷ்ணன் என்று நாமகரணம் செய்தார். அச்சமயம் யசோதையின் தந்தையான கிருபாநு, பத்மாவதி எனும் தன் மனைவியுடனங்கு வந்து பேரனுக்குப் பல சீர்களைச் செய்தார். குபேரன் ஓர் முகூர்த்தகாலம் ஸ்வர்ண வர்ஷம் வர்ஷித்தான்.

நளகூபர ரம்பாமோக்ஷம். ஒரு ஸமயம் யசோதை யமுனைக்குச் சென்றிருந்தபோது கண்ணன் உரியிலுள்ள வெண்ணையைத்திருடித்தின்று தயிர்ப்பானையையும் உடைத்துவிட்டான். இதைக் கண்டு வருந்திய அன்னை கயிற்றை எடுத்துக் குழந்தையை அடிக்கச் சென்றாள். பயந்தவர் போல் சிசு ஓட, முனிவரது தியானத்திற்கும் வேதவாக்கி

யத்திற்கும் எட்டாத பகவானைப் பின்தொடர்ந்து யசோதை ஓடினாள். அன்னை தன்பின் ஓடிவந்த களைப்பால் வாடியதைக் கண்ட கருணாமூர்த்தி அவள் கையில் சிக்கினார். கோபங்கொண்ட யசோதை தன் வீட்டுத் தோட்டத்தி லுள்ள ஓர் மரத்தில் சிசுவை வஸ்த்திரத்தால் கட்டிச் சென்றாள். அந்த விருக்ஷம் பகவானது ஸ்பர்சம் பட்டவுடன் திவ்ய உருவம் பெற்று விமானத்தின் மீதேறி ஸ்வர்க்கம் சென்றது. கிளைகள் கீழே விழுந்தன. அவற்றின் சப்தத்தைக் கேட்டு எல்லோரு மங்குவந்து சூழ்ந்து கிளைகளுக் கிடையே இருக்கும் கண்ணனை விடுவித்து குழந்தை ஜீவித்திருப்பதைக் கண்டு ஸந்தோஷித்தனர். அங்கே பகவானைக் கட்டிய யசோதையை எல்லோரும் நிந்தித்தனர்.

குபேரனது புதல்வனான நளகூபரன் நந்தவனத்தில் ரம்பையுடன் கூடிச் சிற்றின்பத்தை அனுபவித்து வந்தான். அச்சமயம் அருகில் வந்த தேவலக முனிவரை அவன் வரவேற்கவில்லை. அவரெதிரில் வஸ்த்ரமுமில்லாமல் நிற்கு மிவர்களைத் தேவலகர் சபித்தார். நளகூபரன் யசோதையின் தோட்டத்திலுள்ள மரமானான். மஹர்ஷி கூறியபடி பகவானது ஸ்பர்சத்தால் அவன் சாப மகன்றது. ரம்பையை மாநுஷியாகும்படிச் சபித்தார். அவள் ஸுசந்த்ரகன் எனும் ராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்து ஜனமேஜய அரசனை மணந்தாள். அவ்வரசன் அச்வமேத யாகம் செய்யக் கருதி குதிரையை விட்டான். அக்குதிரையின் உடலில் இந்த்ரன் புகுந்ததால் அது மிக அழகாக இருந்தது. அதனால் ராஜபத்நீ அதனருகே சென்றாள். குதிரை இந்த்ரனாகி அவளைக் காமனையுடன் தீண்டியது. உடனே அவள் சாபமகன்றது. அவள் ரம்பையாகி ஸ்வர்க்கம் சென்றாள்.

ஸ்ரீராதா விவாஹம்.

ஒரு ஸமயம் நந்தன் தனது செல்வக் குமாரனுடன் பிருந்தாவனஞ் சென்றார். பசுக்கள் புற்களை மேய்ந்து நீரருந்தி நிழலில் படுத்து அசைபோட்டன. அது ஸமயம் கிருஷ்ணன் பூமியில் தோன்றி தன் பிரிவைத் தாளாமல் தவிக்கும் ராதைக்கு அருள்புரியக் கருதினார். அவர் மாயா சக்தியால் வானை மறைக்கும்படி கரு மேகங்களைப் படைத்தார். இருள் சூழ்ந்த கானகத்தே மழையும் காற்றும் இடியும் மின்னலும் எல்லோருக்கும் பயத்தை உண்டுபண்ணிற்று. கண்ணனது கபடத்தை அறியாத நந்தன், ஆஹா! என்செய்வேன்? எங்ஙனம் குழந்தையையும் மாடுகன்றுகளையும் மழையில் அடிபடாமல் மனைக் கழைத்துச் செல்வேன்? குழந்தையோ சிறுவன்! இருளையும் இடியையும் கண்டு எப்படிப் பயப்படாதிருப்பான்? எனச் சிந்தையிட்டான். இதற்குள் சிசு மிகப் பயந்ததுபோலத் தந்தையைத் தனது இரு கரங்களாலும் இருகக்கட்டி கண்ணைமூடி அப்பா! அப்பா! என அலரி அழ ஆரம்பித்தது. இதனிடையே இறைவனது எண்ணம்போல் மின்னலே உருவெடுத்து உலவுவது போல் ஆங்குள்ள இருளுடன் நந்தனது அக்ஞாந இருளையும் அகற்ற ஸ்ரீராதா தேவி எழுந்தருளினாள். நந்தன் தேவியைக் கண்டவுடன் மெய்மறந்து அவளடி பணிந்து அன்னையே! உன்னையான் இன்னாரென இப்போதே அறிந்தேன். இதுவரை மாயையால் உண்மையை மறந்து உமது பதியான உலக கர்த்தாவை என் மைந்தனென எண்ணி, ஏமாந்தேன். உமக்குரிய உலகநாதனை உம்மிட மளித்தேன். உங்களது பாதகமலம் என் உள்ளத்தைவிட்டகலாமலிருக்க வரந்தந்தருள்வாய் என வேண்டினான். அங்ஙனமே அன்னை அவனை ஆசிர்வதித்து அச்யுதனைக் கையிலேந்தி இடுப்பிலேவைத்து வனத்தின் நடுவே சென்றாள்.

ராதையின் மாயையால் அங்கு ஓர் அற்புதமான மண்டபம் தோன்றிற்று. தம்பதிகளது சிருங்காரத்திற் கேற்க பல அரிய பொருள்கள் நிறைந்திருந்தன. ராதையின் இடுப்பிலிருந்த குழந்தை ஓர் யௌவநத்தைப் பெற்ற காளையாகக் காணப்பட்டான். அவரைக் கண்டு ராதை வெட்கத்தால் தலை குனிந்து நாணி நின்றாள். பகவான் அவளருகே சென்று தேவி! உனது விருப்பத்தின்படி பாரினிலும் உனக்குப் பர்த்தாவாக வந்தேன் என்று கூறி அவளை ஆலிங்கனம் செய்துகொண்டார். இத்தருணத்தில் கமலாஸநன் அங்கு தோன்றி, இருவரையும் பணிந்து போற்றினன். அன்னையே! உன் திருவடியைத் தர்சிக்க முன்னம் புஷ்காரத்தில் அறுபது ஆயிரம் ஆண்டு தவம் புரிந்தேன். மாதவன் என்னெதிரே தோன்றி மாநிலத்தில் அவள் அவதரிப்பாள். அச்சமயம் அவளது பாதாரவிந்தத்தைப் பார்ப்பாய் என்றார். இன்றே என் தவம் பலித்தது என தேவியின் திருவடியைப் பணிந்து புகழ்ந்து நின்றார். அன்னையின் ஆசீர்வாதத்தைப் பெற்று பிரும்மா விதிப்படி அக்நியை வளர்த்து ஸ்ரீ ராதா கிருஷ்ணர்களுக்கு விவாஹம் செய்வித்தார். தேவதுந்துபி முழங்க கந்தர்வர் கானம் செய்ய அப்ஸரஸுகள் ஆட பாணிக்ரஹண மஹோத்ஸவத்தை முடித்துப் பத்மாஸநன் பத்மநாபனிடம் விடைபெற்றுச் சென்றான்.

ராதை ரத்நக்கட்டிலில் பகவானை உட்கார வைத்துப் பக்தியுடன் சிறிது நேரம் பாடினள். சிறிது நேரம் பணிந்து போற்றினள். சாமரமெடுத்து வீசினள். விசிறி கொண்டு விசிறினள். கண்ணாடியைக் கண்ணன் கண்முன் வைத்துத் தானுமதனருகே சற்று நின்றாள். முரளியை அளித்து முகுந்தனைப் பாடும்படிக் கேட்டாள். அந்நாதத்தைக் கேட்டு மெய் மறந்து க்ஷணம் நின்றாள். உடனே எழுந்து வாஸனைத் தாம்பூலத்தை மடித்துக் கொடுத்தாள். அவர் நெற்றியில் கஸ்தூரி

பொட்டிட்டு மகிழ்ந்தாள். ஆபரணங்களை அவருக்குச் சூட்டி அகமகிழ்ந்தாள். அவர் தலையை வாரி பூச் சூட்டினுள். சற்று முன்னே நின்று முன்னழகைப் பார்த்தாள். பின்னர் பின்னே வந்து பின்னழகைப் பார்த்தாள். இறுகக்கட்டி முத்தமிட்டாள். இங்ஙனம் இரவெல்லாம் அவரை அலங்கரித்து அவரழகைப் பார்த்துப் பார்த்து நின்றுள். பொழுது விடிந்தது. உடனே பகவான் சிறு குழந்தையாகி அம்மா! அம்மா! என்றழுதான். ஆஹா! இஃதென்ன கொடுமை? என் நாதன் என்னை விட்டு இங்ஙனம் குழந்தையாகி விட்டானே! என் செய்வேன்? என ராதை மூர்ச்சித்தாள். பின்னர் எழுந்து சிசுவினருகே வந்து கண்ணீர் வடித்தாள். ராதே! ராஸ மண்டபத்தில் ராத்திரி காலத்திலே ஒவ்வொரு நாளும் இங்ஙனமே அவரைக் காண்பாய். பகலில் அவர் பாலகனுகி, தந்தை தாயருகே செல்வர் என ஓர் அசரீரி கூறிற்று. இச்சிசுவை உடனே தேவி இடுப்பிலெடுத்துச் சென்று யசோதையினிடம் ஒப்புவித்தாள். யசோதை, ராதையின் மாயையால் சிசு இரவில் தன் வீட்டில்லாததை உணரவில்லை.

பககேசி ப்ரலம்பரது முற்பிறப்பும் முக்தியும். ஒரு ஸமயம் நந்தகுமாரன் கோபகுமாரர்களுடன் மாடு மேய்த்துக்கொண்டு மதுவநஞ் சென்றுன். அங்கு ஓர் பயங்கரமான கொக்கு தனது நீண்ட அலகுகளை நீட்டி கிருஷ்ணனை விழுங்கிற்று. தன் உயிரை விட உயர்ந்த பொருளாக இடையர்கள் கிருஷ்ணனைக் கருதியதால் எல்லோரும் கிருஷ்ணு! கிருஷ்ணு! என்று கதறினர். இவர்களது துன்பம் வானவரையும் விழிக்கும்படிச் செய்தது. இதைக்கண்ட விண்ணவர் இவரைக்கொண்டன்றோ தேவகார்யம் நடக்கவேண்டும். இவரைக் கொக்குவிழுங்கிற்றே! என்செய்வோமென வருந்தி அக்கொடிய பறவையைக் கொல்ல தத்தம் அஸ்த்ரங்களைப் பிரயோகித்தனர். எவர் பாணத்தாலும் அது இறக்கவில்லை. இந்த்ரனது வஜ்ராயுதம்

அதன் ஓர் இறக்கையையே கொளுத்திற்று. கிருஷ்ணன், தேவர்களும் பக்தர்களும் தவிப்பதைக் கண்டு தனது தேஜஸால் கொக்கை எரித்து வெளியில் வந்தார். எல்லோருமிதைக் கண்டு வியந்தனர். ப்ரலம்பாஸுரன் மாடுவேடம் பூண்டும், கேசி குதிரை ரூபமெடுத்தும் பகவானைக் கொல்ல வந்து பகவானால் கொல்லப்பட்டனர். இவர்கள் இறந்தவுடன் திவ்ய தேஹம்பெற்றுக் கோலோகஞ் சென்றனர். பகவானது பகைவர்கள் நற்கதிபெற்ற காரணம் யாதென நாரதர் வினவ, நாராயண ருரைத்தார்.

கந்தவஹன் என ஓர் கந்தர்வ ராஜனிருந்தான். அவனுக்கு நான்கு புதல்வர் உண்டாயினர். மூத்தவனான வஸுதேவன் துர்வாஸரது சிஷ்யனாகி துறவிவேடங்கொண்டு பரமபத மெய்தினன். ஸுஹோத்ரன், ஸுபார்ச்வன், ஸுதர்சகன் என்ற மூவரும் பக்தி மார்க்கத்தி லீடுபட்டனர். அன்றன்றும் அவர்கள் மலரெடுத்துத் திருமாலை அர்ச்சிப்பர். ஒருநாள் சித்ர ஸரோவரமெனும் தீர்த்தத்தி லிறங்கிப் புனலாடிப் புஷ்பம் பறித்தனர். ஆங்குள்ள காவலாளிகள் இவர்களைப் பிடித்துக்கொண்டு போய் பரமசிவத்தி னெதிரே நிறுத்தினர். இவர்கள் தாங்கள் யார்? எதற்காக புஷ்பம் எடுத்தனர்? என்பதைக்கூறி, விஷ்ணுவும் சிவனும் ஒன்றே ஆதலின் உமது பாதத்தில் இதை ஸமர்ப்பிக்கிறோம் என்று அம்மலரால் அரனை அர்ச்சித்தனர். இவர்களது குணநிசயத்தைக் கண்டு வியந்து மாதேவனுரைத்தார். பக்தர்காள்! பார்வதீ தேவி த்ரைமாஸிக விருதமொன்றைச் செய்கிறாள். அதன் பொருட்டு இவ்வோடையிலுள்ள மலரை எவரும் எடுக்காவண்ணம் இதைப் பறிப்போர் அரக்கராவார் எனச் சாபமிட்டேன். அன்றன்றும் ஆயிரம் மலர் அச்சுதனுக்கு அளிப்பது நமது வழக்கம். நீங்கள் இன்று அம்மலரைக் கொய்து எனக்கே அர்ப்பணம் செய்தீர்கள். இதைக் கண்டு யான்

களித்தாலும் ஆதியில் யானிட்ட சாபம் உங்களை விடாது. மூவரும் அரக்கர்களாகத் தோன்றி ஆயர்பாடியில் கண்ணனாக அவதரித்த பகவானுக்கு விரோதம்செய்து பிறகு கோலோகஞ் செல்லுங்கள் என்றார். அவர்களே இப்போது விமானமேறிச் சென்றனர்.

த்ரைமாஸிக விருதம். சித்திரை மாதத்தில் ஆரம்பித்து தக்ஷிணாயன ஆரம்பத்தன்று முடிக்கவேண்டிய விருதமிது. இதை விசேஷமாகப் பெண்மக்களே அநுஷ்டிக்கவேண்டும். இதன் பயனாகப் புருஷன் நீண்ட ஆயுளையும் ஸகல ஸௌபாக்கியத்தையும் பெறுவான். இதில் ஸ்ரீராதா கிருஷ்ணனே பூஜிக்கத்தக்க தெய்வம். அன்றன்று விதிப்படி ஷோடசோபசார பூஜை செய்வதுடன் பூர்த்தியாகும் தினத்தில் ஒன்பதாயிரம் தாமரை மலரால் பகவானை யர்ச்சிக்கவேண்டும். ஒன்பதாயிரம் பிராமணர்களுக்கு அன்னமளிக்கவேண்டும். இங்ஙனமே இதைப் பார்வதீ தேவி பரமசிவனிடம் விடைபெற்று நடத்தினள். ஸநத் குமாரர் புரோஹிதராகவும், குபேரன் தக்ஷிணை அளிப்பவனாகவும், தனலக்ஷ்மி தனத்தை அளிப்பவளாகவும், அக்நி சமையல்காரனாகவும் இருந்து இதை நடத்திவைத்தார்கள். இதைக் கேட்டு வியந்த நாரதர் பகவானது லீலையையே கூறும்படி வேண்டினார். நாராயண ரிஷி முற்கதையைத் தொடர்ந்து கூற ஆரம்பித்தார். பகவான் இங்ஙனம் மனிதனால் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்ததைக் கண்ட நந்தன் பயந்தான். அங்கு பல ராக்ஷஸர்கள் குழந்தைக்குத் தீங்கு விளைவிப்பதைக் கண்டு பயந்து பரிவாரத்துடன் பிருந்தாவநம் சென்றான். அங்கேயே ஸ்திரமாக வஸிக்கும்படி எல்லோருக்கும் கட்டளையிட்டான். புதிதாக அமைத்த ஊரில் போதிய பொருளில்லாததைக் கண்டு இடையர்கள் வருந்தினர். பகவான் விச்வ கர்மனை அழைத்து விசித்ரமாக வீடுகளை

அமைத்து நவநிதிகளும் அங்கு தங்கும்படிச்செய்தார் ராதை யின் தாயான கலாவதியின் வீடு மிக ரமணீயமாக இருந்தது.

கலாவதி.

கலாவதியின் சரிதத்தைக் கூறும்படி நாரதர் வேண்ட நாராயணர் கூறினார். பித்ரு தேவர்களுக்குக் கலாவதி, ரத்ந மாலா, மேநகா என மூன்று கன்னிகைக ளிருந்தனர். அவர் களில் ரத்நமாலை ஜநகனை மணந்து ஸீதாதேவியைப் பெண்ணாக அடைந்தாள். மேநகை ஹிமாலயத்தை மணந்து பார்வதி யைப் பெற்றாள். மநுவம்சத்தில் பிறந்த ஸுசந்திரன் எனும் அரசனுக்குக் கலாவதி மாலையிட்டாள். இவ்விருவரும் கூடி ஆயிரமாண்டு சிற்றின்பத்தை அனுபவித்தனர். பின்னர் அரசன் வைராக்யம் பெற்று விந்தியமலை சென்று ஆயிர மாண்டு கடுந்தவம் புரிந்தான். அதுவரை அவன் மனைவி அர சனுக்குத் தொண்டு புரிந்து வந்தாள். அவன் அசைவற்று ஒரே இடத்தில் வீற்றிருந்ததால் அவன்மீது புற்று உண்டா யிற்று. கலாவதி அதை அகற்றி, ரத்தம்சுண்டி மாம்ஸங் குறைந்து, எலும்பும் தோலுமாய் நிற்கும் கணவன் உடலைக் கண்டு கதறி அழுதாள். அதே ஸமயத்தில் சதுர்முகன் அரச னெதிரே தோன்றி அவனுக்கு வேண்டிய வரத்தை அளிப்ப தாகக் கூறினார். நிஷ்டைகலைந்து கண்ணைத் திறந்து கமலா ஸநனை எதிரிற் கண்ட வேந்தன் வேறு வரங்கோராமல் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையே வேண்டினான். கலாவதி பிரும் மனை நோக்கி, "ஐயா! பெண்களுக்குத் தெய்வம் பதியன்றோ? என்னைவிட்டு அவருக்கு நீர் எதை அளித்தாலும் அது அநீதியாகும். அவருக்கு மட்டில் நீர் மோக்ஷமளித்தால் உம்மைச் சபித்து உமக்கு ஸ்த்ரீவத பாபத்தையு மளிப் பேன்" என்றாள். இதைக்கேட்ட சதுர்முகன் அரசனைப் பார்த்து, இப்பிறவியில் ஸ்ரீஜகன்மாதாவான ராதையினிடம்

பக்தி உனக்கில்லாததால் மோக்ஷமளிக்க முடியாதென்றும் மறுபிறப்பில் ஸ்ரீராதையே உனக்குப் பெண்ணாகப் பிறப்பாளென்றும் அப்போது முக்தி கிடைக்குமென்றும் கூறி மறைந்தார். ஸுசந்திரராஜன் பல்லாண்டு ஸ்வர்க்க ஸுகத்தைப் பெற்று மறுபிறவியில் கோகுலத்தில் நந்தனது உறவினனாகப் பிறந்தான். அவனது தந்தை ஸுரபாநரெனப் படுவர். அவன் தாயின் பெயர் பத்மாவதி. இவர்களுக்கு அருமைப் புதல்வனாக ஸுசந்த்ரன் தோன்ற அவனுக்கு விருஷபாநு எனப் பெயரிட்டனர்.

கலாவதியும் பர்த்தாவுடன் பலகாலம் ஸ்வர்க்க ஸுகத்தைப் பெற்று, கான்ய குப்ஜதேசத்திலே ஓர் அரச குலத்திலே உதித்தாள். இவளது தந்தையான பலந்தநன் எனும் பார்த்திவன் ஓர் வேள்விசெய்தான். அச்சமயம் அக்நிகுண்டத்திலிருந்து கலாவதி குழந்தையாகத் தோன்றினாள். ஆவலுடன் அச்சிசுவை எடுத்து பலந்தநன் தன் மனைவியினிடம் அளித்தான். பெற்றோர் தெய்வப்பிறப்பாகப் பிறந்த அக்குழந்தைக்கு நாமகரணம் செய்யும்போது, கலாவதீ எனப் பெயர் வை என்று அசரீரியான வாக்கு தோன்றியது. அங்ஙனமே பெயரிட்டு அருமையாகப் பெற்றோர் அதை வளர்த்து வந்தனர். வயது வந்ததும் அக்கன்னிகை ரதியையும் வெட்கிக்கும்படி அழகு வாய்ந்திருந்தாள். நந்தன் இவளை விஷ்ணுவின் அம்சத்தால் ஜநித்த விருஷபாநுவுக்கு அளிக்கும்படிச் செய்தான். இவ்விருவர்களுக்குப் பெண்ணாக ராதாதேவி அவதரித்தாள்.

பிருந்தாவன சரிதம். கலாவதியின் சரிதத்தைக்கேட்டு மகிழ்ந்த நாரதமுனி பிருந்தாவநம் என்று அதற்கு ஏன் பெயருண்டாயிற் றென்று கேட்டார். அதை நாராயணரிஷி விரித்துரைத்தார். முன் ஓர் ஸமயம் கேதாரன் என்றோர் சக்ரவர்த்தி யிருந்தான். அவன் ஏழுத்வீபங்களையு மாண்டு

வந்தான். அவன் மிக்க தார்மிகன். விஷ்ணுபக்தரில் அவனுக்கிடு எவருமில்லை. அவனது பக்தியைக் கண்டு மகிழ்ந்த லக்ஷ்மீதேவி தான் அவனுக்கு ஓர் கன்னிகையாகப் பிறந்தாள். அந்த சக்ரவர்த்தி தக்க வயதுவந்த தன் புத்ரனிடம் ராஜ்யத்தை அளித்துத் தபோவனஞ் சென்றான். ஜைகீஷவ்யனென்ற முனிவரைச் சரணமடைந்து அவர் காட்டியவழியைப் பின்பற்றிக் கடுந் தவஞ்செய்தான். அவனது உடலைக் காக்க அச்யுதன் அவனருகே ஸுதர்சநத்தை அனுப்பினார். அது அவனைச் சுற்றிச் சுழன்றுகொண்டே யிருந்தது. பல நாட்சென்றபின் பார்த்திவன் பார்த்திவ உடலைவிட்டுத்திவ்ய தேஹம்பெற்றுக் கோலோகம் சென்றான். அவன் தவம் புரிந்த இடம் கேதார க்ஷேத்ரமென்றும் அதனருகே ஓடிய நதிக்கு அவன் பெயரால் கேதார தீர்த்தமென்றும் பெயருண்டாயிற்று. அம்மன்னனது மகள் பெயர் பிருந்தை. அவள் தன் அரண்மனைக்கு வந்த தூர்வாஸரைப் பல நாள் அபசாரமொன்றும் செய்யாது உபசரித்தாள். அதைக் கண்டு அக மகிழ்ந்த முனிவர், பெண்ணே! வேண்டிய வரத்தைக்கேள். தருகிறேனென்றார். அவள் ஐயனே! யானொன்றும்வேண்டேன். தங்களைக் குற்றமற உபசரித்ததே பெரிய வரமென்றாள். மஹர்ஷி அதை மெச்சி ஹரிமந்த்ரத்தை உபதேசித்துச் சென்றார். பிருந்தையும் வைராக்யங் கொண்டு முனிவர் உபதேசித்த மஹா மந்திரத்தை அறுபதினாயிர மாண்டு ஜபித்துத் தவம் செய்தாள். பிறகு ஸ்ரீபகவான் அவள் எதிரில் தோன்றினார். அவர் உருவைக்கண்டு மயங்கி பிருந்தை தன்னை மணந்துகொள்ளும்படி வேண்டினாள். கிருஷ்ணனும் அங்ஙனமே அருள்புரிந்து அவளது மானிட உடலை அகற்றி திவ்யதேஹமளித்து அவளுடன் கோலோகஞ் சென்றார். பிருந்தை தவம்புரிந்து பகவானைப் பதியாக அடைந்த இடம் பிருந்தாவனம் எனப்படுகிறது. அன்றியும் குசத்வஜனது

மகளான துளஸீ தூர்வாஸரது சாபத்தால் சங்காஸுர னுக்கு மனைவியாகி இவ்வுடலைவிட்டுப் பகவானைப் பதியாக அடைந்த இடமும் இதுவே. அவளுக்குப் பிருந்தை என மற்றோர் பெயருண்டாதலின் அவள் பெயராலும் அது பிருந் தாவனமென அழைக்கப்படுகிறது. மேலும் ஸ்ரீ ராதா தேவிக்கு முக்யமான பதினாறு நாமாக்களில் பிருந்தை என் பதொன்று. அன்றன்றும் பிருந்தை எனும் ராதை பகவா னுடன் ராஸமண்டபத்தில் அங்கு கிரீடைசெய்வதால் பிருந் தாவனம் என்று பெயர் வழங்கிற்று.

யக்ஞபத்நிகளின் முன் சரிதம். ஒரு ஸமயம் பகவான் கோப குமாரர்களுடன் மாடுமேய்க்க மதுவனஞ் சென்றார். அங்கு இடைச் சிறுவர் கண்ணனைப் பசிக்கு அன்னமளிக்கும் படி வேண்டினர். மாதவன் அவர்களை நோக்கி அருகிலுள்ள யாகசாலைக்குச் சென்று தான் கேட்பதாக அங்கு அன்னங் கேட்கும்படியும், மாயையால் தன்னை அறியாத தீக்ஷிதர்கள் அன்ன மளிக்காவிடில் அவர்கள் பத்நிகளைக் கேட்கும்படி யும் கூறினார். அங்ஙனமே அவர்கள் யஜமானரிடம் ஏமாந்து பத்நிகளிடம் சென்று கிருஷ்ணன் பசிக்குணவு வேண்டுகி றார் என்றனர். இதைக் கேட்டவுடன் அவர்கள் போஜநந் தங்கொண்டு பரமாத்மாவிற்குத் தாங்கள் நேராக உணவளிக் கும் பாக்யம் கிடைத்ததே என்று அன்புடன் அறுசுவை அன்னத்தை எடுத்துக்கொண்டு தாங்களே நேரில் வந்தனர். பரமனைக் கண்டு வியந்து பணிந்து போற்றினர். பகவான் அவர்களளித்த அன்னத்தை ஏற்று எல்லோருக்கு மளித்து அங்குவந்த திவ்ய விமானத்தின் மீதேற்றி அவர்களைக் கோ லோகத்திற் கனுப்பினார். யாகம் நிறைவேறுவதற்கு அவர் கள் நிழலையே பெண்களாகப் படைத்து பகவான் அவைகளை யாகசாலைக் கனுப்பினார்.

யாக பத்நிகள் முற்பிறவியில் ஸப்தரிஷிகளின் மனைவி

களா யிருந்தனர். இவர்களது அழகைக் கண்டு மோஹங் கொண்ட அக்நி தனது ஜ்வாலையால் இவர்களைத் தீண்டினான். இதைக்கண்ட ஆங்கீரஸ முனிவர் அக்னியை அசுத்தமான பொருள்களையும் பக்ஷிக்கும்படிச் சபித்தார். பெண்களைப் பார்த்து பாரினில் பிராமணப் பெண்களாகத் தோன்றி தன் வம்சத்தில் பிறந்த அந்தணர்களை மணக்கும்படிச் சபித்தார். அவர்களது பிரார்த்தனைக் கிணங்கி முநிவர், ஸ்ரீகிருஷ்ண னுக்கு அன்னமளித்து கோலோகம் செல்லும்படியும் ஓரம் சத்தால் மறுபடியும் தங்களுக்கு மனைவிகளாக வரும்படி யும் அருள் புரிந்தார். ஆதலால் அவர்களுக்கு அத்தகைய பாக்யங் கிட்டியது.

காலிய சரிதம். ஒரு ஸமயம் கண்ணன் இடைச் சிறுவர் களுடன் மாடுகளை ஓட்டிக்கொண்டு யமுனா தீரம் சென்றார். ஆங்கு கோக்கள் இளம்புற்களை மேய்ந்து ஓர் மடுவில் ஜல மருந்தின. அம்மடுவு காலீயன் எனும் துஷ்ட ஸர்ப்பம் வஸிக்குமிடம். ஆதலால், அதன் விஷம் நிறைந்த நீரைப் பரு கிய பசுக்கள் மாண்டன. இதைக் கண்டு பாலகர் அனைவரும் கதறி அழுதனர். பகவான் ஆங்குள்ள ஓர் கடம்ப மரத்தின் மீதேறி அம்மடுவில் குதித்தார். அப்பாம்பு மனித உருவமெடுத்துவந்த பகவானைச் சீறி தன்னுடலால் அவரை மறைத்தது. உடனே பகவானது தேஜஸால் அதன் பற்கள் விழுந்து முகத்தில் ரத்தம் பெருகி மூர்ச்சையடைந்தது. அச் சமயம் அதன் மனைவியான ஸுரபலை பரமாத்மாவின் பெரு மையை உணர்ந்து அவரைப் பணிந்துப் போற்றினாள். ஜகன் னாதன் அவளைக் கோலோகத்திற்கனுப்பி அவள் நிழலை ஓர் பெண்ணாக்கினார். இதற்குள் காலீயனும் கிருஷ்ணனது நிஜஸ் வரூபத்தை உணர்ந்து தன் குற்றத்தை மன்னித்து அபய மளிக்கும்படி வேண்டினான். பகவான் அங்ஙனமே அருள் ரிந்து பாம்பு ஜாதியைக் கொல்வோருக்குக் கீர்த்தி புத்ரான்

முதலியவைகள் உண்டாகாதென்றுரைத்து அவனை ரமணீயகம் என்ற இடத்தில் வஸிக்கும்படிக் கட்டளையிட்டார்.

காலீயன் யமுனா நதியின் ஓடையில் வஸித்த காரணம் யாதெனில், ஸர்ப்பங்களுக்கு அரசனான சேஷன் கார்த்திகை மாதம் பௌர்ணமி யன்று பாம்புகளெல்லாம் கருடனைப் பூஜிக்க வேண்டும் என ஓர் உத்தரவிட்டான். காலீயன் அங்ஙனம் பூஜை புரியாததுடன் பூஜைக்காக மற்றவர் வைத்திருந்த பொருள்களையும் அபகரித்தான். இதைக்கண்டு சினங் கொண்ட பக்ஷிராஜன் காலீயனுடன் கடும்போர் செய்தான். அவனிடம் தோல்வி யடைந்து பயந்த காலீயன் இம் மடுவில் வந்து தங்கினான். இங்கு பல்லாண்டுகளாக ஸௌபரி எனும் முனிவர் ஜலத்தினுள்ளே தவம் செய்து வந்தார். அவாருகே ஓர் பெரிய அழகான மீன் தனது மனைவி மக்களுடன் அவரை வலம் வந்து களிப்பித்து வந்தது. மஹர்ஷி நிஷ்டையிலிருக்கும்போது ஒரு நாள் கருடன் தன் அலகால் அம்மீனைக் கொத்திச் சென்றது. அதன் பரிவாரங்கள் கதறுவதைக் கண்ட தவஸி, கோபக் கண்ணால் கருடனை நோக்கினார். உடனே அம்மீன் ஜலத்தில் விழ கருடன் மறுமுறையும் அதை எடுத்துச் செல்ல அருகே வந்தது. இனி இங்கு வந்தால் நீ சாம்பலாவாய் என ஸௌபரி அதைச் சபித்தார். ஆதலால் அங்கு காலீயன் நிர்ப்பயமாக வஸித்தான். அந்த காலீயனை விரட்டி ஜலத்தைச் சுத்தமாக்கி இறந்த கோக்களையும் எழுப்பிக்கொண்டு கோபாலன் வீட்டிற்குத் திரும்பினான்.

பிரும்மா கன்றுகளை அபஹரித்தது. பிருந்தாவனத்தில் ஒரு ஸமயம் பகவான் கன்று மேய்க்கும்போது குழந்தைகளுடன் கூடி விளையாடிக் கொண்டிருந்தார். அச்சமயம் சதுர்முகன் பகவானது பெருமையை அறிய ஆவல் கொண்டார். ஆதலால் அவரை விட்டு வெகுதூரம் சென்று மேயும்

கன்றுகளைப் பிரும்மா முதலில் தூக்கிச் சென்றார். கன்று களைக் காணுமல் கோபாலர்கள் வருந்தும் போது, தான் அவை களைத் தேடி வருவதாகக்கூறிப் பகவான் கிளம்பினர். அச்சம யத்தில் சதுர்முகன் கோப குமாரர்களையும் தூக்கிச் சென் ருர். கன்றுகளைக் காணுது இங்கு வந்த கண்ணன் சிறுவர் களும் காணுமற் போகவே இது சதுர்முகனது வேலை என் றறிந்தார். அவர் விரும்பியபடியே தன் பெருமையை அவருக்கு விளக்கப் பகவான் காணுமற்போன கன்றுகளாக வும் சிறுவர்களாகவும் உருவெடுத்து ஊருக்குச் சென்ருர். ஏற்கனவே இருந்த கன்றுகளுக்கும் பாலர்களுக்கும் தற் சமயம் கிருஷ்ணமாயையால் வந்தவைகளுக்கும் யாதொரு பேதமுமில்லை. ஆயினும் பகவானது மாயையால் வந்த சிசுக் களிடம் பெற்ருேருக்குப் பேரன்புண்டாயிற்று. இங்ஙனம் ஓராண்டு யாதொரு பேதமுமின்றிக் கன்றுகளைத்திநந்தோறும் சிறுவர்கள் காட்டிற்கு ஓட்டி வந்து மேய்ப்பதும் மாலையில் மனைக்குச் செல்வதாகவும் இருந்தது. ஓராண்டு சென்ற பின் சதுர்முகன் தான் எடுத்துச் சென்ற கன்றுகளுடனும் சிறுவர்களுடனு மங்கு வந்தார். பூமியில் அவ்வளவு குமாரர் களும் கன்றுகளும் காணப்பட்டன. பிரும்மா பகவானது மாயையைக்கண்டு மகிழ்ந்து அவாருகே வந்து பணிந்து தனது அபசாரத்தை மன்னிக்கும்படிப் போற்றினர். பக வான் பழைய குமாரர்களையும் கன்றுகளையும் பெற்று தான் படைத்தவைகளை மறைத்துப் பிரும்மாவை ஆசீர்வதித்து ஊருக்கு வந்தார்.

இந்திர கர்வபங்கம். நந்தன் ஒரு ஸமயம் தன் ஜாதி வழக்கப்படி இந்திர பூஜை செய்ய ஆரம்பித்து எல்லோ ருமதைக் கொண்டாடும்படி பறை சாற்றினன். இதைக் கேட்ட யாவரும் மிகச் சிறப்பாக அதை நடத்த ஒன்று கூடினர். கர்க்கர், காலவர் முதலிய முநிகணங்களும் சிஷ்யர்

களுடன் வந்து சேர்ந்தன. அவரவருக்கேற்றபடி வரவேற்று ஆஸநமளித்து நந்தன் அவர்களைப் பூஜித்தான். எல்லோரும் கண்ணனிடத்தே கண்ணைச் செலுத்த பகவான் ஸபை நடுவே எழுந்து தன் தந்தையைப் பார்த்துக் கூறினார். என் அருமைத் தந்தையே! உலகில் எல்லாம்வல்ல இறைவன் ஒருவனுண்டு. அவனாணையால் ஸூர்யன் மழை பொழிகிறான். அதனால் ஸகல பிராணிகளும் ஸுகமாக வாழ்கின்றன. அந்த கடவுள் வேதமறிந்த வேதியருடலிலே வஸிக்கிறார். ஸாதுக்களது திருவடியிலே ஸகல தீர்த்தங்களுமிருக்கின்றன. அத்தகைய பெரியோரைப் பூஜித்தால் ஹரி ஸந்தோஷமடைவர். அவர் ஸந்தோஷப்பட்டால் உலகெலாம் இன்பம் பெறும். அங்ஙன மிருக்க அவ் வந்தணரை விட்டு இந்திரனைப் பூஜிப்பது நன்றன்று. பசுக்களிடம் எல்லாத் தேவர்களும் வஸிக்கின்றனர். அப்பசுவுக்கு அன்றன்று புதிய புற்களை அளிப்பவர் புண்ணிய சீலராவர். அங்ஙனம் நமது கோக்களைக் காத்து, கோவர்த்தநம் எனக் காரணப் பெயர் பெற்ற இம்மலையைப் பூஜிப்பது நலம். நம்முன்னே தோன்றி நாமளிக்கும் பொருளை உட்கொள்ளாத இந்திரனை ஏன் பூஜிக்க வேண்டும் என்றார். இதைக் கேட்ட நந்தனும் மற்றவரும் அங்ஙனமே இந்திர பூஜையை நிறுத்தி முநிவரையும் மலையையும் அர்ச்சித்தனர். கண்ணன் அம்மலையினுள்ளே புகுந்து யாதவரளித்த பக்ஷ்யம் முதலியவைகளைத் தலையை ஆட்டிக்கொண்டே உட்கொண்டு, பக்தர்காள்! யாது வரம் வேண்டும்? என்றார். எல்லோரும் இதைக் கண்டு மிக்க ஆச்சரியங்கொண்டு பகவத் பக்தியையே வரமாகக் கோரினர். பூஜை முடிந்து எல்லோருமில்லம் சென்றபின், இந்திரன் போஹத்தினால் கர்வங்கொண்டு தனக்குப் பூஜை புரியாதவரிடம் கோபங்கொண்டான். ஸப்த மேகங்களுடனும் பிருந்தாவனம் வந்தான். உடனே இடியும் மின்னலும் தோன்ற, பெரும் மழைக்காற்

றடித்து மரங்களையும் குடிசைகளையும் நாசம் செய்தது. நந்தன் யசோதையை அழைத்துக் கிருஷ்ணனையும் ராமனையும் ஜாக்ரதையாக வேறிடத்திற்கழைத்துச் செல்லும்படிக் கூறி இந்திரனைத் துதித்தார். இதைக்கண்ட பகவான் இடது கையால் கோவர்த்தன மலையை அனுயாஸமாகத் தூக்கி வைத்துக் கொண்டு அதன் கீழே எல்லோரும் ஆடு மாடுகளுடன் வந்து தங்கும்படி கூறினார். தனது மேகங்கள் வர்ஷித்த கல்மழை வீணானதைக் கண்ட இந்திரன் சினங்கொண்டு வஜ்ராயுதத்தை எடுத்தான். ஆயுதத்துடன் அவன் கையும் மேகங்களும் அசைவற்று நின்றன. இந்த்ரன் உடனே திகைத்து நின்று ஸ்ரீ கிருஷ்ணனது மஹிமையை உணர்ந்து அவரைத் துதித்தான். அம்மலையின்கீழ் வஸிக்கும் பசு கோபர் முதலிய எல்லாம் கிருஷ்ண மயமாகவே இந்திரன் கண்ணுக்குத் தோன்றின. இவ்வத்புதச் செயலைக் கண்டு நந்தனும் பகவானைத் துதித்தான். இந்திரன் அஹங்காரத்தை விட்டு விடைபெற்று வானுலகஞ் சென்றான்.

தேனுகன் சரிதம். ஒரு ஸமயம் கோப குமாரர்கள் கிருஷ்ணனிடம் வந்து ஒரு பனந்தோப்பில் சுவையான பழங்களிருப்பதாகவும் அங்கு எவரும் வாராதபடி தேனுகாஸுரன் என்பவன் கழுதை வேஷம் பூண்டு அந்து தங்கி இருப்பதாகவும் அவனை வென்று அக்கனிகளைத் தங்களுக்களிக்கும்படியும் வேண்டினர். பகவான் அஞ்சாமல் அங்கு சென்று மரங்களை உலுக்கிக் கனிகளைப் புசியுங்களென்றார். சிறுவர்கள் அங்ஙனமே செய்ய அதைக் கண்டு மிகச் சினங்கொண்ட அவ்வரக்கன் அங்கு வந்து சிறுவர்களை விழுங்க ஆரம்பித்தான். உடனே பகவான் பலராமனை நோக்கி, 'அண்ணா! சிறுவர்களைத் தாங்கள் ஜாக்ரதையாகக் காப்பாற்றுங்கள். பலி சக்ரவர்த்தியின் குமாரனான ஸாஹஸிகன் என்பவன் தூர்வாஸரது சாபத்தால் கழுதையாகிப் பாலகர்களைக்

கொல்கிருன். அவனை யான் கொன்று வருகிறேன்' என்ருர். ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்தவுடன் அவ்வாக்கனுக்குப் பூர்வ ஜன்ம விருத்தாந்தம் நினைவிற்கு வந்தது. ஹே, கிருஷ்ண! யான் முற்பிறவியில் பலியின் புதல்வனுன ஸாஹஸிகன். ஸகல தேவர்களையும் ஜயித்து மந்தர மலையின்மீது யான் வீற்றிருக்கும்போது திலோத்தமை அங்கு வந்தாள். நாங்களிருவருங் கூடிச் சிற்றின்பத்தி லீடுபட்டோம்.இரவு பகல் அறியாது பல்வகைப் பாடல் ஆடல்களுடன் ரமித்திருந்தோம். அங்கு அருகில் தூர்வாஸமுனி தவம் செய்ததை நாங்களறியவில்லை. எல்லைகடந்த எங்கள் செயலால் முனிவரது தவத்திற்கு விக்னமுண்டாயிற்று. ஆதலினவர் கோபங்கொண்டு என்னைக் கழுதையாகும்படியும் அவளை ராக்ஷஸியாகும்படியும் சபித்தார். பின்னர் நாங்கள் அவரடி பணிந்து குற்றத்தை மன்னித்துச் சாபத்தை அகற்றும்படி வேண்டினேம். தங்களது சக்ரத்தால் இவ் வுடல் எனக் ககலுமென்றும், திலோத்தமை, பாணாஸுரனுக்கு உஷை என்னும் பெண்ணுகப் பிறந்து தங்களது பௌத்ரனை மணந்து பின்னர் சாபம் நீங்கு மென்றும் அருள் புரிந்தார். ஆதலின் தாங்கள் என் சாபத்தை அகற்ற இக்கழுதை உடலைக் கொல்ல வேண்டும் என்று பிரார்த்தித்தான். இதைக் கேட்ட பகவான் நல்லறிவும் பக்தியுமுள்ள இவனை எப்படிக் கொல்வதெனத் தயங்கினுர். அதற்குள் விஷ்ணு மாயையால் அவனது அறிவு அகன்று அவன் அஹங்காரங் கொண்டான். பகவானைப் பல கடும் சொற்களால் தாக்கிப் போருக்கழைத்தான். இருவருக்கும் மிக பயங்கரமான யுத்தம் நடந்தது. முடிவில் பகவான் சக்ராயுதத்தால் அவனைக் கொன்று அவன் சாபத்தையகற்றி நற்கதி அளித்தார்.

தூர்வாஸர் விவாஹம். தன்னருகில் சிருங்கார சேஷ்டை செய்த தம்பதிகள் தூர்வாஸரது கண்ணில்பட்டார்களல்ல

வா? அந்த சிற்றின்ப ஆசை இவருக்கும் உண்டாய்விட்டது. சேர்க்கையே நல்லதையும் கெட்டதையுமுண்டு பண்ணவல்லது. நல்லவருடன் சேரவேண்டுமெனக் கூறும் நீதி நமக்கும் அதனால் நற்குணமுண்டாக வேண்டு மென விரும்புகிறது. தூர்வாஸர் மனம் தவத்தை நாடவில்லை. சிற்றின்பத்தை அளிக்கும் பெண்ணுருவையே நாடி நின்றது. அச்சமயத்தில் முன் கல்பத்தில் பிரும்மாவினது துடையிலிருந்து பிறந்து ஔர்வரெனக் காரணப் பெயர்பெற்ற முனிவரங்கு வந்தார். அவருடைய முழங்காலிலிருந்து மிக்க அழகான ஓர் கன்னிகை அவருக்குப் பிறந்தாள். அவள் பெயர் கந்தளீ. அவளுக்குத்தக்க வரனைத்தேடி மணம் செய்து வைக்கவேண்டுமென்பது அவரது ஆசை. கந்தளீ தூர்வாஸரது தவத்தையும் குலத்தையும்கேட்டு அவரைவிட்டு மற்றவரை மணப்பதில்லை எனத் தீர்மானித்தாள். ஆதலின் அவளையு மழைத்துக் கொண்டு ஔர்வர் தூர்வாஸரிடம் வந்தார். தூர்வாஸர் அப்பெண்ணைப் பார்த்ததும் மோஹமடைந்தார். சற்று நேரம் சென்றபின் மோஹந் தெளிந்து முநிவர் எழுந்தார். விருந்தினரை வரவேற்று விருந்தளித்தார். ஔர்வர் அதை ஏற்று தான் வந்த காரியத்தைக் கூறினார். அன்றியும் தனது மகளான கந்தளீ கடுமையாகப்பேசிக் கலஹம் செய்யும் துர்க்குணமுடையவள். பல குணங்களிடையே இந்த ஓர் தோஷமிருப்பதால் அதைப் பொருட்படுத்தாமல் அவளை ஏற்று அருள்புரியவேண்டும் என்றார். பெண்களை மணப்பது மோக்ஷ மார்க்கத்திற்கு விரோதமானது என்று தூர்வாஸர் நினைத்தாலும் சேர்க்கையால் வந்த காமவாஸனை அப்பெண்ணை மணக்கும்படி அவரைத் தூண்டியது.

ஆதலால் அவர் விதிப்படி கந்தளியை அவள் தந்தை முன்னிலையில் மணந்தார். ஔர்வர் பெண்ணை விட்டுப் பிரிய மனமில்லாது வருந்தி அவளுக்குச் சில உபதேசங்களைக்

கூறினர். குழந்தாய்! பெண்களுக்குப் பதியே தெய்வம். புருஷனது பணிவிடையே புண்யகருமம். முக்காரணங்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். அவன் கடுஞ்சொற்களைக் கூறினும் அவைகளைப் பொறுக்கவேண்டும். அவனையோ அவனது பந்துக்களையோ நிந்திக்கலாகாது. பதியை நோக்கிக் கடுஞ்சொற் கூறுபவள் கற்பையிழப்பாள். புருஷனைச் சந்தோஷப்படுத்துவதைவிட மனைவிக்கு வேறு புண்ணிய கருமமில்லை. உனது இயற்கை தோஷமான கடுஞ்சொல்லையும் கலஹத்தையும் விட்டுத் தூர்வாஸரிடம் அன்பாயிரு என்று கூறி ஔர்வர் தன்னிருப்பிடஞ் சென்றார். தூர்வாஸர் கந்தளியுடன் கூடிக் காமஸாகரத்திலீடுபட்டுப் பகலிரவெனப் பாராது பலநாள் படுக்கையைவிட்டு எழாதிருந்தார். சிலநாட் சென்றபின் கந்தளீ தன் ஸ்வபாவ குணத்தைக் கைக்கொண்டு கடுஞ்சொல் சொல்லிக் கலஹம் செய்தாள். ஸ்த்ரீமோஹத்தால் மிகக் கோபியான தூர்வாஸரும் அதைப் பொறுத்திருந்தார். ஒருநாள் அளவு கடந்து அவள் கடுஞ்சொற்களால் முனிவரைத் தாக்கினள். அவர் கடுங் கோபங்கொண்டு கந்தளியைச் சாம்பலாகும்படிச் சபித்தார்.

கந்தளியின் பூத உடல் அழிந்தது. ஸூக்ஷ்ம உடலுடன் அவள் ஆகாயத்தே நின்று முனிவரை வணங்கிக் கூறினள். நாத! ஸத்வம், ரஜஸ், தமஸ் என முக்குணங்கள் ஒவ்வோர் மனிதரிடமு முண்டு. தமோகுணம் மேலிட்டபோது கோபம் அஹங்காரம் முதலிய துர்க்குணங்களுண்டாகின்றன. கோபமுள்ளவன் கடுஞ்சொற் கூறுவது இயற்கையன்றோ? மிகப் பிரிய பார்யையான என்னைத் தாங்கள் கைவிட்டால் எனக்கு வேறு யார் கதி? என்றுரைத்துப் பேசாதிருந்தாள். முனிவர் அதைக்கேட்டு பத்நீ சோகத்தால் மூர்ச்சை யடைந்தார். சிறிது நேரம்சென்றபின்

எழுந்து உட்கார்ந்து அதையே நினைந்து வருந்தினார். ஸ்ரீ நாராயணன் ஒரு பிரும்மசாரி வேடம்பூண்டு அவரருகே வந்து தத்துவ ஞானத்தைப் புகட்டினார். கந்தளி, கந்தளி எனும் மான் ஜாதியாக உலகில் பிறந்தாள். தூர்வாஸரும் தவம் செய்ய ஆரம்பித்தார். இதனிடையில் பெண்ணைப் பார்க்க வந்த ஔர்வர், தன் பெண் சாம்பலானதை அறிந்து மூர்ச்சை யடைந்தார். தூர்வாஸர் சைத்யோபசாரஞ்செய்து அவரை எழுப்பினார். தூர்வாஸரே! உம்மை அவள் நிந்தித்தால் அப்பெண்ணை என்னிடம் அனுப்புவது முறையேயின்றி அவளை நீர் சபித்தது என்ன நியாயம்? சிறு குற்றத்திற்காகப் பெரும் சாபமளித்த நீர் ஓரரசனிடம் அவமானமடைவீர் என்று கூறி ஔர்வர் தன் ஆச்ரமஞ் சென்றார்.

அம்பரீஷன் சரிதம். யாரிடம் அவர் அவமானமடைந்தார் என நாரதர் வினவ நாராயணருரைத்தார். ஸூர்ய வம்சத்தில் அம்பரீஷன் என்று ஓர் அரசனிருந்தான். அவன் மிகுந்த தர்மசீலன். விஷ்ணு பக்தன். ஏகாதசி விரதம் தவறாமல் அனுஷ்டிப்பான். ஒரு த்வாதசியன்று காலையில் அவன் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துப் பிராமண போஜனம் செய்வித்துத் தான் பாரணை செய்யச் சென்றான். அச்சமயம் தூர்வாஸமுனி அங்குவர அரசனவரைப் பணிந்து யாது வேண்டுமென வினவினான். மஹர்ஷி தான் புஜிக்க விரும்புவதாகக் கூறி ஸ்நானம் செய்யக் கிளம்பினார். வேந்தன் அவர் வரவை வெகு நேரம் எதிர்பார்த்துமவர் வரவில்லை. த்வாதசீ திதி போய்விடும் ஸமயத்தில் அரசன் என் செய்வதென வருந்தி நிற்க அவன் குலகுருவான வஸிஷ்டரங்கு வந்தார். விருந்தினரை விட்டுப் புஜிப்பதும் பாபம். த்வாதசி சென்ற பின் விருந்தினருடன் உண்பதானால் ஏகாதசி விருதத்தின் பயன் கிட்டாது. என்ன செய்வதென்று அரசன் குருவைக் கேட்க, அவரும் நன்கு யோசித்துப் பகவானது பாதாரவிந்த

ஜலத்தைப் பருகினல் ஏகாதசி உபவாஸ பயனும்கிட்டும். உண்ணுமலிருந்து விருந்தினருக்கு அதிதி பூஜை செய்த பயனுமுண்டாகுமென்ருர். இதைக்கேட்ட அம்பரீஷன் அங்ஙனம் செய்ய தூர்வாஸ ரச்சமயமங்கு வந்தார். அரசன் ஸ்ரீ பாத ஜலமருந்தியது தன்னை அவமதித்ததாகுமெனக் கருதி கடுங்கோபங் கொண்டார். தன் ஜடையை அவர் அறுக்க அதிலிருந்து மிகப் பயங்கரமான ஓர் பூதங் கரத்தில் கத்தியை ஏந்தி அரசனைக் கொல்லச் சென்றது. அதே க்ஷணத்தில் இறைவனருளால் பக்தனைக் காக்க ஸுதர்சனம் விரைவாக வந்து அப்பூதத்தைக் கொன்று முனிவரிடம் வந்தது. அதன் உக்ர தேஜஸைக் கண்டு மஹர்ஷி பயந்து நடுங்கி பிரும்மாவைச் சரணமடைந்தார். அவர் தன்னல் முடியாதென்றுகூற மஹர்ஷி கைலாஸம் சென்ருர். இவர் நிலையைக் கண்டு வருந்திய பார்வதிபரமேச்வரர்கள் இவருக்கு நல் ஆசி கூறி வைகுண்ட நாதனைச் சரணமடையும்படி உரைத்தனர். அங்ஙனமே மஹர்ஷி வைகுண்டஞ் சென்ருர். அவருடன் ஸகல தேவர்களுமங்கு சென்று பகவானைத் துதித்துப் பிராமணரைக் காக்கும்படி வேண்டினர். வைகுண்ட நாதன் தனதுபக்தனை அம்பரீஷன் ஓராண்டாக இம்முனிவருக்காக அன்னமின்றிப் பக்தியுடன் உபவாஸமிருக்கிருன். அவனைச் சரணமடைந்தாலன்றி வேறு கதியில்லை என்ருர். உடனே தூர்வாஸர் அங்கு சென்று அரசனைச் சரண் புகுந்தார். அம்பரீஷனது பிரார்த்தனைக்கிணங்கி சக்ரம் அவரைக் கொல்லாமல் விட்டது. பரிபவமடைந்த தூர்வாஸர் அனுஷ்டானங்களை முடித்துவிட்டு அரசனளித்த விருந்தை ஏற்ருர். அம்பரீஷனும் பின்னர் புசித்தான். ஏகாதசி விருதத்தால் அரசனுக்கு இத்தகைய பெருமை உண்டாயிற்றென்ருல் அவ்வேகாதசியின் மஹிமையைக் கூறவும் வேண்டுமோ?

கோபீ வஸ்த்ராபஹரணம். ஒரு ஸமயம் கோப கன்னி

கைகள் கண்ணனையே பதியாகப் பெற வேண்டுமெனக் கோரி மார்கழி மாதமெல்லாம் விரதமனுஷ்டித்தனர். காலையில் குளிரையுங் கவனியாமல் யமுனையில் நீராடி மணலால் கௌரியின் பிம்பத்தைச் செய்து ஷோடசோபசார பூஜை செய்தார்கள். இந்த பூஜாவிதியும் அம்பிகையின் துதியும் ஹரியால், பிரும்மனுக்கு முன்னமுபதேசிக்கப்பட்டது. விதி தவறாமல் பெண்கள் ஒரு மாதம் பூஜை செய்து முடிவன்று காலையில் வழக்கப்படி யமுனையில் புனலாடினர். அவர்களுக்கு அருள் புரியக் கருதிய கண்ணன் கோபாலர்களுடனங்கு வந்து அவர்கள் பூஜைக்காக வைத்திருந்த பக்ஷயங்களைத் தின்றுவிட்டு கரையிலிருந்த அவர்கள் வஸ்திரங்களில் சிலவற்றை மூட்டை கட்டி பாலரிடமளித்துச் சிலவற்றை அருகிலுள்ள மரத்தின் மீதேறிக் கிளையில் பறக்க விட்டார். மரத்தின் மீதிருந்தபடியே பகவான் கோபிகைகளை அழைத்து நீங்கள் வஸ்திரமில்லாமல் ஜலத்தில் இறங்கியபடியால் வருணன் கோபங்கொண்டு உங்களது பூஜாத்ரவ்யங்களையும் வஸ்திரங்களையும் கொண்டு சென்றான் என்றார். இதைக் கேட்ட பெண்கள் தங்களுக்குத் தலைவியாய் தங்களுடன் ஜலக்ரீடை செய்யும் ஸ்ரீராதையினிடம் சென்று முறையிட்டனர். அவள் எல்லோரும் கரைமீதேறி கையால் குஹ்யஸ்தலத்தை மூடி வஸ்த்ரத்தை அளிக்கும்படிக் கேளுங்கள் என்றாள். அங்ஙனமே பெண்கள் கேட்கப் பகவான் அஞ்சலி செய்து கொண்டு துணியைக் கேட்டால் கொடுப்பேன். இல்லையேல் உங்கள் தலைவிக்கும் கௌரிக்கும் பயந்து கொடுக்க மாட்டேன் என்றார். இந்த சொல்லைக் கேட்ட ராதை ஜலத்தில் பத்மாஸநம் போட்டு உட்கார்ந்து மனதினால் பகவானை த்யாநம் செய்து துதித்தாள். உடனே பக்தபராதீநனான கிருஷ்ணனவளருகே வந்து வஸ்த்ரம் முதலியவைகளைத் தந்து எல்லோருக்கும் பேரானந்தத்தை அளித்துச் சென்றான்.

ராஸ க்ரீடை. ராதை முதலிய கோபிகைகள் விருதம் முடிந்தபின் என்றைக்கு அம்பிகை அருள் புரிவளோ? ஆநந்த வடிவனான கண்ணனை இறுகக் கட்டி அணைந்து அவனது அதராமிருதத்தைப் பருகும் நாள் என்னுளோ? என்று ஏங்கி இருந்தனர். மூன்று மாதம் சென்ற பின் சித்திரைமாத சுக்ல த்ரயோதசியன்று இரவு பூர்ண சந்த்ரோதயமான பொழுது பகவான் பிருந்தாவனத்திலே ராஸமண்டபத்திலே வேணுகானம் செய்தார். அது அவரவர் இல்லத்திலிருந்த கோபிகைகளைப் பரவசமாக்கிற்று. அந்தந்த பெண்களும் தாம் செய்த வேலையையும் வீட்டையும் உறவினரையும் மறந்து ஏகாக்ரசித்தத்துடன் ராஸ மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். கோலோகத்திலிருந்து பகவதவதாரத்தை ஒட்டி அவனியில் வந்த கோடிக்கணக்கான கோபிகைகள் அங்கு வந்து சூழ்ந்தனர். ப்ரதானமாயுள்ள ராதை பகவானுடன் பலவகையான க்ரீடைகளைச் செய்தாள். விளையாட்டாக ராதை பகவானது பீதாம்பரத்தைக் களைந்து வனமாலையை அறுத்து வேணுவைத் தூரே எறிந்து அவரை ஜலத்தில் தள்ளினுள். பகவான் ராதையையும் ஜலத்திற்கிழுத்துச் சென்றுர். பகவான் கரை ஏறியபொழுது பீதாம்பரம் முதலிய எல்லாம் அவரிடம் காணப்பட்டன. ராதையின் உடலில் வஸ்த்ர மில்லாதிருந்ததால் வெட்கமடைந்து பகவானை வஸ்த்ரமளிக்கும்படி வேண்டினுள். இங்ஙனம் கோடிக் கணக்கான கோபிகைகளுடன் தனித்தனி வீட்டில் தனித் தனியான உருவமெடுத்த பகவான் எண்ணிறந்த லீலைகளைச் செய்தார். காம சாஸ்திரத்தில் கண்ட பதினறு வகையான கலாபேதமுள்ள காந்தைகளிடத்தில் ஏற்றபடி பகவான் ரமித்தார். பனிரண்டு வகையான பிரகிருதஸுரதத்தையும் நான்கு வகையான விபரீதஸுரதத்தையுமளித்தார். ரஸம் நிறைந்த ராஸக்ரீடையிலீடுபட்ட ராதேசனைத் தரிசிக்க வானத்தில்

உமையுடன் உமாபதியும், வாணியுடன் வாணீபதியும், இந்திராணியுடன் இந்திரனும் மற்றுமுள்ளோரும் கூடினர். பக்திரஸம் ததும்பிய அக்ரீடைக்காக ஸநகாதி முனிவரும் வந்தனர். இங்ஙனம் இரவு பகலாக ஓர் மாதம் பகவான் பிரும்மாநந்தமெனும் ராஸக்ரீடையை அதற்கென அவதரித்து வந்த கோபிகைகளுக் களித்தார். இப் பேரானந்தத்தைப் பெற்ற பெண்மக்கள் பகவான் தமது அழகி லீடுபட்டார் என்றெண்ணிக் கர்வம் கொண்டனர். ஒரு நாள் பகவான் திடீரென ஒருவர் கண்ணிலும் காணாது ராதையுடன் மறைந்து விட்டார். கிருஷ்ணனும் ராதையுங்கூடி ஒருவருமில்லாத வனத்திலும் மலைக் குகையிலும் விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயமங்கு ஓர் முனிவர் வந்து பகவானைப் பணிந்து துதித்தார். அவரது உடல் எட்டுக் கோணலாயிருக்க ராதை அதைக்கண்டு நகைத்தாள். பகவான் பரிஹாஸம் செய்யாதே என்று கூற, அவர் யார்? என தேவி வினவினள். பகவான் முனிவரது சரிதத்தைக் கூறினர்.

தேவலர் அஷ்டவக்ரரான சரிதம். ஸ்ருஷ்டிகர்த்தாவான சதுர்முகன் ஸநகர் முதலிய நான்கு புதல்வர்களை மனதால் படைத்து ஜகத்தைப் படைக்கும்படி உத்தர விட்டார். அவர்கள் உலகவாஸனையை விட்டுப் பரமனது பாதாரவிந்த பக்தியிலீடுபட்டுத் துறவியாயினர். இதைக்கண்ட பிரும்மா, அத்ரி புலஸ்த்யர் ப்ரசேதஸ் முதலிய பல புதல்வர்களைப் படைத்து அவர்களைக்கொண்டு தனது வேலையைப் பூர்த்தி செய்தார். இவர்களில் ப்ரசேதஸிற்கு அஸிதன் என்றோர் புத்ரன் பிறந்தான். அவர் ஆயிரமாண்டு ஸத்புத்ரன் உண்டாக வேண்டுமெனக் கோரித் தவம் செய்தார். அப்போதும் கோரிய பலன் கிட்டாததால் மனவருத்தங் கொண்டு உடலை விட யத்தனித்தார். ஓர் அசரீரி வாக்கு, முனிவரே! ஆத்மஹத்தி மிகப் பாபமானது, சங்கரனை உபாஸித்து ஸத்புத்ரனைப்பெறு

விராக என்றது. அன்றுமுதல் அஸிதர் அரனை நாடி ஆயிரமாண்டு தவம் செய்தார். பரமசிவன் அவரெதிரில் தோன்றி எனது அம்சத்தினால் உமக்கு ஓர் புத்ரனுண்டாவான என்று கூறி ஷோடசாக்ஷர மந்திரத்தையு முபதேசித்துச் சென்றார். அவருக்குத் தேவலன் என ஓர் அரிய புத்ரன் ஜனித்தான். அஸிதர் நம் அம்மந்திரத்தால் உன்னை உபாஸிக்க நீ (ராதை) அவருக்குக் கோலோகமளித்தாய்.

தேவலரது அழகையும் யோக்யதையையுங் கண்ட ஸுயக்ஞராஜன் ரத்னமாலாவதி எனும் தன் பெண்ணை அவருக்கு அளித்து மணம் செய்து வைத்தார். பலகாலம் இல்லற தர்மத்திலீடுபட்ட முனிவர் ஒரு நாள் ஸம்ஸாரத்தில் வெறுப்புகொண்டு படுக்கையிலிருந்து மனைவியினிடமுங் கூறாமல் வெளிக்கிளம்பினார். படுக்கையிலிருந்து எழுந்து பர்த்தாவைக் காணாத அந்த பதிவிருதை அன்னபானாதிகளை ஏற்காது கணவனையே நினைந்து உயிரை விட்டாள். அவள் புதல்வன் தாய்க்கு மறுமைக் கருமங்களைச் செய்ய அவள் நற்கதி பெற்றாள். தேவலர் கந்தமாதன மலைக்குச் சென்று கண் மூடி ஆயிரமாண்டு கடுந்தவம் செய்தார். தற்செயலாக அங்கு வந்த ரம்பை அவரழகைக்கண்டு மோஹித்தாள். அவர் கண் திறக்கும்வரை காத்திருந்து தன் காதலைப் பூர்த்தி செய்யும்படி வேண்டினாள். முனிவர் சிற்றின்பத்திலுள்ள தீமையை விளக்கி நல்லுபதேசம் செய்தார். அது அவள் செவியில் ஏறவில்லை. அவள் மஹர்ஷியை நிர்ப்பந்தம் செய்ய அவர் கிழவனான தன்னைவிட்டு அழகுள்ள அமரரிடம் செல்லும்படி கூறினார். என்னையாவது என் சாபத்தையாவது நீர் ஏற்க வேண்டுமென ரம்பை கூற அவளை ஏற்காது சாபத்தையே ஏற்பதாகக் கூறினார். ஆதலால் சினங்கொண்ட ரம்பை அவர் உடல் எட்டுக் கோணலுள்ளதாகுமென மோஹினி பிரும்மனுக்கு அளித்ததுபோல் சாபமளித்தாள். அதனால்

அவர் அஷ்டாவக்ரரானர் என்று கூறி, கிருஷ்ணன் அவரைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். மஹர்ஷியின் மார்பிலிருந்து வெண்மை நிறமுள்ள விபூதி சிந்திற்று. அவர் உடலிலுள்ள மாம்ஸம் முதலியவை தபோக்னியால் நீற்று அங்ஙனம் பஸ்மமாக ஆயிற்று. ஆயினும் அவர் பகவானது எதிரில் தனது பிராணனை விட்டார். ஸர்வேச்வரனும் சந்தனக் கட்டைகளைக் கொண்டு சிதை அடுக்கி விதிப்படி அவனுக்கு ஈமக் கடன்களைச் செய்து கோலோகமனுப்பினர். மோஹினீ பிரும்மனுக்கு எங்ஙனம் சாபமளித்தாள் என்று நாரதர் வினவ, நாராயணரிஷி அதை விவரித்துக் கூறினர்.

பிரும்மனுக்கு மோஹினீ சாபம். ரைவத மன்வந்தரத்தில் ஸுசந்த்ரன் என்னும் அரசன் மலயத்ரோணியில் வீற்று ஆயிரமாண்டு தவம் செய்தான். அவனெதிரிற்றோன்றி சதுர்முகன் அரசன் கோரியபடி விஷ்ணுபக்தியையே வரமாக அளித்து ஸத்யலோகஞ்சென்றார். நடுவழியில் அவரது அழகைக்கண்டு மோஹினீ மோஹங் கொண்டாள். இதைக் கண்ட பிரும்மா ஹரியை மனதால் நினைத்துக் காமத்திற்கு இடமளிக்காமல் ஸத்ய லோகஞ்சென்றார். மூர்ச்சையுற்றிருக்கும் மோஹினியைத் தற்செயலாக அங்கு வந்த ரம்பை தட்டி எழுப்பி நடந்த விஷயத்தை விசாரித்து அறிந்தாள். உலகெலாம் உன்னைக்கண்டு மோஹமடைய இங்க பிரும்மா ஏன் உன்னை உதாஸீநம் செய்தாரோ? இருந்தாலும், நீ அஞ்சாதே! அழகிய ஆடைகளை அணிந்து அத்புத கானத்தோடு மன்மதனைச் சரணமடைந்து அவரெதிரே நர்த்தனம் செய். உடனே உனக்கு வசயமாவார் என்று கூறி ரம்பை சென்றாள். மோஹினியுமங்ஙனமே ஆட, அவர் முன்போல் பகவத்யானத்தால் காமத்தை அடக்கி அவளது நர்த்தனத்தைக் கொண்டாடி தக்க ஸன்மானம் செய்தார். அதை எற்காது தனக்குச் சிற்றின்பமளிக்கும்படி அவள் வேண்ட, பிரும்மா

யுவாவான இந்திராதி தேவர்களிடம் செல்லும்படி கூறினர். அவளதைப் பொருட்படுத்தாது காமனது ஸஹாயத்தால் அவரை வச்யப்படுத்த முயன்றாள். காமன் கணை அவர்மேல் விழவே சினங்கொண்ட பிரும்மா காமனது கர்வம் சிவனிடம் பங்கமடையு மெனச்சாபமளித்து மோஹினிக்குப் பல தத்வோபதேசம் செய்தார். அவள் செவியில் அது செல்லவில்லை. அவள் காமவெறிகொண்டு அவரைப் பலாத்காரமாகத் தன்னை ஆலிங்கனம் செய்து கொள்ளும்படி இழுத்தாள். அச்சமயத்தில் அத்ரி புலஸ்த்யர் முதலிய முனிவர்கள் அங்கு வந்தனர். உடனே மோஹினீ வெட்கமடைந்து அவரை விட்டு விலகி நின்றாள்.

மஹர்ஷிகள் ஏகாந்தத்தில் இருக்கும் இவர்களைக் கண்டு வியந்தனர். பிரும்மா, இவள் தனது ஸாமர்த்தியத்தைக் காட்ட இங்கு நர்த்தநம் செய்தாள். அதனால் களைத்துத் தந்தையினிடம் பெண் நிற்பதுபோலிங்கு நிற்கிறாள். வேறொன்றுமில்லை என்றார். இதைக் கேட்ட மோஹினிக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. பிரும்மனைப் பார்த்து மோஹினீ, உமக்கு எங்கும் எக்காலத்திலும் பூஜை நடக்காது. விரைவில் உமக்குக் கர்வபங்கமுமுண்டாகும் என்று கூறி சென்றாள். அன்று முதல் பிரும்மனுக்கு எங்கும் பூஜை கிடையாது. இதைப் பகவானிடம் அறிவிக்க பிரும்மா வைகுண்டஞ் சென்றார். நாராயணன் அவரை வரவேற்று ஸமாதாநப்படுத்திக் கொண்டிருந்தார். அச்சமயம் வாசற்காப்பான் உள்ளே நுழைந்து மற்றோர் பிரும்மாண்டத்திற் கதிபதியான பிரும்மா வந்திருப்பதாகக் கூறினன். அவரை அழைத்துப் பகவான் அவருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மற்றோர் பிரும்மா வந்தார். அவர் நூறு முகத்துடன் காணப்பட்டார். அவருடன் பகவான் உரையாடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஆயிரம் முகங்கொண்ட மற்றோர் பிரும்மா வந்தார். இங்

வனம் பற்பல பிரும்மாக்களைக் கண்டவுடன் இவர் திகைத்து நின்றார். தான் ஸத்யலோகாதிபதி என்றும் மோஹினியை ஜயித்தவர் என்றும் அவர் கர்வங்கொண்டிருந்தார். இவர்களைப் பார்த்தவுடன் தன்னைவிடச் சிறந்த பலர் உளர் என்ற எண்ணம் உண்டானது. தன்னைச் சிக்ஷிக்கவே பகவான் இங்கு பல பிரும்மாக்களை வருவித்தார் என எண்ணினார். தனது செயலை நினைந்து வருந்தி வெட்கத்துடன் தலை குனிந்து நின்றார். அச்சமயம் கைலாஸநாதன் ஆங்கு எழுந்தருளி மிக இனிமையாகப் பாடினார். அதைக்கேட்டு எல்லோரும் ஜலமாக உருகினார்கள். அந்த ஜலமே கங்காப்ரவாஹமானது. அதில் ஸ்நாநம் செய்து கர்வத்தினாலுதித்த பாபத்தை அகற்றி ஸத்யலோகம் போகும்படி விஷ்ணு பிரும்மனுக்குத்தரவிட்டார். இங்ஙனம் கர்வங்கொண்ட சங்கரர் பார்வதி சந்த்ரன் ஸூர்யன் முதலியவர்களது கர்வத்தையும் பகவான் அகற்றினார்.

சிவ கர்வபங்கம். கிருஷ்ணன் ராதாதேவிக்குரைத்தபடி நாராயணர் இக்கதைகளைக் கூறினார். ராதே! பரமசிவன் எனது அம்சமே ஆவார். அவர் ஒரு ஸமயம் எல்லோருக்கும் எல்லாவரத்தையுமளிக்கும் சக்தி தனக்கிருப்பதை எண்ணிக் கர்வங்கொண்டார். அச்சமயம் விருகாஸுரன், தவம் செய்ய அவனெதிரில் சிவன் தோன்றி அவன் வரங்கேளாதது கண்டு வருந்தினார். பின் என் மாயையால் அவன் கோரியபடி யார் தலையில் அவன் கையை வைத்தாலும் அவர் இறக்கவேண்டுமென்ற வரத்தை அளித்து விட்டார். அக்கொடிய அஸுரன் சிவன் தலையிலேயே கையை வைக்க ஆரம்பித்தான். தனது பக்தனைக் கொல்ல மனமில்லாமல் பரமசிவன் பயந்து ஓடினார். அவரது ஆத்மஸ்வரூபமான என்னைக் கிருஷ்ணா என்றழைத்தார். நான் மாயையால் அஸுரன் புத்தியை மயக்கி அவன் தன் தலைமீதே கையை வைக்கும்படி செய்து அவனைக்கொன்

றேன். அப்போது சிவனது கர்வம் அகன்றது. அன்றியும் அவர் ஒரு ஸமயம் தனக்கிடு எவருமில்லை எனக்கருதி திரு புராஸுரனுடன் போருக்குச் சென்றார். ஓராண்டு சண்டைக் குப் பிறகு அஸுரன் ஐம்பது கோடி மைல் ஆகாயத்தில் பறந்து நின்று யுத்தம் செய்தான். ருத்ரனும் ஆங்கு சென்று ஒரு மாதம் சண்டை யிட்டார். அஸுரன் சிவனது வில்லை யும் தேரையும் முறித்து அவர் மூர்ச்சையாகிக் கீழே விழும்படி பாணத்தை விட்டான். அவர் கீழே விழுந்த தைக்கண்ட தேவரும் முனிவரும் என்னைச் சரணமடைந்து சிவனைக் காக்கும்படி வேண்டினர். யான் விருஷப ரூபங் கொண்டு அவரைத் தூக்கிக் களையையகற்றி எனது சூலத் தைத்தந்தேன். அதைக்கொண்டு அவர் அரக்கனைக் கொன்று வெற்றி பெற்றார். அப்போதும் அவர் கர்வமகன்றது.

சிவ மஹிமை. ஆநந்த ரூபியான அரனைச் சுமக்க என் னைத் தவிர வேறெவருக்கும் சக்தியில்லை. ஆதலால் யான் அவருக்கு வாஹகமானேன். எனது மனமே பிரும்மா. எனது அறிவே மஹேசன். எனது ஸந்தோஷமே விநாயகர். ஆயினு மிவர்கள் எனது இச்சையினால் தனித்தனியாக உருவெடுத்து உலக கார்யத்தைக் கவனிக்கின்றனர். உலகில் சிவனைவிடப் பிரியமான பொருள் எனக்கில்லை. அவருக்கும் என்னைவிட இன்பமான பொருள் கிடையாது. ஒரு ஸமயம் என்னைத் தர்சிக்க சிவன் கோலோகத்திற்கு வந்தார். அச்சமயம் அழகு வாய்ந்த எனது ரூபத்தை இரண்டு கண்களால் பார்ப்பது போதாதென அவர் வருந்தினார். உடனே ஞானக்கண்ணுள்ள மூன்றுங் கண்ணை யானவருக்கு அளித்தேன். ஆயினும் நான் முகனைக் கண்டு எட்டு கண்களால் தர்சிக்கும் பாக்யம் பெற் றானவன் என்று இவருரைத்தார். அவரது உள்ளத்தை உணர்ந்த யான் அவருக்கு ஐந்து முகங்களை அளித்தேன். ஒவ்வொரு முகத்திலும் அவருக்கு மூன்று கண்களுண்டு.

அவை ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களாகும். ஸதியினிடம் அவர் வைத்திருந்த அன்பைக் காட்டவே அவள் கபாலத்தைக் கையிலேந்தி அவள் உடல் எரிந்தபின் அந்த பஸ்மத்தை உடலில் அணிந்திருக்கிறார். மானாவமானம், சுக துக்கம், சீத உஷ்ணம் முதலியவைகளைச் சமமாக எண்ணும் யோகீச்வரர் அவர். ஆதலால் பீதாம்பரத்தை விடுத்து திகம் பரராகவும் யானைத்தோல் புலித்தோல்களை உடுப்பவராகவும் தோற்றுகிறார். கருடனிடம் பயந்து சரணமடைந்த ஸர்ப்பங்களை அன்புடன் பயமளித்து ஆபரணமாக அணிந்திருக்கிறார். பாரிஜாத மலரைவிட்டு ஹேமத்தைப் பூவையும் பில்வ பத்ரத்தையும் ஏற்கிறார். அரண்மனையைவிட்டு ச்மசானத்தில் வஸிக்கிறார். அவரது ஆயுளையும் மஹிமையையும் நானே அறியமாட்டேன். ஒரு ஸமயம் நானளித்த ப்ரஸாதத்தை அவர் பார்வதிக்களிக்காமல் தானே புஜித்துவிட்டார். ஆதலால் கோபங்கொண்ட உமை சிவனுக்கு நிவேதனம் செய்த பொருளை எவரும் பக்ஷிக்கக்கூடாதெனச் சபித்தாள். கோபத்துடன் தேவி பகவானது கழுத்தைப் பார்க்க அது கறுத்தது. ஆதலின் அவர் நீலகண்டனானார். அவரை விதிப்படி பூஜிப்போர் மோக்ஷ ஸாம்ராஜ்யமடைவர். என்றுரைத்து ஸதீ கர்வபங்கத்தைக் கூறினர்.

ஸதீ கர்வபங்கம். பரமசிவனது சக்தியே ஸதி என்றழைக்கப்படுகிறது. அவள் ஒரு சமயம் தக்ஷனுக்கு மகளாகத்தோன்றினாள். தக்ஷன் பரமசிவனை அழைக்காமல் ஓர் யாகம் செய்ய அதற்கு ஸதீதேவி சிவனது விருப்பத்திற்கு மாறாகச் சென்றாள். தக்ஷன் அவளை அங்கு வரவேற்காததால் அவள் வருந்தி கர்வத்தை விட்டாள். வெட்கமடைந்த ஸதி அவ்வுடலை விட்டு ஹிமாலயத்திற்குப் பெண்ணாகப் பிறந்தாள். பரமசிவனை தனக்குப் பதியாகவேண்டுமென்று தவம் செய்தாள். அம்மலையில் ஆபெரரத்தின் அடி

யிலே தவம் புரியும் பரமசிவனுக்குத் தந்தையின் உத்தரவுப் படி பணிவிடை செய்தாள். அச்சமயம் தேவர்களது பிரார்த்தனைக்கிணங்கி காமன்மிக்க அழகுவாய்ந்த உமாதேவியினிடம் பரமசிவன் மோஹிக்கும்படி மோஹனாஸ்த்ரத்தை விட்டான். கோபங்கொண்ட பரமசிவன் காமனை நெற்றிக் கண்ணால் எரித்துவிட்டு மறுபடியும் தவம் செய்தார். இதைக் கண்ட பார்வதி தனது அழகு வீணானதைக் கண்டு வருந்தினாள். அப்பொழுது அழகிற்சிறந்தவள் யான் என்ற அவளது கர்வத்திற்கு பங்கம் வந்தது. இதைக் கேட்ட ராதை பார்வதி விவாஹத்தை விரிவாகக் கூறும்படி வேண்ட ஸ்ரீ கிருஷ்ணனுரைத்தார்.

பார்வதீ பரிணயம்.

பரமசிவத்தையே பதியாகப் பெற பார்வதீ தேவி பலர் தடுத்துங் கேளாமல் கடுந்தவம் செய்து வந்தாள். சிவன் கருணை புரியாததால் அவ்வுடலை விட்டுவிட வேண்டுமென அக்னிப்ரவேசம் செய்ய முயற்சித்தாள். அச்சமயம் மன்மதன்போல் அழகுவாய்ந்த வாமனனான ஓர் அந்தணச் சிறுவன் அவளெதிரிற் றோன்றினான். தேவி அவ்விருந்தினரை நன்கு பூஜித்துத் தனது குறைகளைக்கூறி அவரெதிரில் அக்னியில் நுழைந்தாள். தேவியின் தவ வலிமையாலும் வாமனராக வந்த பரமசிவத்தினருளாலும் அவ்வக்னி சந்தனம்போல் சீதளமாய் விட்டது. வாமனர் தேவியின் தவத்தைக் கொண்டாடி அமங்களவேஷமுள்ள சிவனையே அவள் பதியாகக் கோருவதைக் கண்டித்தார். பார்வதீ பரம சிவத்தின் தத்துவத்தை விளக்கிக் கூறி அவரை அன்றி வேறெவரையும் மணப்பதில்லை என்று உறுதியாகக் கூறினாள். உமையே! விரைவில் உன்னுள்ளங் கைகூடும். வீட்டிற்குச் செல். அதற்கு வேண்டிய உதவி யான் செய்கிறேனென்று

கூறி வாமனர் மறைந்தார். பார்வதி வீட்டிற்குக் கிளம்ப பர்வத ராஜன் அவள் வரவை அறிந்து மிக்க ஸந்தோஷத்துடன் அவளை வரவேற்றான். அவளைச் சூழ்ந்து மேனகை முதலிய பெண்மக்கள் தவத்தால் அவளிளைத்ததை வர்ணித்து வருந்தினர். அச்சமயம் அங்கு ஓர் பிச்சைக்காரன் வந்து பல வாத்தியங்களை வாசித்துப் பாடினான்.

அதைக் கேட்டவுடன் எல்லோரும் மயங்கி மூர்ச்சையாகக் கீழே விழுந்தனர். அச்சமயத்தில் தேவி அப்பிக்ஷுகனைக் கையில் மாலையை எந்திவந்த பரமசிவனாகப் பார்த்தாள். உடனே தன்னை மணந்து கொள்ளும்படிக் கேட்டாள். எல்லோருக்கும் மயக்கமகல பழைய பிக்ஷுகனே அங்கு காணப்பட்டான். அத்புதமாக அவனுடையதைக் கண்டு பரம ஸந்தோஷமடைந்த மேனகை அவனுக்கு ரத்னங்களை அளிக்க வந்தாள். அவன் அதை விரும்பாமல் அவளது கன்யாரத்னமான உமையை வேண்டினான். பரமசிவன் மனைவியை இப்பாமரன் கேட்கத்தகுமோ? சேடீ! இவனைத் தூரே இழுத்துத் தள்! என்று மேனகை கூறினாள். அச்சமயம் விஷ்ணுவுக்குப் பூஜை செய்து முடித்து வந்த ஹிமாலயன் இதைக் கேட்டு அங்ஙனமே பிக்ஷுகனிடம் கோபங்கொண்டு அவனைத் தள்ளும்படி கூறினான். அப்பிக்ஷுகனிடம் எவரும் கிட்டே அணுக முடியவில்லை. அன்றியும் அவன் ஹிமாலயத்தின் கண்ணில் ஒரு ஸமயம் மஹா விஷ்ணுவாகவும் மற்றோர் ஸமயம் பரமசிவனாகவும் இந்திரனாகவும் அஷ்டதிக் பாலகர்களாகவும் காணப்பட்டான். இஃதுடன் நில்லாது தான் விஷ்ணுவின் மேல் சாத்திய மாலையும் அவருக்கு அர்ப்பணம் செய்த பக்ஷ்யங்களும் இவரிடம் காணப்பட்டன. இவ்வாச்சரியத்தைக்கண்ட ஹிமாலயன் மெய்மறந்து பிக்ஷுகர் சிவனே என்றுணர்ந்து அவர் கேட்டபடி கன்னிகையை அளிக்கச் சித்தமாயிருந்தான். ஆனால் உடனே மாயை அவனைச் சூழ்ந்து

கொண்டது. கன்னிகையைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவருக்குத் தருவதாகக் கூறினன். பிக்ஷுகனே பெண்ணைத் தவிர வேறெதுவும் வேண்டாமென்று கூறி மறைந்தான். உடனே ஹிமவானுக்கும் மேனகைக்கும் வந்தவர் சிவனென்ற எண்ணம் உண்டாயிற்று. தங்களது அஞ்ஞானத்தை நினைந்து வருந்தினர்கள். இதனிடையில் தேவர்கள் ஒன்று கூடி யோசித்தனர். உத்தமபாத்ரமான பரமசிவத்திற்குக் கன்னிகாதானம் செய்யும் ஹிமவான் மோக்ஷமடைவனல்லவா? அவனது உடலாலல்லவோ பூமி சரியாக நிற்கிறது. அவனில்லையேல் பூமி அழியும். ஆதலின் பரமசிவத்திற்கு, அவன் விருப்பமில்லாமல் பார்வதியின் நிர்ப்பந்தத்திற்காக அன்னையைக் கன்னிகாதானம் செய்யும்படி ஏற்பாடு செய்வோம் என்று தீர்மானித்தனர். பிறகு ஸுரகுருவான ப்ருஹஸ்பதியை அழைத்து, ஸத்குரோ! தேவகார்யத்தைநாடி ஹிமாலயத்தினிடஞ் சென்று சிவபக்தி குறையும்படி சில உபதேசங்களைச் செய்யுங்கள் என்றனர். அவர் சிவாபசாரத்தினல் வரும் தீமைகளைக் கூறி அங்ஙனம் செய்ய முடியாதென மறுத்தார். பின்னர் தேவகார்யத்தைக் கருதி தேவர்கள் ப்ரும்மாவை வேண்ட அவருமதை அப்படியே மறுத்தார். எல்லோரும் சிவனிடஞ் சென்று அவரையே இவ்வுதவி செய்யும்படி வேண்டினர்கள். ப்ரும்மாதி தேவர்கள் வேண்டியபடி பரமசிவன் ஓர் ப்ரும்மசாரி வேடம்பூண்டு ஹிமாலயத்தினிடஞ் சென்றார். அவரது அழகிய உருவையும் அவர் கழுத்தில் கட்டியிருக்கும் ஸாளக்ராமத்தையுங் கண்டு வியந்த ஹிமாலயன் தன் பரிவாரத்துடன் எழுந்து நின்று அவரை வரவேற்றுப் பூஜித்தான்.

ஓ, பர்வதராஜ! நீ உனது அழகிய அருமை மகளைச் சம்புவுக்கு அளிக்கப் போவதாகக் கேட்டு உனக்கு நல்லுபதேசஞ் செய்ய வந்தேன். சிவனுக்குத் தந்தை தாயுண்டோ?

அவனுக்கு வயது எவ்வளவு ஆயிற்று? அறிவாயா? விவாஹம் செய்துகொண்ட பின் உன் மகள் எங்கே வஸிக்க வேண்டும் தெரியுமா? ஆண்டியாய்த் திரியும் ஒருவனுக்கா கன்னிகாதானம் செய்யப் போகிறாய்? பாத்ரத்தையும் கோத்ரத்தையும் அறியாமல் ஒருவனுக்குப் பெண்ணை யளித்தல் பாவமன்றோ? பார்வதியைத் தவிர ஏனைய பந்துக்களைக்கேள்! அவர்களில் முக்யமான பந்து உன் மனைவியான மேனகையே ஆவள். அவளைக் கலந்து யோசித்துச்செய்! அநியாயமாக ஒரு பெண்ணைக் கெடுக்காதே! என்று கூறி, வந்த பிரும்மசாரி அவனளித்த விருந்தை உண்டு மறைந்தார். இதைக் கேட்டிருந்த மேனகை, நாதா! விருந்தினர் விளம்பியது முற்றிலுமுண்மை. அழகும் தநமும் வாய்ந்த மற்ற தேவருக்குத்தான் பெண்ணைக் கொடுக்க வேண்டும். சிவத்தைப் பூஜிப்போம்! பெண்ணை அவருக்களிக்கலாகாது. அவருக்களித்தால் யான் விஷத்தை உண்டோ நெருப்பில் வீழ்ந்தோ இறப்பேன் என்றாள்.

அச்சமயத்தில் அருந்ததியுடன் ஸப்த ரிஷிகளுமங்கு சிவனுக்கு உமையைக் கேட்க வந்தனர். மேனகையின் கருத்திற்கிசைந்த ஹிமவானும், பரம ஏழையாயும் பலவித பயங்கர வேஷத்தைத் தரித்தவராயுமுள்ள ருத்ரனுக்குப் பெண்ணை அளிக்க மறுத்தான். வஸிஷ்டர் பரமசிவத்தின் பெருமையை எடுத்துக்கூறி அவரை விட ஸத்பாத்ரம் உலகிலில்லை என்றார். அன்றியும் அத்தகையோர் நமக்குக் கிடைப்பதரிது. அவருககுப் பெண்ணையளித்தால் அநரண்ய ராஜன் தன் பெண்ணை ஓர் தவஸிக்களித்து பிரும்ம சாபத்திலிருந்து மீண்டு பல நன்மைகளைப் பெற்றதுபோல் நீயும் நற்கதி பெறுவாய் என்றார். ஹிமாலயன் அநரண்யனது சரிதத்தைக்கூறும்படி வேண்ட வஸிஷ்டருரைத்தார்.

அநரண்யன் சரிதம். இந்திரஸாவர்ணி எனும் மனு எழு

பத்தொரு யுகம் ராஜ்யபாரம் செய்து ஸுசந்த்ரனெனும் புத்ரனிடம் ராஜ்யத்தை அளித்துத் தபோவநஞ் சென்றார். அவர் வம்சத்திலே மங்களாரண்யனென ஓர் அரசனிருந்தான். அவனுக்குப் புத்ரபாக்யமில்லாததால் பரமசிவனை நாடித் தவம் செய்தான். அவர் ப்ரத்யக்ஷமாகத் தோன்ற அரசன் அவரை வணங்கித் தனக்கு விஷ்ணு பக்தனான புதல்வன் பிறக்க வேண்டுமென வரம் பெற்றான். அங்ஙனமே அவனுக்கு அரண்யனெனும் பக்தன் பிறந்தான். அவன் மிக்க தார்மிகன். பல யாகங்களைச் செய்தான். இந்திர பதவியையும் துச்சமாக நினைத்தான். அவன் ஐம்பது பெண்களை மணந்து கொண்டான். நூறு புதல்வர்களும் ஓர் கன்னிகையும் அவனுக்கு ஜனித்தார்கள். பத்மா எனும் அக்கன்னிகை பத்மையைப்போலவே இருந்தாள். அப்பெண் யௌவன பருவத்தைப் பெற்றாள். அழகிற் சிறந்த பத்மைக்கேற்ற பதியைத் தந்தை தேடிக்கொண்டிருந்தான்.

அச்சமயம் பிப்பலாதர் எனும் மஹர்ஷி அரசனது அரண்மனைக்கு வந்தார். அவர் ஓர் கந்தர்வ தம்பதிகளைக் கண்டு சிற்றின்பத்தில் ஆசைகொண்டு அங்கு வந்தார். அரசன் அவர் உள்ளத்தை உணராமலே எதைக் கேட்டாலும் தருவதாக வாக்களித்தான். அவர் அரசனது பெண்ணைக் கேட்டவுடன் ஏகபுத்ரியான பத்மையை அவருக்கு அளிக்க மனமில்லாமல் வருந்தினன். ஆதலின் பதிலுரைக்காது மன்னன் மௌனமாயிருந்தான். மஹர்ஷி கோபங் கொண்டு உன்னைச் சபிக்கட்டுமா? பெண்ணைத் தருகிறாயா என்றார். வேறு வகையில்லாமல் அரசன் கன்னிகையை முனிவருக்களித்து விட்டு ஸம்ஸாரத்தில் வெறுப்புகொண்டு வனஞ் சென்றான். பத்மை தனது பர்த்தாவைத் தெய்வமாகக்கருதி பூஜித்து வந்தாள். ஒரு நாள் அவள் தடாகஞ் சென்று ஸ்நானம் செய்து திரும்பும்போது தர்மதேவர் அவளது

கற்பைப் பரிசோதிக்கக் கருதி ராஜவடிவத்துடன் எதிரில் வந்தார். அந்தமில்லாக் கிழ முனிவரை விட்டுத் தன்னை மணக்கும்படி அவளுக்குக் கூறினார். பத்மை அவரைப் பார்த்துத் தன்னைத் தாயாகக்கருதி விலகும்படி கூறினாள். அவர் பிடிவாதம் செய்யவே நீ க்ஷயித்துப் போவாய் எனச் சபித்தாள். தர்மர் தனது நிஜ உருவைக்காட்டி தான் வந்த நோக்கத்தைக் கூறி அவளது பதியை மன்மதனைப்போல் செய்துவிட்டார். அன்றியும் தனக்களித்த சாபத்தை அகற்றும்படி வேண்டினார். எனது உள்ளத்தை உணர்ந்தும் நீர் என்னைச் சோதித்தபடியாலும் கற்பரசிகளது சொல் பொய்த்துப் போகாது ஆதலாலும் நீர் கிருதயுகத்தில் நான்கு பாதங்களுடனும், திரேதையில் மூன்று பாதங்களுடனும், த்வாபரத்தில் இரண்டு பாதங்களுடனும், கலியில் ஒரே பாதத்துடனுமிருப்பீர். தேவாலயம் நக்ஷத்திரம், புஷ்போத்யாநம் ஸ்வதர்மத்தைக் கைவிடாதவர், கற்பரசி ஆகிய இவ்விடங்களில் நீர் பூர்ணமாக வஸிக்கலாம் என்று கூறி பத்மை பதியினிடஞ் சென்றாள். இக்கதையைக் கூறி வஸிஷ்டர் ஹிமாலயத்தைப் பார்த்து அநரண்யனைப்போல் நீ பரமசிவத்துக்குக் கன்னிகாதாநம் செய்து விடு. இல்லையேல் நஷ்டமடைவாய். பார்வதி முற் பிறவியில் தாக்ஷாயணியாக இருந்து பரமசிவத்துடன் ரமித்திருந்தாள். தக்ஷனது ஸம்பந்தத்தை வெறுத்து அவ்வுடலை விட்டாள். அவளே உன் புதல்வியாக வந்திருப்பதால் அவளை அவள் புருஷனுக்கு அளிக்க மாட்டேன் என்று கூற உனக்கென்ன அதிகாரம்? என்று கூறினார். இதைக் கேட்டபின் ஹிமாலயத்திற்கும் அவன் மனைவிக்கும் மயக்கம் நீங்கியது.

விவாஹத்திற்காக விச்வகர்மாவைக் கொண்டு விசித்ரமான மண்டபம் ஒன்றை ஹிமாலயன் நிர்மாணம் செய்தான். மலைகளுக்கும் பற்பல தேவஜாதிகளுக்கும் மஹர்ஷிகளுக்கும்

விவாஹப் பத்திரிகை அனுப்பினான். நேராகப் பரமசிவனிடம் சென்று தன் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமெனப் பிரார்த்தித்தான். சங்கரனும் விவாஹத்திற்கேற்ற வேஷந் தரித்துத் தனது கணங்களுக்கும் அழகிய ஆடை ஆபரணங்களை அளித்து அஷ்டா தச வாத்யங்களும் முழங்க திவ்ய விமானத்தின் மீதேறி பவனி வந்தார். மலைராஜன் மணமகளுடன் மஹேச்வரனை எதிர் கொண்டழைத்து வந்தான். பிரும்மா அருகில் வந்து வைதிக கார்யங்களைச் செய்து வைத்தார். விதிப்படி விவாஹோத்ஸவம் முடிந்தது. வந்திருந்த வானவரனைவரும் தனித் தனியாக தம்பதிகளை வணங்கி வாழ்த்தி விடைபெற்றுச் சென்றனர். பரம சிவத்தின் அழகைக் கண்டு எல்லோரும் மோஹித்து அவரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் வருந்தினர். மேனகை, மன்மதனையும் பழிக்கும் உருவம் வாய்ந்த உமாகாந்தனைக் கண்டு அகமகிழ்ந்தாள்.

இந்திர கர்வபங்கம். இந்திரனது கர்வத்தை எங்ஙனம் பங்கம் செய்தீர் என்று ராதை வினவ, கிருஷ்ணனுரைத்தார். மூவுலகிற்கும் தானதிபதி என்றும் கல்பகவிருக்ஷம் காமதேனு சிந்தாமணி முதலிய எண்ணிறந்த செல்வம் தனக்குளதென்றும் தேவர்களும் ஸப்தர்ஷிகளும் தன்னைப் பூஜிக்கின்றனர் என்றும் இந்திரனுக்குக் கர்வமுண்டாயிற்று. இவ்வெண்ணத்துடன் அவன் ஆஸனத்தில் வீற்றிருக்க, முன்னும் பின்னும் பலர் கைகட்டி வாய் புதைதது நின்று அவனைத் துதிக்க, அத்தருணத்தில் ஸுரகுருவான பிருஹஸ்பதி அங்கே வந்தார். எந்த பெரியார் வந்தாலும் எழுந்து நின்று மலர்ந்தமுகத்துடன் வாருங்களென்றுகூறி வரவேற்று ஆஸனமளிப்பது தர்மமாகும். அதிலும் குரு என்பார் ஸாக்ஷாத் கடவுளே ஆவர். இந்திரன் தன கர்வத்தால் அவரை அழைக்கவில்லை. ஆஸநத்தைவிட்டு எழுந்திருக்கவு மில்லை. புன்னகையும்புரியவில்லை. தலையையும் அசைக்கவில்லை. இதைக்

கண்டு வியந்த பிருஹஸ்பதி விரைவாகத் திரும்பித் தபோ வனஞ் சென்றார். சில நாட்களாகத் தனது ஆசான் ஸபைக்கு வாராதகாரணம்,தானவரை வரவேற்காததே என்றுணர்ந்தான். தனது செயலைத் தானே வெறுத்தான். குரு மனைவியைப் பணிந்து எனது குரு எங்கே என வினவினான். அவள் ஞானக் கண்ணால் இவனது ஸபையில் நடந்த விஷயங்களை அறிந்து நீ செய்த பாபத்தால் குரு தர்சநம் உனக்குக் கிட்டாது. விரைவில் ராஜ்யத்தையும் இழப்பாய் என்று கூறினாள். இதைக் கேட்டு வருந்தி இந்திரன் கங்கைக்குப் புனலாடச் சென்றான்.

அங்கு அஹல்யை ஸ்நாநஞ் செய்யக் கண்டான். அவளது ரூபலாவண்யத்தைப் பார்த்தவுடன் இவன் குருவையும் அவருபதேசத்தையும மறந்தான். அவளிடஞ் சென்று தன்னைக் கட்டியணைந்து காமஸுகத்தை அளிக்கும்படி வேண்டினான். அவளதை மறுத்து அவனுக்குத் தர்மோபதேசஞ் செய்து ஆச்ரமஞ் சென்றாள். இந்திரன் அவள் பதியான கௌதமரது உருவத்தைத் தரித்து அவளுடன் ஏக சயநத்திலிருந்தான். தீர்த்தயாத்ரைக்குச் சென்றிருந்த கௌதமர் திடீரென உள்ளே நுழைந்தார். தனது ரூபத்தை எடுத்துத் தன் மனைவியின் கற்பைக் கெடுத்த இந்திரனிடம கடுங் கோபங் கொண்டார். அவனது உடலெலாம் துர்க்கந்தம் வாய்ந்த பெண் குறிகளாகுமென்றும் ஸூர்யனது அருளால் சிலகாலம் சென்றபின் அவைகள் கண்களாக மாறும் என்றும் சபித்தார். அஹல்யை கல்லாக இருந்து ஸ்ரீ ராம பாத தூளியால் சுத்தமாகி நிஜரூபத்தை அடைவாள் என்றும் சபித்துத் தவம் செய்யச் சென்றார். இந்திரன் பிரும்மாவினிடம் சென்று அவரைச் சரணமடைந்தான். குரு இராததால் இவனை அஸுரர்கள் பீடிப்பதைக் கண்ட பிரும்மா விச்வரூபன் என்பவனைக் குருவாகக் கொள்ளும்படி கூறி

அனுப்பினர். அங்ஙனமே அவரை ஆசார்யனாக ஏற்று இந்திரன் ராஜ்யபாரம் செய்து வந்தான். விச்வரூபன் தைத்யர்களது பேரனாதலால் அவர்களிடமன்பு கொண்டு, யாகத்தில் அவர்களுக்கும் ஹோமம் செய்து வந்தான். இதைக் கண்டு இந்திரன் கோபத்தினால் அவனைக் கொன்று விட்டான். உடனே அவனைப் பிரும்மஹத்தி தோஷம் பயங்கரமான ராக்ஷஸி உருவமெடுத்துத் துரத்தியது. மூவுலகும் சுற்றி சரணமில்லாமல் முடிவில் மானஸஸரஸில் தாமரைத்தண்டுக்குள் புகுந்தான். அதன் கரையிலேயே பிரும்மஹத்தி அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. இதனிடையில் நஹுஷன் இந்த்ரபதவிக்கு வந்து இந்திராணியைப் பெண்டாடக் கருதினான். அவள் தன் குருபத்னியைச் சரணமடைந்தாள். உடனே பிருஹஸ்பதி சிஷ்யனது கர்வம் அகன்றதெனக் கருதி மானஸஸரஸ் சென்று அவனை அழைத்தார். அவனுடன் இந்திரன் எழுந்து வந்து குருவைப் பன்முறை பணிந்து தன் அபசாரத்தை க்ஷமிக்கும்படி வேண்டினான். பிருஹஸ்பதி அவனை நன்கு ஆசிர்வதித்து முன்போலவே மூவுலகையும் முறை தவறாமல் ஆளும்படிக் கூறினார். இந்த்ரன் தனது பின்புறத்தில் கத்தியுங் கையுமாய் நிற்கும் பிரும்மஹத்தியைக் குருவிற்குக் காண்பித்து அதை அகற்றும்படி வேண்டினான். அவர் எப்படி அதை அழிப்பதென சிந்தை கொண்ட பொழுது, ஸம்ஸார விஜயமெனும் ராதா கவசத்தால் அதை ஜயி என்று ஆகாசவாணி கூறிற்று. அங்ஙனமே அவரதை நாசம் செய்து இந்திரனுடன் அமராவதிக்கு வந்தார். உடனே த்வஷ்டா எனும் தேவதக்கனை அழைத்து அழகுவாய்ந்த அரண்மனையைப் படைக்கும்படி இந்திரன் கூறினான். நூறாண்டு மிக்க ச்ரமத்துடன் மிக்க அத்புதமான அரண்மனையை அவர் படைத்தார். இந்திரன் அதைச் சுற்றிப் பார்த்து விட்டு இன்னும் அழகாகப்படை என்றான். தனது

பூர்ண ஸாமர்த்தியத்தையும் கொண்டுப் படைத்த அரண்மனையில் திருப்திகொள்ளாமல் தன்னை இந்திரன் துன்புறுத்துவதை த்வஷ்டா பிரும்மாவினிடம் கூறினார். அவர் வைகுண்டம் சென்று விஷ்ணுவினிடம் இதை விக்ஞாபனம் செய்து கொண்டார்.

விஷ்ணு ஓர் சிறு பிரும்மசாரி வேடம் பூண்டு இந்திரனிடம் வந்து ஆஹா! மிக்க அழகாக இருக்கிறது இந்த அரண்மனை. எந்த இந்திரனும் இந்தமாதிரி அரண்மனையில் வஸித்ததில்லை என்று கூறினார். இச்சிறுவர் எவ்வளவு இந்திரனைக் கண்டிருக்கக் கூடும் என்று வியந்த தேவேந்திரன், ஐயா உமக்கு எத்தனை இந்திரர்களைத் தெரியும்? என்று கேட்டார். பிரும்மாவினது ஓர் பகலுக்குள்ளே எவ்வளவு இந்திரர்கள் தோன்றித் தோன்றி அழிகிறார்கள் தெரியுமா? நான் பல பிரும்மாக்களையே பார்த்திருக்கிறேன். நான் பார்த்த இந்திரர்களுக்குக் கணக்கேது? என்று கூறி வரிசையாகச் செல்லும் எறும்புகளைப் பார்த்து அவர் நகைத்தார். இந்திரன் இதைக் கண்டு ஐயா! தாங்கள் எறும்புகளைக் கண்டு நகைக்கும் காரணம் யாது என்றான். இந்திரா! இவர்களெல்லாம் உன்னைப்போல் இந்திரபதவிபெற்றுத் தம் கருமத்தால் எறும்பாகிச் செல்கிறார்கள். அவர்களது கதியையும் நிலையில்லா வாழ்வையும் நினைத்தேன். சிறிப்பு வந்தது என்றார். இதனிடையில் தலையில் ஓர் பாயை விரித்துக்கொண்டு மார்பில் வண்டி சக்ரம்போல் ரோமமமைந்த ஓர் மஹர்ஷி வர அவரை இவ்விருவரும் வரவேற்று, தாங்கள் யார்? தங்கள் பெயரென்ன? மார்பில் ரோமம் சக்ரம்போலிருக்கக் காரணம் என்ன? என்று கேட்டனர். வந்தவர், தான் ஓர் அற்பாயுளுள்ள முனிவரென்றும், தனக்கு ரோமசர் எனப் பெயரென்றும் தனக்கு நீண்ட ஆயுளில்லாததால் வீடு வாசல் எதற்

கென அவைகளை விரும்பாமல் ஊர் சுற்றுவதாகவும், வெயில் மழைகளுக்குப் பயந்து தலையில் ஓர் பாயைப் போர்த்திருப் பதாகவும், ஓர் பிரும்மாவின் பாதி ஆயுளளவுதான் தனது ஜீவிதகாலமென்றும், ஓர் இந்திரன் இறந்தவுடன் தன் மார்பி லுள்ள ரோமத்தில் ஒன்றைத் தான் எடுத்து விடுவதாகவும், ஆதலால் எவ்வளவு ரோமம் இல்லையோ அவ்வளவு இந்திரர் கள் இறந்ததாகவும், எவ்வளவு ரோமம் உளதோ அவ்வளவு இந்திரர் ஜனித்து மாளப் போகின்றனர் என்றும் கூறினர். இதைக் கேட்ட இந்திரன் திடுக்கிட்டு இவ்வளவு காலம் ஜீவிக்கும் லோமசர் தன்னை அல்பாயுள் என்று கருதும்போது தனது ஆயுள் ஓர் க்ஷணத்திற்கு ஒப்பானதென்றெண்ணி தான் வாழ அரண்மனை கட்டச் சொன்னதை எண்ணி வெட்கமடைந்தான். உடனே அவனெதிரில் வந்த இருவரும் மறைந்தனர். இந்திரன் தன் இருப்பிடம் வந்து வாழ்க்கை யில் வெறுப்புகொண்டு ஜயந்தனிடம் ராஜ்பத்தை அளித்துத் தவம் செய்யக் கிளம்பினன். பிருஹஸ்பதி அவனுக்கு நல்ல நீதிகளைப் புகட்டி அகங்காரமில்லாமல் ராஜ்யத்தை ஆளும் படிச் செய்தார்.

ஸூர்ய கர்வபங்கம். மாலீ ஸுமாலீ என்ற ஸஹோத ரர்கள் பரமசிவனை நாடிப் பல்லாண்டு தவம் செய்து ஸூர் யனைப்போல் தேஜஸைப் பெற்றனர். அவர்கள் இரவு நேரங் களில் வெளிக்கிளம்பி இரவைப் பகலாகச் செய்தனர். அத னல் கோபங்கொண்ட ஸூர்யன் தனது சூலத்தினல் அவர் களைக் கொன்ருன். அவர்கள் சிவ பக்தர்கள் என்றறிந்த ஸூர்யன் பிரும்மாவின் மூலமாகவோ அல்லது சிவன் மூல மாகவோ அவர்களைச் சிக்ஷிப்பது நியாயமாகும். தனக்குச்சம மான ஒளி எவருக்குமில்லை. இருக்கவுங்கூடாதென்ற கர்வத் தால் தானே அவர்களைச் சிக்ஷித்து விட்டான். இதைக்கண்டு

ருத்ரனுக்குக் கடுஞ்சின முண்டாயிற்று. ஸூர்யனைக் கொன்று விடுவதென்று எண்ணி அவனை ருத்ரன் துரத்த அவன் பிரும்மாவைச் சரணமடைந்தான். ஸூர்யனுக்காக பிரும்மா சிவனைச் சரண்புகுந்து போற்ற அவர் கோபமகன்றது. ஸூர்யனும் சிவனது திருவடியில் விழுந்து தன் கர்வத்தை விட்டுத் தனது அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டினன். பரமசிவன் ஸூர்யனை மன்னித்து இறந்த பக்தர்களையும் எழுப்பிச் சென்றார்.

அக்னியின் கர்வபங்கம். ப்ருகு மஹர்ஷி ஒரு ஸமயம் அக்னி சாலையில் பதுங்கி இருந்த தன் பத்னியை ஓர் அரக்கனுக்குக் காட்டிக் கொடுத்தார் என்ற காரணத்திற்காக அவரைப் பிணம் முதலிய அசுத்த பதார்த்தங்களையும் புஜிக்கும்படிச்சபித்தார். அதனால் கோபங்கொண்ட அக்னி தனது ஜ்வாலை ஸ்வர்க்கலோகம் வரை போகும்படி ஜ்வலித்தார். இதைக்கண்ட முவ்வுலகும் அகாலத்தில் பிரளயம் உண்டாயிற்றோ என்றஞ்சி மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்தது. அவர் அக்னியின் எதிரில் ஓர் வாமனராக வந்து, உன்னைச் சபித்த பிருகு முனிவரை நீ சபிப்பது அல்லது தஹிப்பது நியாயம். அதைவிட்டு முவ்வுலகையும் கொளுத்துவது என்ன நீதி? உனக்குமேல் ஒரு தெய்வம் உண்டென்பதை மறந்தாயா? உனக்கு சக்தியிருந்தால் இதைக் கொளுத்து பார்ப்போம், என்று ஓர் உலந்த தர்ப்பையை அவனிடமளித்தார். அவனதைக் கொளுத்த பலத்த முயற்சி செய்தும் அது வீணாயிற்று. உடனே எதிரிலிருந்தவரும் மறைந்தார். அக்னி, பகவானே தனக்குக் கர்வபங்கம் செய்ய வந்தார் எனக் கருதி அவரைத் துதித்துக் கர்வத்தை விட்டான்.

தன்வந்தரியின் கர்வபங்கம். தேவரும் அஸுரரும் பாற்கடலைக் கடைந்தபோது அமிருத கலசத்தைக் கையிலேந்தி

வந்தார் தன்வந்தரி என்பவர். இவர் பலகாலம் கருடனை அடுத்து விஷத்தை அகற்றும் மந்திரத்தைப் பெற்றார். பரம சிவனுக்கும் சிடனாயிருந்து பலகலைகளைப் பயின்றார். ஒரு ஸமயமிவர் ஆயிரம் சிஷ்யர்களுடன் கைலாஸ நாதனைத் தர்சிக்கக் கிளம்பினார். நடு வழியில் லக்ஷம் பாம்புகளுடன் தக்ஷகன் வீற்றிருக்கக் கண்டார். தக்ஷகன் தங்கள் ஜாதிக் கியற்கையான குணத்தால் தன்வந்தரி சிஷ்யர்களைச் சீறிக் கடித்தார். தம்பி என்ற சிஷ்யர் இறந்தவர்களை எழுப்பித் தக்ஷகனை மூர்ச்சையாகும்படி செய்து அவன் தலையிலுள்ள நாகமணியை எடுத்துச் சென்றார். இதைக் கண்டு பயந்து நாகங்கள் தங்கள் அரசனான வாஸுகியினிடம் முறையிட் டன. அவர் துரோணன் காலீயன் கர்கோடன் புண்டரீகன் தனஞ்சயன் என்ற பெரிய ஐந்து சர்ப்ப சேனாதிபதிகளை அனுப்பினான். இவர்கள் விஷ ஜ்வாலையைக் கக்கிக் கொண்டு பெருமூச்சினாலேயே தன்வந்தரி சிஷ்யரனைவரையும் மூர்ச் சையாகும்படிச் செய்தார்கள். தன்வந்தரி தனது குருவான கருடனைப் பணிந்து அவரது மந்திரத்தால் தனது சிஷ்யர் களை எழுப்பிவிட்டு அவ்வைவர்களையும் மற்ற ஸேனைகளுடன் அசைவற்றுக் கிடக்கும்படிச் செய்தார். ஒருவர்கூட தங்கள் அரசனிடம் சென்று நடந்ததைக் கூற ப்ரக்ஞையுடனில்லை. சென்றவர் திரும்பாத காரணத்தை ஞானக் கண்ணாலறிந்த வாஸுகி தனது ஸஹோதரியும் உமையின் அம்சத்தால் பிறந் தவளுமான மநஸாதேவி என்பவளை நினைத்தான். உடனே அவள் எதிரிற்றோன்றி, நானும் கருடனும் பரமசிவத்தின் சிஷ்யர்கள், கருடனது சிஷ்யனான தன்வந்தரி நமக்குச்செய்த தீங்கை யானறிவேன். ஒரு க்ஷணத்தில் அவரை வென்று ஸர்ப்பர்களை எழுப்பி அழைத்து வருகிறேன். அஞ்ச வேண் டாம் என்றுரைத்து தன்வந்தரியினிடஞ் சென்றாள். தனது திருஷ்டியினாலேயே இறந்த ஸர்ப்பங்களை எழுப்பித் தன்வந்தரி

யின் சீடர்களை மூர்ச்சிக்கும்படிச் செய்தாள். இதைக் கண்ட அவர் மந்திர சக்தியால் சீடர்களை எழுப்ப முயற்சித்தார். அது வீணானதை எண்ணி அவர் வருந்தும்போது உம்மால் என்ன முடியும் என்று கூறி மநஸா ஓர் தாமரை மலரை மந்திரித்து தன்வந்திரிமேல் விட்டாள். அது அக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு தன்வந்திரியினிடம் வர அவரதை மூச்சுக்காற்றால் எரித்துச் சாம்பலாக்கினார். தேவி குடிகை ஜபித்தனுப்ப அதையுமவர் சாம்பலாக்கினார். அவள் சக்தி எனுமாயுதத்தைப் பிரயோகிக்க, தன்வந்தரி அதைச் சூலாயுதத்தால் அழித்தார். அவள் ஸர்ப்பாஸ்திரத்தால் முனிவரைக் கட்ட அவர் தன் குருவை நினைத்தார். உடனே தனது சீடனைக் காக்க கருடனங்கு விரைவாக வந்து பாம்புகளைப் புசித்தார். சிவன் தந்த பஸ்மாஸ்திரத்தைத் தேவி எறிய, கருடன் தன் சிறகாலதை அழித்துவிட்டார். சிவனளித்த சூலத்தை மனஸாதேவி கையிலெடுத்தவுடன் பிரும்மாவும் பரமசிவனுமங்கு வந்து இருவரையும் ஸமாதானப்படுத்தினார்கள். மனஸாதேவியும் தன்வந்தரியும் அவ்விருவர்களையும் பணிந்து போற்றினார்கள். பிரும்மா தன்வந்திரியை நோக்கி நீர் ஸகல கலைகளிலும் பேரறிவு பெற்றவர் என்றாலும் ஞான வடிவமான உமா தேவியினது அவதாரமாகத் தோன்றிய மநஸா தேவிக்கு ஸமமாக மாட்டீர். அவளடி பணிந்து அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொள் என்றார். இதைக் கேட்டு தன்வந்திரி தன் கர்வத்தை விட்டு மநஸா தேவியைப் பணிந்து போற்றிச் சென்றார். தானே உலகைக்காப்பவன் என்று கர்வங்கொண்ட விஷ்ணுவைச் சிக்ஷிக்க கிருஷ்ணன் பைரவ வேடம் பூண்டு அவர் உடலை மாத்ரமழித்தார். கர்வமகன்றபின் உடலைத் தந்தார். இக்கதைகளைக் கிருஷ்ணனிடம் கேட்ட ராதா தேவிக்கும் கொஞ்சம் கர்வம் இருந்தது. தனது அழகிலீடுபட்டே பகவான் மற்ற கோபிகைகளை

ராஸக் க்ரிடை நடுவில் விட்டு விட்டுத் தன்னிடம் ஆசை கொண்டு தன்னோடு தனித்து வந்தார் என்று கருதினள். ஆதலின் அச்யுதனைப் பார்த்து நாத! நான் இனி நடந்து வர முடியாது. என்னைத் தாங்கள் தூக்கிச் செல்ல வேண்டும் என்றாள். பகவான் உடனே மாயையால் மறைந்து விட்டார். ராதை அவரைத்தேடி அலைய அதற்குள் கோபிகைகளும் பகவானைத் தேடிக்கொண்டே அங்கு வந்தனர். தங்களை விட்டுப் பிரிந்ததுபோல் ராதையையும் விட்டுப் பிரிந்தார் பகவான் என்றறிந்த கோபிகைகள் ராதையுடன் சேர்ந்து ஒவ்வோர் வனமாகத் திரிந்து பகவானைத் தேடினர். கோபிகைகள் அவரது அழகைச் சற்று வர்ணித்தனர். அவரது குண கணங்களைச் சற்று பாட்டாக்கிப் பாடினர். கிருஷ்ண வேடந்தரித்து அவனது லீலைகளை அனுஷ்டித்தனர். இங்ஙனம் தாயைவிட்ட கன்றுபோல் தன்னைவிட்டுக் கோபிகைகள் கஷ்டப்படுவதைக் கண்டு கருணாமூர்த்தியான கண்ணன் விரைவாக அவர்கள் எதிரில் தோன்றி, துன்பத்தை அகற்றினார். முன்போலவே கோபிகைகள் ராதையுடன் கூடி பகவானைக் கட்டித்தழுவிப் பேரானந்த மடைந்தனர். மதுரையில் பகவான் செய்த லீலைகளைக் கூறும்படி நாரதர் வேண்ட நாராயணருரைத்தார்.

ஸ்ரீ கிருஷ்ண சரிதம். கம்ஸன் தனது சத்ருவான கிருஷ்ணனைக் கொல்ல பூதனை முதலிய பலரை ஏவியும் அவர் இறக்காதது கண்டு வருந்தினன். அவரை மதுரைக்கழைத்து வந்து கொல்ல வேண்டுமெனத் தீர்மானித்து, தான் ஓர் சங்கரயாகம் செய்வதாகவும் அதில் அழகிய தனுஸைப் பூஜிக்கப் போவதாகவும் அதற்கு மற்ற பந்துக்களைப்போல் பலராமனும் கிருஷ்ணனும் வரவேண்டுமென்று அவரை அழைத்து வரும்படி அக்ரூரரை அனுப்பினன். அங்ஙனமே ராம கிருஷ்

ணர்கள் மதுரைக்கு வந்து அரசனுக்குத் துணி வெளுத்துச் செல்லும் வண்ணானைத் தனக்கோர் வஸ்த்ரமளிக்கும்படி வேண்டினர். அவன் வஸ்த்ரமளிக்க மறுத்துப் பகவானை நிந்திக்க அவனைக் கொன்று வண்டியிலுள்ள வஸ்திரங்களைப் பகவான் எல்லோருக்கும் வழங்கினார். கம்ஸனுக்குச் சந்தனம் கலந்து சென்ற ஓர் கூனியினிடம் சந்தனத்தைப் பெற்று அவளை அழகிய பெண்ணாக்கி அவளுக்குச் சிற்றின்பத்தையும் பேரின்பத்தையுமளித்தார். குவலயபீடம் எனும் யானையையும் சாணூரன் முஷ்டிகன் எனும் மல்லர்களையும் மாமனான கம்ஸனையுங் கொன்று பெற்றோரிடஞ் சென்றார். வஸுதேவர் செல்வக் குழந்தையைக் கட்டித்தழுவி விதிப்படி உபநயனஞ் செய்து வைத்தார். ஸாந்தீபினீ எனும் முனிவரிடம் பகவான் கல்வி கற்று இறந்துபோன குருவின் குழந்தையை எழுப்பி அதையே குரு தக்ஷிணையாக அளித்து வீட்டிற்கு வந்தார். ருக்மிணீ காளிந்தி லக்ஷ்மணா சைப்யா ஸத்யபாமா ஜாம்பவதீ மித்ரவிந்தா நாக்னஜிதீ ஆகிய இவ்வெட்டு மஹிஷிகளைப் பகவான் மணந்து கொண்டார். நரகாஸுரனைக் கொன்று ஆங்குள்ள பதினாறாயிரம் ராஜ கன்னிகைகளையும் மணந்துகொண்டார். இந்திரனை ஜயித்து ஸத்யபாமைக்காக பாரிஜாத விருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தார். தனது பேரனான அநிருத்தனைச் சிறையிலடைத்த பாணாஸுரனுடன் யுத்தம் செய்து அவன் பெண்ணான உஷையை அனிருத்தனுக்கு மணம் செய்து வைத்தார். இங்ஙனம் பகவான் பதினோராண்டு நந்தன் மனையிலும் மதுரையில் நூறாண்டுகளும் மறுபடி பிருந்தாவனத்தில் ராதையுடன் பதினான்கு வருஷங்களும் ஆக நூற்றிருபத்தைந்தாண்டுகள் அவனியிலிருந்து அமாநுஷ லீலைகளைச் செய்து அவனியின் பாரத்தை அகற்றிக் கோலோகஞ் சென்றார். கர்வங் கொண்ட விஷ்ணு, ஜய விஜயர் லக்ஷ்மணன் அர்ஜுனன் பிருகு ஸமுத்

ரம் முதலிய பலருக்கும் பகவானே கர்வபங்கம் செய்தார் என்பதைக்கேட்ட நாரதர் விஷ்ணு முதலிய எல்லோரது கர்வபங்கத்தையுங் கூறும்படி வேண்டினார்.

கர்வ பங்கம். ஸ்ரீ நாராயணமூர்த்தி ஒரு ஸமயம் பத்நிகளுடன் வைகுண்டத்தில் வீற்றிருக்கும்போது இந்த்ரன் பிரும்மா முதலிய ஸகல தேவரும் தன்னையே வந்து சரணமடைவதையும், தான் அந்தந்த காலத்திற்கனுகுணமான அவதாரம் செய்து அரக்கரை அழிப்பதையும், எண்ணித் தன்னை விடச் சிறந்தவரில்லை என்று கர்வங் கொண்டார். இதை அகற்ற கிருஷ்ணன் ராமராக இவரவதரித்தபொழுது தான் மஹாவிஷ்ணு என்பதை மறக்கும்படிச் செய்தார். ஆதலால் ஸீதையை விட்டுப் பிரிந்த காலத்தில் அவர் மனிதனைப்போல் கதறினார். வைகுண்டத்தில் எவருக்கும் கிட்டாத த்வாரபாலக வேலை தங்களுக்குக் கிட்டியதென ஜய விஜயர்கள் கர்வங்கொண்டனர். ஸநகாதிகள் பகவத் தரிசநத்திற்காக உள்ளே செல்லும்போது அவர்களைத் தடுத்து ராக்ஷஸர்களாகும்படி அவர்கள் சாபம் பெற்றனர்.

லக்ஷ்மணன் ராவண யுத்தத்தில் சக்தி ஆயுதத்தினால் அடிபட்டு மூர்ச்சித்து எழுந்தபின் தன்னை விட பலசாலி உலகில் உண்டென்று எண்ணி கர்வத்தை விட்டார். அர்ஜுநன் தன்னைவிட சிறந்த வில்லாளி உலகிலில்லை என எண்ணிக் கர்வங்கொண்டான். கர்ணனுடன் போர்புரிந்து அடிபட்ட காலத்தில் கிருஷ்ணனது ஸஹாயமில்லாவிட்டால் தன்னால் ஒன்றும் ஆகாதென உணர்ந்து கர்வத்தை விட்டான். தக்ஷனது யாகத்தில் பிருகு மஹர்ஷியும் அகஸ்த்யரிடம் ஸமுத்ரங்களும் கர்வபங்க மடைந்தனர். ஜய விஜயர்களுக்கு ஸநகாதிகளால் ராக்ஷஸராகும்படிச் சாபங் கிட்டியதல்லவா? அவர்கள்கிருதயுகத்தில் ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபுக்களாகத்

தோன்றினார்கள். பகவான் வராஹாவதாரம் செய்தும் நரஸிம்ஹாவதாரம் செய்தும் அவர்களைக் கொன்றார். த்ரேதா யுகத்தில் அவர்கள் ராவண கும்ப கர்ணர்களாகத் தோன்ற அவர்களைக் கொல்ல பகவான் ஸ்ரீ ராமனாக அவதரித்தார். அவரது அழகைக்கண்டு மோஹித்த சூர்ப்பனகைத் தன்னை மணக்கும்படி ராமனை வேண்டினாள். அவர் பன்முறை மறுத்தும் கேளாமல் நிர்ப்பந்தம் செய்த அவளது மூக்கை லக்ஷ்மணன் அறுத்தான். அவள் மறுபிறப்பில் கூனியாகப் பிறந்து கிருஷ்ணனாக அவதரித்த ராமனுக்குச் சந்தனமளித்து அவரை மணந்தாள். த்வாபர யுகத்தில் பகவான் கிருஷ்ணனாகத் தோன்றி சிசுபால தந்தவக்த்ரர்களாக வந்த ஜய விஜயர்களைக் கொன்று நற்கதி அளித்தார். இதைக்கேட்டு பரமானந்தமடைந்த நாரதமுனி கம்ஸவதத்தை விரிவாக உரைக்கும்படி வேண்டினார்.

கம்ஸனது துஸ்வப்நம். கம்ஸன் எப்பொழுதும் தன் பகைவனான கிருஷ்ணனையே நினைத்திருந்தான். பூதனை முதலிய அவனது பரிவாரங்கள் அழிந்ததைக்கேட்டு மேன்மேலும் அவனுக்குச் சிந்தை பலத்தது. உத்தம பக்தனுங்கூட அப்படி ஏகாக்ரசித்தமாக பகவானைச் சிந்திக்கமாட்டான். கிருஷ்ணன் இவ்வேளை என் செய்வான்? எப்படி நம்மைக் கொல்வான்? எப்போதிங்கு வருவான்? அவனது நண்பர் யாவர்? என எப்போதும் அதே த்யானமாக விருந்தான். உண்ணும்போதும் உடுக்கும்போதும் உறங்கும்போதும் இவன் பகவானைப் பகைவனாகவே நினைத்திருந்தான். ஒரு நாள் அதிகாலையில் ஓர் துஸ்வப்நங் கண்டானிவன். மறுநாள் காலையில் ஸபையில் பண்டிதோத்தமர்களையும் மந்த்ரிகளையும் அழைத்துத் தனது துஸ்வப்னத்தைக் கூறினான். பெரியோர்களே! சிவந்த மாலையையும் வஸ்த்ரத்தையும்

அணிந்த ஓர் பயங்கரமான பெண் கையில் கத்தி ஏந்தி என் எதிரில் தாண்டவ மாடினாள். விரிந்த தலையும் அறுந்த மூக்கும் கறுத்த உருவமுமுள்ள ஓர் விதவை கறுத்த மாலையையும் ஆடையையுமணிந்த என்னை ஆலிங்கனம் செய்து கொண்டாள். மற்றோர் அழகிய கற்பரசி தன் பதி புத்ரர்களுடன் என்னிடம் வந்து என்னைச் சாபமிட்டு என் எதிரில் ஓர் கலசத்தைப் பூமியில் போட்டு உடைத்துவிட்டுச் சென்றாள். என் ஊரில் ரத்த மழை பொழிந்தது. நாய் நரிகள் என்னைப்பார்த்து ஊளை யிட்டன. தலையில்லாத உடல் என்னெதிரில் வந்து தாண்டவ மாடிற்று. என் அரண்மனை தீப்பற்றி எரிந்து சாம்பலாயிற்று. இங்ஙனம் யான் கண்ட ஸ்வப்நத்திற்கு யாது பயன்? அதற்கென்ன பரிஹாரம்? என்று கம்ஸன் கேட்க, இந்த ஸ்வப்நத்தின் பயன் அரசனது மரணமே என்றுணர்ந்த பெரியோர் அதை அவனிடம் வெளியிட்டுச் சொல்ல மனமில்லாமல் வருந்தி மௌனமாயிருந்தனர்.

ஸத்யகன் என்ற மந்த்ரி எழுந்து அரசனுக்குத் துன்பம் வருமென இந்த ஸ்வப்நம் கூறுகிறது. தநுர்முகம் என்ற யாகத்தைச் செய்து பரமசிவத்தின் தநுஸைப் பூஜித்தால் இதனாலுண்டாகும் துக்கத்தை அகற்றலாம். அந்த சிவதனுஸை முறிப்பவனே தங்களை ஜயிக்க முடியும்? அந்த வில்லின் அடியில் பிரும்மனும் இடையில் விஷ்ணுவும் முடியில் சிவனும் வஸிக்கின்றனர். அந்த வில் எவராலேனும் முறிக்கப்படின் யாகம் பூர்த்தியாகாது. மனிதனுக்கு வினைப்பயனை அளிக்கும் தேவரும் வில்லுடன் அழிவர். வில்லை எவரும் முறிக்காவிடில் உமக்கு அபாயமில்லை என்று கூறினர். இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்த கம்ஸன் வஸுதேவரை அழைத்துக் கோகுலஞ் சென்று ராம கிருஷ்ணர்களுடன் நந்தனையும் யாகத்திற்கழைத்து வருமாறு கூறினான். கிருஷ்ணன் இங்கு,

வந்து கம்ஸனைக் கொன்றாலும் அல்லது கம்ஸனால் கொல்லப் பட்டாலும் தனக்குத் துன்பமும் அபயசமும் உண்டாகு மெனக் கூறி வஸுதேவன் கோகுலஞ் செல்ல மறுத்தான். கோபங்கொண்டு கம்ஸன் அவரைக் கொல்ல ஆரம்பிக்கும் போது உக்ரஸேநன் அதைத் தடுத்து வஸுதேவருடன் வீடு சென்றார். பின்னர் கம்ஸன் அக்ரூரரை அழைத்து ராம கிருஷ்ணர்களை மதுரைக்கு அழைத்து வரும்படி உத்தர விட்டான்.

அக்ரூரர் தர்சநம். அக்ரூரர் அச்யுதனிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவராதலின் கம்ஸனது உத்தரவைத் தனக்களித்த வரமாகக் கருதினார். அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி உத்தவர் வீட்டிற்கு வந்தார். அவரும் ஓர் உத்தம பக்தராதலால் இருவரும் கூடி ஸ்ரீ கிருஷ்ணனது பெருமையைக்கூறி இரவெல்லாம் உறங்காது மகிழ்ந்தனர். எவருக்கும் கிட்டாத பாக்யம் எனக்குக் கிட்டியது. என் பிறவி இன்றே ஸபல மாயிற்று. தேவர் போற்றும் தேவகீஸுதனைத் தர்சிக்கப் போகிறேன். யானங்கு செல்லும்போது எனது பாக்யம் படுத்துறங்குமோ? மாடு மேய்த்துத் திரும்புமோ? இடைச் சிறுவர்களுடன் கூடி விளையாடுமோ? என்று எண்ணிஎண்ணி அக்ரூரர் மெய்மறந்தார். கூத்தாடினார். ஆநந்த பாஷ்பம் சொரிந்தார். அவர் இங்ஙனம் பக்தி பரவசமாகிப்படுத்துச் சற்று நேரம் உறங்கினார். அவர் தன் எதிரில் பகவான் பல்வகையான உருவமெடுத்துத் தனக்கு தர்சநம் தந்ததாக ஸ்வப்நங் கண்டார். காலையில் எழுந்து கர்மாநுஷ்டாநங்களை முடித்துக் கொண்டு கோகுலத்திற்குக் கிளம்பினார். நடுவழியில் பல நற் சகுநங்கள் தோன்றின.

இவர் வருவதை அறிந்த நந்தன் எதிர்கொண்டழைத்து அக்ரூரரை ரத்ந ஸிம்ஹாஸநத்தில் அமர்த்தி அதிதி பூஜை செய்தான். அவர் பகவானைத் தூக்கித் தன் மடிமீது வைத்-

துக்கொண்டு அவரது திவ்யமங்கள விக்ரஹத்தைக் கண்ணு ரக்கண்டு களித்தார். பகவான் பக்தரில் சிறந்த அக்ரூரருக்கு அவர் முன்னிரவில் கனவு கண்டபடி காக்ஷியளித்தார். அதில் க்ஷணம் வைகுண்டவாஸியாகவும் பிரும்மாவாகவும் பரமசிவமாகவும் துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதிகளாகவும் சந்த்ர ஸூர்யர்களாகவும் இங்ஙனமே மற்ற தேவ ராக்ஷஸ ஸர்ப்பம் முதலியவைகளாகவும் பகவான் தோன்றினர். இதைக் கண்டு ஆச்சர்யமடைந்த அக்ரூரர் பகவானைத் துதித்தார். நந்த னிடம் தான் வந்த வேலையை அக்ரூரர் எடுத்துக் கூறி ராம கிருஷ்ணர்களைத் தன்னுடனனுப்பும்படி வேண்டினர். நந் தனுமதற்கிணங்க, பகவானை அழைத்துச் செல்ல அக்ரூரர் வந்துள்ளார், என்ற செய்தி நாடெல்லாம் பரவியது. கோபர் களும் கோபிகைகளும் அக்ரூரரிடம் கோபங் கொண்டு அவரை நிந்தித்து அடிக்கவும் ஆரம்பிமதனர். இதைக்கண்ட கிருஷ்ணன் எல்லோரையும் ஸமாதானப்படுத்தி யசோதை வீட்டிற்குச் சென்று படுத்துக் கொண்டார். பகவானது பிர யாணம் நின்று விட்டதென்றெண்ணி எல்லோரும் ஸந்தோ ஷித்து தத்தம் வீடு சென்று உறங்கினர். அதிகாலையில் எழுந்து பகவான் அன்னையையும் பிதாவையும் வணங்கிக் கருட வாஹனத்தின் மீதேறி மதுரைக்குச் சென்றார்.

கம்ஸ மோக்ஷம். கிருஷ்ணன் ராஜ வீதி வழியாக நடந்து கம்ஸனது யாகசாலைக்குச் சென்றார். இடை வழியில் வண்ணு னைக் கொன்றும் ஓர் மாலை கட்டுபவனையும் கூனியையும் ஆசிர்வதித்தும் கோலோகத்திற்கனுப்பினர். இவரது வரவை யும் அத்புத செயலையுங்கேட்டுக் கம்ஸன் திகிலடைந்தான். அதற்கேற்க அன்றிரவு சந்த்ர சூர்யமண்டலங்கள் உடைந்து பூமியில் விழுந்திருப்பதாகவும், ஓர் பயங்கரமான விதவாஸ்த் ரீதன்னை ஆலிங்கனம் செய்துகொண்டு எங்கேயோ இழுத் துச் செல்வதாகவும் தன் தலை அறுந்து காணுமல் போனதாக

வும் கனவு கண்டான். காலையில் கிருஷ்ணன் யாகசாலையில் நுழையும் போது அங்கேயே அவனைக் கொல்ல ஓர் பெரிய யானையைக் கம்ஸன் ஏவினன். அதைக் கொன்றுவிட்டு பகவான் உள்ளே நுழைந்தார். ஆங்குள்ள மல்லர்களையுங்கொன்று ஸிம்மாஸநத்தில் வீற்றிருக்கும் கம்ஸனைப் பிடித்திழுத்தார். மிருகேந்தரம் அல்பமிருகத்தைக் கொல்வதுபோல் அனயாஸமாகப் பகவான் அவனைக்கொன்று அவனுக்கும் நற்கதி அளித்தார். அவனது ராஜ்யத்தை உக்ரஸேநனுக்கு அளித்துப் பட்டம் சூட்டினர். அருமைப் புதல்வனை விட்டுப் பிரிந்த துன்பத்துடன் கம்ஸனுடைய கடுமையான சிக்ஷையையுமனுபவித்து வந்த தன் தந்தை தாய்களைப் பகவான் ஸமாதானப் படுத்தினர். இதனிடையில் பகவானை விட்டுப் பிரிந்த யசோதையும் நந்தனுமங்கு வந்தனர். குழந்தையினது அமானுஷமான காரியத்தைக் கண்டு களித்தனர். ராதையைத் தெய்வமாக நினைத்து அவளிடம் உபதேசம் பெறுங்கள் என்று கூறி கிருஷ்ணன் அவர்களை ஊருக்கனுப்பினர்.

நந்தனுக்கு தர்மோபதேசம். எவ்வளவு கூறியும் நந்தன் கண்ணனைவிட மனமில்லாமல் அங்கேயே தங்கி தனக்குத் தத்வோபதேசஞ் செய்யும்படி வேண்டினன். பகவான் தான் யாரென்றும் தான் வந்த காரணம் யாதென்றும் எடுத்துக்கூறி கீதையில் கூறியதுபோல் தனது விபூதியை விளக்கினர். காலையில் எழுந்து பிரும்மரந்த்ரத்தில் குருவையும் பரமாத்மாவையும் த்யாநம் செய்ய வேண்டும். ஆன்னிக தர்மங்களை முடித்துக்கொண்டு சாளக்ராம பூஜை செய்ய வேண்டும். நமது விக்னங்களை அகற்ற விக்னேசரையும் வியாதி அகல ஸூர்யனையும் பண முண்டாக அக்னியையும் மோக்ஷம்பெற விஷ்ணுவையும் ஞானம் உண்டாக சங்கரனையும் புத்தியும் முக்தியும் பெறப் பார்வதியையும் பூஜிக்க வேண்டும். ஜலமலங்களைக் கண்டால் வியாதி உண்

டாகும். ஸ்த்ரீ புருஷர்களது குறி, பரஸ்திரீகளின் முகம் குசம் தொடை முதலியவைகளைப்பார்த்தால் ஆயுள் குறையும். ஆபத்துக்களுண்டாகும். சந்த்ர ஸூர்யர்களஸ்தமனமாகும் போது பார்த்தால் நோயுண்டாகும். ஜலத்தில் சந்த்ர ஸூர்யர்களைக் கண்டால் சோகமுண்டாகும். யாகமல்லது வீட்டில் நடக்கும் சுபாசுப காலங்களில் பிராமணருக்கு உடனே தக்ஷிணையைத் தந்து விட வேண்டும். ஒரு நாள் தாமதித்தால் இரண்டு மடங்கும் மாத காலம் தாமதமானால் நூறு மடங்கும் அதிகம் சேர்த்தளிக்க வேண்டும். ஓராண்டு சென்றபின் கொடுத்தால் கொடுத்தவன் நரகம் செல்வான்.

ஒருவரை வாயால் மிரட்டுபவர் நரகத்தை அனுபவித்து மறுபிறப்பில், காக்கையாகவும், ஹிம்ஸிப்பவர் பன்றியாகவும் கோபித்துக் கொண்டவர் பாம்பாகவும், கர்வங் கொண்டவர் கழுதையாகவும், துர்ப்பாஷையாகப் பேசினவர் கோழியாகவும் விஷமமாகப் பார்த்தவர் குருடாகவும் பிறப்பர். ஸாளக்ராம ஜலத்தை அருந்தி ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்போர் வைகுண்டம் செல்வர். பூசணிக்காயை உடைக்கும் ஸ்த்ரீயும் தீபத்தை அவிக்கும் புருஷனும் ஏழு பிறவிகளில் தரித்ரனாகவும் ரோகியாகவும் பிறப்பார்கள். தீபம் சிவலிங்கம் ஸாளக்ராமம் மணி தேவதாவிக்ரஹம் யக்ஞோபவீதம் சங்கம் முத்து கோமயம் கோமூத்ரம் நெய் ஸாளக்ராம தீர்த்தம் ஆகிய இவைகளைக் கீழே வைப்பவன், தரித்ரனாகவும் குஷ்டரோகமுள்ளவனாகவும் ஜனிப்பான். தேவபூஜை செய்யாதவன் வீட்டில் புஜிக்கலாகாது. பூஜாத்ரவ்யத்தில் மயிரோ மணலோ இருந்தால் குருடனாகவும் மிலேச்சனாகவும் பிறப்பான். மஹாதேவ என்று மும்முறை கூறுவோரைப் பின்பற்றி அவர் செல்லுமிடமெல்லாம் நான் செல்வேன். எனது ஜீவன் சங்கரனுவன். ரதத்தின்மீது பகவானைத் தர்சிப்பது உத்தமம்.

பாபத்தை நம்மிடம் கொடுத்து விடுவான். கவனியாமல் கண்ணில் பட்டால் "ஸிம்ஹ; ப்ரஸேநமவதீத் ஸிம்ஹோஜாம் பவதாஹத:! ஸுகுமாரக மாரோதி, தவஹ்யேஷஸ்யமந்தக:!!" என்ற சுலோகத்தைக் கூறி ஜலமருந்த வேண்டும். இதனுல் அந்த பாபம் நம்மிடம் வராமலிருக்கும்.

ஸூர்ய க்ரஹண காரணம். ஜமதக்நி எனும் முனிவர் ரேணுகை எனும் மனைவியுடன் கூடி நர்மதா தீரஞ் சென்று ஏகாந்தமான இடத்தில் பகலிரவெனப் பாராது பல நாள் சிற்றின்பத்தை அநுபவித்து வந்தார். ஸூர்யன் அந்தணவடிவங்கொண்டு அம்முனிவரருகே சென்று எல்லாமறிந்த நீரே இங்ஙனம் பாபம் செய்யலாமா? என்று கேட்டான். ரேணுகை இவரைக் கண்டதும் வெட்கத்தால் வெளிக்கிளம்பினுள். மஹர்ஷிக்கு மிகக் கோபமுண்டாயிற்று. ஸூர்ய! பாப புண்யம் யாதென யானறிவேன். என்போன்ற தேஜஸ்விகளுக்கு இத்தகைய கருமங்களால் பாபம் வாராதென நீ அறியாயா? அன்றியும் விஷ்ணு பக்தரான என்னை ஸுதர்சநம் காத்துக்கொண்டிருக்கிறது. நீ ஸாக்ஷியாயிருக்க வேண்டுமே அல்லாது, ஏகாந்தமாய் நான் மனைவியுடனிருக்கும்போது என்னருகே வந்து உபதேசம் செய்ய நீ யார்? அனுவச்யமாக இங்கு வந்து தம்பதிகளைக் கலைத்த பாபத்தால் உன்னை ராஹுகேதுக்கள் பிடிப்பார்கள். அச்சமயம் உன்னை எவரும் பார்க்க மாட்டார்கள். என்று மஹர்ஷி ஸூர்யனுக்குச் சாபமளித்தார். ஸூர்யன் மஹர்ஷியைப் பார்த்து, தர்மத்தைக் கூறிய என்னை நீர் வீணுகச் சபித்தீர். உம்மை யான் உபேக்ஷை செய்து விட்டால் உலகத்தவர் என்னை மதிக்க மாட்டார் என்று கூறி அவருக்கு க்ஷத்ரியனுல் மரணமுண்டாகுமென்று சபித்தார். மஹர்ஷி இதைக் கேட்டு அடங்காக் கோபங்கொண்டார். பானுவைப் பார்த்துப் பரமசிவனுல்

உனக்கு பங்கமுண்டாகுமென்று மறுபடியும் சாபமளித்தார். இதைக்கேட்ட பிரும்மா அங்கு ஓடி வந்து இருவரையும் ஸமாதாநம் செய்து சென்றார். ஆதலால் க்ரஹண காலத்தில் சூர்யசந்த்ரர்களைப் பார்க்கலாகாது.

துஸ்வப்நமும் பரிஹாரமும். ஸ்வப்நத்தில் சிறிப்பு விவாஹம் நர்த்தநம் பாட்டு முதலியவைகளைக் கண்டால் ஆபத்துண்டாகும். பல் விழுவதுபோல் கண்டால் தநஹாநியும் நோயுமுண்டாகும். எண்ணெ, பொடி, ஜபா புஷ்பம், உப்பு இவைகளைக் கண்டால் ஆபத்துண்டாகும். சிவந்த புஷ்பங்களையும் பருத்தியையும் வெள்ளை வஸ்த்ரத்தையும் பனம் பழத்தையுங் கண்டால் துக்கமுண்டாகும். கறுப்பான விதவாஸ்த்ரீ சிறிக்கவோ பாடவோ கண்டால் மரணமுண்டாகும். தேவதைகள் ஆடவும் பாடவுங் கண்டால் தேசமழியும். வாந்தி மூத்ரம் மலம் வெள்ளி தங்கம் இவைகளைக் கண்டால் பத்து மாதத்தில் கனவுகண்டவரிறப்பர். மயிரும் நகமும் விழக் கண்டாலும் கரி சாம்பல்நிறைந்த சுடுகாடு இவைகளைக் கண்டாலும் மரணமுண்டாகும். உளுந்தையும் பயிரையுங் கண்டால் வ்ரணமுண்டாகும். கழுகு காக்கை காடி குரங்கு தேஹத்தில் அழுக்கு ஆகியவிவைகளைக் கண்டால் நோயுண்டாகும். உடைந்த பாத்ரம் வ்ரணமுள்ள சூத்ரன் இறந்து பிழைத்தவன் பன்றி எருமை கழுதை இருள் ஆண் பெண் குறி வாத்யம் நர்த்தநம் கீதம் முதலியவைகளைக் கண்டால் துக்கமுண்டாகும். மாடு முட்டக் கண்டால் ராஜாங்கத்தினிடமிருந்து பயமுண்டாகும். மத்ஸ்யத்தை ஒருவன் தூக்கி வருவதுபோல் கண்டால் அவனது ஸஹோதரனுக்கு ஆபத்துண்டாகும். பசு கன்றுடன் வீட்டைவிட்டு ஓடுவதாகக்கண்டால் லக்ஷ்மீ விலகிச் செல்வாள். துஸ்வப்நங் கண்டவர் அதனாலுண்டாகும் கெட்ட பயனை அகற்ற ஸஹஸ்ரகாயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். “அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம்ஸத்யம்

ஜநார்த்தநம். ஹம்ஸம் நாராயணஞ்சைவ ஏதந்நாமாஷ்டகம் ஜபேத்". "விஷ்ணும் நாராயணம் கிருஷ்ணம் மாதவம் மதுஸூதநம். ஹரிம் நாஹரிம் ராமம் கோவிந்தம் ததிவாமநம்" என்ற சுலோகங்களைக் காலையில் எழுந்தவுடன் கிழக்கு முகமாகப் பத்துமுறை ஜபம் செய்தால் துஸ்வப்நங்களெல்லாம் நல்ல ஸ்வப்நமாக ஆகும்.

ஸந்யாஸி தர்மம். இல்லற வாழ்க்கையில் வெறுப்பு கொண்டு மோக்ஷத்தில் ஆசை கொள்பவர் விதிப்படி ஓர் தக்க குருவை அடுத்து ஸன்யாஸம் செய்து கொள்ள வேண்டும். ஸன்யாஸி ஓர் வீட்டிலிருந்து பாகம் செய்து சாப்பிடலாகாது. பகலில் கிருஹஸ்தாச்ரமிகளின் வீட்டிற்குச் சென்று பிக்ஷை கேட்க வேண்டும். ருசியான உணவு வேண்டு மென்று விரும்பலாகாது. ருசியானதோ ருசியற்றதோ கிருஹஸ்தனளிக்கும் உணவை ஏற்க வேண்டும். எவரிடமும் கோபித்துக் கொள்ளக்கூடாது. அஹிம்ஸையையே முக்ய தர்மமாகக் கொள்ள வேண்டும். ஓரே வஸ்த்ரத்தைத் தரிக்க வேண்டும். பணம் வாஹநம் தாம்பூலம் சந்தநம் புஷ்பம் முதலியவைகளை ஏற்கக் கூடாது. சீதோஷ்ணம் ஸுக துக்கம் மாந அவமாநம் முதலியவைகளைச் சமமாக எண்ணிப் பொறுக்க வேண்டும். மீண்டும் வீட்டிற்குச் சென்று குடும்ப வாழ்க்கையிலீடுபட்டாலும் வியாபாரம் கிருஷி முதலிய தொழில்களைக் கைகொண்டாலும் ஸன்யாஸி பதிதனுவான்.

விதவா தர்மம். கணவனை இழந்த ஸதீ ஸன்யாஸாச்ரம தர்மத்தைக் கொள்ள வேண்டும். ஓரே வேளை உப்பு புளி காரங்களைச் சேர்க்காமல் ஹவிஸ்ஸைப் புசிக்க வேண்டும். எதிலும் ஆசை வைக்கலாகாது. அழகிய வஸ்த்ரம் ஆபரணம் புஷ்பம் கந்தம் தைலம் முதலியவைகளை ஏற்கக் கூடாது. எப்போதும் நாராயணஸ்மரணையும் பகவத்ஸேவையும் பகவந்நாம உச்சாரணமும் அவச்யம் செய்ய வேண்டும். ஏகாதசி

ஸ்ரீகிருஷ்ணஷ்டமீ ஸ்ரீராமநவமீ சிவாத்ரிமுதலிய தினங்களில் உபவாஸமிருக்க வேண்டும். இந்தத்தினங்களில் வறுத்த பதார்த்தங்களை உபயோகிக்கக்கூடாது. அவர்கள் தாம்பூலந்தரித்தால் கோமாம்ஸத்தைப் புஜித்த பாபம் வரும். சிவந்த சாகம் சிறு கடலை எலுமிச்சம்பழம் சுரைக்காய் கத்தரிக்காய் ஆகிய இவைகளைப் புசிக்கலாகாது. கட்டில் மெத்தையில் விதவை படுத்தால் அவள் பதி நரகத்தில் விழுவான். கண்ணுடி பர புருஷ முகம் யாத்ரை ஆட்டம் பாட்டு உத்ஸவம் வாஹநம் முதலியவைகளை விலக்க வேண்டும். எப்பொழுதும் தர்மத்தையே கேட்க வேண்டும். குரு ஸேவை செய்து அவர் மூலமாக நல்ல உபதேசங்களைப் பெற வேண்டும்.

பதிவ்ரதா தர்மம். கற்புள்ள மாதருக்குக் கணவனே தெய்வமாவான். அவன் உத்தரவின்றி அவள் ஒன்றையும் புசிக்கலாகாது. பதியின் பணிவிடை தவிர வேறு விரதம், தபஸ், தேவார்ச்சனை முதலியவைகளைச் செய்யக் கூடாது. எப்போதும் பர்த்தாவைத் துதித்துப் போற்ற வேண்டும். பகவானைவிட உயர்ந்த தெய்வம் பதி என்றெண்ணவேண்டும். பதியைவிட்டு ஓர் க்ஷணங்கூடப் பிரிந்திருக்கலாகாது. அவன் கேட்ட கேள்விக்கே பதில் கூற வேண்டும். ஒரு போதும் அவன் மேல் கோபங் கொள்ளலாகாது. கணவன் தூங்கும் போது எழுப்பக் கூடாது. பர்த்தாவின் பசியறிந்து உணவளிக்க வேண்டும். மநதினாலும் பரபுருஷனை நினைக்கக்கூடாது. பதியின் பந்துக்களுக்கும் பணிவிடை செய்ய வேண்டும். கணவனுக்குப் பிரியமான கார்யத்தையே செய்ய வேண்டும். சிரித்த முகத்துடன் புருஷனை வரவேற்க வேண்டும். அவனுக்குப்பின் படுத்து முன்னே எழுந்திருக்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் கணவனது பாதாரவிந்தங்களைக் கழுவி அந்த ஜலத்தைத் தலையில் ப்ரோக்ஷித்துக்கொண்டு உட்கொள்ள வேண்டும். தியானம் ஆவாஹநம் முதலிய ஷோட

சோபசார பூஜைகளை அவன் பாதங்களுக்குச் செய்து பின்னர் வீட்டு வேலையைக் கவனிக்க வேண்டும். இங்ஙனம் பதி பூஜை செய்பவள் கங்கை முதலிய ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நாந தாநம் செய்த பயனைப் பெறுவள். அத்தகைய கற்பரசிகள் வஸிக்குமிடம் பரமபவித்ரமானது. அவர்களைத் தர்சித்தாலே ஸகல பாபங்களுமகலும். எவன் வீட்டில் தாய் இல்லையோ மனைவிக்குக் கற்பில்லையோ அவன் அரண்யம் செல்வதே மேல். பதிவ்ரதா ஸ்த்ரீகளைப் பரிவுடன் பாது காப்பது பர்த்தாவின் கடமையாகும்.

பக்ஷ்யா பக்ஷ்ய விசாரம். தாம்ர பாத்ரத்தில் பால் தயிர் வெண்ணை மோர் மது வெல்லம் இளநீர் முதலியவைகளை வைத்துப் புசிக்கலாகாது. வெண்கலப்பாத்திரத்தில் இளநீரை வைத்து அருந்தினால் மதுபாநம் செய்தது போலாகும். தேனுடன் நெய் எண்ணெய் வெல்லம் இஞ்சி ஆகிய இவைகளைச் சேர்த்துப் புசிக்கலாகாது. ஒருவர் குடித்து மிகுந்த ஜலத்தை அருந்தக் கூடாது. பகலில் இரண்டு வேளையும் இருண்டு ஸந்தியைகளிலும் போஜநம் செய்யக்கூடாது. தீர்த்தம் பாயஸம் பொடிகள் உப்பு நெய் வெண்ணெய் மோர் ஆகிய இவைகளைக் கைப்பட்டு உபயோகித்தால் கோமாம்ஸம் புசித்த பாபமுண்டாகும். வெள்ளி பாத்ரத்தில் கர்ப்பூரத்தை வைத்து புசிக்கலாகாது. சாப்பிடும்போது ஒருவரை ஒருவர் தொடக்கூடாது. எருமையின் பால் தயிர் நெய் முதலியவைகளைச் சாப்பிடலாகாது. பிராமணன் வீட்டில் தயிர் மோர் முதலியவைகளை விலைகொடுத்து வாங்கிப் புசிக்கக்கூடாது. ஞாயிற்றுக் கிழமையில் இஞ்சியையும் நெல்லிக்கனியையும் புசிக்கக்கூடாது. போஜந காலந் தவிர மற்ற காலங்களில் இடது கையால் தீர்த்தமருந்தக் கூடாது. நின்று கொண்டே எதையும் புசிக்கலாகாது. மயிருள்ள அன்னத்தைப் புசிக்கக் கூடாது. அதை எடுத்து விட்டு நெய் ஜலம் அல்லது ஸ்வல்ப விபூதியை

அன்னத்துடன் சேர்த்துப் புசிக்கலாம். பகவானுக்கு நிவேதநம் செய்யாமலும் பிரும்மசாரி ஸன்யாஸி காக்கை முதலியவைகளுக்குப் போடாமலும் அன்னத்தைப் புசிக்கக்கூடாது. எறும்பு நிறைந்த மது வெல்லம் பால் தயிர் நெய் முதலியவைகளைப் புஜிக்கக்கூடாது.

பிராயச்சித்தம். பசுவைக் கொன்றவன் அந்தப் பசுவின் உடலில் எவ்வளவு மயிர் உளதோ அவ்வளவு வருஷம் நாகத்தை அனுபவித்துப் பாம்பாகப் பிறப்பான். அதன் பின் குஷ்டரோகமுள்ள சண்டாளனாகப்பிறப்பான். லக்ஷ ப்ராம்மண போஜநம் செய்து வைத்தால் அந்த பாபம் அகலும். அறியாமல் ப்ரஹ்மஹத்தி செய்தால் பல்கோடி வருஷம் நாகத்தை அனுபவித்து மலத்திலுள்ள புழுவாகப் பிறப்பான். பின்னர் மிலேச்சனாகப்பிறந்து கண்ணில்லாமலிருப்பான். நான்குலக்ஷம் பிராமண போஜநம் செய்து வைத்தால் அந்த பாபமகலும். ஸ்த்ரீஹத்தி செய்தவன் காலஸூத்ர நாகத்தை அனுபவித்து யக்ஷ்மரோகமுள்ள சூத்ரனாகப் பிறப்பான். லக்ஷ ப்ராம்மண போஜநம் செய்து வைத்தால் அந்த பாபமகலும். கர்ப்பத்தை அழித்தவன் பல நாகங்களை அனுபவித்துக் கழுதையாகபிறப்பான். சூத்ரஹத்தி செய்தவன் பல நாகங்களை அனுபவித்து சூத்ரனாகவே பிறப்பான். லக்ஷம் காயத்ரீ ஜபம் செய்தால் அந்த பாபமகலும். கோழியைக் கொன்றவன் கோழியாகவே பிறப்பான். கங்கா ஸ்நாநம் செய்து ஸ்வர்ணதாநம் செய்தால் அந்த பாபமகலும். பூனையைக் கொன்றவன் கங்கா ஸ்நாநம் செய்து நான்கு பலம் லவண தாநம் செய்ய வேண்டும். ஸர்ப்பம் குதிரை அச்வத்த மரம் முதலியவைகளை அழித்தவன் அந்தந்த ஜந்மாவை எடுப்பான். கங்காஸ்நாந ஸ்வர்ண தாநங்களால் இந்த பாபமகலும். பொய் ஸாக்ஷி சொன்னவன், நன்றி கெட்டவன், பிராமண தநத்தை அபஹரித்தவன், சூத்ர சவத்தைத் தூக்கியவன், சூத்ர கிருஹத்தில் பாகம் செய்பவன், காளை

வண்டியில் ஏறுபவன், வண்ணான், பணம் பெற்று பிறருக்காக ஆலய பூஜை செய்பவன் ஆகிய இவர்கள் நரகத்தை அனுபவிப் பார்கள். நூறு பலம் ஸ்வர்ணத்தைத் தானம் செய்தால் இவர் களது பாபமகலும்.

கர்ம விபாகம். வஸ்த்ரம் பால் தயிர் மோர் வெள்ளி முத்து முதலிய வெள்ளை வஸ்துக்களைத் திருடியவர் ஆயிர மாண்டு நரகத்தை அனுபவித்து கொக்காகப் பிறப்பர். மூத்ர குண்ட நரகத்தில் நூறாண்டு துன்பமடைவர். பிறகு குஷ்ட ரோகமுள்ள சூத்ரனாகப் பிறப்பர். பிராமண போஜனம் செய்து வைத்தால் பின்னர் இந்த பாபமகலும். கந்த த்ரவ்யத்தைத் திருடுபவர் கஸ்தூரி மானாகப் பிறப்பர். ஸ்வர்ணத்தைத் திருடுபவரும் தானம் வாங்குபவரும் ரக்த குஷ்டமுள்ளவ ராகப் பிறப்பர். தகாதவர்களைப் புணர்ந்தவர் பல நரகயாதனை களை அனுபவித்துப் பின்னர் நபும்ஸகராகப் பிறப்பர். அவரது வம்சமும் விருத்தியாகாது. லக்ஷ ப்ராம்மண போஜனம்செய்து வைத்தால் பாபமகலும். கோபமுள்ளவன் கழுதையாகப் பிறப்பான். ஸதா சண்டையிடுபவர் காக்கையாக ஜனிப்பர். மையைத் திருடுபவர் கோகிலமாகப் பிறப்பர். பிராமணனையும் குருவையும் த்வேஷிப்பவர் பேனாகப் பிறப்பர்.. வ்யபிசாரம் செய்யும் ஸ்த்ரீ ரௌரவாதி நரகங்களை அனுபவித்து விட்டு ஏழு ஜன்மம் விதவையாகவும் ஏழு ஜன்மம் மலடாகவும் பிறப் பாள். ஆசாரமற்றவர் யவநனாகவும், ஹிம்ஸை செய்பவன் முட வனாகவும், க்ரூரமாகப் பார்ப்பவன் குருடனாகவும், அஹங்கார முள்ளவன் சண்டாளனாகவும், தேவநிந்தை செய்பவன் செவிட னாகவும், ஒருவன் சொன்ன சொல்லைத் தான் சொன்னதாகக் கூறுபவன் ஊமையாகவும் பொய் சொல்பவன் மீசை இல்லாத வனாகவும், க்ரூரமாகப் பேசுபவன் பல்லில்லாதவனாகவும், ஸத்யத்தை மறைத்தவன் நாக்கற்றவனாகவும், புஸ்தகத்தை அபஹரித்தவன் மூடனாகவும், துஷ்டன் விரலில்லாதவனாக

வும் பிறப்பர். ருசியான பொருளைத் தனியாக புஜிப்பவன் காலஸூத்ர நரகத்தை அனுபவித்துத் தேனீயாகவும் எறும்பாகவும் கொசுவாகவும் பிறப்பான். ஸந்த்யாவந்தநம் செய்யாதவன், ஸந்த்யா காலத்தில் படுப்பவன், பகலிலுறங்குபவன், யக்ஞோபவீதத்தைத் திருடுபவன், சுத்தமில்லாமல் ஸந்த்யாவந்தநம் செய்பவன், வேத சாஸ்த்ரங்களை நிந்திப்பவன் ஆகிய இவர்கள் பதிதராகப் பிறப்பார்கள். தடாகத்தைக் கெடுப்பவன் முதலையாகப் பிறப்பான். ஏகாதசியன்று அறியாமல் புசித்தவன் தான் உண்ட உணவைப்போல் மூன்று மடங்கு பொருளைத் தாநம் செய்தால் அந்த பாபமகலும். சித்ரவஸ்த்ரத்தைத் திருடுபவன் மயிலாகப் பிறப்பான். பெரியோர் வந்தவுடன் எழுந்திருந்து வரவேற்காதவன் ஏழு ஜன்மம் மரமாகப் பிறப்பான். சிவத்வேஷம் செய்பவன் கோழியாகவும் தேவலகனுகவும் பிறப்பான். தீபத்தை அணைக்கும் புருஷன் மினுமினுப்பூச்சியாகவும், தான்யத்தைத் திருடுபவன் குருவியாகவும் சுலோகத்தைத் திருடுபவன் தவளையாகவும், துஷ்ட வார்த்தை பேசுபவன் தேளாகவும் பொய்யாக தேவப்ராமணர்களிடம் தோஷமுறைப்பவன் வண்ணானுகவும் தப்பாக ஜோதிஷம் கூறுபவன் குரங்காகவும் பிறப்பான். என்று பகவானுரைத்ததைக் கேட்டு நந்தன் ஆநந்தமடைந்தான். அன்றியும் கேதார கன்னிகை தர்ம தேவதையைச் சபித்தாள் என முன் கூறியதை விரிவாகச் சொல்ல வேண்டுமென்று வேண்ட பகவானுரைத்தார்.

கேதார கன்யா சரிதம். பிரும்ம வம்சத்தில் பிறந்த உத்தாநபாதனது குமாரன் துருவனல்லவா? அவனுக்கு வத்ஸகார்ணன் என்றோர் புதல்வன் பிறந்தான். அவனது குமாரனே கேதாரன் என்ற அரசன். அவன் மிக்க விஷ்ணு பக்தன். திநந்தோறும் ஆயிரக் கணக்கான கோக்களையும் ஸ்வர்ணத்தையும் அந்தணர்களுக்களித்து வந்தான். பற்பல யாகங்களைச்

செய்தான். இவனது புண்யத்தைக் கண்டு மகிழ்ந்த லக்ஷ்மீ தேவி இவன் யாக குண்டத்திலிருந்து குழந்தையாகத் தோன்றினள். அவளது அழகு அரசன் கண்ணைப் பறித்தது. இத் தெய்வப் பிறப்பான பெண்மணியைத் தேவர்களே நமக்குத் தந்தனர் என்றெண்ணினன். அன்புடன் அதைக் கையில் எடுத்தான். உடனே அப்பெண், அரசே! யான் கமலா தேவியின் அம்சத்தினல் பிறந்தவள் என்று கூறி உடனே ஏனைய குழந்தைகளைப்போல் அழ ஆரம்பித்தது. மன்னன் மனமகிழ்ந்து மகளை மனைவியினிடமளித்தான். அதற்கு பிருந்தை என நாமஞ்சூட்டி இருவரும் செல்வக்குமரியை அன்புடன் வளர்த்து வந்தனர். வயது வந்ததும் பிருந்தை புண்ய வனஞ் சென்று புருஷோத்தமனையே பதியாகப் பெற வேண்டுமெனத் தவம் புரிந்தாள். பிரும்மா அவளெதிரே தோன்றி சில காலம் சென்றபின் உனது உள்ளம் கைகூடுமென்ருர். பலநாட் சென்றபின் சதுர்முகன் பிருந்தையின் மன உறுதியைப் பரீக்ஷிக்கக் கருதினர். தர்மனை அவளிடம் அனுப்பினர். அவர் அழகு வாய்ந்த அந்தணச் சிறுவன் வேடம் பூண்டு அவளெதிரிற் சென்ருர். பிருந்தை அளித்த அதிதி பூஜையைப் பெற்று அவள் தவம் செய்யுங் காரணத்தை அறிந்தார். முக்காரணங்களுக்கும் எட்டாத பரம புருஷனை நீ பதியாக அடைவது துர்லபம். என்னை மணந்து அளவற்ற ஆநந்தத்தை அடைவாயாக என்று தர்மன் கூறினன்.

இதைக் கேட்ட பிருந்தை, மிகச் சிநங் கொண்டு, அந்தண! பரஸ்த்ரீயை விரும்புவன் பாதகி அன்ருே? மற்றவர் மனைவியை மாதாவைப்போல் எண்ணுவது உம் கடமை அல்லவா? அன்னிய ஸ்த்ரீகளின் அழகைக் காண்பதும் வர்ணிப்பதும் பாபமன்ருே? எல்லோருள்ளத்திலும் ஞானரூபியான பகவான் அந்தர்யாமியாக வஸிப்பதை நீ அறியாயா? புத்தியில் துர்க்கையும் மனதில் பிரும்மாவும் இந்திரியங்களில

தேவரும், தங்கி எல்லோர் செய்யும் புண்ய பாபங்களைக் கவனிக்கின்றனர். ஆதலால் இந்த துரெண்ணத்தை விட்டுத் தூரே செல்லும். என்று பிருந்தை கூறிய உபதேசங்களுக்குத் தர்மன் செவி கொடுக்கவில்லை. பலாத்காரமாக பிருந்தையின் கையைத் தொட ஆரம்பித்தான். அவள் அளவில்லாக் கோபங் கொண்டு நீ க்ஷயித்துப் போவாய் என்று தர்மத்தைச் சபித்தாள். தர்மத்திற்கு நாசம் வந்தவுடன் ஸகல தேவர்களும் பயந்து பிருந்தை இருப்பிடம் வந்தனர். விஷ்ணு பிரும்மா ஸூர்யன் அநந்தன் சந்த்ரன் மஹேந்த்ரன் முதலியவர்கள் அவளை வணங்கி தர்மத்திற்கிட்ட சாபத்தை அகற்றும்படி வேண்டினார்கள்.

அவர்களது பிரார்த்தனைக்கிணங்கி பிருந்தை தர்மத்தை எழுப்பினள். அவன் மிக்க இளைத்திருப்பதைக் கண்ட தர்மத்தின் மனைவியான மூர்த்தி என்பவள் விஷ்ணு பாதத்தில் விழுந்து தன் பதி தீர்க்காயுளாக இருக்கும்படி வேண்டினள். பகவான் மூர்த்தியைப் பார்த்து உனது ஆயுளை உன் பதிக் களித்து அவன் அவனியில் நீண்ட நாள் ஜீவித்திருக்கும்படிச் செய். பதிக்குத் தன் ஆயுளை அளித்த புண்யத்தால் நீ கோலோகம் செல்வாய். விருஷபானுவின் வயிற்றில் அவதரிக்கும் ஸ்ரீ ராதாதேவியின் நிழலிலிருந்து நீ மற்றோர் ராதையாக ஜநிப்பாய். உன்னை நாராயணனுக்கு அளித்து விட்டு ராதை மறைந்து கிருஷ்ணனிடம் செல்வாள். பின்னர் நீயும் ராஸ மண்டபத்தில் பகவானுடன் சேர்ந்து பேரின்பத்தைப் பெறுவாய் என்றார். அவளும் அங்ஙனமே அவதரித்து என்னருகே வந்து ஆநந்தமடைந்தாள். பிருந்தை தேவர்களைப் பார்த்து எனது வாயில் மும்முறை தர்மனை நோக்கி க்ஷயித்துப்போ என்று சாபங்கிளம்பியதாலும் கற்பாசிகளது சொல் வீணாகாதாதலாலும் திரேதா யுகத்தில் தர்மத்தின் ஓர் பாதமும் த்வாபரையில் இரண்டு பாதமும் கலி யுகத்தில்

மூன்று பாதமும் அழியும் என்று கூறினள். தர்மன் தனது தர்மபத்னியின் ஆயுளைக்கொண்டு மூன்று பாதங்கள் அழிந்த போதிலும் தீர்க்காயுஸாக ஜீவித்திருக்கிறான்.

நந்தனுக்கு ஞானோதயம். இங்ஙனம் பகவான் நந்தனுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஸநத்குமாரர் வஸிஷ்டர் ஆங்கிரஸ் புலகர் கபிலர் காத்யாயநர் விச்வாமித்ரர் விபண்டகர் வால்மீகி பராசரர் சுக்ரர் பிருஹஸ்பதி ஸௌபரி பாரத்வாஜர் சுகர் மார்க்கண்டேயர் லோமசர் அஷ்டாவக்ரர் சதாநந்தர் வாமதேவர் முதலிய ஆயிரக்கணக்கான மஹர்ஷிகள் உள்ளே நுழைந்தனர். பகவான் தக்கபடி எல்லோரையும் வரவேற்று அதிதி பூஜை செய்து ஆஸநத்திலமர்த்தினர். ஒவ்வோர் முனிவராக எழுந்து பகவானைப் போற்றிப்பணிந்து ஆஸநத்திலமர்ந்தனர். ஒவ்வொருவர் செய்த துதியிலும் ஸ்ரீ கிருஷ்ணனே பரமாத்மா. அவனே கோலோகநாதன். எல்லாமாய் எங்கும் எக்காலத்தும் பூரணமாய் ஆநந்தமாய் சுடராய் உள்ளவன் அவனே எனக் காணப்பட்டது. இதைக் கேட்ட நந்தன் ஆநந்த பரவசமானன். அவனது கண்களிலிருந்து ஆநந்த பாஷ்பம் ஆருய்ப் பெருகிற்று. உடலெல்லாம் மயிர்க்கூசலுண்டாயிற்று. தன்னை மறந்தான். உலகை மறந்தான். மெய்ம்மறந்து கீழே விழுந்தான். இந்நிலையிலுள்ள தனது வளப்புத் தந்தையைப் பகவான் அன்புடன் தூக்கி மடியின் மீது வைத்துக்கொண்டு மோஹமகலும்படிச் செய்தார். அந்த மோஹமகலுவதற்கு ஓர் ஸ்தோத்ரத்தை நந்தனுக்குரைத்தார். பரமசிவன் திருபுராஸுரனுடன் போர் புரிந்து ரணகளத்தில் மோஹமடைந்த போது இந்த ஸ்துதியைப் பகவான் பிரும்மாவின் மூலமாகப் பரமசிவத்திற் குபதேசித்தார். சங்கரன் அதை ஜபித்தவுடன், துர்க்காதேவி எதிரிற்றோன்றி ஓர் திவ்யசூலத்தை அளித்து ஹரியைத் துதிக்கும்படிக் கூறியகன்றாள். சிவன் ஹரியைத் துதித்தபோது அவர் ஓர் கலை

யால் விருஷப ரூபமெடுத்து வந்து சிவனைத் தன் முதுகின்மீது சுமந்தார். அதனால் அரன் அரக்கனைக் கொன்று வெற்றி பெற்றார். அத்தகைய துதியைப் பகவான் நந்தனுக்குக் கூற அவனங்கேயே அதை ஜபித்தான். துர்க்காதேவி பரசிவத்துடனங்கு தோன்றி நந்தனது அஞ்ஞான அந்தகாரத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தைத் தந்து மறைந்தாள். நந்தன், ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என்பதை நன்குணர்ந்து ஆநந்தக்கடலில் ஆழ்ந்தான். பகவான் அவரைக் கோகுலத்திற்குச் செல்லும்படி கூற நந்தன், தர்மம் பிருந்தையின் சாபத்தால் எப்படி மூன்று யுகங்களில் குறைந்திருந்தானென்று வினவ பகவானுரைத்தார்.

சதுர்யுக தர்மம். கிருதயுகத்தில் தர்மம் பூர்ணகலையுடனிருந்ததால் வேதம் வேதாங்கம் இதிஹாஸ புராணம் முதலியவைகள் நன்றாக செழித்திருந்தன. நான்கு வருணத்தாரும் ஸ்வ தர்மத்தைக் கை கொண்டிருந்தனர். க்ஷத்ரியர்கள் பதினாறில் ஓர் பங்கே குடிகளிடம் வரி வாங்கினார்கள். வியபிசாரம் திருடு பயம் பொய் சொல்லல் முதலிய துர்க்குணங்கள் கிடையா. குரு பக்தி பித்ரு பக்தி பதி பக்தி முதலிய தர்மங்கள் பூர்ணமாயிருந்தன. லக்ஷம் வர்ஷம் மனிதர்கள் ஜீவித்திருந்தனர். நதிகளில் ஜலமும் பூமியில் பயிர்களும் மரங்களில் பழங்களும் நிறைந்திருந்தன. ஸத்யம் தயை முதலிய குணங்கள் எல்லோரிடமும் காணப்பட்டன. இதில் கால் பங்கு குறைவாக திரேதாயுகத்திலும் அரைப் பங்கு குறைவாக த்வாபர யுகத்திலும் தர்மம் இருந்தது. கலியில் முக்கால் பங்கு தர்மம் குறைந்தது.

கலியில் பத்தாயிரமாண்டுவரைப் பகவான் பூமியில் தங்கியிருப்பார். பின்னர் தேவதா ஸான்னித்யமிராது. ஐயாயிரமாண்டு வரை கங்காதி புண்ய தீர்த்தங்கள் தரணியில் தங்கி இருந்து பின்னர் கோலோகஞ் சென்று விடும். இரண்

டாயிரத்தைநூறு வருஷம் வரை கிராம தேவதைகளும் வேத மந்த்ர பலமுமிருக்கும். கலியில் அதர்மம் ஓங்கும். சூத்ர வர்ணம்ஒன்றுதான் விசாலமாக இருக்கும். கர்மானுஷ்டானங்கள் அழிந்துவிடும். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து புஜிப்பர். பூணூலையும் திலகத்தையும் தரிக்க மாட்டார்கள். பெண்கள் புருஷனை மிரட்டுவார்கள். சிஷ்யன் குருவையும், பிள்ளை பிதாவையும் நிந்திப்பார்கள். அரசனது வரிதாளாமல் குடிகள் வனஞ் செல்வர். ஸத்யம் தயை கபடமின்மை விநயம் நீதி முதலியவைகள் காணக்கிடைக்கா. புருஷர்கள் மாமனார் வீட்டு மனிதர்களிடமே அதிக கௌரவமும் அன்புங் காட்டுவர். தாய் தந்தையைக் காக்கமாட்டார்கள். வயிற்றையும் ஆண் பெண் குறிகளையுமே முக்கியமாக கவனிப்பர். பசிப்பிணி ஏழ்மை பஞ்சம் முதலியவைகள் மனிதரைப் பீடிக்கும். நதியில் ஜலமும் பூமியில் பயிரும் மரங்களில் பழமும் ஸ்த்ரீகளுக்குக் குழந்தையு மிரா. ம ழை குறையும். தாபமதிகமாகும் எல்லோரும் க்ரூரமாகப் பேசுவார்கள். எளியோரை வலியோர் அடிப்பர். இங்ஙனம் கலியில் பல அநீதிகள் நிகழ்ந்த பின் கல்கியாக வந்து பகவான் இவைகளை அகற்றி கிருதயுக தர்மத்தை நிலை நாட்டுவர். எல்லாம் காலத்திற்கு உட்பட்டே நடக்கின்றன. அந்த காலமும் அவரவர் செய்த கருமத்திற்கேற்றபடியே தோன்றும். யான் வசுதேவனுக்குப் புதல்வனாகத் தோன்றி கம்ஸ பயத்தால் உம்மிடம் வந்தேன். இனி யான் என் தந்தை தாயிடமிருந்து என் கடமையைச் செய்ய வேண்டுமாதலால் நீர் கோகுலம் செல்லுமென்று பகவானுரைத்தார். இதனிடையே வஸுதேவனும் தேவகியுமங்கு வந்து உன்னைவிட்டுப் பிரியமனமில்லாத நந்தனை ஏன் ஊருக்கனுப்புகிறாய்? என்று கிருஷ்ணனைக் கேட்டனர். அவர்கள் விரும்பியபடி பகவான் உத்தவரை கோலோகமனுப்பி நந்த யசோதை ராதை ரோஹிணி முதலியவர்களுக்கும் தத்துவோ

பதேசஞ் செய்து தானும் கோலோகம் போவதாகக் கூறும் நந்தனை இங்கேயே இருக்கும்படிச் செய்தார். யசோதை ராதை முதலியவர்களுக்கு ஸ்வப்னத்தில் தர்சநந் தந்து பகவானவர் களைச் சந்தோஷப் படுத்தினர். நாரதர் கோரியபடி நாராயணர் ருக்மிணீ விவாஹத்தை விரிவாக உரைத்தார்.

ஸ்ரீ ருக்மிணீ கல்யாணம்.

கர்க்காசார்யர் வந்து விதிப்படி பகவானுக் குபநயநம் செய்து வைத்தார். அச்சமயம் பிரும்மா பரமசிவன் இந்த்ரன் முதலிய ஸகலதேவர்களும் தன் பத்னிகளுடன் வந்து தர் சித்துப் பகவானுக்குக் காணிக்கை கொடுத்து வாழ்த்திச் சென்றனர். விதிப்படி கிருஷ்ணனும் ஸாந்தீபினி எனும் முனிவரைக் குருவாகக்கொண்டு ஸகல கலைகளையும் கற் றுணர்ந்தார். குருவின் மனைவி விரும்பியபடி இறந்த குரு புத்ரனை எழுப்பி அதையே குருதக்ஷிணையாகக் கொடுத்து வீட்டிற்கு வந்தார். விச்வகர்மனை அழைத்து த்வாரகை எனும் நகரைப் படைக்கும்படி பகவான் உத்தர விட்டார். அவன் எப்படி நிர்மாணிப்பதென யோசித்துக் கொண்டிருக் கும்போது பகவான் தனது ஸங்கல்பத்தினல் அத்யத்புத மாக த்வாரகாபுரியை நிர்மாணம் செய்தார். ஸகல தேவ ஸம்பத்துகளுமங்கு காணப்பட்டன.

விதர்ப்பதேசத்தில் விஷ்ணுவின் அம்சத்தால் பீஷ்மகர் என்றோரரசன் ஜனித்தான். அவனுக்கு ருக்மிணீ என்ற அழகிற் சிறந்த கன்யாரத்நமுதித்தாள். அவள் யௌவனப் பருவமடைந்தவுடன் பீஷ்மகராஜன் தன் பெண்ணையும் மந் திரிகளையும் புரோஹிதர்களையு மழைத்து ருக்மிணிக்கேற்ற கணவன் யார் என வினவினன். சதாநந்தரெனும் மஹர்ஷி எழுந்து த்வாரகையில் வஸிக்கும் ஸ்ரீ கி ரு ஷ் ண னே

எல்லா வகையிலும் இவளுக்கேற்ற புருஷன்; அவனுக்கு நமது பொருளை எல்லாமளித்தாவது ருக்மிணியை மணம் செய்து வைப்பதுதான் உசிதம் என்றார். இதைக் கேட்டு பரமஸந்தோஷமடைந்த பீஷ்மகன் இங்ஙனம் நல்வாங் கூறிய முனிவருக்கு ஸந்மாநம் செய்தான். இதைக் கண்டு ருக்மி எனும் அரசனது முதல் புதல்வன் கோபங் கொண்டான். தந்தையே! இப்பிச்சைக்காரன் சொல்லைக்கேட்டு நீ ஸந்தோஷப்படுவது நியாயமா? கிருஷ்ணன் வைச்யகுலத்திலே பிறந்து இடையர் தொழில் செய்பவன். அவனுக்கோ அரச கன்னியை அளிப்பது? அன்றியும் அவன் திருட்டு குணமும் பரஸ்திரீகளைக் கெடுக்கும் வழக்கமுமுள்ளவன். ஜராஸந்தனிடம் பயந்து ஸமுத்ரத்தின் நடுவே நகரமைத்து ஜீவிக்கிறான். துர்வாஸரது சிஷ்யன் யான். இந்த்ரனையும் வெல்லும் சக்தி எனக்குளது. எனக்கு ஸமமானவன் சிசுபாலன். அவனுக்கே ருக்மிணியைத் தருவது என்று ஸகல ராஜாக்களுக்கும் பத்ரிகை அனுப்புங்கள் என அவன் கூறினன். இதைக் கேட்டு துக்கமடைந்த பீஷ்மகராஜன் தனது மந்திரிகளோடு ஏகாந்தமாகக் கலந்து யோசித்து உக்ரஸேந மஹாராஜனுக்கு ஓர் தூது அனுப்பினன். தூதனிடம் ஓர் பத்ரிகை எழுதி அதில் தனது மகளை கிருஷ்ணன் வந்து மணந்துகொள்ளும்படி விக்ஞாபித்துக் கொண்டிருந்தான். மற்ற மன்னர்களுக்கு மகன் கூறியபடி ருக்மிணியைச் சிசுபாலனுக் களிப்பதாகப் பத்ரிகை அனுப்பினன்.

உக்ரஸேந மஹாராஜன் தன் பேரனது கல்யாணச் செய்தியைக் கேட்டுப் பேரானந்தமடைந்தார். ஊரெல்லாம் அலங்கரிக்கச் சொன்னர். அஷ்டாதசவாத்யங்களும் முழங்கின. அச்சமயம் தற்செயலாகக் கருத்மான் என்ற அரசன் தன் கன்னிகையான ரேவதியுடனங்கு வந்தான். அவ்வரசன் பிரும்மலோகஞ் சென்று தன் பெண்ணுக்கேற்ற பதி யார்?

என்று கேட்டு பலராமனே அவள் கணவனென அறிந்து அவருக்குப் பெண்ணையளித்து மணம் செய்து வைக்க வந்தார். வஸுதேவர் விதிப்படி பலராமருக்கும் ரேவதிக்கும் விவாஹத்தைச் செய்து வைத்தார். கிருஷ்ணன் தனது பரிவாரத்துடன் விதர்ப்பதேசத்திற்குக் கிளம்பினார். அங்கு நடைபெறப் போகும் பகவானது விவாஹத்தைக் காண விண்ணவரனைவரும் வந்து சேர்ந்தனர். அதைக் கண்டு அஸுராம்சம் வாய்ந்த சிசுபாலன் தந்தவக்த்ரன் ருக்மி முதலியவர்கள் பொறாமை கொண்டனர். ஸ்ரீ கிருஷ்ணனை நிந்தித்தனர். பலராமன் கோபங்கொண்டு சிசுபால தந்தவக்த்ரர்களைக் கொல்ல ஆரம்பித்தார். அசரீரியான வாக்கு ஒன்று தோன்றி கிருஷ்ணனால் கொல்லத்தக்க இவர்களை நீ கொல்லாதே என்றது. பலராமனுமவர்களைக் கொல்லாமல் அடித்து மூர்ச்சையாகும்படிக் கீழே தள்ளி விட்டார்.

இதனிடையில் சதாநந்தர் கல்யாண வேஷத்துடன் பகவானை அழைத்து வந்தார். பீஷ்மகன் அவரை அன்புடன் வரவேற்று அர்க்யபாத்யாசமனீயங்களை அளித்தார். இன்றே என் ஜன்மம் ஸபலமாயிற்று. என மனமஹிழ்ந்து மங்கள வேஷத்துடன் மகளைச் சபைக்கு அழைத்து வந்தார். பிரும்மாதி ஸகல தேவகணங்களுமங்கு வந்தன. பீஷ்மக ராஜன் விதிப்படி வரனைப் பூஜித்துக் கன்னிகாதானம் செய்தார். பகவானும் ருக்மிணியை ஏற்று விவாஹம் செய்து கொண்டார். பார்வதீ சாவித்ரீ ரதி ஸரஸ்வதி முதலிய ஸகல தேவ ஸ்த்ரீகளும் தம்பதிகளை வாழ்த்திப் போற்றினர். அவரவர்களுக்கும் தக்கபடி மரியாதை செய்து பகவான் எல்லோரையுமனுப்பினார். யசோதையும் நந்தனும் பகவானை விட்டுப் பிரிய மனமில்லாமல் வருந்தினர். பகவான் அவர்களுக்குப் பசிதாகத்தை அடக்குதல் மனதைச் சுத்தப்படுத்துதல், நாடிகளைச் சோதித்தல், குண்டலினீ சக்தியுடன் கூடிய

ஈசனைச் சிந்தித்தல், மூலாதாரம் ஸ்வாதிஷ்டாநம் மணிபூரகம் அநாஹதம் விசுத்தி ஆக்ஞை எனும் ஷட்சக்ரங்களை அர்ச்சித்தல் ஆகிய யோக ஞாநத்தையும் ஆத்ம விஷயமான ஞாநத்தையும் பக்தியையும் உபதேசித்து ராதையினிடம் சென்று மற்ற உபதேசங்களைப் பெறும்படி கூறி அனுப்பினர். யசோதை ராதையினிடஞ் சென்று விரைவில் ஸ்ரீதாமனளித்த சாபமகன்று பகவானுடன் சேரப் போகிறாய் என்று கூறி தனக் குபதேசம் செய்யும்படி வேண்டினள். ராதாதேவி கோலோக நாதனது பெருமையை எடுத்துக்கூறி அவரது சரிதத்தைக் கேட்பதும் படிப்பதும் அவர் நாமாவைச் சொல்வதும் அவரது திவ்யமங்கள விக்ரஹத்தை ஸ்மரிப்பதுமே பிறப்பிறப்பெனும் பெருங்கடலைக் கடக்க ஸாதநம் என்று கூறினள். யசோதையும் அங்ஙனமே பகவானை த்யானம் செய்து வந்தாள்.

ப்ரத்யும்ந சரிதம். பகவானது அம்சத்தினால் ருக்மிணீ தேவிக்குக் கர்ப்ப முண்டாயிற்று. முன்னர் முக்கண்ணனால் எரிக்கப்பட்ட காமனே ருக்மிணி கர்ப்பத்தில் குழந்தையாக வந்தான். அவனது மனைவியான ரதிதேவி மாயாவதி என்ற பெயருடன் சம்பராஸுரனது வீட்டில் வந்து காத்துக் கொண்டிருந்தாள். ப்ரத்யும்நனை ருக்மிணீ தேவியின் வயிற்றிற் பிறந்த காமனைச் சம்பரன் ஏழாம் நாளே ஒருவருமறியாமல் தூக்கிச் சென்றான். மாயாவதியினிடம் அரக்கன் அக்குழந்தையை அளிக்க அவ்விருவர்களுங்கூடி ஆநந்தமாக வாழ்ந்தனர். ஒரு நாள் அஸுரன் இவர்கள் ஏகாந்தமாக ரமித்திருப்பதைக் கண்டு கோபங் கொண்டான். ப்ரத்யும்நனுடன் சம்பரன் கடும்போர் செய்தான். வாயு ரகஸ்யமாக வந்து ப்ரத்யும்நன் காதில் துர்க்கையைப் போற்றும்படி கூறினர். அங்ஙனமே துர்க்கையைத் துதித்து அவளிடமிருந்து சூலாயுதத்தைப் பெற்றான். அதைக் கொண்டு சம்பரனைக்

கொன்று ப்ரத்யும்நன் வெற்றி பெற்றான். அன்றியும் விமானத்தின் மீதேறி மாயாவதியுடன் ருக்மிணியின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். பகவானும் அவர்களை வரவேற்று அவர்களுடன் ஆனந்தமாக வஸித்தார். மற்ற ஏழு மனைவிகளுக்கும் நரகாஸுரனைக் கொன்றபோது அங்கிருந்து வந்து பகவானை மணந்த பதினாறாயிரம் ஸ்த்ரீகளுக்கும் ஒவ்வொருவருக்கும் பத்து பிள்ளைகளும் ஓர் பெண்ணுமாகப் பிறந்தன.

தூர்வாஸ விவாஹம். பரமசிவத்தின் அம்சத்தினால் அவதரித்த தூர்வாஸ மஹர்ஷி ஒரு ஸமயம் ஆயிரம் சிஷ்யர்களுடன் த்வாரகைக்கு வந்தார். அவரது வரவைக் கேட்டு ஸந்தோஷமடைந்த உக்ரஸேந மஹாராஜன் வஸுதேவன் வாஸுதேவன் முதலிய எல்லோரும் அவரை எதிர்கொண்டழைத்தனர். தக்கபடி அர்க்ய பாத்யாசமனீய மளித்து உக்ரஸேநரவரைப் பூஜித்தார். வஸுதேவர் யசோதையினிடமிருந்து கொண்டுவந்த ஏகாநம்சா என்ற கன்னிகையைத் தூர்வாஸருக்களித்து விதிப்படி விவாஹம் செய்து வைத்தார். தூர்வாஸர் வஸுதேவர் விரும்பியபடி சிலகாலம் அவர் வீட்டிலேயே தங்கி மனைவியுடன் இல்லற தர்மத்தை நடத்தினார். பகவானது நிஜஸ்வரூபத்தை உணர்ந்து போற்றி அவரிடம் விடை பெற்றுக் கைலாஸஞ் சென்றார். உமாநாதனை வணங்கிப் போற்றித் தான் கிருஷ்ண ஸஹோதரியை மணந்ததையும் தனக்கு வைராக்யமுண்டாகி மனைவியை விட்டு விட்டுத் தபோவநஞ் செல்லக் கிளம்பியதையுங் கூறி விடையளிக்கும்படி வேண்டினார். பார்வதீ தேவி முனிவரை நோக்கிக் குழந்தை இல்லாத இளங்குமரியான பத்னியை விட்டு விட்டு நீர் தபோவநஞ் செல்வது தர்மமல்ல. அன்றியும் கேட்டதை அளிக்கும் கற்பக விருக்ஷம் போன்ற கிருஷ்ணனங்கிருக்க அவரை விட்டுத் தவம் செய்ய நீர் வேறெங்கு செல்ல வேண்டும்? அவரை விட வேறு தெய்வமுண்டோ? த்வாரகை

சென்று இல்லற தர்மத்தால் இறைவனை ஆராதித்து இஹபர சுகம் பெறுவீர் என்றாள். அவருமங்ஙனமே த்வாரகை சென்று பகவத் தர்சநம் செய்து இல்லற தர்மத்திலீடு பட்டார்.

உஷா பரிணயம். கிருஷ்ணனது புதல்வனான ப்ரத்யும்ந னுக்கு அநிருத்தன் என்றோர் ஆண் குழந்தை பிறந்தது. அவன் தக்க வயதைப் பெற்றபோது ஒரு நாளிரவு ஒரு ஸ்வப்நங் கண்டான். அதில் ஸர்வாவய ஸௌந்தரியான ஓர் பெண் தன்னருகே வந்து தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டியதாகவும் நீ யார் என்று கேட்டபொழுது பாணனது குமாரியான உஷை தானென்று கூறி தன்னை அடைய பாணனையும் பரமசிவத்தையும் பார்வதியையும் வேண்டிக்கொள் என்று கூறியதாகவும் கனவுகண்டான். அன்றுமுதல் அநிருத் தன்காமவிகாரங்கொண்டு எப்போதும் உஷையையே நினைத்து உண்ணாது உடுக்காது உறங்காது பித்தனைப்போல் காலங் கழித்து வந்தான். இதைக்கண்டு வருந்திய ருக்மிணீ பகவா னிடத்தில் விக்ஞாபநம் செய்துகொள்ள கிருஷ்ணன் ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்து கூறி இதேபோல் உஷைக் கும் ஓர் ஸ்வப்நம் தோன்ற வைத்து அவளையும் பித்தம் பிடித்தவள்போல் செய்து விட்டார். தன் அருமைப் புதல் வியினது நிலையைக் கேட்டு வருந்திய பாணன், விநாயகர் சுப்ரமண்யர் பரமசிவன் முதலியவர்களது ஸன்னதியிற் சென்று இதற்கென்ன காரணம் என்று வினவி வருந்தினான். அவனை ஸமாதாநப்படுத்தி விநாயகர் இந்தக் கனவை அனி ருத்தனுக்குத் தோற்றி வைத்தவள் ஊமைபோல் பேசாமல் சிவனது இடது பாகத்தே நிற்கிறாள். இதை அறிந்து உஷைக்கும் இதேபோல் ஸ்வப்நத்தைத் தோற்றி வைத்தவர் ஒன்று மறியாதவர் போல் த்வாரகையில் படுத்திருக்கிறார் என்றார். இதைக் கேட்ட பரமசிவன் இதைப் பாணன் அறிய

வேண்டாமெனக் கூறி இக்காரியத்தை முடித்து வைக்கப் பார்வதியைச் சித்ரலேகை எனும் உஷையின் தோழிக்கு யோக சக்தியை அளிக்கும்படி கூறினர்.

சித்ரலேகையும் அம்பிகை அளித்த அரிய சக்தியால் ஆகாயமார்க்கமாகச் சென்று ஒருவருமறியாமல் அநிருத்தனே உஷையின் அரண்மனைக்குக்கொண்டு வந்து விட்டாள். அங்கு இருவருங் கூடி பலநாள் சிற்றின்பத்தை அனுபவித்து வந்தனர். உஷை கர்ப்பிணியானள். அதைக் கண்டு காவலாளிகள் பயந்து பாணனிட மறிவித்தனர். தனது அரண்மனையில் ரஹஸ்யமாக வந்து புகுந்து தன் பெண்ணைக் கெடுத்த அநிருத்தனைக் கொல்லவேண்டு மென்று பாணன் கிளம்பினன். பரமசிவன் பார்வதி ஸ்கந்தர் விநாயகர் கோட்ட வீரனெனும் கிராமதேவதை ஆகிய இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனது பெருமையைக் கூறி அவரது பேரனன அநிருத்தனுக்கு உஷையை மணம் செய்து வைத்து மகிழும்படி கூறினர். இதைக் காது கொடுத்து கேளாமல் பாணன் அநிருத்தனருகே வந்து கிருஷ்ணனையும் அவரது ஸகாக்களான பாண்டவர்களையும் இடையரென்றும் ஒரே ஸ்திரீயை ஐவர் மணந்தனரென்றும் இழிவாகக் கூறினன். அதற்குத் தக்க விடையளித்து அநிருத்தன், உஷை தந்த தேர் மீதேறி பாணனுடன் போர் புரிந்தான். பாணன் தோல்வியடைவதைக் கண்டு பக்த பராதீனரான பரமசிவன் தன் பரிவாரத்துடன் கூடி அநிருத்தனேடு யுத்தஞ் செய்தார். அநிருத்தன் நித்ராஸ்த்ரத்தால் பாணனை மயக்கிக்கீழே விழும்படி செய்து அவனைக் கத்தியால் வெட்டப் போனன். அச்சமயம் ஸுப்ரமண்யன் அவனைத் தடுத்துப் பாணனைக் காத்தார். இதற்குள் தனது பேரனேடு பாணன் போர் புரிவதைக் கேட்டு வாஸுதேவன் தம் ஸேனையுடன் வந்து பாணாஸுரனது நகரைச் சூழ்ந்து கொண்டார். இதை யறிந்த

பாணன் இனி என்ன செய்வதென்று யோசிக்க ஸபை கூட்டினன். பாணனது தந்தையான மஹாபலியும் அச்சபைக்கு வந்து சேர்ந்தான். பகவத் பக்தனான பலியைப் பரமசிவன் அன்புடன் வரவேற்று ஆஸநமளித்தார். அச் சபையில் பாணன் ஒருவனே கிருஷ்ணனுடன் போர் புரிய வேண்டுமென்று கூறினன். போரை நிறுத்தி உஷையை அளித்து பகவானைப் பூஜிக்க வேண்டுமென மற்றவர் கூறியதை மறுத்தான். பலி தன் புதல்வனது பிடிவாதத்தைக் கண்டு வருந்தி பகவானிடம் சென்று அவரைப் பணிந்து துதித்தான். அவர் இவனது கருத்திற் கிசைந்து அவனது வம்சத்தில் பிறந்த எவரையும் யான் கொல்ல மாட்டேன். ஆனால் கர்வங் கொண்டவர்களது கர்வத்தை அகற்றுவது என் கடமை என்றார். மிக்க ஸந்தோஷமடைந்த மஹாபலி பகவானை வணங்கி விடை பெற்றுத் தன்னிருப்பிடஞ்சென்றான்.

பாணன் கிருஷ்ணனுடன் சண்டைக்குச் செல்ல அவனை அநுஸரித்து மஹாதேவனும் கிளம்பினர். ஸகல தேவாஸுரர்களும் நடுங்கும்படி கடும்போர் நிகழ்ந்தது. காலாக்நிருத்ரனனுப்பிய மாஹேச்வரஜ்வரம் கிருஷ்ணனைத் தவிர ஏனையோரை மூர்ச்சித்து விழும்படிச் செய்தது. கிருஷ்ணன் விஷ்ணுஜ்வரத்தை அனுப்ப கொஞ்ச நேரம் இரண்டு ஜ்வரங்களுக்கும் சண்டை நடந்தது. பின்னர் மஹேச்வரஜ்வரம் தோல்வியுற்று கிருஷ்ணனைச் சரணமடைந்தது. பகவான் தனது சக்கரத்தினல் பாணனுடைய ஆயிரக்கணக்கான கைகளை அறுத்தார். அதனல் பானன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். அதைக் கண்டு பரமசிவன் வருந்திப் பக்தனைக் காக்கும்படி பகவானை வேண்டினர். கிருஷ்ணனும் அப்படியே பாணனை எழுப்பி அவனுக்கு மிருத்யுஞ்ஜயமந்திரத்தையும் தன் கையிலிருந்த தாமரையையும் அளித்தார். பாணன் பரமாத்மாவினுடைய மஹிமையை உணர்ந்து உஷையுடன் அநிருத்தனை அச்யுத

னிடம் அர்ப்பணம் செய்து தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன். பகவானும் பாணனை ஆசீர்வதித்துப் பரம சிவனிடம் விடைபெற்று பரிவாரத்துடன் த்வாரகைக்குத் திரும்பினர்.

ஸ்ருகால மோக்ஷம். பகவான் த்வாரகையில் நித்யகர் மானுஷ்டானங்களைத் தவறாமல் அனுஷ்டித்துக்கொண்டிருக்கும்பொழுது ஓர் பிராமணன் வந்து விக்ஞாபனம் செய்து கொண்டான். தேவ! யான் ஸ்ருகாலன் எனும் மஹாராஜனது தூதன். எனது அரசனே வைகுண்டத்திலிருந்து அவதரித்த வாஸுதேவன். காலத்திற் கேற்றபடி பற்பல அவதாரம் செய்து அவரே ஹிரண்யன் முதலிய அரக்கர்களைக் கொன்றார். தாங்கள் வாஸுதேவன் என்று பெயர் வைத்துக் கொண்டு பகவானது அவதாரமென்று கூறுவது அநீதி. ஆதலால் அப்பெயரை விட்டு வேறு பெயர் வைத்துக்கொண்டு ஸ்ருகாலனைச் சரணமடையவேண்டும். இல்லையேல் அவருடன் போருக்கு ஸித்தமாக இருக்க வேண்டும். இது அவ்வரசனது ஆணை என்று பிராமணர் கூறினர். இதைக்கேட்டு பகவானும் மற்றுமுள்ளோரும் பதில் கூறாது நகைத்தனர். வந்த வேதியருக்கு விருந்திட்டு அனுப்பினர். ஸ்ருகாலன் இதைக் கேட்டு மிகக் கோபங் கொண்டான். நால்வகைச் சேனையுடன் போர்க்கோலங்கொண்டு த்வாரகைக்கு வந்தான். அவன் பொய்யாக நான்கு கைகளை வைத்துக்கொண்டு பகவானைப் போல் நடந்ததைக் கண்டு எல்லோரும் நகைத்தனர். பகவான் அவனுடன் போருக்கு வந்தவுடன் அவன் கிருஷ்ணனை வணங்கி தேவ, யான் ஸுபத்ரன் எனும் ஓர் த்வாரபாலகன். ஜய விஜயரைப்போல் முனிசாபத்தால் இப்பிறவியைப் பெற்றேன். தாங்கள் என்னைக்கொன்று நற்கதியளிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தான். பக்தியுடன் வணங்குமவனைக் கொல்வதெங்ஙனம்? என்று பகவான் யோசித்துக்கொண்டிருக்கும்போதே

அவன் உடல் கீழே விழுந்தது. திவ்ய தேஹம் பெற்ற ஸ்ருகாலன் வைகுண்ட நாதனை வணங்கிப் போற்றி வைகுண்டம் சென்றான்.

ராதையின் கணேச பூஜை. ஸுதாமனது சாபத்தால் ராதாதேவி நூறாண்டு பகவானை விட்டுப் பிரிந்து பிருந்தா வனத்தில் வருந்தினளல்லவா? அந்த தேவி தற்செயலாக ஸித்தாச்ரமம் என்னுமிடத்திற்கு வந்தாள். அங்கு விக்னேச்வரரது அரிய ஆலய மொன்றுண்டு. அன்றன்றும் அகில தேவர்களுமங்கு வந்து அவரை அர்ச்சித்துச் செல்வது வழக்கம். அதை அறியாத ராதை அங்கு வந்து தனக்குவந்த சாபமகலாதா? வாஸுதேவன் திரும்பத் தன்னை யடைந்து பேராநந்தத்தை அளிக்கமாட்டாரா? என்று கணேசனைப் பூஜித்தாள். கங்கா ஜலத்தைக்கொண்டு விநாயகருக்கு அபிஷேகம் முதலிய ஆராதனைகளை விதிவழுவாது நடத்தினள். இதனிடையில் வழக்கப்படி பிரும்மாதி தேவர்களும் ஸ்ரீ கிருஷ்ணனும் விக்னேசரைப் பூஜிக்க வந்தனர். ஆங்குள்ள காவலாளி ராதையை யாரென்றறியாமல் தேவர்களிடம்வந்து யாரோ ஒரு ஸ்த்ரீ எவ்வளவு தடுத்தும் கேளாமல் தாங்களர்ச்சிக்கும் இந்த விக்னேச்வர மூர்த்திக்குப் பூஜை செய்து இதை அசுத்தப்படுத்தி விட்டாள் என்று முறை யிட்டான். தேவர்கள் அவனை அகற்றி தேவியைப் போற்றி அருகிலுள்ள அச்யுதனை அடையும்படி வேண்டினர். அப்போதும் அவள் பகவானை அறியாமலிருக்கவே கிருஷ்ணன் தனது மாயா பலத்தால் தேவிகூட ஏமாந்ததைக் கூறி, தானே அவளருகிற் சென்று அவளைத் தொட்டார். உடனே அவளது சாபமும் அக்ஞானமுமகன்றது. ராதை பகவானைப் பணிந்து போற்றி அவருடன் த்வாரகை சென்றாள்.

வஸுதேவரது ராஜஸூய யாகம். விக்நேச பூஜைக்காக வந்திருந்த விண்ணவர்களைப் பார்த்து வஸுதேவன் தான்

உயர்பதவி பெறு ஓர் உபாயத்தைக் கூறும்படி வேண்டினன். ஸர்வலோக சரண்யனுன பரமாத்மாவையே புதல்வனுகப் பெற்றும் தினந்தோறும் அவரைத் தர்சித்தும் அவர் செய்யும் அமானுஷ லீலைகளைக் கண்டும் விஷ்ணு மாயையால் வஸுதேவன் ஏமாந்ததைக் கண்டு தேவர்கள் வியந்தார்கள். ஸத்கருமங்களால் அவர் மநம் சுத்தமான பிறகே அவர் பகவானை நன்கு உணரக்கூடுமெனக் கருதினர். ஆதலால் யக்ஞஸ்வரூபியான விஷ்ணுவை யஜ்ஞத்தினுல் ஆராதித்தால் நீ உயர்ந்த நற்கதியைப் பெறுவாய் என்று கூறி வானுலகஞ் சென்றனர். கிருஷ்ணனும் யாகத்தினுல் தான் நற்கதி பெறலாமென்றெண்ணும் தந்தைக்கு அவர் புத்தியைப் பேதிக்காமல் பற்பல யாகங்களைச் செய்து வைத்தார். முடிவில் ராஜஸூய யாகத்தையும் செய்து வைத்தார். அச்சமயம் அமரரனைவரும் நேராகவே வந்து வஸுதேவனளித்த ஹவிஸ்ஸை வாங்கிச் சென்றனர். ஸநத் குமாரர் குருவாக இருந்து இதை நடத்தி வைத்தார். பகவானது கருத்திற் கிணங்கி தந்தை எல்லாப் பொருள்களையுந் தக்ஷிணையாக அளித்தார்.

கிருஷ்ணன் நந்தன் வீடு செல்லுதல். பகவானுடன் கூடி ராதா தேவி த்வாரகையில் பிரும்மாநந்தத்தை அனுபவித்து வந்தாள். அவரது திவ்ய சரிதங்களைக் கூறி ஆநந்தபரவசமானுள். அதைக்கண்ட கோபிகள் அவரது வியோகத்தால்இறந்தாள் என்றெண்ணிக் கதறினர்கள். கிருஷ்ணன் தனது அமிருதகரத்தால் ராதையைத்தொட்டு எழுப்பி அவளுக்குத் தத்வோபதேசஞ் செய்தார். அதில், புருஷரில் தனக்குச் சிவனைவிட பிரியமானவரும் ஸ்த்ரீயில் உன்னைவிட பிரியமானவர் வேறெவரு மில்லை என்று கூறினர். ராதா தேவியினது பிரார்த்தனைக்கிணங்கிப் பகவான் கோகுலத்திற்கு வந்தார். அவர் வருவதைக் கேட்டு யசோதையும் நந்தனும் மற்ற கோப கோபிகைகளும் எதிர்கொண்டழைத்தனர். யசோதை கன்

றைக்கண்ட பசுபோல் ஸ்தநங்களில் பால் பெருக பகவானைக் கட்டித் தழுவினள். அவளது ஆவலைக் கண்ட கண்ணன் குழந்தை உருவெடுத்து யசோதை மடியில் படுத்துப் பாலருந்தினர். ராதையும் மற்ற கோபிகைகளும் இரவில் ராஸமண்டபஞ் சென்று ராஸக்ரீடையை அநுபவித்தார்கள். பிறகு ஒரு நாள் ஒரு யோஜனை விஸ்தாரமுள்ள திவ்ய விமாநமொன்று அங்கு வர ராதை முதலிய ஸகல கோபிகைகளையும் பகவான் அதிலேற்றி கோலோகத்திற்கனுப்பினர்.

கிருஷ்ணன் கோலோகஞ் செல்லுதல். பிருந்தாவநத்தில் தன்னந்தனியே நிற்கும் ஸ்ரீ கிருஷ்ணனை ப்ரும்மா பரம சிவன் இந்த்ரன் முதலிய ஸகல தேவர்களும் பணிந்து தாங்கள் அவதாரம் செய்த கார்யம் பூர்த்தியாய் விட்டதால் கோலோகத்திற்குத் தாங்கள் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். பகவான் கோலோகஞ் செல்லக் கருதிய உடன் த்வாரகை ஜலத்தில் மூழ்கிற்று. பலராமனது தேஜஸ் சேஷனிடமும், ருக்மிணி லக்ஷ்மியினிடமும், ஸத்யபாமை பூமியிலும், ஜாம்பவதி பார்வதியினிடமும், ஸாம்பன் ஸ்கந்தனிடமும், வஸுதேவர் கச்யபரிடமும், தேவகி அதிதியினிடமும், லயமானர்கள். பகவான் கதம்ப மரத்தின் கீழே வேடனலடிக்கப்பட்ட கிருஷ்ண விக்ரஹத்தில் தனது சக்தியைப் ப்ரவேசிக்கும்படிச் செய்தார். அவ்வுடலிலிருந்து நாலு கைகளுடன் சங்குசக்ர கதாபாணியாகக் கிளம்பி ஸர்வேச்வரன் வைகுண்டஞ் சென்றார். ஆங்குள்ள ஸகல தேவர்களுக்கும் காக்ஷியளித்து நேராக கோலோகஞ் சென்றார்.

இக்கதைகளைக் கூறி நாராயண ரிஷி சங்கரர் உத்தரவுபடி ஸ்வர்ணக்ரீவை எனும் ஸ்ருஞ்ஜயரது கன்னிகையை மணந்து பகவானைப் பூஜிக்கும்படி நாரதரைக் கூறினர். நாரதர் நாராயணரைப் பணிந்து தந்தையான பிரும்மாவினிடஞ் சென்றார். அங்கு ஸ்ருஞ்ஜயன் தனது மகளை நாரதர்

ஏற்று இல்லற தர்மத்தை நடத்தும்படி ஆசீர்வதிக்க பிரும் மனை வேண்டினூர். விதிப்படி விவாஹம் முடிந்தபின் ஒரு ஸமயம் ஸநத்குமாரர் நாரதரிடம் வந்து அவரது பக்தியைக் கண்டு ஸந்தோஷித்து கிருஷ்ண மந்த்ரத்தை உபதேசித்தார். நாரதர் மனைவியைவிட்டு விட்டு வைராக்யங் கொண்டுவெளிக் கிளம்பி கிருஷ்ண மந்த்ரத்தால் ஸித்தி பெற்ருர். இங்ஙனம் ஸூதருரைத்ததைக் கேட்டு அளவில்லா ஸந்தோஷங் கொண்ட சௌனகாதிகள் அக்னியின் வரலாற்றைக் கூறும் படி வேண்டினர்.

அக்னி உத்பத்தி. ச்வேதத்வீபத்திலுள்ள மஹா விஷ்ணு வைத் தர்சிக்க பிரும்மா முதலிய தேவர்கள் அங்கு சென்ற னர். அச்சமயம் விஷ்ணு சரீரத்திலிருந்து மிக்க அழகான பெண்கள் தோன்றி நர்த்தனம் செய்தனர். அதைக் கண்ட வுடன் பிரும்மா காமவிகாரங் கொண்டார். அதனுல் அவ ரது சுக்ரம் நழுவி பாற்கடலில் விழுந்தது. உடனே அது ஓர் திவ்ய புருஷனுகத் தோன்றி பிரும்மாவின் மடிமீது வந்து உட்கார்ந்தது. வருணன் அது தனது புதல்வனென்று கூற மஹாவிஷ்ணு பீஜ சக்தியால் பிரும்மனது புதல்வனே இவன் என்று கூறி அவனுக்குப் பொருள்களைக் கொளுத்தும்படி யான சக்தியை அளித்தார். அவனுக்கு எல்லா தேவர்களுக் கும் ஹவிஸ்ஸைக் கொண்டு கொடுக்கும் வேலையையும் தந்தார்.

புராண ச்ரவண விதியும் பலனும். வேதத்தின் கருத் தை எல்லோரும் எளிதில் அறிய முடியாதெனக் கருதி பக வான் வேதவ்யாஸராக அவதரித்து பதினெட்டு புராணங்களை இயற்றினுர். இவைகளைப் பக்தி ச்ரத்தையுடன் நன்ருகக் கற்றறிந்த பெரியார் மூலமாகக் கேட்க வேண்டும். அவை களில் ப்ரும்ம ஸ்வரூபத்தை நன்ருக விவரிக்கும் பிரும்ம வைவர்த்த புராணத்தைக் கேட்பது மிகவும் மேலானது.

அதில் நாலு கண்டங்களிலும் அபூர்வமான சரிதங்கள் கூறப் பட்டிருக்கின்றன. இதை நியமத்துடன் கேட்பவர் எத் தகைய மலடாயினும் ஸத்புத்ரனைப் பெறுவர். ரோகம் ஆபத்து ஏழ்மை சோகம் முதலிய துன்பங்கள் இப் புராண ச்ரவணத்தினாலகலும். கோதான பலனுண்டாகும். முதல் கண்டம் கேட்ட பிறகு வக்தாவிற்கு அழகிய வஸ்த்ரத்தை யும், இரண்டாவது முடிந்தபின் ஸ்வர்ணத்தையும், மூன்றாவது முடிந்தபின் யக்ஞோபவீதம் வெண்குடை வெண் குதிரை முதலியவைகளையும், நாலாவது முடிந்தபின் ரத்ந மோதிரம் வஸ்த்ரம் குண்டலம் முதலியவைகளையும், அளித்து நூறு பிராமணர்களுக்கு அன்னமளிக்க வேண்டும் என்று ஸூதர் கூற அப்படியே சௌநகாதிகள் அவரை அர்ச்சித்துப் பூர்ண மாக புராண பலனை அடைந்தனர்.

பிரும்ம வைவர்த்த புராணம் முற்றிற்று.

ஓம். தத். ஸத். பிருஹ்மார்ப்பணமஸ்து.

The Cambridge Press, Madras.

அமரகலா விலாஸிநீ ஸபை,

154, தம்பு செட்டி தெரு, சென்னை.

அன்பர்காள்!

வேதத்தை விவரித்துக் கூறுவது புராணம். வியாஸர் வகுத்த பதினெண் புராணங்களையும் பலர் படித்தறியும் பொருட்டு எளிய தமிழில் வெளியிட்டு வருகிறோம். ஏனைய புராணங்களை ஆதரித்ததுபோல் இதையும் ஆதரித்து உடனுக்குடன் மற்ற புராணஙகளையும் வெளியிட எங்களை உத்ஸாஹப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் அன்பர்கள்,

ஸ்ரீவத்ஸ. ல. ராமசந்திர சாஸ்திரி

K. கங்காதரய்யர்

பிரசுரகர்த்தர்கள்.

எமது பிரசுரங்கள்.

		ரூ. அ. ப.
1.	ஸ்ரீ சங்கரோபதேச ரத்னம்	2—0—0
2.	ஸ்ரீ பத்ம புராணம்	0-12—0
3.	ஸ்ரீ மார்க்கண்டேய புராணம்	0—6—0
4.	ஸ்ரீ வாமந புராணம்	0—6—0
5.	ஸ்ரீ ப்ரஹ்ம வைவர்த்த புராணம்	0-12—0
6.	நித்யோபாஸநம் (ஸந்த்யார்த்தம்)	0—2—0

குறிப்பு :—ஸ்ரீ கூர்ம புராணம் விரைவில் வெளிவரும்.

சுபம்.